21630

# மாலை மயங்குகின்ற நேரம்

## 1

கல்யாணக்களை கட்டியிருந்தது அந்தத் திருமண மண்டபத்தில். எங்கு பார்த்தாலும் வண்ண ஒளி விளக்குகளும், இடையே நேர்த்தியாக பின்னிப் பிணைந்த மலர் அலங்காரமும், மாவிலையும், தோரணமும் பார்த்துப் பார்த்து யோசித்து யோசித்து கண்ணைக் கவர்வதோடு கருத்தையும் குளிர்விக்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தன.

சித்தி யசோதாவின் கைவண்ணம் தான். இது போல அலங்கார விஷயங்களில் சித்தி கெட்டிக்காரி என்பது உதயரேகா ஏற்கனவே அறிந்த விஷயம் தான். தனக்குத் திருப்தியாகும் வரை, இப்படிச் செய், மாற்று, அப்படிச் செய் என்று வேலையாட்களை விடமாட்டாள். இப்போது இன்னமும் அதிக சிரத்தை தெரிந்தது... பாவம் தான்.

சித்தியிடம் சொல்லாமலே விட்டிருந்திருக்கலாமா என்று தோன்றியது. நாலு ஆண்டுகளாக உள்ளே பூட்டி



வைத்திருந்தது தானே? கடைசி வரை அப்படியே இருந்து விட்டிருக்கலாம். ஆனால் இனி இந்த மாதிரி நினைப்பது முட்டாள்தனம். 'எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்று அன்றைக்கே வள்ளுவர் சொல்லி விட்டார். சொல்வதற்கு முன் யோசித்திருக்க வேண்டும். சொன்ன பிறகு இப்படி நினைத்துப் பார்ப்பது வீண்.

வெளியே வெடிச் சத்தம் கேட்டது. ஒருபுறத்து வாயில் வழியாக ஒளிச் சிதறல்களாக வாண வேடிக்கை வானத்தைப் பிரகாசப்படுத்திக் கொண்டிருப்பது தெரிந்தது.

மாப்பிள்ளை ஊர்வலம் மண்டபத்தை நெருங்கி விட்டது. இனி இங்கே நின்று வருகிறவர்கள் கண்ணில்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது. திருமணப் பெண்ணாய் லட்சணமாய் இருக்க வேண்டும். சித்தியின் உத்தரவு.

திருமண ஹாலின் அலங்காரங்களைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்த உதயரேகாவுக்கு அங்கிருந்து மடமடவென்று கல்யாணப் பெண்ணின் அறைக்குள் சென்று அங்கே அவளுக்கென்று போடப்பட்டிருந்த நாற்காலியில் பதவிசாய் அமர்ந்த போது உள்ளூரச் சிரிப்பு துள்ளாட்டம் போட்டது. அடக்கிக் கொண்டு, வருங்கால உறவினர்களை எதிர்நோக்கிக் காத்திருந்தாள்.

அவர்களில் இந்தப் பட்டுக்கட்டுகிற விழா முக்கியமானது. பல்வகைச் சீர் பொருட்களுடன், விலை உயர்ந்த ஜரிகைச் சேலை ஒன்றை மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வருவார்கள். அதை நாத்தனார் கையால் பெண்ணிடம் கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொல்வார்கள். அந்தப் பட்டுச்சேலை அணிந்ததும் அவளுக்கு நலுங்கு சுற்றுவார்கள். நெருங்கிய உறவினர் மட்டுமே கலந்து கொள்ளும் இந்த வைபவம் கிட்டத்தட்டப் பாதி திருமணம் போலக் கருதப்படும்.

21630



நலுங்கு சுற்றி, விருந்து முடிந்து, அவரவர் இடங்களில் எல்லோரும் முடங்கிய பின் யசோதா மகளிடம் வந்தாள்.

சற்று நேரம் கேள்வியாய் அவளை நோக்கி விட்டு, "ஏண்டி? ஏன்? ஏன் இந்தப் பிடிவாதம்? மாப்பிள்ளை நன்றாக இல்லை என்று சொல்ல வில்லை. நல்ல உயரமும், செதுக்கினாற்போல் அவயவங்களுமாக பார்வைக்குப் பிரமாதம் தான். ஆனால் குணம்? இல்லாத தப்பே இல்லை போலத் தெரிகிறதே! இவரைத் தான் மணப்பது என்ன பிடிவாதம்? உன் பேர் கெட்டு விட்டது அது இது என்று ஏதேனும் சொல்லாதே. மற்றவர்கள் ஒன்று சொல்வார்கள் என்று அதற்காக எதையும் செய்கிறவள் நீ இல்லை என்பது எனக்கு நன்றாகவே தெரியும். பின் ஏன்?" என்று கேட்டாள்.

லேசாகத் தலையைச் சரித்து, சிற்றன்னையை நோக்கினாள் உதயரேகா, "உங்களுக்குச் சரியான பதில் போல ஒரு கதை படித்தேன் சித்தி. சொல்லட்டுமா? ஒரு பெண் — சுமாரான அழகான, உற்சாகமான, நாகரீகமான, இளமையான... கிட்டத்தட்ட என்னைப் போல பெண் என்று வையுங்களேன். அவள் ஒரு துப்பறியும் நிபுணரிடம் வந்தாளாம். ஓர் இள வயதுப் பையன் படத்தை அவரிடம் கொடுத்தாளாம். "பாருங்கள் சார், இவரோடு எனக்குத் திருமணம் நிச்சயமாக இருக்கிறது. இவரைப் பற்றிய முழு விவரங்களும் எனக்கு வேண்டும் என்றாளாம். நிபுணர் கொஞ்சம் வயதானவர். இவள் வயதில் அவருக்கு . ஒரு பெண் உண்டாம். கெட்டிக்காரி. இந்த மாதிரி முன்னெச்சரிக்கை எத்தனை பெண்களுக்கு இருக்கிறது என்று உள்ளூர சிலாகித்து விட்டு, அலையோ அலை என்று அலைந்து திரிந்து பிள்ளையாண்டானைப் பற்றிய விவரங்கள் அத்தனையும் சேகரித்தாராம். கடைசியில் மனிதருக்கு மனசே சரியில்லாமல் போயிற்றாம். காரணம், பையனுக்கு இல்லாத கெட்டப் பழக்கங்களை உலகத்தில் இப்போது சொன்னீர்

களே அதுபோல, இல்லாத தப்பே இல்லையாம். சிகரட், குடி, அப்புறம்... அந்த இன்னொன்று"... என்று கண்சிமிட்டி விட்டு மேலே தொடர்ந்து சொன்னார். "சொன்ன நாளில் பெண் வந்தாளாம். இவருக்கு வருத்தம் தாங்கவில்லை. எனக்குப் பணம் எதுவும் வேண்டாம்மா. உனக்கு ஒரு நல்ல சேதி என்னால் தர முடியவில்லை என்று எல்லாம் விலாவாரியாக எடுத்துச் சொன்னாராம். சொல்லி விட்டு 'ரொம்ப சாரிம்மா' என்றாராம். ஆனால், அவளானால் முப்பத்திரண்டு பல்லையும் காட்டிப் பளிச்சென்று சிரித்தாளாம். 'வருத்தமா? எதற்கு? எனக்கு இப்போது தான் சார் உண்மையிலேயே மகிழ்ச்சி. எங்கே, ஒன்றும் தெரியாத ஒரு மக்கு மண்ணாந்தைக்குப் போய் என்னைக் கட்டி வைத்து விடுவார்களோ என்று பயந்து கொண்டிருந்தேன். அப்பாடி! இப்போது தான் மனம் நிம்மதியாயிற்று" என்று இரு மடங்குப் பணத்தை எடுத்து வைத்து விட்டுத் துள்ளிக் கொண்டு கிளம்பினாளாம்... ம்...ம்... ஏதேனும் புரிகிறதா?"

"புரிகிறது, புரிகிறது. ஏதோ நன்றாகத் தான் வளர்த்திருக்கிறோம் என்று இதுவரை நினைத்திருந்தேன். ஆனால் உள்ளே மறை ஒன்று கழன்று கிடப்பது இப்போது தான் தெரிகிறது" என்றாள் யசோதா. ஏளனமும் வருத்தமுமாக.

கலகலவென்று உதயாவின் சிரிப்பு தான் அவளுக்குப் பதிலாகக் கிடைத்தது.

பெருமூச்சுடன் யசோதா கிளம்புகையில், "அண்ணீ" என்று மாப்பிள்ளை கிருஷ்ணசந்திரனுடைய தங்கை வசுமதி தலையை நீட்டினாள். "இந்த அண்ணனைப் பாருங்கள். எந்த ராத்திரி என்றாலும் இந்தக் கடிதத்தை அண்ணியிடம் கொடுத்து விட்டுத்தான் தூங்க வேண்டும் என்று விரட்டி விட்டார்!" என்று யசோதாவிடம் சிணுங்கிய வண்ணம் ஒரு காகித உறையை உதயாவிடம் நீட்டினாள்.



கடிதத்தைப் பிரித்துப் படிப்பதில் உதயரேகா ஆர்வம் காட்டவில்லை. அதைவிடுத்து, வருங்கால நாத்தனாரிடம், "உனக்கு சேலை அழகாக இருந்தது வசு. அந்த மயில் கழுத்து நிறம் பிரமாதம்" என்று சற்று முன் அவள் கட்டியிருந்த பட்டுச் சேலை பற்றிப் பேசலானாள்.

வசுமதிக்கு உச்சி குளிர்ந்து விட்டது. "நல்ல கலர்... இல்லை? உங்களுக்கும் அது போல நிறம் வாங்கலாம் என்று பார்த்தால் அம்மா கூடாது என்று விட்டார்கள். கல்யாணம் சம்பந்தப்பட்ட எதிலும் நீலம், கறுப்பு, இரண்டும் இருக்கக் கூடாதாம்! ஆனால் அந்த 'மஜந்தா' கலரில் ஜொலித்தீர்கள் அண்ணி! என்னால் கண்ணைத் தட்டி விழிக்கக் கூட முடியவில்லை. அவ்வளவு அழகாக இருந்தீர்கள்!" என்று பதிலுக்குப் பாராட்டி விட்டு, உதயரேகா கையைப் பற்றி, "நீங்கள் என் அண்ணியாக வருவது எனக்கு எவ்வளவு சந்தோஷம் என்று தெரியுமில்லையா, உதயா?" என்று ஆர்வத்தோடு கூறிப் பற்றியிருந்த கையில் முத்தமிட்டாள்.

இந்த மகிழ்ச்சி விரைவில் இன்னமும் பல மடங்கு அதிகமாகப் போவது இவளுக்கு இப்போது தெரியாது என்று எண்ணுகையில் மீண்டும் உதயாவுக்குள் குதூகலம் குமிழியிட்டது. சொல்லப் போனால் பெருமளவு அதற்காகத் தான் இந்தத் திருமணமே!

எண்ணியதைச் சொல்லாமல், "இவ்வளவு நல்ல நாத்தனார் கிடைத்ததற்கு நான் தான் அதிகமாய் சந்தோஷப்பட வேண்டும், தெரியுமா?" என்று வசுமதியின் கன்னத்தை வருடி முறுவலித்தாள் அவள்.

"மச்சானும் மச்சானும் ஒருவருக்கொருவர் மாலை போட்டுக் கொள்வது போல" என்று ஒரு வாசகம் சொல்வார்கள். அது போல, இப்படி ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொண்டே இரவு முழுவதும் இருந்துவிடாதீர்கள். தூக்கம் கெட்டுப் போனால், இந்த ஜொலிப்பு, அழகெல்லாம்



நாளைக்குக் காணாமல் போய் விடும். நீ போய்த் தூங்கம்மா. உதி நீயும் படு" என்றாள் யசோதா.

"கரெக்ட்... அ.. அத்தை தானே? எங்கள் அம்மாவும் அப்படித்தான் சொல்லி அனுப்பினார்கள். அரட்டை அடித்து அண்ணி தூக்கத்தைக் கெடுக்காதே என்றார்கள்..." என்று துள்ளி எழுந்த வசுமதி, "வரட்டுமா, அத்தை. பைபை அண்ணி" என்று குதித்தோடிப் போனாள்.

அவள் கண்மறையும் வரை பார்த்திருந்து விட்டு, "நல்ல பெண் இல்லையா சித்தி" என்றாள் உதயரேகா.

"ம்... ஆனால் உன்னைப் போல இல்லாமல் தாயார் சொல்லைக் கேட்கிறவளாக இருக்கிறாள்" என்றவள், உதயா சிரிக்கவும், "ஆமாம், சிரித்துக் கொள்! இப்போது கடிதத்தைப் படிக்கப் போகிறாயா இல்லையா?" என்று வினவினாள். "எதற்கும் சீக்கிரம் பிரித்துப் படி"

"ஏன் சித்தி என்ன அவசரம்?"

"அவசரமா?" ஒரு பெருமூச்சு விட்டு, "ஏதாவது முக்கியமான சமாச்சாரமாய் இருக்கப் போகிறதோ என்று தான்... உதிம்மா, உன்னிடம் ஒன்று சொல்லியாக வேண்டும். மாப்பிள்ளை முகத்தில் சிரிப்பே இல்லை, என்ன கோபமோ என்று அப்பா சொல்லிக் கொண்டிருந்தார். ஆலம் சுற்றுகிற போது அவர் 'உர்'ரென்று இருந்ததைப் பார்த்து பானுக்குட்டி கூடப் பயந்து விட்டாளாம். ஆனால் பாரேன், ஆலத்தித் தட்டில் அவர் ஒரு பவுன் காசை வைக்கவும் கழுதைக்கு ஒரே கொண்டாட்டம் ஆகி விட்டது! அந்த ஒரு சவரனுக்கு இதை வாங்கப் போகிறேன், அதை வாங்கப் போகிறேன் என்று ஏதோ காணாததைக் கண்ட மாதிரி அந்தக் குதி குதிக்கிறாள்!" என்று சின்ன மகளைச் செல்லமாக வைதவள், தொடர்பு அறுந்து விடாமல் மீண்டும் பழைய விஷயத்துக்கு வந்தாள். "காலை வரை பொறுக்காமல் இவ்வளவு அவசரமாக அனுப்பி இருக்கிறாரே, ஒரு வேளை... ஒரு வேளை..."



"ஒருவேளை திருமணத்தை நிறுத்தி விடும்படி எழுதி இருக்கிறாரோ என்று ஆ...சையாக எதிர்பார்க்கிறீர்களா, சித்தி? வாய்ப்பே கிடையாது!" என்று நகைத்தாள் உதயரேகா.

முகம் சுருங்க, "ஆமாம் உன் வாயில் நல்ல வார்த்தை வந்து தான் ஒரு மாதம் ஆகிறதே! என்னவோ, உன் வாழ்வு உன் விருப்பம்" என்று எரிச்சலாய் மொழிந்து விட்டு வெளியே சென்றாள் யசோதா.

அங்கலாய்ப்புடன் செல்லும் யசோதையை அழைத்துச் சமாதானப்படுத்தலாமா என்ற எண்ணம் உதயரேகாவுக்குத் தோன்றி உடனே மறைந்தது.

ஆதியோடந்தம் அத்தனையும் சொல்லாமல் சித்திக்கு - சித்திக்கு மட்டும் என்ன யாருக்குமே புரியாது. எல்லாம் விலாவாரியாக விளக்கிக் கொண்டிருக்க இப்போது நேரம் இல்லை என்பதோடு, விளக்கினாலும் சித்தி அதை ஒத்துக் கொள்வாளா என்பதும் சந்தேகமே. ஒத்துக் கொள்ளாவிட்டால் விவாதங்கள் வேறு நடத்தியாக நேரும். இப்போதானால் அடுத்தடுத்து வேலைகளில் ஈடுபடும் போது அவளுக்கு இந்த எரிச்சல் தானாக மறந்து, மறைந்து விடக் கூடும்.

உதயாவின் ஊகம் சரியே போல, மணவறையை அலங்கரித்துக் கொண்டு இருந்தவர்களிடம் சென்று, தொங்கவிடப்பட்டுக் கொண்டிருந்த மலர்ச் சரங்களைக் காட்டி யசோதா ஏதோ கூறுவது தெரிந்தது. நிம்மதியுற்றவளாக உதயா கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள்.

கிட்டத்தட்ட அவள் எதிர்பார்த்த சமாசாரம் தான். "இன்னமும் காலம் கடந்து விட வில்லை. தயவுசெய்து பிழைத்துக் கொள்ள முயற்சி செய்"

வெகு சுருக்கம்! வலப்புறமாய் லேசான சாய்வுடன் கூடிய தெளிவான எழுத்துக்கள்!

அப்படி என்ன அச்சம் அவனுக்கு? சுதந்திரம் பறி போய் விடும் என்று பயப்படுகிறானா? பின்னே? இஷ்டம் போல ஆடிக் கொண்டு இருக்கிறானே? இனி, இதற்கெல்லாம் இடம் இராமல், கல்யாணம் அவன் காலைக் கட்டி விடுமோ என்ற கலக்கம்! படட்டும். அதற்காகத் தானே அவளும் இந்தப்பாடு பட்டிருக்கிறாள்! உரிமையோடு தட்டிக் கேட்கப் போகிறாள்!

இந்தப் பயமே ஓர் ஆரோக்கியமான விஷயமாய்த் தோன்றவும், இளம் புன்னகையோடு, கடிதத்தை சிறு துணுக்குகளாகக் கிழித்து குப்பைக் கூடைக்குள் போட்டாள்.

மறுநாள், பட்டாடையும் நகைகளுமாகத் தகதகத்தபடி, மணமேடையை வலம் வந்து, கிருஷ்ணசந்திரனின் அருகில் எழிலே வடிவாய் அமர்ந்த போதும், அவள் முகத்தில் அதே முறுவல் தான்.

ஆனால் கிருஷ்ணசந்திரனின் முகம் கடுத்திருப்பதை, மேடையைச் சுற்றிக் கொண்டு வந்த போதே, கீழ்க்கண் பார்வையால் கண்டு கொண்டவள், அவன் அருகே அமர்ந்ததும், நெற்றிச்சுட்டியைச் சரி செய்யும் பாவனையில் லேசாக முகம் மறைத்து, "கொஞ்சம் முகத்தை சிரித்தாற் போல வைத்துக் கொள்ளுங்களேன். இல்லாவிட்டால் அப்புறமாய் வீடியோ... போட்டோ பார்க்கும் போது சகிக்காது!" என்று அவன் காதுக்கு மட்டும் கேட்கும்படியான மெல்லிய குரலில் தெளிவாக உச்சரித்து முணுமுணுத்தாள்.

கிருஷ்ணசந்திரனும் ஏதோ சொல்லத் துடித்துக் கொண்டிருந்தவன் போல, கைக்குட்டையால் வேர்வையைத் துடைப்பவன் போல் நடித்து, மற்றவர் அறியாமல், "பைத்தியமா, உனக்கு? இப்போது இந்த வினாடி கூட இந்த விலங்கிலிருந்து நீ தப்பிக்க முடியும். என் மேல் நீ எந்தப் பழி சுமத்தினாலும் மறுக்காமல் ஏற்றுக் கொள்கிறேன். கடைசி வாய்ப்பையும் வீணாக்கி விடாதே" என்று தணிவான குரலில் வேகமாக உரைத்தான்.



21630

மகளின் முன்புறக் கொசுவத்தை அழகுறப்படிய வைத்தபடி, "மூன்று கோணங்களில் வீடியோ எடுக்கிறார்கள் உதி. ஒன்றில்லாவிட்டால் ஒன்றில் விழுந்து விடும் உங்கள் பேச்சைப் பிறகு வைத்துக் கொள்ளக் கூடாதா?" என்று மென் குரலில் யசோதா எச்சரிக்கவும், அதற்கு மேல் மணமக்கள் இருவருக்கும் இடையே அமைதி நிலவியது.

கெட்டிமேளம் முழங்க, கிருஷ்ணசந்திரன் உதயரேகாவின் கழுத்தில் தாலியை அணிவித்த போது, இந்தத் திருமணத்தின் காரணமான தன் கோரிக்கை நிறைவேறுவதோடு, தங்கள் வாழ்க்கையும் நல்லவிதமாக அமைய வேண்டும் என்று உதயா இறைவனிடம் வேண்டிக் கொண்டாள்.

மாலை வரவேற்பிற்கான அலங்காரங்களைக் களைந்து, கூந்தலைத் தளரப் பின்னி, மென்மையான மைசூர்ப் பட்டணிந்து, கணவன் இருந்த தனியறைக்குள் சென்ற போது, அவன் மற்றதையெல்லாம் மறந்து, ஓடி வந்து அவளை அணைத்துக் கொள்வான் என்று உதயா எதிர்பார்க்கவும் இல்லை. அந்த அளவு அவள் முட்டாளும் இல்லை.

எனவே, மார்பின் குறுக்காகக் கைகளைக் கட்டிக் கொண்டு ஒரு சிலை போல அசையாமல் நின்று, கிருஷ்ணசந்திரன் அவளை வெறித்து நோக்கிய போது அவள் கலங்கி விடவில்லை. மாறாக அவன் என்னென்ன கேட்கக் கூடும் அதற்கு எப்படி எப்படி பதில் சொல்வது என்று மனதிலுள் ஒத்திகை நடத்தியபடி, அவளும் அசையாமலே அவனை எதிர்நோக்கி நின்றாள்.

ஆனால், வாதப் பிரதிவாதங்களுக்கு இடம் கொடாமலே கிருஷ்ணசந்திரன் தீர்ப்பு வழங்கத் தொடங்கி விட்டான். "இதோ பாரம்மா, நான் சொல்வதை கவனித்து அதன்படி..." என்று அவன் தொடங்கிய தோரணை பிடிக்காமல், "என் பெயர் உதயரேகா" என்று குறுக்கிட்டாள் உதயா.



சலனமற்று, "நல்லது, உதயரேகா, கவனி. இந்தத் திருமணம் ஒரு பெரும் பிழை. எப்படி என்ன என்று அதை நான் விளக்கப் போவது இல்லை. ஆனால், இதற்காக உன் வாழ்நாள் முழுவதும் வருத்தப்படப் போகிறாய் என்பதும் எனக்கு மிக நன்றாகவே தெரியும். நீ எப்படி எண்ணியிருந்தாலும் சரி. என்னைப் பொறுத்தவரையிலும் இது திருமணம் அல்ல. நீ என் மனைவியும் அல்ல. இந்த அடிப்படை உண்மையை மனதில் வைத்து, மேற்கொண்டு நீ நடந்து கொள்ள வேண்டும். இப்போது சொல். எப்படித் தூங்குவது உனக்கு வசதி?" என்று தெளிவும் திருத்தமுமாகப் பேசி முடித்தான்.

'உன் அணைப்பில்' என்று பதில் சொன்னால் என்ன பண்ணுவான் என்று எண்ணியபடி, கட்டிலில் இருந்து ஒரு தலையணையை எடுத்துத் தரையில் — கட்டிலுக்குச் சற்றுத் தூரத்திலேயே போட்டாள் உதயா. ஒரு போர்வையும் அத்தோடு இணைந்தது.

கட்டிலில் படுத்துக் கொள்ள ஆயத்தம் செய்த கணவனை ஓரக்கண்ணால் பார்த்தபடி, போர்வையை தரையில் விரித்த போது, படு கவர்ச்சியாக ஒரு 'போஸ்' கொடுத்துப் படுத்தால் என்ன என்று உதயாவுக்கு யோசனை தோன்றியது.

கிருஷ்ணசந்திரன் ஒன்றும் முற்றும் துறந்த முனிவன் அல்ல. அவளையே முன்பு ஆர்வத்துடன் நோக்கியவனும் கூட....

ஆனாலும் அது அவளுக்குப் பிடிக்கவில்லை. முதலில் கிருஷ்ணசந்திரன் அவளை மனதில் ஏற்க வேண்டும். வெறும் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டு பெறுகிற வெற்றி கீழ்த்தரமானது. அது அவளுக்குத் தேவையில்லை.

கட்டியிருந்த சேலையைக் கொண்டே, கழுத்துக்குக் கீழே எந்த பாகமும் தெரியாதபடி நன்றாக இழுத்து மூடிக் கொண்டு, சுருண்டு படுத்தாள் உதயரேகா.



## 2

உதயரேகா, கிருஷ்ணசந்திரனை முதன்முதலில் சந்தித்தது, சுவாமி நிர்மலானந்தாவின் 'ராஜயோகா' வகுப்பில் தான்.

ஒரு வாரம் மட்டுமேயான பயிற்சிக்கான விளம்பரத்தைப் பார்த்ததுமே இந்த ராஜயோகத்தைப் பயின்றே ஆக வேண்டும் என்று உதயா தீர்மானித்து விட்டாள். அவள் ஒன்று தீர்மானம் செய்து விட்டால், அந்த வீட்டில் அதைத் தடுப்பவர் யார்?

தங்கை பானுரேகா கூட அடிக்கடி குறைப்படுவாள். "அக்கா கேட்டால் எதற்கும் சரி என்கிறீர்கள். எனக்கு மட்டும் எதற்கும் மறுப்பா? என்னம்மா நீங்கள்?" என்று அவள் சிணுங்குவதை பார்க்கச் சில சமயம் உதயாவுக்குப் பாவமாய் இருக்கும், சில சமயம் பொறாமையாகவும் இருக்கும். "அக்கா மாதிரி நீயும் கெட்டிக்காரியாகி விடு. பிறகு எல்லாவற்றுக்கும் ஓ.கே. சொல்லி விடுகிறேன்" என்று பூசி மெழுகி யசோதா மகளைச் சமாதானம் செய்வதை வேடிக்கைப் பார்த்தபடி நிற்பாள்.

அத்தோடு சரி. அதற்கு மேல் தன் விருப்பங்களை உதயரேகா விட்டுக் கொடுப்பது இல்லை. கண்டது கற்றால் தானே பண்டிதர் ஆக முடியும்? கராத்தே, குங்ஃபூ, பரத நாட்டியம், குச்சுப்பிடி, டிரஸ் டிசைனிங், கம்ப்யூட்டர் ப்ரோகிராமிங் என்று எல்லாவற்றிலும் அவளுக்கு அறிமுகம் உண்டு. ஸ்பானர், ஸ்க்ரு டிரைவர், பைப் ரிஞ்ச் சகிதம் சுற்றுவதும் உண்டு.

இப்படி ராஜயோகம் பயிலச் சென்ற போது தான் அவள் கிருஷ்ணசந்திரனைப் பார்த்தாள் என்றாலும், அங்கே முதலில் அவளுக்கு அறிமுகம் ஆனது அவனுடைய அன்னை காந்திமதி தான்.

சுவாமி நிர்மலானந்தா கற்றுக் கொடுத்தது, 'பிராணா யாமம்' தான். ஆனால் கற்றுக் கொடுத்த முறை சற்று வித்தியாசமானது. அவர் கூறியது போல, மண்டியிட்டு அமர்ந்து, மூச்சுக் காற்றை முடிந்த அளவு வெளியேற்றி விட்டு, மெதுவாக மீண்டும் நுரையீரலை முடிந்த அளவு காற்றால் நிரப்பிய போது உடம்பில் புதிய சக்தி ஊறுவது போல உதயா உணர்ந்தாள். குரு சொன்னது போல மூன்று முறை செய்து முடித்து விட்டு, துறுதுறு பார்வையைச் சுழல விட்ட போது அந்த பார்வை காந்திமதியிடம் சென்று நிலைத்தது.

மத்திய வயதை எட்டியிருந்த அந்தப் பெண்மணியின் கண்களில் குடி கொண்டிருந்த நிராசையும் சோர்வும் அதற்கு மேல் உதயாவின் விழிகளை அப்புறம் இப்புறம் அசல விடவில்லை. இந்த வயதிலும் இவ்வளவு அழகாக இருக் கும் கண்களில் ஏன் இந்த வேதனை?

நெருங்கிய உறவினர் யாருக்கும் உடம்பு சரியில் லையோ. ஆனால் அப்படிப்பட்ட நிலையில் வேண்டியவர் இருந்தால் அவர்களை விட்டு விட்டு இந்த வகுப்புக்கு வருவானேன்? அல்லது... ஒருவேளை குடும்பத்தில் ஏதும் பேரிழப்பு நேர்ந்து, மன அமைதி நாடி இங்கே வந்திருப் பாரோ? யோகா வகுப்பை அடுத்து, சிறிது நேரம் தியான மும் உண்டு. அதற்காகத் தான் வந்திருக்க கூடும். பாவம்!

கோடானு கோடிப் பெண்களில் யாரோ ஒருத்தி என்பது போல அலட்சியப்படுத்த முடியாமல் உதயாவுக்கு உள்ளூர முணுமுணுப்பாய் ஒருவலி உண்டாயிற்று. அருகில் சென்று அந்த அம்மாவுக்கு ஆறுதல் கூற வேண்டும் போல் மனம் பரபரத்தது. எப்படியாவது இவரது துன்பத்தைப் போக்க முடிந்தால்? குறைந்தபட்சமாகக் கொஞ்சமேனும் குறைக்க முடிந்தால்?

இந்தத் திருமணத்திற்கான வித்து விழுந்தது அந்த விநாடியாகத் தான் இருக்க வேண்டும்!



ஆனால், முன்பின் தெரியாத ஒருவரிடம் சென்று, என்னவென்றே தெரியாத துன்பத்தை, ''ஒன்றுமில்லை, சரியாகிவிடும்'' என்று எப்படி ஆறுதல் கூற முடியும்? ''நீ யாரடி அதைச் சொல்ல'' என்று கேட்டு விட்டால் அவமான மாகி விடும். இல்லாவிட்டாலும், முன்பின் தெரியாத ஒருத்தியிடம் அந்த அம்மாவின் மகள் வயதுதான் இவ ளுக்கு இருக்கக் கூடும். இவளிடம் போய் அந்த அம்மா தன் வீட்டு விவகாரங்களை எல்லாம் சொல்லி அழுவார் களா என்ன?

பைத்தியக்காரத்தனம்! அவர்கள் யாரோ, நான் யாரோ என்று எண்ணி மீண்டும் கவனத்தை நிர்மலானந்தரின் பேச்சில் குவித்தாள் உதயரேகா. அவர் கூறிய முறையில் தியானத்தில் ஆழ்ந்தாள். மீண்டும் அவள் கண் திறந்து பார்த்த போது, அந்தப் பெண்மணியின் 'சிம்பிளான' பட்டுச்சேலையின் முந்தானை அந்த ஹாலின் வாயிலைத் தாண்டி மறைந்து கொண்டிருந்தது.

அன்று முழுவதும் சோகத்தைக் கட்டுப்படுத்தி மறைக்க முயன்று கொண்டிருந்த அந்த முகம் உதயாவுக்கு நினைவு வந்து கொண்டே இருந்தது. ச்சு... குறைந்தபட்சம் அறிமுகமாவது செய்து கொண்டிருக்கலாமே என்று தன் னைக் கடிந்து கொண்டாள். மறுநாள் வகுப்புக்கு அந்த அம்மாள் வந்ததும் ஏதோ காரியமாய் செல்வது போல அவர்களை நெருங்கிச் சென்று, பேச்சுக் கொடுத்தாள்.

''அடடா, நீங்களா ஆன்டி நல்லவேளை! நேற்று நீங்கள் அணிந்து வந்திருந்த தங்க வளையல் டிசைன் அழகாக இருந்தது. எங்கே செய்தீர்கள் என்று கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டே இருந்தேனா... டைதிலை என் பெயர் உதயரேகா, ஆன்ட்டி. எல்லோரும் என்னை உதயா என்று அழைப்பார்கள். எங்கள் அப்பா பெயர் உலகநாதன். வருமானவரிப் பிரிவில் ஆபீசர்'' னா?



என்று தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டு அழகான முறுவல் ஒன்றைச் சிந்தினாள்.

அவள் இவ்வளவு தூரம் விவரம் கொடுத்த பிறகு பேசாமல் போவது முறையல்லவே!

பதிலுக்கு முறுவலித்து, காந்திமதி என்று தன் பெயரை யும், கணவர் செல்வரங்கம் பிசினஸ் செய்வது பற்றியும் கூறினார் அந்த அம்மா காந்திமதி.

இப்படித் தொடங்கிய பழக்கம் தான்.

அன்று அருகருகே இருந்து யோகாப்பியாசம், தியா னம் செய்தார்கள். அவ்வப்போது ஒருவரை ஒருவர் பார்த்து முறுவலித்துக் கொண்டார்கள். சும்மா இருந்த நேரங்களில், தங்கை, தம்பி பற்றி உதயா பெருமை பேசினாள். காந்திமதி யும் தன் பிள்ளைகள் வசுக்கண்ணு, கண்ணப்பன் பற்றி இயம்பினார்.

சரியாகச் செய்யாதவர்களை எல்லாம் தனியே வரி சைப்படுத்தி, அவர்களுக்கு மீண்டும் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்ததால், முதலிலேயே அப்பியாசங்களைச் சரிவ ரச் செய்து விட்ட இவர்களுக்குப் பேச நேரம் நிறையவே கிடைத்தது.

அடையாறில் பங்களா, நிலையான தொழில், அழகும் அறிவும் மிகுந்த மக்கள்... என்ன குறை இவர்களுக்கு? உதயாவோடு பேசிக் கொண்டு இருந்ததால் மறந்தாரோ அல்லது அவளுக்கு காட்டாமல் மறைத்தாரோ நேற்றைய சோகம் இன்று முகத்தில் தென்படாவிட்டாலும் காந்திமதி உள்ளார்ந்து சிரிக்க வில்லை என்பதை உதயாவால் உணர முடிந்தது. என்னவோ, அவரைச் சிரிக்க வைத்து விடும் ஆர்வமும் உண்டாயிற்று.

'ஹெல்த் கிளப்'பில் உடல் மெலியப் பயிற்சி செய்து விட்டு, வேர்வை வடிய, கையோடு கொண்டு வந்திருந்த பாதாம் அல்வாவை விழுங்கிக் கொண்டிருந்த குண்டுப்



பெண்ணைப் பற்றி அவள் அபிநயத்தோடு கூற, சட்டென்று சிரித்து விட்டு காந்திமதி கையால் வாயைப் பொத்திக் கொள்ளவும் உதயாவுக்கு உள்ளூரத் திருப்தி உண்டாயிற்று.

சுற்று முற்றும் பார்த்து விட்டு, ''நல்லவேளை யாரும் நான் சிரித்ததை கவனிக்க வில்லை'' என்ற பெரியவர், உதயாவைப் பிரியத்துடன் நோக்கினார். ''எங்கள் வசுக்குட் டியும் உன்போலத்தாம்மா. அங்கே பார்த்தது, இங்கே நடந்தது என்று ஆயிரம் கதை சொல்லுவாள். ஆனால் ஒன்று 'இம்'மென்றால் அழுது விடுவாள். அன்று கூட அவள் அண்....'' என்றவரின் பேச்சு சட்டென நின்றது.

உதடுகளை இறுக மூடிக் கொண்டு நோக்கிய காந்தி மதி, முகத்தில் எந்தவித மாறுதலும் இல்லாமல் அதே இளம் முறுவலுடன் பார்த்துக் கொண்டிருக்கவும், ''வளர்ந்து பெரி யவர்கள் ஆகி விட்டார்கள் இல்லையாம்மா. முன்போலக் கூடக் கூட்டிக் கொண்டே அலை என்றால் பையனுக்குப் பிடிப்பதில்லை. புரிந்து கொள்ளாமல் இவள் அழுது விடுகி றாள்'' என்று முயன்று வருவித்த சாதாரணமான குரலில் விவரம் உரைத்தார்.

ஆக, அருமைத் திருமகனார் தான் வருத்தத்தின் காரணமா? வாய்ப்புக் கிடைத்தால், இந்த மாதிரித் தாயைக் கலங்க அடிக்கிறாயே என்று நன்றாக இரண்டு வாங்கு வாங்க வேண்டும் என்று உள்ளூர எண்ணிய உதயரேகா அதை வெளிக்காட்டாமல், ''நிஜம் தான் ஆன்ட்டி. என் தம்பி சூர்யாவுக்கு இப்போது தான் பதினாலு வயதாகிறது. அதற்குள் எங்கள் இருவரையும் இங்கே நிற்காதே, அங்கே போகாதே என்று ஒரே அதிகாரம் செய்வான். எங்களுக் கெல்லாம் சிரிப்புத் தான் வரும்...'' என்று காந்திமதியோடு ஒட்டிப் பேசினாள்.

மூத்த பெண்மணியின் முகத்தில் இறுக்கம் தளர்ந்த போதும், கண்களில் இடையில் எட்டிப் பார்த்த சிரிப்பு மறைந்து விட்டதைக் கண்டு உதயரேகா வருத்தமுற்றாள்.

சுவாமி நிர்மலானந்தருக்குத் திருப்தியாகும் வண்ணம் எல்லோரும் யோகம், தியானம் முதலியவற்றை முடிக்கும் போது அன்று மேலும் அரைமணி நேரம் அதிகமாகி விட்டது.

ஒருவருக்கொருவர் விடை பெற்றுக் கொண்டு, காந்திமதி வெளி வாயிலை நோக்கிச் செல்ல, உதயரேகா தன் டோக்கனைக் கொடுத்துத் தோள் பையை வாங்கிக் கொண்டு வருகையில் அது நடந்தது.

வகுப்பு நடந்த ஹாலை அடுத்திருந்த வெளி வராந்தாவைக் கிட்டத்தட்டக் காந்திமதி கடந்து முடிக்கையில் ஓர் இளைஞன் வேகமாக அவர் அருகில் வந்தான்.

வந்தவனை ஏறிட்டுப் பார்த்து காந்திமதி முறுவலிக்க அதை ஏற்காமல் முகம் சுளித்து, "இந்த மாதிரி கண்ட கண்ட இடத்தில் உங்களுக்காக காத்துக் கிடக்க நான் என்ன உங்கள் வேலையாளா? எனக்கு நடிகை நளினி வீட்டில் பார்ட்டிக்கு நேரமாகி விட்டது. நான் போகிறேன். நீங்கள் எப்படியாவது வீட்டுக்குப் போய்க் கொள்ளுங்கள்" என்று கடுகடுத்து விட்டு, வந்த வேகத்திலேயே திரும்பிச் சென்று விட்டான் அவன்.

காந்திமதி விக்கித்து நிற்பதும், அருகில் சென்று கொண்டிருந்த ஓரிருவர் குறுகுறுப்பாய் திரும்பிப் பார்த்து விட்டு செல்வதும் தெரிந்தது.

இப்போது நெருங்கினால், காந்திமதிக்குக் கூசிக் குன்றி விடும் என்பதை உணர்ந்து, சற்று ஒதுங்கி நின்று விட்டு, மெல்ல அந்த அம்மாளை அணுகினாள் உதயா.

முகத்தில் வியப்பை வருவித்துக் கொண்டு, "ஹாய் ஆன்ட்டி, நீங்கள் இன்னமும் போகவில்லையா? ஒரு வேளை கார் வரவில்லையா? என்னோடு வாருங்களேன். உங்கள் வீட்டில் கொண்டு விட்டுவிட்டுப் போகிறேன்.



அப்படியே எனக்கும் உங்கள் வீட்டைப் பார்த்த மாதிரி இருக்கும்" என்று சகஜமாய்ப் பேசினாள்.

தொண்டையில் விழுங்கிக் கொண்டு, "வீடு பார்க்க எப்போது வேண்டுமானாலும் வாம்மா. ஆனால்... எனக்காக... என்னை கொண்டு விட வேண்டும் என்று வரத் தேவையில்லை. ஒரு டாக்ஸியில் போய் விடுவேன்" என்று காந்திமதி சமாளிக்கையில் அந்த இளைஞன் மேல் உதயாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது.

அந்தத் தாயை நேராகப் பார்த்து முறுவலித்து, "உங்கள் வீடு அடையாறு என்றால் பக்கந் தானே ஆன்ட்டி, வாருங்கள் போகலாம் காரை எங்கேயாவது கொண்டு இடித்து விடுவேனோ என்று பயமா இருக்கிறதா? அஞ்சேல் ஆன்ட்டி டிரைவர் தான் ஓட்டப் போகிறார்" என்று அப்படி இப்படி தாஜாப் பண்ணி கூடவே அழைத்துச் சென்றாள்.

"உள்ளே வாம்மா" என்று காந்திமதியோடு பிகு பண்ணாமல் வீட்டினுள் சென்றாள்.

வரவேற்பு அறையில் பெரிய ஷோக்கேசில் ஒரு தட்டு முழுவதும் மெடல்களும் கோப்பைகளுமாக இருந்தன. "எல்லாம் என் மகளும் மகனும் வாங்கியவை. மகன் தான் நிறைய விளையாட்டு, படிப்பு, க்விஸ் எல்லாவற்றிலும் பரிசு வாங்கி விடுவான்" என்று பெருமை பேசிய தாயைப் பார்க்க உதயாவுக்கு பாவமாக இருந்தது.

"அம்மா..." என்று வந்த பெண் இவளைப் பார்த்ததும், "உதயா நீங்களா?" என்று வியக்க, இவளும், "வசுமதி!" என்று ஆச்சரியப்பட்டாள்.

"உதயா, எங்கள் 'டீம்' தலைவி அம்மா. நெட்பால் சேர்ந்து விளையாடுவோம்" என்று தாயாரிடம் சொல்லி விட்டு, "நீங்கள் படிப்பை முடித்த பிறகு ஒன்றுமே சரியில்லை, உதயா. நம் டீம் இரண்டாம் இடத்துக்குப் போய்



விட்டது. அப்புறம்..." என்று கல்லூரிப் பேச்சில் வசுமதி இறங்கினாள்.

டிரைவருக்குச் சிற்றுண்டி, காபி அனுப்பி விட்டு, அவர்கள் இருவருக்கும் கொண்டு வர ஏற்பாடு செய்யப் போவதாகக் கூறிக் காந்திமதி உள்ளே செல்ல, பெண்கள் இருவரும் அரட்டையில் ஈடுபட்டனர்.

திடீரென, ஒரு கார் வேகமாக வந்து போர்டிகோவில் நிற்க, அதிலிருந்து அவசரமாக இறங்கி தடதடவென்று வேகமாக வீட்டினுள் வந்து, ஹாலில் இருந்த வசுமதியைக் கண்டதும் நின்று, "வசுமதி, அம்மா..." என்று தொடங்கியவன், சிற்றுண்டித் தட்டு ஏந்திய வேலையாள் பின் தொடர வந்த காந்திமதியைக் காணவும், "வந்துவிட்டீர்களா, அம்மா?" என்று ஆசுவாசப்படுத்தி பெருமூச்சு விட்டான்.

"வாப்பா மணி. வா, உட்கார்ந்து நீயும் ஏதாவது சாப்பிடு. ஆமாம், என்ன திடீரென்று" என்று வினவியபடியே சோபாவைக் காட்டி உட்காரச் சொன்னார் காந்திமதி.

"பரவாயில்லையம்மா அங்கே... அங்கே... யோகாசன வகுப்பில் உங்களை விட்டு விட்டு வந்து விட்டதாக கேசி பெருமை பேசிக் கொண்டிருந்தான். தனியே திண்டாடுவீர்களோ என்று அங்கே ஓடிப் போய் பார்த்தேன். அங்கே உங்களைக் காணாததால் பயந்து விட்டேன். வரவர கேசி ரொம்பவும் அதிகமாகத் தான் ஆட்டம் போடுகிறான். உங்களுக்கு உடனே டாக்சி கிடைத்ததாம்மா?" என்று வினாவோடு பேச்சை முடித்தான் அந்தப் புதியவன்.

முகம் வாடி விட்ட போதும் விடாமல், "இவள் உதயரேகா, இவள் தான் யோகா வகுப்பிலிருந்து என்னை அழைத்து வந்தாள். உதயா, இவன் வக்கீல் மணிவாசகம். என் மகனுடைய நண்பன்" என்று காந்திமதி அறிமுகம் செய்து வைக்க இருவரும் கைகூப்பி வணக்கம் தெரிவித்துக் கொண்டனர்.



மீண்டும் காந்திமதியிடம் திரும்பி, "உங்களை வீட்டிற்கு அழைத்து வந்து சேர்ப்பதற்காகத் தான் பாதி வேலையில் வந்தேன் அம்மா. உடனே போயாக வேண்டும் வரட்டுமா? பை வசுமதி, வருகிறேன் உதயரேகா" என்று எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு வக்கீல் மணிவாசகம் கிளம்பிச் சென்றான்.

சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது.

மணிவாசகத்தின் கார் கிளம்பியதும், "அப்படியானால் உதயா உங்களைச் சும்மா கூட்டி வரவில்லை! அண்ணன் உங்களை 'அம்போ' என்று நட்டாற்றில் விட்டு விட்டுப் போய் விட்டதால் இரக்கப்பட்டு அழைத்து வந்திருக்கிறார்கள். அப்படித்தானே அம்மா?" என்று ஆத்திரமும் அழுகையுமாக கேட்டாள் வசுமதி.

"ஷ்.... யோகா வகுப்பு தானே. நட்டாற்றில் என்று என்ன பேச்சு..." காந்திமதி மகளை லேசாகக் கண்டிக்கவும், அதற்கு மேல் அங்கே இருப்பது சரியில்லை என்று உணர்ந்து, "வருகிறேன்" என்று உதயரேகாவும் கிளம்பினாள்.

இந்த மாதிரி விடை கொடுக்கவும் பிடிக்காமல், அதே சமயம் வீட்டுப் பிள்ளையைப் பற்றி அன்னியப் பெண்ணான அவளிடம் பேசவும் முடியாமல் தாய், மகள் இருவரும் தடுமாறுவதை அறிந்து, "யோகா வகுப்பு முடிந்து இன்னமும் வரவில்லையே என்று சித்தி கவலைப்படுவார்கள்" என்று அவர்கள் ஒப்பும்விதமாக காரணம் சொல்லி விடை பெற்றுச் சென்றாள் உதயா.

வழக்கமாகப் படுத்ததும் உறங்கி விடுகிற உதயரேகாவுக்கு அன்று தூக்கம் வரமறுத்தது. மீண்டும் மீண்டும் தாயிடம் குனிந்து படபடத்த ஒரு நெடிய உருவம் மனதில் தோன்றிக் கொண்டே இருந்தது.

இவனது களித்த முகம் சிரிக்கையில் எப்படி இருக்கும்? நண்பர்களைக் கொண்டு ஒருவனை அறியலாம் என்பார்கள். இந்த மணிவாசகம் நல்லவனாகத் தானே தென்படுகிறான்? இவன் ஏன் இப்படி?

கேசி! கேசி என்பது என்ன பெயரின் சுருக்கமாக இருக்கக் கூடும் என்று பல பெயர்களை யோசித்தது நினைக்கையில் இப்போது சிரிப்பு வந்தது. கிருஷ்ணசந்திரனை ஆங்கிலத்தில் எழுதி, இருபிரிவாக்கி இரண்டின் முதல் எழுத்தையும் சேர்த்துக் கேசியாக்கி இருக்கிறார்கள் என்று பிற்பாடு அவள் அறிந்து கொண்ட விஷயம்.

ஆமாம், பிறகும், காந்திமதியுடைய குடும்பத்தோடு உதயா நிறுத்தி விட வில்லை. வசுமதியோடு அவளுடைய தாயாரும் கூட, உதயாவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்து, அன்பாகப் பழகினார்கள். அவ்வப்போது மூவருமாக சேர்ந்து ஷாப்பிங், சினிமா என்று போய் வந்தார்கள். வசுமதியுடைய தந்தை செல்வரங்கத்தையும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவரையும் உதயாவுக்குப் பிடித்துப் போனது.

இப்படிப் பழகத் தொடங்கிய பிறகு, கிருஷ்ணசந்திரனை நேரடியாகச் சந்திக்காவிட்டாலும், பெற்றோர், தங்கையிடம் அவன் காட்டிய குரூரத்தைப் பலமுறை அறிய நேர்ந்தது.

மிக அழகாக இருந்தது என்று வசுமதி வாங்கி வைத்த விலை உயர்ந்த கிரிஸ்டல் தட்டாரப் பூச்சியை, சகிக்கவில்லை என்று அலட்சியமாக விட்டெறிந்து உடைத்து அவளை அழ வைத்தான்.

கோயில் விபூதிப் பிரசாதத்தை மகன் நெற்றியில் இடச் சென்ற காந்திமதியின் கையை, "கண்றாவி!" என்று அவன் தட்டி விட்ட வேகத்தில் அவர் தடுமாறிச் சரிந்திருக்கிறார்.



அன்று, சினிமாவிற்குக் கிளம்பியிருந்த தாயார், தங்கையைத் தானே கொண்டு விட்டு விட்டு வெளியே போவதாகச் சொல்லி விட்டு, வெறுமனே படுத்து கதை படித்துக் காலத்தை வீணாக்கி, முக்கால் மணி நேரம் தாமதமாகத் தியேட்டரில் அதுவும் வெளி கேட்டருகே இறக்கி விட்டு விட்டுப் போனான். அந்தப் படத்தின் சிறப்பே தொடக்கத்தில் வரும் வைரக் கொள்ளை தான். திருப்பி வீட்டுக்கு அழைத்துச் செல்ல அந்த மணிவாசகம் தான் ஓடி வந்தான்.

இத்தனை நாள் பழக்கத்தில் உதயரேகாவை வேற்று ஆளாக நினைத்து வேதனை மறைக்கும் தன்மையும் மாறி விட்டிருக்கவே இந்த விவகாரங்கள் எல்லாம் உதயாவின் காதுக்கும் வந்தது. ஒரு மூச்சு சொல்லி வருந்தி விட்டு, முன்னெல்லாம் எப்படி இருப்பான் தெரியுமா? என்று தாய், மகள் இருவரும் கிருஷ்ணசந்திரன் சிந்து பாடுவார்கள். அப்படிப்பட்டவன் இப்படி மாறி விட்டானே என்று வருந்துவார்கள்.

ஒரு தரம் மாறியவன் விரைவில், மறுபடியும் மாறி, நல்லவனாகத் திருந்தி விடுவான் என்று கூறி உதயா அவர்களைத் தேற்றுவாள்.

தேற்றுவதற்காக சொன்னது அவள் மனதிலும் பதிந்திருக்க வேண்டும். ஏனெனில் கிருஷ்ணசந்திரன், உதயரேகாவின் திருமணத்தின் அடிப்படையே அவளது இந்த எண்ணம் தான் எனலாம். அவன் திருந்த வேண்டும், அவனைத் திருத்தியாக வேண்டும் என்பது தான்.

அன்று தோன்றிய அந்த எண்ணம், தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளால் மேலும் மேலும் வலுப்பெற்றுக் கொண்டே வந்தது.



## 3

**மா**றுவதுதான் மனம். அவரவர் வாழ்வில் ஏற்படும் நிகழ்ச்சிகளுக்கு சந்திக்கும் மனிதர்களுக்குத் தக்கவாறு, நல்லவன் கெட்டவனாவது கெட்டவன் நல்லவன் ஆவது ஒருவரிடம் அன்பு கொள்வது, வெறுப்படைவது என்று மாறுவது தான் மனித இயற்கை. உதயரேகா கூட அப்படி ஒரு சம்பவத்தினால் சற்று மாறி விட்டவள் தான்.

ஆனால், என்ன தான் மாறினாலும், அடிப்படைக் குணம் அடியோடு வேறாவது இல்லை என்பது அவளது அபிப்பிராயம். எனவே, ஒரு காலத்தில் நல்லவனாகவும், பண்பும் பாசமும் உடையவனாகவும் இருந்த கிருஷ்ணசந்திரன், இப்போது ஒரேயடியாகத் திருத்த முடியாத கொடியவனாகி இருப்பான் என்று அவள் நம்பவில்லை. அவன் திருந்தி, பழைய மாதிரி நல்லவனாகி விடுவான் என்பதிலும் அவளுக்குச் சற்றும் சந்தேகமே கிடையாது. ஆனால், இந்த நல்ல குடும்பத்தை, வெகு காலம் நோகடிக்காமல் விரைவிலேயே அவன் திருந்தி வரவேண்டும் என்பது தான் இறைவனிடம் அவளது கோரிக்கை.

ஆனால், நாளுக்கு நாள் கிருஷ்ணசந்திரனின் போக்கு மோசமாகிக் கொண்டே செல்லவும், அவளது நம்பிக்கையும் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது.

"உங்கள் மகனை நன்றாகத் திட்டி, அதட்டி, அடக்க வேண்டியது தானே ஆன்ட்டி. அங்கிள் இரண்டு போடு போட்டால் அடங்கி விட மாட்டாரா?" என்று ஒரு நாள் உதயரேகா ஐடியா கொடுத்தாள்.

ஆனால் ஒரு வேதனைச் சிரிப்போடு, "முயன்று பார்த்து விட்டோமே, உதயா. அதன் பயனாக அவன்



வீட்டை விட்டே போய் விட்டான்" என்று பெருமூச்சு விட்டார் காந்திமதி.

"என்னது?"

"ஆமாம், அம்மா ஒரு நாள்... அன்று குடித்து விட்டு வந்திருப்பான் போல. நடையெல்லாம் தள்ளாட்டம். ஒரே நெடி வேறு. பொதுவாக சாந்தசொரூபியான அவன் அப்பாவுக்கே பொறுக்க மாட்டாமல், இந்தக் குடும்பத்துப் பிள்ளையாடா நீ? மானம் போகிறது. மட்டு மரியாதையோடு ஒழுங்காக இரு அல்லது முகத்தில் விழிக்காதே!" என்று கத்தி விட்டார். அது தான் சாக்கென்று வீட்டை விட்டே கிளம்பி விட்டான். "இப்படி மிரட்டினால் பயந்து நல்லபடியாக இருப்பான் என்று நினைத்தேனே" என்று அவர் ரொம்பவும் வருத்தப்பட்டார். அதற்கு மேல் அவனிடம் அவர் அதிகம் பேச்சு வைத்துக் கொள்ளவில்லை... நான் போய் எவ்வளவோ கேட்டுப் பார்த்தேன். மீண்டும் இங்கே வரவே முடியாது என்று விட்டான் அவன். அப்பாவின் குணத்துக்கும் அவனுக்கும் ஒத்துப் போகாதாம். இருபத்தி ஆறு ஆண்டு கழித்து தான் ஞானோதயம் ஆகியிருக்கிறது! என்றார் காந்திமதி ஒரு கசந்த முறுவலுடன்.

உதயா பேசாதிருக்கவும் தொடர்ந்து, "பாவம்; எல்லாம் சொல்லி உன்னையும் படுத்துகிறேன். வேறு யாரிடமும் நான் இதையெல்லாம் சொன்னதில்லை உதயா. அவன் அப்பாவிடம் சொல்லப் போனால் 'தானாகப் பட்டுத் திருந்தட்டும். அதுவரை அவன் பேச்சை எடாதே' என்று விடுகிறார். சொந்த பந்தத்தில் ஒரு வார்த்தை சொன்னால் அதைப் பத்தாக்கி, பெற்றவளே சொல்லி விட்டாள் என்று அவனுக்கு ஒரேயடியாக கறுப்பு முத்திரை குத்தி விடுவார்கள். வசுவோ அவன் பார்க்கிற பார்வையிலேயே அரண்டு போகிறாள். எல்லாம் உள்ளே போட்டு விழுங்கி விழுங்கி சில சமயம் மூச்சு முட்டிப் போகிறதம்மா... என்னவோ,

உன்னை எனக்கு அன்னியமாக எண்ணத் தோன்றாததால் அடைத்துக் கிடப்பதையெல்லாம் உன்னிடம் கொட்டி உன்னைப் போரடித்து விட்டேன். சாரிம்மா'' என்று வருத்தமாக உரைத்தார்.

பிரியமாய் நோக்கி, ''அன்னியமாய் எண்ணவில்லை என்று விட்டு 'சாரி' சொல்கிறீர்களே, ஆன்ட்டி'' என்றாள் உதயரேகா. ''சொல்லுங்கள் ஆன்ட்டி, இப்போது உங்கள் மகன் இங்கே உங்களோடு இல்லையென்றால் வேறு எங்கே வசிக்கிறார்? ஹாஸ்டல் மாதிரி எதிலேயுமா? பெண்கள் விடுதி மாதிரி ஆண்களுக்கு உண்டா? அங்கே எப்படி இப்படி?'' என்று குடிப்பது போலப் பாவனை செய்து காட்டினாள்.

''பதில் தருவதற்கு கொஞ்சம் இடைவெளி விட்டு விட்டு அடுத்த கேள்வியைக் கேளேன்'' என்று விளையாட்டாய்க் கடிந்து விட்டு, ''இங்கேயே கீழ்ப்பாக்கத்தில் நமக்கு இன்னொரு வீடு இருக்கிறது. அதில் தான்...'' என்று காந்திமதி பேச்சை முடிக்குமுன் கலீர் என்ற சிரிப்புடன் உதயா குறுக்கிட்டாள். ''கீழ்ப்பாக்கமா? பிரமாதம் ரொம்ப ரொம்ப வசதி தான். கொஞ்சம் முற்றியதும் பக்கத்திலேயே சேர்த்து விடலாம்'' என்று உரைத்து மேலும் நகைத்தாள்.

அவளது பாவனையில் கூடச் சேர்ந்து சிரித்து விட்டு, ''உனக்குத் துணிச்சல் அதிகம் தான், உதயா, என் பிள்ளைக்குப் போய் பைத்தியம் என்கிறாய்!'' என்றார் காந்திமதி.

''பின்னே? இந்த மாதிரித் தாய், தந்தை, தங்கை மனதை நோகடிப்பவர் பைத்தியமாகத் தானே இருக்க வேண்டும்''

காந்திமதியின் சிரிப்பு உடனே மாறி விட்டது. ''எப்படி இருந்த பையன்! நான் என்ன நாலைந்தா பெற்றுப் போட்டிருக்கிறேன்? இதில் ஒன்று; அதில் ஒன்று என்று எண்ணி



இரண்டே இரண்டு. அதுவும் இல்லையே என்று ஏங்கித் தவமிருந்து பெற்ற பிள்ளைகள்... அதிலே ஒன்று இப்படி ஆவது என்றால் இவ்வளவு காலம் நன்றாக இருந்து விட்டு மாறிவிட்டதை நினைக்கும் போது சில சமயங்களில் தாங்கவே முடியவில்லை, உதயா. நிர்மலானந்தர் கற்றுக் கொடுக்கிற யோகாவும் தியானமும் மன அமைதி தரும் என்று கேள்விப்பட்டுத் தான் அந்த யோகா வகுப்புக்கே வந்தேன். என்னவோ, அதில் ஒரு பெரிய நன்மையாக உன்னை கண்டேன்'' என்று சின்னவளின் கன்னத்தை வருடினார்.

''என்ன பிரயோஜனம் ஆன்ட்டி'' என்று கையை விரித்தாள் உதயா.

''பெரிய நன்மை தான். மேலே மேலே அடைத்து மூச்சு முட்டாமல், உன்னிடம் வாய் விட்டுச் சொல்ல முடிகிறதே. அதுவே பெரிய சுகம் தான். நீ வந்து போகத் தொடங்கியதிலிருந்து நான் இரவில் கொஞ்சம் நன்றாகத் தூங்குகின்றேன், தெரியுமா?''

மனம் பாகாய் உருகப் பெரியவரிடம் நெருங்கி உட்கார்ந்தாள் உதயா.

இவருக்கு ஏதாவது செய்ய வேண்டுமே! அந்தக் கிருஷ்ணசந்திரனின் காதைப் பிடித்து இழுத்து வந்து இந்த வேதனையைக் காட்ட முடிந்தால்? துடித்துக் கொண்டு இருந்தவள் கையில் ஒரு வாய்ப்பைத் தந்தாற் போல் வசுமதியின் பிறந்த நாள் வந்தது.

உதயரேகாவை வீட்டுக்கு வந்தே அழைத்தாள் வசுமதி.

வசுமதியும் பானுரேகாவும் ஒருவரை ஒருவர் நோட்டம் விடுவதைப் பார்த்து உதயாவுக்கு சிரிப்பு வந்தது. இவர்களை விடவும் தான் ரொம்ப பெரியவள் என்ற உணர்வும் வந்தது.



தன் வீட்டில் தம்பி, தங்கைக்குச் செய்வது போலவே, வசுமதியின் பிறந்த நாள் விழாவிலும் உதயா முழு மனதோடு ஈடுபட்டாள். காந்திமதியோடு சேர்ந்து கேக், ஹால் அலங்காரம் செய்தாள். வசுமதிக்குத் தெரியாமல் இருவருமாக பரிசு வழங்கினார்கள். பிறந்த நாளன்று வசுமதியின் அலங்காரத்தைச் சரிபார்த்தாள்.

அழைக்கப்பட்டிருந்த நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் வந்திருந்தனர். அலங்கரிக்கப்பட்ட மேஜையில், 'போ' கட்டிய கத்தியோடு, நட்டநடுவில் ஒரு மெழுகுவர்த்தியோடு கேக்கும் வைக்கப்பட்டாயிற்று.

எல்லாமே ரெடி. ஒரே ஒருவனது வருகையைத் தவிர.

கிருஷ்ணசந்திரனின் வரவுக்காக, ஆறுமணிக்குத் தொடங்க வேண்டிய விழா தாமதப்பட்டுக் கொண்டே இருந்தது.

மணி ஏழை நெருங்கவும், ''விருந்தினரை காக்க வைப்பது சரியல்ல, கேக்கை வெட்டு'' என்று செல்வரங்கத்தின் குரல் அழுத்தத்துடன் உத்திரவிட, வசுமதியின் கண்களில் நீர் நிரம்பலாயிற்று.

''சாப்பாட்டை முடித்துக் கொண்டு பிறகு கேக் வெட்டலாமா?'' என்று மெல்ல வினவிய தாயார், தந்தையின் கோபப் பார்வையால் வாயடைத்துப் போனார்.

உதயா, வசுமதியைத் தேற்ற முனைந்தாள். ''ஷ்... வசு, கண்ணீர் விட்டால் 'காஜல்' கரைந்து கறுப்பாகி விடும். அழக்கூடாது. பார், உன் அண்ணன் புத்தி தெரியாதா? இப்போது அப்பாவுக்கு கோபமூட்டாமல் கேக்கை வெட்டி விடம்மா'' என்று பரிவுகாட்டி வற்புறுத்தினாள்.

''போன வருஷம்... அண்ணன்'' என்று வசுமதி விசும்புகையில், வாயிலில் கார் ஒன்று வேகமாக வந்து பிரேக் போட்டு நிற்கவும் பேச்சை நிறுத்தி ஆவலாக வாயிலை நோக்கினாள்.



எல்லோரின் பார்வையும் அங்கே தான்.

ஆனால் வந்தவன் மணிவாசகமே.

ஏமாற்றத்தை மறைக்க வெகுவாக முயன்று கொண்டிருந்த வசுமதியிடம் சென்றான்... ''கேசி வரமுடியவில்லை, வசும்மா 'ஸாரி' சொல்லச் சொன்னான். இதோ பரிசு...''

''அட... இன்னும் கேக் வெட்டலையா? சீக்கிரம்...''

விழா முடிந்து விருந்தினர்கள் சென்ற பிறகு அவன் சொன்ன கதை வேறு. கிருஷ்ணசந்திரனுக்கு இங்கே வருகிற எண்ணமே இல்லையாம். குடித்து விட்டு பார்க்கில் கிடந்தானாம். எழுப்பி வீட்டில் கொண்டு விட்டானாம். அப்போது நண்பன் குழறிப் பேசியதில் இருந்து, வசுமதியின் பிறந்த நாளை ஊகித்து அண்ணனுக்காக அவள் ஏங்குவாள் என்று எண்ணி, அழைக்கப்படாவிட்டாலும் பரவாயில்லை என்று ஒரு பரிசுப் பொருளுடன் வந்து, கிருஷ்ணசந்திரன் அனுப்பியது போன்று நடித்தானாம்.

மூவரின் முகங்களும் மாறிய விதத்தைப் பார்த்து, இந்த உண்மை விளம்பி, உண்மையை விளம்பாமலேயே போயிருக்கலாம் என்று உதயரேகா எண்ணினாள். ஆனால் எல்லோராலும் பொய்யில் வாழ முடிவதும் இல்லை தான்.

எல்லாம் போட்டு உடைத்து விட்டு இன்னும் ஒரு 'ஸாரி'யோடு மணிவாசகம் சென்று விட, வாயைப் பொத்தி விசும்பலை அடக்கியபடி அங்கிருந்து ஓடினாள் வசுமதி.

''பிறந்த நாளும் அதுவுமாக என் கண்மணியை அழ வைத்து விட்டானே!'' என்று காந்திமதி அரற்ற, கல்லாய், அமர்ந்திருந்தார் அவளுடைய கணவர்.

இனி இந்தக் கிருஷ்ணசந்திரனை சும்மா விடக் கூடாது என்ற முடிவுக்கு உதயரேகா வந்தது அப்போது தான்.

முடிவு எடுத்த பின் சும்மா இருப்பார்களா என்ன? அதிலும் அவள் அன்று உதயரேகா 'கல்ச்சரல்' வகுப்புக்குச் செல்ல வேண்டிய தினம். அங்கே போய் பிரியாணி செய்து, அங்கே கொஞ்சம் உண்டு மீதியைத் தம்பி தங்கைகளுக்காக பத்திரப்படுத்தி எடுத்து வைத்துக் கொண்டு நேராகக் கிருஷ்ணசந்திரனின் அலுவலகம் சென்றாள்.

ஒருதரம் 'ஷாப்பிங்' சென்றபோது தன் அண்ணனின் அலுவலகத்தை வசுமதி அவளுக்குக் காட்டித் தந்திருந்ததோடு, மின்சார வயர்கள் தயாரிப்பை அவனிடம் தந்தை கொடுத்திருப்பதாகவும் சொல்லியிருந்தாள்.

வெறுமனே உதயரேகா என்றால் நேரில் பார்க்கச் சம்மதிப்பானோ என்னவோ என்று யோசித்து, 'கெம்பி ளாஸ்ட்' கம்பெனியின் பிரதிநிதி, 'வய'ருக்கான பிளாஸ்டிக் கச்சாப் பொருள் பற்றிப் பேசப் பெரியவர் செல்வரங்கம் இங்கே அனுப்பி வைத்ததாக ஒருசிறு பொய் சொல்லி, அவனைச் சந்திக்கும் அனுமதிபெற்று உள்ளே சென்றாள்.

உள்ளே சென்றவளுக்கு முதல் அதிர்ச்சி, ஒரு குடிகாரனின் கண்களில் இருந்த - அவள் சற்றும் எதிர்பார்த்திராத கூர்மை!

ஒரு பார்வையில் அவளை எடைபோட்டு, ஏற இறங்க நோக்கி, விழிகளில் கேள்வியோடு கிருஷ்ணசந்திரன் எழுந்தான்.

இனி வேஷத்தினால் பயனில்லை என்பதோடு, அது அவசியமும் இல்லை என்று உணர்ந்து, ''நான் உதயரேகா'' என்று தன் பெயரைச் சொன்னாள் அவள்.

சட்டென அவன் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது. ''அடடா! தெரிந்து கொள்ளாமல் இருந்துவிட்டேனே!''



''எ...என்னது?''

''நம் பிரதமர் பதவி விலகிய விவரம்தான். பதிலுக்கு நீங்கள் பிரதமராகப் பதவி ஏற்றது அல்லது அவ்வளவு உயரம் இல்லையோ! மாநில முதல் அமைச்சர்? உதயரேகா இதில் யார் என்று புரிந்து கொள்ளத் தெரியாதது தப்புதானே?''

அவளையே மட்டம் தட்டினாலும் கூடக் கண்களில் கேலி நகையும், உதட்டோரம் வளைவுமாகக் கிருஷ்ணசந்திரனின் தோற்றம் உதயரேகாவின் மனதில் பதிந்தது.

அவனது கிண்டலை உள்ளூர ரசித்து, ''என் பெயரை முதலில் சொன்னேன். அதன்பிறகு தானே விவரம் சொல்ல முடியும்?'' என்றாள் மிடுக்காக.

''இனிமேல் தான் அது சொல்லவேண்டுமா? முன்னே சொன்ன விவரம் என்ன ஆயிற்று?''

''அது... அது உள்ளே வர அனுமதிக்காக ஒருசிறு... சிறு வெள்ளைத்தனமான கெடுதலற்ற புளுகு.'' லேசாக முகம் சிவந்தாள் உதயரேகா.

''பொய்தான் இல்லையா? பொய்யைப் பஞ்சமா பாதகங்களில் ஒன்றாக வள்ளுவர் கூறியிருக்கிறார் தெரியுமா?'' மிகவும் சீரியசாக விவரம் சொன்னான் அவன்.

''அதே வள்ளுவர் பொய்மையை வாய்மை இடத்து வைத்தும் பாடியிருக்கிறார் தெரியுமா?'' என்றாள் அவளும் சளைக்காமல்.

''இப்போது புரை தீர்ந்த நன்மை என்னவோ?''

''இனிமேல்தான் தீரப்போகிறது!''

''ம் ஹூம்!''

இவ்வளவு இலகுவாகப் பேசுகிறவன் அப்படி ஒரு மூடமதி முரடனாக எப்படி இருக்கமுடியும்?





ஆச்சரியமும் ஆராய்ச்சியுமாக உதயரேகா அவனை நோக்கினாள்.

அவன் முகத்திலும் சிறுதிகைப்பு தோன்றி, உடனே மறைய, ''உட்காரலாம்'' என்று எதிரே இருந்த குஷன் நாற்காலியைக் காட்டியபோது, அவன்குரலில் உணர்ச்சி துடைக்கப்பட்டிருந்தது. ''என்ன விஷயம்?''

இந்தக் கேள்வியின் பதில் அவள் ஏற்கனவே யோசித்து வைத்திருந்ததுதான். எனவே உடனே தொடங்கி விட்டாள். ''பாருங்கள் மிஸ்டர் கிருஷ்ணசந்திரன், பெற்றவர்களும், உடன்பிறந்தவர்களுமே ஒருவருக்கு மிகவும் உற்ற உறவினர்கள். இந்த உலகத்தில் நாம் பிறவி எடுக்கக் காரணமான பெற்றோருக்குச் சும்மாவே நாம் நன்றியோடு இருக்க வேண்டும். அதிலும், எத்தனையோ சிரமங்களைச் சகித்து, பத்துமாதம் வயிற்றில் சுமந்து, படாதபாடுபட்டுப் பெறுகிற தாய்...''

''சொந்த அனுபவமா, கேள்வி ஞானமா?''

''என்னது?''

''இந்தப் படாத பாடு பட்டுப் பெறுகிற விஷயம்?''

எரிச்சலை அடக்கிக் கொண்டு, ''நான் திருமணம் ஆகாதவள்'' என்றாள் உதயா.

''திருமணத்துக்கும் பிள்ளை பெறுவதற்கும் என்ன சம்பந்தம்?'' என்று அவன் சாவதானமாக உரைக்கவும் அவள் முகம் ஜிவ்வென்று சிவந்துவிட்டது.

''நான் ஒன்றும் அந்தமாதிரிப் பெண் அல்ல'' என்று ஆத்திரமாக உரைத்தவள், உடனே நிதானித்தாள். இவன் தன்னைச் சீண்டிவிட்டுத் திசைமாற்ற முயல்கிறான் என்று ஊகித்து, ''என்னைப் பற்றிய விவரம் உங்களுக்கு அவசியம் இல்லை. நான் சொல்ல வந்தது...''



''எனக்குக் கேட்கப் பிரியமில்லாதது பாருங்கள் மிஸ் உதயா, இங்கே போர்டு ஒன்று அனாவசியமாய் நுழைக்கிற மூக்கு உடைக்கப்படும் என்று பெரியதாக எழுதி வைக்கலாம் என்று பார்க்கிறேன். கறுப்பிலே வெள்ளை எழுத்தா அல்லது வெள்ளையிலே கறுப்பா? எது நன்றாக இருக்கும்?'' என்று அவளிடம் ஆலோசனை கேட்டான் கிருஷ்ணசந்திரன். நிமிர்ந்து, அவனை நேராக நோக்கி, ''இதைப் பேச நீ யார் என்கிறீர்கள்?'' என்றாள் உதயா.

''இல்லை நீ யார் என்பது தெரிகிறது. 'உன்வீட்டுச் சாப்பாட்டுக்காகப் புதிதாக ஒன்று உன்வீட்டைச் சுற்றிக் கொண்டு அலைகிறது' என்று மணி ஏற்கனவே சொல்லியிருக்கிறான்.''

மீண்டும் 'சர்'ரென்று" சினம் ஏற, ''சாப்பாட்டுக்காகவா? எங்கள் சித்தி எவ்வளவு அருமையாகச் சமைப்பார்கள் தெரியுமா? உங்கள் வீட்டில் வெறும் சமையல்காரன் சாப்பாடு'' என்றவளுக்கு இன்னும் இரண்டு விஷயங்கள் உறைத்தன.

ஒன்று அவனது ஏகவசனம். அதை ஒதுக்கி, அவன் பேச்சிலிருந்த ஓட்டையைக் காரிய வாதியாய்க் கைப்பற்றி, ''உங்கள் வீட்டைச் சுற்றுகிறவர்கள் பற்றிப் பிறர் சொல்லித்தான் தெரிந்து கொள்ளவேண்டும் என்றால் அது உங்களுக்கு அவமானமாக இல்லையா?'' என்று மடக்கினாள்.

ஆனால், ''இல்லை என்றால் என்ன செய்யப்போகிறாய்?'' அவன் அலட்சியமாகக் கேட்கவும், சற்றுத் திகைத்துவிட்டு, ''ஆமாமாம். மான-அவமானம் பார்க்கிறவர்கள் குடித்துவிட்டுப் பொது இடத்தில் உருளுவார்களா என்ன?'' என்றாள் குத்தலாக.

கொஞ்சமும் கூனியாமல், ''நான் நடுத்தெருவிலேயே உருளுவேன். அதைக் கேட்க உனக்கு உரிமை கிடையாது.

எனவே, நீ கிளம்பலாம்'' என்றான் கிருஷ்ணசந்திரன் கடினமான குரலில்.

''ஒரு கெட்டதை யார் வேண்டுமானாலும் தட்டிக் கேட்கலாம்.''

''அதை என் எல்லைக்கு அப்பால் வைத்துக் கொள். சின்னப் பெண், போகிறது என்று பொறுத்துப் போனால் யாரோ ஒருத்தி, உனக்கு இவ்வளவு வாய் நீளுகிறதா? இப்போது ராசாபாசமின்றி வெளியே போகிறாயா அல்லது கழுத்தைப் பிடித்துத் தள்ளவேண்டுமா?'' என்று அவன் எழவும், உதயாவின் முகம் கன்றிச் சிவந்து போயிற்று.

கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவதா! அவளையா! என்ன அவமானம். சட்டென எழுந்து, ''உங்களை ஒரு மனிதர் என்று எண்ணிப் பேச வந்தேனே! எனக்கு இது தேவைதான்!'' என்றவள் கைப்பையை எடுத்துக் கொண்டு விருவிருவென்று வெளியே நடந்தாள்.

உதயரேகாவுக்கு ஆத்திரம் அடங்க வெகுநேரம் ஆயிற்று. அப்போதும் - உறங்குவதற்கென்று அன்று விளக்கை அணைத்து விட்டுப் படுத்த பிறகும் கூடக் கிருஷ்ணசந்திரனின் பேச்சை மறக்கமுடியவில்லை.

முதலில் அவ்வளவு இலகுவாகப் பேசியவன் ஏன் மாறினான்? ஒருவேளை மேலே பேசவிடாமல் தடுப்பதற்காகச் சினமூட்டினானா?

யாரோ ஒருத்தியா! யாரோ ஒருத்தியாக இல்லாமல் உரிமை உள்ளவளாக நின்று கேட்டால் இப்படி வெளியேற்ற முடியுமா?

உரிமையோடு அவனைத் தட்டிக் கேட்பதற்காகத்தான் அவனைத் திருமணம் செய்யும் எண்ணம் - ஆவல் தனக்கு உண்டாயிற்று என்பதுதான் உதயரேகாவின் அன்றைய கணிப்பு.



ஆனால் அடிமேல் அடிபட்டு, நொந்து ஓய்ந்தபிறகுதான், என்ன சூழ்ச்சி செய்தேனும் கிருஷ்ணசந்திரனை அவள் மணக்க விரும்பியது, அசட்டுத்தனமாக அவன் மேல் அவள் கொண்டுவிட்ட காதலினால் என்பதை அவள் கண்டு கொண்டாள்.

சற்றுக் காலம் கடந்த கண்டுபிடிப்பு.

## 4

அடுத்த சில தினங்கள், உதயரேகாவின் மனதைக் கிருஷ்ணசந்திரன் முழுமையாக ஆக்ரமித்துக் கொண்டான் எனலாம். 'கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளவா' என்று அவன் கேட்டதனால் உண்டான சினம் அடங்க அடங்க முதலில் அவன் கேலிபேசிய விதமும், அதன்பின் அவனது தோற்றமும் குரலும் என்று வேறு நினைப்பே இல்லாது போயிற்று.

தலைவாரும்போது, அவளாக ஒருதரம் கண்ணாடியில் அவனைக் கற்பனையில் அவள் அருகே நிறுத்திப் பார்த்தாள்.

அப்புறம், பொட்டு வைக்கும்போது, மைதீட்டும் போது, உடை மாற்றிச் சரிபார்க்கும்போது என்று அவள் கண்ணாடி முன்நிற்கும் ஒவ்வொரு வேளையிலும், அவனது தோற்றம் தானாகவே அவள் அருகே வந்து நின்று கொண்டது.

இந்தத் தோற்றப் பொருத்தத்தை அவன் உணர்ந்திருப்பானா? அந்தக் கடுவன் பூனையா? என்று செல்லமாக வைத்து எண்ணமிடும்போதே அவளுக்கு இன்னொன்று தோன்றியது. அவன் திடுமெனக் கோபம் காட்டும்வரை, பேசுகிற பாணியும் பொருந்தித்தானே இருந்தது? அப்பாணியில் அவன் எப்போதும் பேசும்படி செய்ய வேண்டுமே?

எப்படியோ, நாள் முழுவதும் அவனை நினைத்தது மட்டுமின்றி கிருஷ்ணசந்திரனை மணப்பது பற்றியும் உதயா



தீவிரமாக எண்ணமிடலானாள். இதுவரை ஒரேஒரு தரமே சந்தித்த அன்னியனாக அவனை எண்ண அவளுக்குத் தோன்றவில்லை. பிறந்த நாளைக்குப் பிறகு காந்திமதியும் அவர் மகளுமாக அவனைப் பற்றியே பேசியதும், அவனைப் பற்றி நினைத்திருந்ததுமாக, ஏதோ பலகாலம் பழகியவன் போலவே எண்ணினாள். திருமணம் ஆனபிறகு, உரிமையோடு அவனுக்கு உபதேசம் பண்ணலாம்... என்று திருப்பித்திருப்பி அதே நினைவு.

''யாராவது அவருக்குத் திருமணம் செய்து வையுங்களேன், ஆன்ட்டி. கல்யாணமானால் ஆண்கள் திருந்திவிடுவார்கள் என்கிறார்களே'' என்று ஒருநாள் பாட்டிக்கிழவி போல காந்திமதிக்கு இலவசமாய் ஆலோசனை வழங்கினாள்.

உச்சுக் கொட்டினாள் அந்த அம்மாள். ''கேட்டுப் பார்த்தேனே அந்தப் பேச்சே கூடாது என்று விட்டான். அவன் விரும்புகிறபடியான வாழ்வுக்கு திருமணம் பெரும் இடையூறாம். என்ன வாழ்வோ இது!'' என்றாள் அலுப்புடன்.

ஓகோ, இப்படி வேறு இருக்கிறதா? அப்படியானால், திருமணத்தை மறுக்க முடியாத நிலையில் முதலில் அதை நிறுத்த வேண்டும்...

எப்படி? எப்படி? என்று அதே யோசனையாக இருந்தது முகத்தில் தெரிந்ததோ, ''என்ன உதி நாலைந்து நாட்களாக முகம் ஒருமாதிரி இருக்கிறது?'' என்று சித்தி யசோதா விசாரித்தாள்.

''ம்ம்..? ஒருபக்கம் கோணலாகிவிட்டதா, சித்தி?'' என்று அப்போதைக்குச் சிரித்து, சமாளித்து வைத்தாள் உதயா.

அதன் பிறகு, முகபாவனையில் கவனமாக இருந்த போதும், மனதுமட்டும் மீண்டும் மீண்டும் அதிலேயே



உழன்று கொண்டு இருக்கவே, ஒருவாய்ப்புக் கிடைத்ததும் 'கப்'பென்று அதை அவள் இறுகப்பற்றிக் கொண்டாள்.

செல்வரங்கத்தின் சொந்த ஊர் காஞ்சீபுரத்தை அடுத்திருந்த ஒரு சிற்றூர். தொழில் சென்னையில் இருந்தபோதும், சொந்த ஊரிலும் ஒரு விவசாயப் பண்ணையும் வீடும் வைத்திருந்தார்கள். அவ்வப்போது விடுமுறை நாட்களில் சென்று தங்குவது உண்டு. அதிலும், கோயில் திருவிழாவுக்கு சென்று, மூன்று நாள் விழாவும் முடிந்த பிறகு திரும்புவது ஒரு கட்டாயமான வழக்கம். கரகாட்டம், வில்லுப்பாட்டு, இதிகாசக் கதை கூறல் என்று கிராமீய மணத்தோடு கண்களுக்கும் கருத்துக்கும் கூட நல் விருந்துகள் உண்டு.

இந்த ஆண்டு கோயில் விழாவுக்குத் தாயும் மகளுமாக உதயரேகாவையும் உடன் வரும்படி அழைத்தார்கள்.

உடனே சரியென்று விடாமல், ''வெளியூர் என்றால் சித்தியிடம் கேட்கவேண்டும், ஆன்ட்டி தடுக்கமாட்டார்கள்; ஆனாலும் அவர்களிடம் கேளாமல் நான் பதில் சொல்லமுடியாது... ஆமாம், எல்லோரும் என்றீர்களே, மாகனம் பொருந்திய பட்டத்து இளவரசர் இந்த மாதிரித் திருவிழாக்களுக்கெல்லாம் எழுந்தருளுவது உண்டா?'' என்று கேலியாக விசாரித்தாள்.

''நீ என்னதான் கிண்டலடித்தாலும், எங்கள் வீட்டுப் பட்டத்து இளவரசன் தான் அவன்'' என்ற காந்திமதி முகம் லேசாக வாட, ''முன்பெல்லாம் எங்களுக்கு முன் முதல் ஆளாகக் கிளம்புவான். அங்கே உள்ள பழைய புத்தகங்கள் படிப்பதில் அவ்வளவு ஆசை. மற்ற கேளிக்கைகளையும் கேலி செய்து கொண்டே ரசிப்பான். இந்தத் தடவை முக்கியமான பூஜைக்கு மட்டும் இருந்துவிட்டு - செவ்வாய் இரவு பூஜைக்கு வந்து விட்டு மறுநாள் கிளம்பிவிடப் போவதாகச் சொன்னான்'' என்றார்.

அப்போதே, அவர்களோடு செல்லவேண்டும் என்று முடிவு செய்துவிட்டாள் உதயரேகா. "அப்படி ஒன்றும் ஆண்டுக் கணக்கில் பழகியவர்கள் இல்லையே! அவர்களோடு வெளியூர் சென்று இராத் தங்கவேண்டுமா?" என்று தயங்கிய யசோதாவிடம் கெஞ்சி, கெஞ்சி மிஞ்சி ஒருவாறு ஒத்துக் கொள்ளவும் வைத்துவிட்டாள்.

ஏனெனில், அன்றைய சச்சரவுக்குப் பின் கிருஷ்ணசந்திரனோடு வெகு தற்செயலாக நேர்ந்த இரு சிறு சந்திப்புகளும் - ஒருதரம் அவனது சாமான் எதையோ எடுக்க அவன் இங்கே வந்திருந்தான். மறுதரம், தொழில் விஷயமாகத் தந்தையிடம் பேச வந்தான் அவையிரண்டும் அவளது எண்ணத்தை மேலும் வலுப்படுத்தியிருந்தன.

தன் ஏக்கத்தை மறைக்க முயன்று தோற்றவாறே காந்திமதி மகளை விழிகளால் அள்ளி விழுங்கியதையும், எதையாவது பேசி அவளைக் கூடக் கொஞ்சம் நேரம் அங்கே தங்க வைக்க முயன்றதையும் காணாதது போன்ற பாவனையில் உதயா கவனித்துக் கொண்டே இருந்தானே! கூடவே, அவளைப் பார்த்த போது அவனது பார்வையில் இருந்த சிறு கேலி வேறு.

இன்னுமா இங்கே சுற்றிக் கொண்டு இருக்கிறாய் என்று கேட்கிறானாக்கும்? இங்கேயே நிரந்தரமாக இருப்பதற்காகத் திட்டமிடுகிறாள் என்பது தெரிந்தால் என்ன செய்வான்?

பின்னங்கால் பிடரியில் இடிபடும்படி அலறிப்புடைத்துக் கொண்டு ஓடுவான் என்று கேலியாக எண்ணமிடும்போதே உள்ளூரச் சிறு துணுக்கம் உண்டாயிற்று. அப்படி அலறிப்புடைத்து ஓடுகிறவனைத்தான் மணந்தாக வேண்டும் என்று அவளுக்கு என்ன தலைவிதி. அவளுடைய தந்தையின் பதவி அவளது அழகு மற்றும் படிப்புக்காக மாப்பிள்ளை வீட்டார் விரும்பியே வந்து கொண்டு இருக்கும் போது என்று நினைக்கும் போதே காந்திமதியின் நீர்த்திரை படிந்த விழிகள் அவளது பார்வையில் பட்டன.



என்ன செய்தாலும் செய்யட்டும். இந்த ஆண்ட்டி முகத்தில் மகிழ்ச்சி நிலவச் செய்வது என்று உதயரேகா உறுதி பூண்டாயிற்று. எப்படியாவது, அவள் அதைச் செய்யத் தான் போகிறாள். நல்லபடியாகத் திருந்தி, கிருஷ்ணசந்திரன் பழைய மாதிரி ஆனபிறகு, அவனும்தான் பெருமளவு அவளுக்கு நன்றி சொல்லப் போகிறான்.

பார்வைக்குப் பளிச்சென்று - சித்தியும் அவளுமாகச் சேர்ந்து சென்று தேர்ந்தெடுத்த துணிமணிகள் பளிச் சென்று தான் இருக்கும். அதில் நாலு செட் துணிகள், ஒரு பட்டுச் சேலை, எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு உதயா கிளம்பிவிட்டாள்.

சின்ன ஊர்தான். மொத்தமே ஐம்பது, அறுபது வீடுகள் தான் இருக்கக்கூடும். பெரும்பாலும் ஓட்டு வீடுகளும், இடையிடையே சில மச்சு வீடுகளும்.

செல்வரங்கம் குடும்பத்தின் வீடு, மச்சு வீடாக இருந்தது. அங்கங்கே - சமையல் அறை, குளியல் அறை வசதிகளோடு தனி அறைகள் என்று புதிதாகவும் கொஞ்சம் கட்டியிருந்தார்கள்.

மேல் மச்சில் ஒரு புதையலே குடியிருந்தது. மிகவும் பழைய புத்தகங்கள் வரிசைப்படுத்தப்பட்டு அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பூச்சி வந்து விடாமல் தடுப்பதற்காக, வசம்புத் துண்டுகள், பூந்தூள், பாச்சை உருண்டைகள் பரப்பப்பட்டிருந்தன. பழைய, பெரிய எழுத்து விக்கிரமாதித்தன், மதனகாமராஜன் கதைகள், விவேக சிந்தாமணி, பழைய கலைமகள், ஆனந்தவிகடன், கல்கி பத்திரிகைகளின் தொகுப்புகள் என்று விலைமதிக்க முடியாத புத்தகங்கள் அழகான கட்டுமானத்தில் மேலே கண்ணாடிப் பேப்பர் உறையிட்டு அடுக்கப்பட்டிருந்தன.

ஒரு புத்தகத்தை எடுத்து, உதயரேகா ஆவலோடு பிரித்தபோது, உடன் வந்து வீடு காட்டிக் கொண்டிருந்த



வசுமதி எச்சரித்தாள். "கவனம், உதயா எல்லாம் பழைய புத்தகங்கள் அவசரமாகத் திருப்பினீர்கள் என்றால் காகிதம் உடைந்துபோகும். அப்புறம் அண்ணன் திட்டுவார்."

"என்னவோ இந்தப் புத்தகங்கள் எல்லாம் உன் அண்ணனுக்கு மட்டுமே சொந்தம்போலப் பேசுகிறாயே!" என்றபடி கையிலிருந்த புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டினாள் உதயரேகா, கவனத்துடன்தான்.

"அண்ணனுடையவைகளேதான். அண்ணனுக்கு இந்தப் புத்தகங்களிடம் இருந்த ஆசையைப் பார்த்துவிட்டுத் தாத்தா இந்தப் புத்தகங்களை அண்ணனுக்கே எழுதிக் கொடுத்துவிட்டார். பக்கத்தில் அந்த அறை பார்த்தீர்களா? இங்கே வந்தால் அண்ணன் வாசம் செய்வது இங்கேதான்."

உள்ளே கிடந்த படுக்கையைப் பார்த்துவிட்டு, "ஓகோ! படுத்துத் தூங்கிக் கொண்டே படிப்பாராக்கும்?" என்று சாதுவாய்க்கேட்டாள் உதயா.

"அய்யோ, போங்கள் உதயா. தூங்கிக் கொண்டு எப்படிப் படிக்க முடியுமாம்? அண்ணனுக்குப் படுத்துக் கொண்டு கையில் புத்தகத்தை எடுத்தால் கூடக் கோபம் வரும். ஒருதடவை, புத்தகத்தைப் பின்புறம் மடக்கிப் பிடித்தேன் என்று எவ்வளவு திட்டினார் தெரியுமா?... ஆனால் அது வேறே மாதிரிக் கோபம்..." என்று முகம் வாடினாள் வசுமதி.

"ஷ், எல்லாம் சீக்கிரமே, முன்போல் ஆகிவிடுவார் பார்" என்று தணிந்த குரலில் தேற்றும் போதே உள்ளூர ஒரு குளிர்ச்சி. உதயாவுக்கும் புத்தகங்களை யாரேனும் பின்புறம் மடக்கிப் பிடித்தால் ஆத்திரம் வரும்! எண்ணப் போக்கிலும் பொருத்தம் இருக்கிறதே!

தோற்றம், எண்ணம், பேச்சு எல்லாவற்றிலும் பொருத்தம் இருக்கும்போது வேறு என்ன யோசனை? உள்ளதுமாய் இன்னொரு காரணம் வேறு!



சுற்றிலும் பார்வையை ஓடவிட்டபடி, "ஆமாம், உங்கள் அண்ணாரின் சாம்ராஜ்யத்துக்கு இந்த ஒரே ஒரு கதவுதானா? அப்புறம் உங்கள் அப்பா திட்டவரும்போது அவர் தப்பி ஓட வழி?" என்று வேடிக்கை போல விசாரித்தாள்.

"வழி வேறே கிடையாது. ஆனால் அப்பா, அண்ணனைத் திட்டுவதும் கிடையாது. முகத்துக்கு நேரே அண்ணன் ஏதாவது சொல்லிவிட்டால் அசிங்கம் என்று ஒதுங்கியே போய்விடுவார்."

கீழேயிருந்து காந்திமதி மகளை அழைக்கும் குரல் கேட்டது.

"நீ போ வசு. நான் கொஞ்சநேரம் புத்தகம் பார்த்து விட்டு வருகிறேன்" என்று அனுப்பிவிட்டு அந்த இரு அறைகளையும் ஆராய்ந்தாள்.

சுற்றிச் சுற்றிப் பார்த்தாலும், கிருஷ்ணசந்திரனின் அறை, புத்தக அறை இரண்டும் சேர்ந்த இந்தப் பகுதியிலிருந்து வெளியேற ஒரே ஒரு கதவுதான் இருந்தது.

துறுதுறுவென்று அவள் கற்ற சிலவேலைகளைக் கொண்டு, கிருஷ்ணசந்திரனை இப்போது ஓர் இக்கட்டான - திருமணத்தை மறுக்க முடியாத நிலையில் நிறுத்தி விடலாம். ஆனால்...

முடிவுதான் முக்கியம். வழிமுறைகளைப் பற்றிக் கவலைப்படக் கூடாது என்று செயலில் இறங்குமுன் உதயரேகாவுக்குத் தன்னைச் சற்றுத் திடப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

என்னதான் துணிச்சல்காரியாக இருந்தாலும், வளர்ந்த முறையினால், குடும்பப் பெண்ணுக்குரிய இலக்கணங்கள் என்று பேணிக் காத்துவந்த சில கோட்பாடுகளை ஒதுக்கிச் செயல்படுவது அவளுக்குச் சிரமமாகத்தான் இருந்தது.

கிருஷ்ணசந்திரன் இப்போது பெற்றுள்ள கெட்ட பெயர் அவளுக்குப் பெரிதாகப் படவில்லை. அவன்கை மீறினால் இருக்கவே இருக்கிறது அவளது கராத்தேயும், குங்ஃபூவும்!

ஆனால், ஒன்றைத் 'துணிந்தபின் எண்ணுவம் என்பதி ழுக்கு' என்பதற்காகவே பலமுறை சிந்தித்துப் பார்த்தாள்.

கடைசியாக, ஒன்றைச் சாதிக்க வேண்டுமானால் சில பல கஷ்டங்களை அனுபவித்துத்தான் ஆகவேண்டும்; இந்தக் குடும்பப்பெண் இலக்கணப் புறக் கணிப்பையும் அப்படி ஒரு கஷ்டமாக எண்ணி ஏற்கத்தான் வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள். ஏனெனில், கிருஷ்ணசந்திரனுக்குக் கடிவாளமிட இதுபோல இன்னொரு வாய்ப்பு இலேசில் கிடைக்காது!

ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தவள், துணிந்துவிட்ட நடையுடன் காந்திமதியிடம் சென்றாள்.

பெட்டியில் பூட்டு சிக்கிக் கொண்டதாகக் கூறித் தானே சரி செய்துவிட முடியும் என்று கூறி அதற்காக ஸ்பானர், ஸ்க்ருடிரைவரைக் கேட்டு வாங்கிக் கொண்டாள்.

பண்ணையாட்களுக்குக் கொடுக்க வேண்டிய துணிமணிகளை காந்திமதியும் வசுவுமாக அடுக்கிக் கொண்டு இருக்கையில் மீண்டும் மாடிக்கு ஓடினாள் உதயரேகா.

அங்கே, புத்தக அறையின் கதவுக்குமிழைக் கழற்றி ஆராய்ந்து திருப்தியுற்றாள். கிருஷ்ணசந்திரனின் வருகைக்காகக் காத்திருந்தாள்.

மாலை மயங்கி, இருள் பரவத் தொடங்கிய பிறகுதான் கிருஷ்ணசந்திரன் வந்து சேர்ந்தான். உதயரேகாவைப் பார்த்ததும் ஒற்றைப் புருவம் தூக்கியது தவிர, அவள் ஒருத்தி இருப்பதாகவே அவன் கண்டு கொள்ளவில்லை.



'எவ்வளவு நேரம்?' என்று உதயா உள்ளூரக் கறுவினாள். பயண அழுக்கு நீங்கக் குளித்து, உடை மாற்றிக் கொண்டு, கிருஷ்ணசந்திரன் கோவிலுக்குச் சென்றுவிட்டான்.

ஏற்கனவே மதிய பூஜைக்குச் சென்று வந்துவிட்டபடியால், "லேசாகத் தலை வலிக்கிறது ஆன்ட்டி. அங்கே அந்த உறுமி மேளச் சத்தத்தில் அதிகமாகி விடும். இங்கேயே இருக்கிறேன்" என்று கூறி, குடும்பத்துடன் செல்வதைத் தவிர்த்துவிட்டு, அவர்கள் வெளியேறியதும் புத்தக அறைக்குச் சென்றாள்.

கதவுக் குமிழைத் திறந்து, உட்புறமாய்க் கதவின் தாளைக் கட்டுப்படுத்தும் பகுதியை நீக்கிவிட்டு, முன்போலக் குமிழை மாட்டினாள். கிருஷ்ணசந்திரன் அறையில், தண்ணீர், பழம் போன்றவை இருக்கிறதா என்று பார்த்து இல்லாததை எடுத்து வைத்தாள். ஏனெனில், இவைகளுக்காக, அவன் இடையில் கதவைத் திறக்க முயன்றால் அவளது திட்டம் பாழாகிவிடுமே!

இரவில் வெகுநேரம் கழித்து, வீட்டினர் திரும்பி வந்தபோது உதயா உறங்குவதுபோலப் பாசாங்கு செய்தாள்.

கிருஷ்ணசந்திரன் மாடிக்குச் செல்ல, வசுமதி படுத்ததும் உறங்கிவிட, விரைவிலேயே வீடு முழுமையும் அரவம் அடங்கியது.

மாடிச் சன்னல் வழியே வெளியே விழுந்த வெளிச்சமும் மறைந்த பின், சற்றுப் பொறுத்து மெல்ல எழுந்து உதயரேகா மச்சப்படி ஏறினாள். பண்ணைவீட்டில் எதையும் பூட்டிப் பழங்கவில்லை என்பதை அவள் ஏற்கனவே கண்டிருந்தாள். எனவே மெல்லக் கதவைத் திறந்து உள்ளே சென்று, ஓசையின்றிக் கதவைச் சாத்தினாள்.



பெரிய மூச்சுகள் எடுத்தும் சற்று நிதானப்படுத்திக் கொண்டு, புத்தக அறை விளக்கைப்போட்டு, புத்தகங்களை ஆராயலானாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே, சில கணங்களில், கிருஷ்ணசந்திரனின் அறை விளக்கு ஒளிர்ந்தது.

அவனது காலடிச் சத்தத்தை அடுத்து, "இந்த நேரத்தில் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்ற அவனது அதட்டல் கேட்கவும் உதயரேகா மெல்லத் திரும்பினாள்.

அவளை ஏற இறங்கப் பார்த்தவனின் விழிகள் பளபளத்தன.

உள்ளே பட படத்ததை மறைத்து, "பார்த்தால் தெரியவில்லை? தூக்கம் வராததால் படிப்பதற்குப் புத்தகம் எடுத்துக் கொண்டு இருக்கிறேன்!" என்று மிடுக்காக மொழிந்தாள் உதயரேகா.

## 5

அவளது கேள்விக்குக் கிடைத்த பதிலில் கிருஷ்ணசந்திரனின் கோபம் மிகுதியாயிற்று என்றே சொல்லலாம். "புத்தகம்? புத்தகம் எடுக்கிற நேரமா இது?" என்று எரிந்து விழுந்தான்.

"ஏன், நேரத்திற்கு என்ன?" என்றாள் உதயரேகா. "சொல்லப்போனால் இதுதான் சரியான நேரம் பாருங்கள் மிஸ்டர் கிருஷ்ணசந்திரன், பகலில் பொழுதுபோகவில்லையென்றால் என்னென்னவோ செய்யலாம். குறைந்தது கூடச் சேர்ந்து பேசவேணும் ஆள் கிடைக்கும். இந்த நேரத்தில் தனியாகப் படிப்பது மட்டும்தான் செய்யமுடிகிற காரியம்" என்று நிதானமாக விளக்கினாள்.



"ஆனால், இரவில் இப்படி உடையில் சுற்றுவது ஆபத்து என்று தெரியாதா?"

"என்ன ஆபத்து?" என்று புருவத்தைச் சுருக்கியவள், உடனேயே அலட்சியமாகத் தோளைக் குலுக்கினாள். "எந்த ஆபத்திலும் என் கராத்தே எனக்குக் கை கொடுக்கும்."

"அப்படியா? ஆனால், இந்த நாட்டில் உனக்கு மட்டும்தான் கராத்தே கற்றுக் கொடுக்கவேண்டும் என்று ஏதாவது சட்டம்... கட்டாயம் இருக்கிறதா?" என்றான் அவன் கேலியாக.

விழி அகல, 'ஓ' என்றாள் உதயரேகா.

"ஆமாம்... 'ஓ'வேதான். ஆசிரியருக்குப் பதிலாக அடிக்கடி வகுப்பு எடுக்கும் அளவுக்கு நான் கெட்டிக்காரன். எனவே, இப்போது என்ன செய்யப் போவதாக உத்தேசம்?" என்று கேலியாகக் கேட்டபடியே அவளை நோக்கி முன்னேறினான் அவன்.

சற்றுத் திகைத்து, உதயா பின்னடைந்தாள்.

இதை அவள் எதிர்பார்க்கவில்லையே? துணை நடிகை வீட்டுப் பார்ட்டிக்குப் போகிறவன் ராம பிரானாக இருப்பான் என்று எண்ணி வந்தால் அது மடத்தனம்தான். ஆனால், காந்திமதி - செல்வரங்கத்துடைய பிள்ளை, அவர்களது சொந்தவீட்டில்... ஊம்... சும்மா மிரட்டுகிறான்!

"நானும் கெட்டிக்காரிதான். நம் சண்டையால் மிக அபூர்வமான இந்தப் புத்தகங்கள் என்ன ஆகும்? யோசியுங்கள்" என்று அவள் எச்சரிக்கவும், அவன் நின்று வாய் விட்டு நகைத்தான். அவள் திகைத்து நோக்குகையில், "என்னை மாதிரி ஒரு பயங்கர வில்லன், இப்படி ஓர் அருமையான வாய்ப்புக் கிடைத்திருக்கிற போது, இந்தப்

புத்தகங்களுக்காக அதை விட்டுவிடுவானா? நீயும் தான் கொஞ்சம் மூளைக்கு வேலை கொடுத்துப் பாரேன்!'' என்று கேட்டுவிட்டு மீண்டும் சிரித்தான்.

அகங்காரச் சிரிப்போ, வெற்றிச் சிரிப்போ அல்ல; ஆனால், வேறு எதையும் யோசிக்க விடாமல் அவளது மூளையைச் செயலிழக்கச் செய்தது அது.

அவள் அயர்ந்து நிற்கையிலேயே, விரைவான ஓர் அசைவில் முன்னே வந்து அவளைப் பற்றித்தூக்கி, ''இப்படியே என் அறைக்கு உன்னைக் கொண்டு சென்றுவிட்டால்?'' என்று அவன் வினவவும் உதயாவுக்கு மயிர்க்கூச் செறிந்தது. கூடவே, அவனிடமும் ஒரு சிலிர்ப்பை அவளால் உணரமுடிந்தது.

அவளுக்கு ஓர் ஆணின் இந்த நெருக்கம் புதிது; ஆனால் அவனுக்கு? ஒருவேளை, எந்தப் பெண்ணைத் தொட்டாலும் இவனுக்கு இப்படித்தான் சிலிர்க்குமோ?

கணநேர மவுனத்தின் பின், நெருப்பு சுட்டது போல அவளை இறக்கி நிறுத்தினான் கிருஷ்ணசந்திரன். ''நல்ல நேரம் பார்த்து வந்தாய்! முதலில், இந்த இடத்தை விட்டு வெளியேறு... ஓடு'' என்று விரட்டியவன், அவள் ஒன்றும் புரியாதவள் போல அப்படியே நிற்கவும், அவள் கையைப் பற்றி வேகமாக இழுத்துச் சென்றான்.

கதவை அடைந்ததும், நின்று கதவைத் திறக்க முயன்றால் முடியாது போயிற்று.

சற்றுமுன் ஏற்பட்ட பதற்றம் அடியோடு மறைந்துவிட, கிருஷ்ணசந்திரனின் திகைப்பையும் திணறலையும் சாவதானமாக வேடிக்கை பார்த்தாள் உதயா.

இரண்டு மூன்று தரம் கதவுக்குமிழைத் திருகி, உலுக்கி, தாள்ப்பாள் இருந்த பகுதியில் லேசாகத்தட்டி என்று அவன்



பலவாறாக முயற்சி செய்யச் செய்ய உதயரேகாவுக்குப் பழையதிடம் முழுமையாகவே திரும்பிவிட்டது. அவனைப் பற்றிய அவளது கணிப்பு நூற்றுக்கு நூறு சரியே.

சில நிமிடங்கள், கிருஷ்ணசந்திரனின் பதட்டத்தை ரசித்திருந்து விட்டு, ''சரியான ஓட்டைவீடு. உங்கள் தாத்தாவுடைய தாத்தா கட்டிய வீடாக்கும்?'' என்றாள் ஏளனமும் கிண்டலுமாக.

''நிலைமை புரியாமல் என்ன பேச்சு இது?'' என்று எரிச்சல் காட்டினான் அவன்.

''என்ன நிலைமை?'' என்றாள் அவள் புரியாதது போன்ற பாவனையுடன்.

''இப்போது நீ வெளியே போக இயலாது.''

''ஏனோ? யாரையாவது கூப்பிட்டு வெளிப்புறமாகக் கதவைத் திறக்கச் சொல்லவேண்டியதுதானே?''

''அறிவிருக்கிறதா உனக்கு?'' என்றான் அவன் ஆத்திரத்துடன் ''இந்த நேரத்தில் நாம் இருவரும் இங்கே தனியே இருப்பது வெளியே தெரிந்தால் என்ன ஆகும்? இந்த அழகிய 'நைட்டி' வேறு. எதையாவது ஒழுங்காக உடுத்துக் கொண்டாவது வந்திருக்கக்கூடாதா?''

''எத்தனைபேர் 'நைட்டி'யில் கடைகளுக்கு... கோவிலுக்குக் கூடப்போகிறார்கள்.''

''அவர்கள் யாரும் அன்னிய இளைஞன் ஒருவன் தனியாக இருக்கும் இடத்துக்கு அர்த்தராத்திரியில் போய் நிற்கமாட்டார்கள்.''

''ஒரு புத்தகம் - தூக்கம் வரவில்லையே என்று படிப்பதற்கு ஒரு புத்தகம் எடுக்க வந்தால் அதற்கு இத்தனை விமரிசனமா?'' என்று சாதுவாய்க் கையை விரித்தாள் உதயரேகா.





ஒருகணம் பேசாதிருந்து விட்டு, ''உன்னைச் சொல்லியும் குற்றம் இல்லை. ஆனால், இந்த நேரத்தில் நீ இங்கே இருப்பது வெளியே தெரிந்தால், உன் பெயர்தான் கெட்டுப் போகும். அதனால்...'' என்று அவன் கூறியபோது, உதயாவுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தபோதும் மனதுக்கு இதமாகவும் இருந்தது. அவன் அவளுக்காக - அவளது நல்ல பெயருக்காக அல்லவா கவலைப்படுகிறான்.

''... ஒன்று செய்யலாம். ஒரு போர்வை தலையணையோடு நான் இந்த அறையில் படுத்துக் கொள்கிறேன். நீ உள்ளே என் அறையில் படுத்துத் தூங்கு. உட்புறம் தாளிட்டுக் கொள்ளலாம். விடிந்ததும், யாரையாவது அழைத்துக் கதவைத் திறக்கும் வரை மறைந்திருந்து விட்டு யாரும் அறியாமல் போய்விடு'' என்றான் கிருஷ்ணசந்திரன்.

கிட்டத்தட்ட இன்றைய ஏற்பாடுதான். ஆனால், இந்த அளவு சினம் இல்லாததால், 'ஜென்டில்மேன்' ஆக அவளுக்குக் கட்டில் மெத்தையை அவனாக விட்டுக் கொடுத்தான். ஆனால் என்றேனும் ஒருநாள் இந்தக் கோபம் சற்று ஆறியபிறகு எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னால் அதை அவன் ஏற்காமலா போய்விடுவான்? உண்மை புரிந்ததும் அவளைத் தலைமேல் தூக்கிக் கொண்டாடப்போகிறான்..

தொப்பென்று அருகில் ஏதோ விழவும் சிந்தனை கலைந்து, இறுக மூடியிருந்த கண்களைத் திறந்து பார்த்தாள் உதயா.

அவள் அருகில் ஒரு போர்வையைப் போட்டுவிட்டு கிருஷ்ணசந்திரன் திரும்பிச் சென்று கொண்டிருந்தான். ''போர்த்துக் கொண்டே தூங்கலாம், குளிரில். 'கையது கொண்டு மெய்யது போர்த்தி, காலது கொண்டு மேலது தழீஇ' என்று குறுக்கிப்படுத்ததால் எங்கேனும் சுளுக்கிக் கொண்டது என்று நாளைக்கு யாரும் என்னைக் குற்றம் சொல்லவேண்டாம்'' என்றான் போகிற போக்கிலேயே.



ஏ.சி. குளிரில், மெய்யாகவே சுருண்டு கிடந்தவள், நன்றியோடு போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டாள். உள்ளூர, நம்பிக்கையும் நன்றாகவே தலை தூக்கியது. அவள் நலனை விழைகிற புத்தி இருக்கத்தானே செய்கிறது!

ஆனால், அந்த ஒன்றில், அன்றைக்கும் அவனைக் குற்றம் சொல்ல முடியாது அவளது பெயர் கெட்டுவிடக் கூடாது என்பதற்காக மற்றவர் அறியாமல் அவளை அங்கிருந்து வெளியேற்றி விடக் கிருஷ்ணசந்திரன் முயன்று தான் பார்த்தான்.

ஆனால் அந்த முயற்சி வெற்றி பெற்றால், அப்புறம் உதயரேகாவின் திட்டம் என்ன ஆவது? காலையிலேயே எழுந்து, ஜன்னல் அருகே தவம் கிடந்து, தன்னை வெளிப்படுத்திக் கொண்டாள்.

விஷயம் நேராகக் காந்திமதிக்குச் சென்றிருக்க வேண்டும். ஏனெனில் அவசரமான காலடிகளுடன் வந்து கதவைத் தட்டியது அவர்தான்.

''உள்ளே இருந்து திறக்கமுடியவில்லை. அங்கிருந்து முயன்றுபாருங்கள்'' என்று கிருஷ்ணசந்திரனின் குரலும், கதவு திறக்கும் ஓசையும் கேட்டதும் உதயரேகா மெல்ல வெளியே தலையை நீட்டினாள்.

அவளை விழியால் உறுத்தவன், தாயின் முகம்போன போக்கைக் காணவும், ''உடனே தப்பாக எண்ண வேண்டியது இல்லை. இவள், இரவில் படிக்கப் புத்தகம் எடுக்க வந்தாள். தாள்ப்பாளில் ஏதோ சிக்கிக் கொண்டு கதவைத் திறக்க முடியவில்லை. அவ்வளவுதான்'' என்றான் வரண்ட குரலில்.

''உதயரேகா தப்பு செய்யமாட்டாள் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். ஆனால் நீ என்ன மாதிரிப் பெயர்

சம்பாதித்து வைத்திருக்கிறாய்? கூடவே இந்த வேலைக்காரர்கள்? சின்னப் பையன் இவளைப் பார்த்துவிட்டுப் பரமனிடம் சொல்லிப் பரமன்மூலம் எனக்கு விஷயம் வந்திருக்கிறது. இவர்களில் யார் வாயை நாம் மூட முடியும்? பரமன் சென்னையிலிருந்து நம்மோடு வந்தவன் வேறு..."

பரமன் வீட்டு சமையல்காரன். சின்னப்பையன் எடுபிடி ஆள்.

"சின்னப் பையன் பார்க்கும்படி ஏன் நின்றாய்?" என்று உதயாவிடம் பாய்ந்தான் கிருஷ்ணசந்திரன்.

"காலையில் சூரிய ஒளி மூடிய கண்கள் மேல் படும்படி ஓர் ஐந்து நிமிடம் நிற்பது என் வழக்கம். உங்கள் வேலையாள் உங்கள் அறையை வேவு பார்ப்பான் என்று எனக்கு எப்படித் தெரியும்?" என்று திருப்பினாள் அவள்.

"என்னை நம்பி மகளை என்னோடு அனுப்பினார்கள். அவர்களுக்கு நான் என்ன பதில் சொல்லட்டும்?" என்று கலக்கத்துடன் உரைத்தார் காந்திமதி.

"உண்மையைச் சொல்வது!" என்று எரிந்து விழுந்தான் மகன். "என்னவோ அவர்கள் வரை இந்த விஷயம் போய், அவர்கள் உங்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்போவது போலப் பிரமாதப்படுத்துகிறீர்களே!"

"போகாமல் எப்படி நிற்கும்? இதற்குள் வேலைக்காரர்கள் அத்தனை பேரும் கசமுசத்திருப்பார்கள். யாராவது வேண்டுமென்றே உதிவீட்டு வேலையாளிடம் வத்திவைப்பான். அப்புறம் அவர்கள் வீடுமட்டுமல்ல; ஊர் முழுவதும் பரவி விடும்" என்றார் தாயார்.

"அப்படியானால் என் பெயர் கெட்டுப்போய்விடுமோ, ஆன்ட்டி?" என்று விழிகளை அகல விரித்தாள் உதயரேகா. "அச்சோடா! அப்புறம் கல்யாணமே ஆகாது



என்பார்களே! யாரும்..." என்றவள் கப்பென்று பேச்சை நிறுத்தி, காந்திமதியின் கையைப்பற்றி, "ஆன்ட்டி, நான் உங்களோடு தனியேபேச வேண்டும்" என்றாள்.

தனிமையில், "ஆன்ட்டி, உங்களுக்கு என்னைப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டாள்.

"இது என்ன கேள்வி, தங்கம்?"

"இல்லை... நான் உங்கள் மகனை மணந்து கொண்டால் இப்போது எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் இல்லையா?"

ஒருகணம் ஆர்வத்தோடு பளபளத்த காந்திமதியின் கண்கள் உடனேயே சோர்ந்தன. "இது நடக்கிற காரியமா, அம்மா? உன் பெற்றோர் சம்மதிப்பார்களா? அத்தோடு, புதுப்பூமாதிரி நீ. என்மகனைப் பற்றி எல்லாமே உனக்குத் தெரியும்..."

"நன்றாகத் தெரியும். அவரை என்னால் திருத்தமுடியும் ஆன்ட்டி. அவரை நான் தனியேயும், அவரது அலுவலக அறையில் கூடச் சந்தித்திருக்கிறேன். அதனாலேயே எனக்கு நிச்சயமான நம்பிக்கை ஆன்ட்டி. ஆனால் இந்தக் கட்டுப்பாடற்ற வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டு விட்டதால் உங்கள் பிள்ளைதான் முரண்டக்கூடும். அவரைச் சம்மதிக்க வைப்பது உங்கள் பொறுப்பு. என் பெற்றோரை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள் நம்பிக்கையோடு.

ஆவலைச் சோகம் மீற, "உதிம்மா, நான் ஒரு பிச்சைக்காரியின் நிலையில் இருக்கிறேன். பல நாள் பட்டினி கிடந்த பிச்சைக்காரி. எனக்குப் பழைய சோறே அமிர்தம்தான். நீயானால் பல்சுவை விருந்தே தருகிறேன் என்கிறாய். ஆசைதான். ஆனால் இதை ஏற்றுக் கொண்டால் நான் சுயநலம் பிடித்தவள் ஆகிவிடமாட்டேனா? நீ இளம் குருத்து... வேண்டாம்மா" என்றாள் காந்திமதி.



"ஆன்ட்டி, உண்மையை என் வாயாலேயே சொன்னால்தான் விடுவீர்களா? கேளுங்கள், நான் உங்கள் மகனைத்தவிர வேறு யாரையும் மணந்து கொள்ளமாட்டேன். அவரிடம்... எனக்கு... இன்னுமா புரியவில்லை? தயவு செய்து நான் விரும்புகிற இந்த வாழ்வை எனக்கு அமைத்துத் தாருங்கள் ஆன்ட்டி!" என்றாள் உதயா கொஞ்சலாக.

ஆசையாகச் சிறியவளின் கன்னத்தை வருடி முத்தமிட்டு விட்டு, மகனை நாடிச் சென்றாள் காந்திமதி.

எதிர்பார்த்தது போலவே கிருஷ்ணசந்திரன் திருமணத்தை வெகுவாக மறுத்தான். "தப்பாக எதுவும் நடக்கவில்லை என்று நான் சொல்கிறேன். அந்தப் பெண்ணிடம் நம்பிக்கை இருப்பதாக நீங்களே சொன்னீர்கள். பிறகு திருமணத்துக்கு என்ன அவசியம்?"

"ஒரு நல்ல பெண்ணின் வாழ்க்கை கெட்டுப்போய்விடக்கூடாது என்பதுதான்" என்றாள் காந்திமதி.

"என்னைக் கல்யாணம் செய்வதால் அவள் வாழ்க்கை கெட்டுப்போய்விடாது என்றா நினைக்கிறீர்கள்?" என்று ஒரு மாதிரிக் குரலில் வினவினான் கிருஷ்ண சந்திரன்.

தொண்டையில் அடைத்ததை விழுங்கி விட்டு, "இதற்கு ஒரு தாய் என்ன பதில் சொல்லக்கூடும். ஆனால்... சந்திரா, நீ யார் யாருடனோ எப்படி எப்படியோ பழகியதை நான் பல்லைக் கடித்து சகித்துக் கொண்டேன். ஆனால் உதயா விஷயம் அப்படியல்ல. ஒன்று அவளை நீ மணந்து கொள். அல்லது என்னை ஒரேயடியாக வழியனுப்பத் தயாராகிக் கொள்" என்றாள் பெற்றவள் வெகு கடினமான குரலில்.

சற்றுநேரம் பேசாதிருந்தான் மகன். புன்னகையின் சாயல் ஒன்று தோன்றிமறைய, "சினிமா வசனம் மாதிரி



மிரட்டுகிறீர்கள். என்னவோ, உங்கள் விருப்பம் போலச் செய்யுங்கள். ஆனால் அந்தப் பெண்ணிடம் இதுபற்றி நன்றாகக் கேட்டுவிட்டுச் செய்யுங்கள்" என்றவன், எழுந்து தன் அறைக்குள் சென்று, கதவைச் சாத்திக் கொண்டான்.

## 6

இந்தத் திருமணத்துக்கு உதயரேகாவின் வீட்டிலும் அப்படி ஒன்றும் எளிதாகத் தலையாட்டி விடவில்லை.

"உன் பெற்றோரிடம் சொல்வதுஎன் பொறுப்பு." பிடிவாதமாக வந்து நடந்த விவரம் சொல்லிவிட்டுக் காந்திமதி திரும்பிச் சென்றபின், அங்கே சற்று நேரம் பயங்கர அமைதி நிலவியது.

கண்ணாடியைத் துடைத்து மாட்டுவது போன்ற பாவனையில் யோசிக்க அவகாசம் எடுத்துக் கொள்வது உலகநாதனின் தந்திரம். இன்றும் மிக நன்றாகக் கண்ணாடியைத் துடைத்து மாட்டியபின், "என்னம்மா விஷயம்? 'பாரின் ரிட்டர்ன்ட்' மாப்பிள்ளைகளை எல்லாம் வேண்டாம் என்று விட்டு... அந்த அம்மாவே மகனைப் பற்றி நன்றாகப் பேசக்காணோம். பிறகு ஏன் இந்தத் திருமணம்?" என்று கேட்டார் அவர்.

'என் பெயர் கெட்டுபோய் விட்டதே அப்பா!' என்றாள் மகள் சோகமாக. "ஆன்ட்டி சொல்லவில்லை?"

மகளைக் கூர்மையாக நோக்கி, "அந்தப்பையன் ஏதும் எல்லை மீறி, அதற்காகப் பழைய காலப் பத்தினியாகும் மடத்தனமா?" என்று உலகநாதன் கேட்கவும், ஓடி வந்து, அவர் அருகில் அமர்ந்து, "நான் உங்கள் பெண், அப்பா. அவ்வளவு இலகுவாக என்னை யாரும் எதுவும் பண்ண

முடியுமா? எனக்குப் பிடித்திருக்கிறது அநனால்தான்... என்றாள் மகள் கொஞ்சலாக.

"ம்ம்... இனி, சாயங்காலம் இது பற்றிப் பேசுவோம். இப்போது எனக்கு வேலையிருக்கிறது. இலாகா டைரக்டர் டெல்லியிருந்து வருகிறார். சீக்கிரம் போகவேண்டும்" என்று கிளம்பினார் பெற்றவர்.

வருங்கால மருமகனைப் பற்றி உலகநாதன் விசாரிக்கப்போகிறார் என்று உதயா புரிந்து கொண்டாள். ஆனால் அவரைச் சமாளித்துக் கொள்ளலாம் என்ற தைரியமும் இருந்ததால் அவள் பெரிதாகக் கவலைப்படவும் இல்லை.

கணவரை அலுவலகம் அனுப்பிவிட்டு வந்த யசோதாவை எதிர் கொள்ளவும் உதயரேகா தயாராகத்தான் இருந்தாள்.

"கொஞ்ச நாட்களாகவே எனக்கு உறுத்தலாகத்தான் இருந்தது. ஒரேயடியாய் அவர்கள் வீட்டுக்குப் போகிறாயே என்று நினைத்தேன். அவர்கள் மகன் வீட்டோடு இல்லை என்பதால் பரவாயில்லை என்று பார்த்தால் இதென்ன தடாலடி அடிக்கிறாய்? உண்மையைச் சொல்லு என்ன காரணம்?" என்று யசோதா சீரியசாக விசாரித்தாள்.

"நான்தான் கெட்டுப்போய் விட்டேனே, சித்தி!" என்று இமைகளைப் படபடவென்று கொட்டினாள் மகள்.

"நாக்கில் நரம்பில்லாமல் என்ன பேச்சு பேசுகிறாய்? நான் வளர்த்த பெண், கெட்டுப்போவதெல்லாம் நடக்காத காரியம்; எனக்குத் தெரியும்" என்றாள் யசோதா குரலில் சினத்துடன்.

தலையைச் சரித்து, சிற்றன்னையை ஒரு பார்வை பார்த்து, "அம்மாவாய் வளர்த்திருந்தால் அது சரிதான்.



ஆனால் நீங்கள் சித்தியாய்த் தானே வளர்த்தீர்கள்?" என்று புருவங்களை உயர்த்திக்காட்டினாள் உதயா.

"ஏ... என்னடி நீ? உன்னை எவ்வளவு அன்பாய் நான்... உன்னால் எப்படி இப்படி..?" என்று யசோதா தவிக்கவும் அவளுக்கே ஒரு மாதிரியாகிவிட்டது.

"உங்கள் அன்பில் குறை சொன்னால் எனக்கு நரகம் தான் கிடைக்கும் சித்தி", என்றாள் ஆறுதலாக "ஆனால்".

"என்ன ஆனால்? சொல்லு. சொல்லிவிடு. உனக்கு நான் என்ன குறை வைத்தேன் என்று எனக்கும் தெரிய வேண்டும், இல்லையா?" தவிப்புடன் இப்போது கோபமும் கலந்திருந்தது.

சிறு யோசனைக்குப்பின், நிமிர்ந்து, "அப்போது பானுவுக்கும் பதினாலு வயது. பெரிய மாமா வீட்டினர் நம்வீட்டுக்கு வந்திருந்தார்கள். பானு மாமா பையன் முரளியின் சட்டைப்பையில் இருந்து எதையோ எடுத்தாள். அப்போது நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்று கேட்டாள் உதயா.

புருவம் சுளித்து யோசித்துவிட்டு, "என்ன செய்தேன்? எனக்கு நினைவில்லையே," என்றாள் யசோதா. "இவ்வளவு தெளிவாய் ஞாபகம் வைத்திருக்கிற நீதான் அதையும் சேர்த்துச் சொல்லிவிடேன்!".

"பானுவை உள்ளே அழைத்துச் சென்று நன்றாக அறைந்தீர்கள். அவளுக்கு முதல் அறை விழுந்த அந்த வினாடியில் அந்த வேறுபாடு என்நெஞ்சில் தெளிவாகப் பட்டு விட்டது சித்தி. எனக்கு அப்போது பதினெட்டு வயது. அன்று வரை நீங்கள் என்னை அடித்ததே கிடையாது. இத்தனைக்கும், பானுவைவிட நான் நன்றாகப் பழகுவேன். முரளியுடைய அண்ணன் மது, அவன் காதைக் கூடப்



பிடித்துத் திருகியிருக்கிறேன். ஆனால்... நீங்கள் எனக்கு அம்மாவாய் இருந்திருந்தால் என்னையும் அடித்திருப்பீர்கள் இல்லையா?"

இமைதட்டாத நேர்ப்பார்வையுடன் பெண் கேட்கவும் யசோதா திகைத்துப்போனாள்.

சில வினாடி வாயடைத்து நின்றுவிட்டு, "உன்மேல் என் விரல் ஒன்றுபட்டிருந்தாலும் உன்பாட்டி - அக்காவுடைய அம்மா என்னைக் கூறுபோட்டிருப்பார்கள். உன் அப்பாவே எங்கள் திருமணத்தின்போது, உன்னைக் கண்கலங்காமல் வளர்க்க வேண்டும் என்றாரே தவிர, தாயாய் இருந்து வளர்க்கும்படி ஒரு தரம்கூட சொல்லவில்லையே! அப்படியிருக்க எந்தத் தைரியத்தில் உன்னை நான் அடிப்பேன்?" என்றாள் யசோதா கண் கலங்க.

ஓடிச்சென்று சிற்றன்னையை அணைத்துக் கொண்டு, "அச்சோ! உங்களை நான் குறைகூறவில்லை சித்தி. ஆனால், எப்போது என்னை அடிக்க உங்களுக்கு முடியவில்லையோ, அப்போது என்னை அதிகாரம் செய்யவும் முடியாது. இல்லையா? அதைத்தான் சொல்கிறேன். அன்றைக்கும் அதைத்தான் உணர்ந்தேன். நினைவிருக்கிறதா? பதினெட்டு வயதிற்குப் பிறகுதானே கராத்தே வகுப்புக்குப் போனேன்? தனியாக வெளியே சென்று வரத் தொடங்கியதும் அப்போதுதான். நான் மீறிப் பிடிவாதம் செய்தால் உங்களால் என்னைத் தடுக்க முடியாமல் போயிற்று. இப்போதும் அப்படித்தான் சித்தி. கிருஷ்ணசந்திரனை நான் மணக்கத்தான் போகிறேன். அதையும் உங்களால் தடுக்க முடியாது. அதனால் வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதீர்கள்" என்றாள் உதயரேகா.

மாலையில் வீடு வந்த தந்தைக்கும் அவ்வளவாகத் திருப்தி இல்லைதான். "பையனை நேரிலேயே போய்ப்



பார்த்தேன். திருமணத்தை நிறுத்துவதோ, நடத்துவதோ உங்கள் விருப்பம்" என்று விட்டேற்றியாகப் பேசுகிறானே!"

"நுகத்தடியில் கட்டப்படப்போகும் மாடு மாதிரி மிரள்கிறார், அப்பா. திருமணம் ஆனால் சுதந்திரம் போய்விடுமாம்!"

"அப்படியா? ஆனால் வெளியே விசாரித்ததிலும் அவனுக்கு அவ்வளவாக நல்ல பெயர் இல்லையேடா. இடையில் மாறியதாகத்தான் கேள்வி. திருத்த முடியாத கேஸ் இல்லை தான்; ஆனால் உனக்கு ஏனம்மா இந்தப் பாடு?".

அது.. அதுவாப்பா? அப்பா, எப்படியும் என்னையும் அவரையும் சேர்த்து ஒரு மோசமான பேச்சு உருவாகிவிட்டது. இனி இதை விடுத்து, வேறே ஆளுடன் திருமணம் நடந்தாலும், அந்த ஆளுக்குச் சந்தேகப் பேய் பிடித்துவிட்டால் என்னப்பா செய்வது? என் வாழ்க்கையே நரகம் ஆகிவிடாதா? அத்தோடு, சொல்லுங்கள் அப்பா, நான் தப்பாக ஒரு முடிவு எடுப்பேனா? என்மேல் அந்த நம்பிக்கை உங்களுக்கு இல்லையா?"

"சேச்சே. அப்படி இல்லையடா. வீணாக நீ கஷ்டப்பட வேண்டுமா? என்று பார்த்தேன். மற்றபடி, 'உதயா ஒன்று சொன்னால், என்ன ஏது என்றுகூடக் கேளாமல் அதைச் செய்து விடுவது நல்லது. ஏனெனில் அவள் சொல்வது சரியாகத்தான் இருக்கும் என்று உன் சித்தி எப்போதும் சொல்வாளே..'"

வேறு வழி! கை மீறும் பெண்ணைத் தானாகக் கண்டிக்கவும் தைரியம் இல்லை; புகார் சொன்னால் பெற்றவருக்குப் பிடிக்காது. எனவே தானும் ஒப்புவது போலவும், ஒப்புவது

தான் சரி என்பது போலவும் தான் பேசியாக வேண்டும்! பாவம் சித்தி!

அதற்குமேல் பெரிய பிரச்சினை எதுவுமின்றி, உதய ரேகா - கிருஷ்ணசந்திரன் திருமணம் இனிதே நிறைவே றிற்று. வேறு வகையில் தடை செய்யாவிட்டாலும், அவன் தரப்பிலிருந்து திருமணத்தை நிறுத்திவிடும்படி கிருஷ்ண சந்திரன் உதயரேகாவிடம் சில தடவைகள் கேட்டிருந்தான். எனவே, மணநாள் இரவைப் பற்றி அவள் பிரமாதக் கற்பனை எதுவும் செய்துவிடவில்லை. கூடவே, பெரும ளவு இன்றைய நடப்பையே எதிர்பார்த்தும் இருந்ததால் உள்ளே கலக்கமோ வெளியே ஆர்ப்பாட்டமோ இல்லாமல் பேசாமல் படுத்துவிட்டாள்.

சற்றுநேரம் பழைய நினைவுகளை உருட்டிக் கொண்டு இருந்தவள் விரைவிலேயே உறக்கமும் கொண்டாள். ஆனால், வழக்கமான ஆழ்ந்த தூக்கம் அல்ல.

ஒரு தரம் நித்திரை கலைந்தபோது அவன் வெளியே 'சிட்அவுட்'டில் அமர்ந்து புகைபிடிப்பது தெரிந்தது.

ஆக, இந்தப் பழக்கம் வேறு இருக்கிறதா? ஏற்கனவே பழகி வைத்திருக்கும் பெரிய பெரிய கெட்டதுகளை எல் லாம் விரட்டிய பிறகு, இதற்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், நம்பிக்கையோடு எண்ணமிட்டபடியே மீண்டும் கண்ணயர்ந்தாள் அவள்.

காலையில் அவள் எழுந்தபோது அவன் தூங்கிக் கொண்டு தான் இருந்தான்.

ஓசைப்படாமல் அருகில் சென்று சற்றுநேரம் அவ னையே பார்த்துக் கொண்டு நின்றாள் உதயா.



செதுக்கினாற்போலக் கிருஷ்ணசந்திரனின் முக அமைப்பு படுத்த நிலையில் இன்னமும் எடுப்பாய்த் தெரிந் தது. ஆனால், கண்களின் கடினமும், முகத்தின் இறுக்கமும் கூடவே உதடுகளின் அழுத்தமும் இல்லாததால், ஏதோ பாதுகாப்பற்ற சிறுவனைப் போலத் தோன்றினான் அவன். முகம் சற்று வெளுத்தாற்போல இருந்தது வேறு உதயரேகா வின் மனதை உருக்கியது.

அச்சத்தில்தானே முகம் வெளுக்கும்? அப்படியே அவன் முகத்தை வயிற்றோடு அணைத்து ஆறுதல் அளிக்க வேண்டும் போல ஒருவேகம் உள்ளே பேரலையாக எழ, தன்னை அறியாமல் கட்டிலை ஒட்டி இரண்டு எட்டு எடுத்து வைத்தவள் சுயநினைவு வந்து சட்டென நின்றாள்.

என்ன முட்டாள்த்தனம்!

இப்போது நொந்து கலங்கியிருப்பவர்கள்; அரவ ணைத்துத் தேற்றப்பட வேண்டியவர்கள் இவனுடைய பெற் றோரும், சகோதரியும். அடிபட்டவர்களை விட்டுவிட்டு அடித்தவனுக்குப் இரங்குவதா? அவளது புத்தியும் அவ்வப் போது புல்மேயப்போய் விடுகிறதே!

அத்தோடு, இன்றைய மனநிலையில் அவளது தரிச னத்தை அவன்தான் ஏற்கப்போகிறானா? அதற்கெல்லாம் இன்னும் கொஞ்சம் அவகாசம் வேண்டும். அதுவரை தக்க தருணம் நோக்கி அவள் பொறுமையோடு காத்திருந்தே ஆகவேண்டும். பொறுத்தார் தான் பூமி ஆள்வார்!

மணமக்கள் இருவருடைய பெற்றோர் வீட்டிலும் குடும்ப முழுமைக்குமாக ஒவ்வொரு நாளும் விருந்து நடந்து, திருமண அமளி ஓய்ந்து, கிருஷ்ணசந்திரனின் கீழ்ப்பாக்கத்து வீட்டில் உதயரேகாவின் உடைமைகளும் குடியேறின.



மகளை முறைப்படிக் கணவன் வீட்டில் விட்டுவிட்டு, உலகநாதன் குடும்பத்தினர் விடை பெற்றுச் சென்றபின், "கண்ணப்பா," என்று மகனை மெதுவாக காந்திமதி அழைத்தார்.

முகம் இறுக, "கிருஷ்ணசந்திரன் என்று நீளமாய்ப் பெயர் வைத்துவிட்டு, இதென்ன கண்ணப்பா, மூக்கப்பா என்று? ஏதாவது ஒரு பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது தானே?" என்று வெடுவெடுத்தான் மைந்தன்.

காந்திமதியின் முகம் வாடவும், "அதென்ன ஆன்... சாரி சாரி, இனிமேல் அத்தை என்று அழைக்க வேண்டும் அல்லவா? ஒருத்தரை ஒரு விதமாய் அழைத்துப் பழகிவிட் டால், அதுவே எப்போதும் வாயில் வந்துவிடுகிறது. இல் லையா அத்தை? இதைச் சொல்லுங்கள் அத்தை, இவருக்கு என்ன இப்படி இரட்டைப் பெயர்? ஏதாவது ஒன்றோடு நிறுத்தியிருக்கலாமே?" என்று கேட்டாள் உதயரேகா.

"அதுவாம்மா?" என்று வாட்டம் மாறி, லேசாக முறுவலித்தார் காந்திமதி. "எனக்குச் சந்திரன் என்ற பெய ரில் மோகம், உன்மாமாவுக்குக் கிருஷ்ணன். இவனே அரும்பாடு பட்டு ரொம்பவும் தாமதமாகப் பிறந்தானா, அடுத்து ஒன்று பிறப்பது அரிது என்று இரண்டு பெயரையும் சேர்த்து இவனுக்கே வைத்து விட்டோம்!".

மகன் எழுந்து வெளியே செல்லத் தொடங்கவும், சிரிப்பு நின்றுவிட, "கொஞ்சம் நில் சந்திரா. உனக்குத் திருமணம் ஆனதும், நம் ஊர்க் கோயிலுக்கு உங்கள் இருவரையுமாக அனுப்பிப் படையல் வைப்பதாக வேண்டி யிருக்கிறேன். அதனால் என்று தொடங்கிய தாயை இடைம றித்து, "என்ன வேண்டுதல்! எனக்கு இதெல்லாம் நம் பிக்கை கிடையாது" என்று முடித்தான் பிள்ளை.

"நம்பிக்கை இல்லையா? ராத்திரி பூஜைக்கெல்லாம் போனீர்களே!" என்று ஆச்சரியப்பட்டாள் அவன் மனைவி.



"பூஜைக்குப் போகிறேன் என்பதால் யார் யாரோ வேறு வேலையின்றி வேண்டிக் கொள்வதை எல்லாம் நான் செய்ய முடியுமா?" என்று மீண்டும் பெற்றவரின் முகம் வாடவைத்தான் கிருஷ்ணசந்திரன்.

ஏதோ பேச முயன்ற மருமகளைத் தடுத்து, "எனக்காக இல்லையப்பா, நான் வேண்டியது உன் நன்மைக்காக" என்றவர், கிருஷ்ணசந்திரன் தோளைக் குலுக்கவும், "இதோ, உன்னோடு வாழ்வைப் பிணைத்துக் கொண்டு இருக்கிறாளே, இவளுக்காகத் தயவு செய்து" என்றார் தொடர்ந்து...

ஒரு வினாடி அவனிடம் ஒரு சலனம் தோன்றியது. ஒரு தாக்குதல் -நிராசை -வலி -எதுவாயிருந்தாலும் தோன் றிய விரைவிலேயே தோன்றவே இல்லாதது போல மறைய, "சரிசரி புலம்ப வேண்டாம். போய்த் தொலைக்கிறேன். அவளைக் கிளம்பச் சொல்லுங்கள்" என்று எரிந்து விழுந்து விட்டு வெளியேறினான் கிருஷ்ணசந்திரன்.

கவலையுடன் நோக்கிய மாமியாரிடம் கண்சிமிட்டிச் சிரித்தாள் மருமகள். "என்ன அத்தை, இரண்டு செட் உடை போதுமல்லவா? கோயிலுக்குச் சாதாரணமானதாக ஒரு சின்னபார்டர் பட்டுச்சேலையும், இன்னொன்று 'கோட்டா' வுமாக எடுத்து வைக்கட்டுமா?" என்று எழுந்தாள்.

காரில் செல்லும்போது, "கடந்த நாலு தினங்களாக, நீ, அம்மாவை முழுக்க முழுக்க 'அத்தை' என்று தான் அழைக்கிறாய் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். எதற்காக 'ஆன்' என்று தொடங்கி விளக்கம் கொடுத்தாய் என்பதும் நன்றாகவே புரிகிறது. ஆனால், நான் எதற்காக என்ன பேசுகிறேன், செய்கிறேன் என்பதையும் நான் அறிந்தே இருக்கிறேன். எனவே, என் விஷயத்தில் குறுக்கி டாமல் இருந்தால் உனக்கு மிகுந்த நன்றி உடையவனாக இருப்பேன்' என்றான் கிருஷ்ணசந்திரன் தோரணையாக.

''உங்கள் நன்றி எனக்குத் தேவைப்படும்போது கட்டாயம் அப்படியே செய்கிறேன் சார்'' என்றாள் உதயரேகா மிகுந்த பணிவுடன்.

அருகில் இருந்தவளின் உடலில் சிறு விறைப்பை உணர்ந்து விழிகளை மட்டும் திருப்பிக் கணவன் முகத்தை நோட்டமிட்டவளுக்கு வியப்பாகிப் போயிற்று.

அவள் எதிர்பார்த்தது போல ஆத்திரப்படவில்லை அவன். மாறாகப் பீறிட்ட சிரிப்பை அடக்கவே கணவன் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறான் என்பதை அறியவும், அவளுள் உற்சாகம் குமிழியிட்டது. இந்த மாதிரி இலகுவான பேச்சிலேயே இவனை வளைத்துவிடலாம் போலிருக்கிறதே!

ஆனால், பண்ணை வீடு சென்று சிறிது நேரத்திற்குள்ளாகவே கிருஷ்ணசந்திரனின் மனநிலை அடியோடு மாறிவிட்டது.

## 7

கிருஷ்ணசந்திரனிடம் சிரிப்பைக் கண்டதும் உதயரேகாவுக்கு உலகமே எழில்மயமாகிவிட்டது.

லேசான தூறலோடு வெயிலும் கலந்து அடித்து அடித்து அவளது ஆனந்தத்தை அதிகரித்தது. மாயச்சூரியனின் ஒளிக்கற்றைகள், நீர் கொண்ட மேகத்திரளை ஊடுருவி, வானவில்லை வண்ணங்களாக வானமெங்கும் சிதறியிருந்தது மெய்யாகவே கண்கொள்ளாக் காட்சிதான்.

''காரை ஓரமாக நிறுத்திவிட்டு நீங்களும் பாருங்களேன்'' என்று கணவனிடம் பரபரத்தாள் உதயா.

மறுக்காமல் சற்றுநேரம் நோக்கிவிட்டு, ''மழைக்காலத்தில் மாலைவேளைகளில் அவ்வப்போது இப்படி வரும்தான். இதற்கு முன் கவனித்தது இல்லையா? என்று கேட்டான் அவன்.



''சில தடவை சிறு அளவில் பார்த்திருக்கிறேன். இவ்வளவு பரவலாகப் பார்த்தது இல்லை. வானத்தில் மேகங்களால் ஏற்படுகிற கோல அமைப்புகள் ஒரே மாதிரி இரண்டு தரம் ஏற்படாதாம். அப்படியா?'' என்று வானிலேயே பார்வையைப் பதித்தபடி விசாரித்தாள் அவள்.

''அப்படித்தான் கேள்வி. போகலாமா?'' என்றான் அவன். அரைக்கவனமாய் ''இம்'' என்றவளுக்குத் திடுமென ஒன்று உரைத்தது.

அவளுடைய கணவன், அவளது ஆசைக்காகக் காரை நிறுத்தி, அவளது ஒப்புதலின் பிறகே, காரை எடுக்கிறான். மிகவும் சின்ன விஷயம்தான். ஆனால் அவளுக்கு மிக மிக இதமாக இருந்தது.

கிராமம் நெருங்க நெருங்க, பயணத்தில் உதயா ஒரு வேறுபாட்டை உணர்ந்தாள். முதல் தடவை செல்வரங்கம் குடும்பத்தோடு சென்றபோது, பாதை ஏறிஏறி இறங்கி, குதிரையில் சவாரி செய்வது போல ஓர் உணர்வை ஏற்படுத்தியது. ஆனால் இப்போது அப்படியில்லை.

''இங்கே கூட ரோடு போட்டுவிட்டார்கள் போலிருக்கிறதே!'' என்றவள் கார் மெதுவாகச் செல்வதைக் கவனித்து ''ரொம்பவும் மெல்ல ஓட்டுகிறீர்களே. வேகம் பிடிக்காதா?'' என்று கணவனிடம் வினவினாள்.

''இந்தச் சாலையில் இதற்கு மேல் வேகமாகப் போனால் தூக்கிப் போடும்'' என்றான் அவன் பாதையிலேயே கவனமாக.

''ஓகோ! அதனால்தான் போன தடவை அப்படிக் குதிரையில் ஏறிப்போகிற மாதிரி இருந்ததா?'' என்று வாய்விட்டு யோசித்தவளுக்கு உடனேயே ஒரே குதூகலமாகி விட்டது.





காரின் குலுக்கல் அவளுக்குச் சிரமமாக இருக்கும் என்றல்லவா மெதுவாக ஓட்டுகிறான்! அர்த்தம் என்ன? மனையாளிடம் அன்பு மலரத் தொடங்கிவிட்டது!

கண்கள் மலரத் தன்னை மீறி, ''எனக்குக் கஷ்டமாக இருக்கும் என்று மெள்ளச் செல்லுகிறீர்களா?'' என்று கேட்டுவிட்டாள்.

ஒரு சிறு இடைவெளிக்குப்பின், ''இந்தக் காரில் நீ மட்டும்தான் இருக்கிறாயா?'' என்று குரலில் இளப்பம் தொனிக்க வினவினான் கிருஷ்ணசந்திரன்.

குட்டுதான். ஆனாலும் உதயாவின் உற்சாகம் மட்டுப்பட மறுத்தது. ஏதோ வரட்டு கவுரவம் பார்த்துக் கொண்டு கிருஷ்ணசந்திரன் அவளது அன்பை ஒத்துக் கொள்ள மறுத்தாலும் 'மஞ்சள் கயிற்று மாஜிக்' வேலை செய்யத் தொடங்கிவிட்டது என்றே அவள் நம்பினாள். கூடவே, அவளிடம் அவனுக்கு ஆசையும் இருப்பதன் சான்று புத்தக அறைப்பார்வையும், சிலிர்ப்பும்.

இல்லாத ஒன்றை புதிதாக உண்டாக்குவது சிரமம்தான். ஆனால் அன்பு, ஆசை இரண்டும் இருக்கும்போது, அதை ஊதிக் காதல் நெருப்பாக எரிய வைப்பது எளிதுதானே என்று உதயா சந்தோஷமாக எண்ணமிட்டாள்.

ஆனால் ஒன்று. சற்றுமுன்போலச் சட்டென வாயை விட்டு விடாமல் சற்று யோசித்துப் பேசவேண்டும்.

பண்ணை வீட்டில், 'அம்மா அம்மா' என்று எல்லோரும் அவள் முகம் நோக்கி ஏவலுக்குக் காத்திருந்ததைப் பார்க்க அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

அவளுடைய தந்தை வீட்டிலும் வேலையாட்கள் உண்டுதான். அரசாங்கம் அளித்திருக்கும் ஆட்களே இரண்டு

21630



காவல்காரர்கள், ஓர் எடுபிடி, ஒரு பி.ஏ. என்று ஒரு டிரைவர் என்று உண்டு. எல்லோருமே மரியாதையாகத்தான் இருப்பார்கள். ஆனால் அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பது அரசாங்கம். எனவே இதுபோன்ற விசுவாசத்தை அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது.

இரு பெட்டிகளையும் மாடியில் கிருஷ்ணசந்திரனின் அறைக்குக் கொண்டு வந்து வைத்துவிட்டு, உதயரேகாவின் அருகில் வந்து ''அம்மா, இந்தப் பெட்டி நீங்க போனவாட்டி கொணாந்ததா வேறயாம்மா?'' என்று மரியாதையுடன் பவ்யமாய் விசாரித்தான்.

இந்த விவரம் இவனுக்கு எதற்கு என்று வியப்புடன் உதயா நோக்கவும், ''வேற ஒண்ணும் இல்லையம்மா. போனவாட்டி பெட்டியிலே பூட்டு சிக்கி, திருப்புளி, ஸ்பானர் எல்லாம் வச்சுத்தானேம்மா தெறந்தீங்க? தச்சப்பட்டறைச் சாமானெல்லாம் இப்ப மோட்டார் ரூமுக்குப்போயிருக்கும்மா.எடுத்தாந்து இங்கே வச்சிக்கிடலாமேன்னு கேட்டேன்.'' என்று முன்னிலும் பணிவுகாட்டி விஷயத்தைத் தெள்ளத்தெளிவாக விளக்கினான் வேலையாள்.

இப்படிப்போட்டு உடைக்கவேண்டும் என்று அவள் நினைக்கவில்லையே!

உதயரேகா திகைத்து நிற்க, ''பெட்டியின் பூட்டு சரி செய்தாகிவிட்டது. நீ கோவிலுக்குப் போய், நாளைப்படையல் ஏற்பாடுகளை எல்லாம் சரிபார்த்துவிட்டு வா வேலய்யா'' என்று வேலையாளை வெளியே அனுப்பினான் கிருஷ்ணசந்திரன்.

மாடிப்படிகளில் இறங்கிச்சென்ற வேலையாளின் காலடி ஓசை தேய்ந்து மறையவும், ''ஆக, தாழ் தானாகச் சிக்கிக் கொள்ளவில்லை!'' என்றான் வெகு நிதானமாக.

யோசியாமல் பேசக்கூடாது என்று சற்றுமுன் செய்த தீர்மானம் நினைவு வர உதயரேகா தயங்கினாள். தாழ்ப்பாள் விஷயத்தை இல்லை என்று பொய் சொல்லவும் அவளால் முடியவில்லை. உண்மையை ஒத்துக் கொண்டால், அதன் காரணத்தைக் கேட்பானே, அந்த விவரம் இப்போதே சொல்லலாமா என்றும் தெரியவில்லை. ஆனால், அவனும் ஒன்றும் கேள்வி எதுவும் கேட்கவில்லையே. தாழ்ப்பாள் விஷயத்தில் அவனாக முடிவு செய்ததும் சொன்னான். மற்றதும் அவனிடமிருந்தே வரட்டும்.

லேசாகத் தோளைக்குலுக்கி "முகம் கழுவ வேண்டும்" என்று குளியலறையை நோக்கி நகர்ந்தாள்.

சட்டென அவள் கையைப் பற்றி நிறுத்தினான் கிருஷ்ணசந்திரன் "ஏன்? ஏன் அப்படிச் செய்தாய்? எங்கள் வீட்டுச் செல்வம் கண்டு மயங்கினாயா?" என்றவன் "தேவை இல்லையே. உன் தந்தையின் பதவிக்கும் செல்வாக்கிற்கும் எங்களைவிடப் பணக்காரர்கள் கூட விரும்பி வருவார்களே. பின் எதற்காக இந்த சூழ்ச்சித் திருமணம்? ஏன் உதயரேகா?"

கிருஷ்ணசந்திரனின் குரலில் இருந்த ஏதோ ஒன்று ஒரு கணம் அவள் மனைவியை வாயடைத்து நிற்க வைத்தது.

கதவின் தாள் விவரம் தெரியும்போது முதலில் கணவன் கோபமடைவான் என்பதை உதயா ஏற்கனவே அனுமானித்திருந்தாள். நம்மை யாரும் ஏமாற்றி முட்டாளாக்கும் போது ஆத்திரப்படுவது இயற்கையே. அதிலும் இப்படி இன்னொருவர் மூலம் தெரிய வரும்போது குறைந்தது இருமடங்கு கோபம் வருவது இயல்பு.

ஆனால் உதயா எதிர்பார்த்த அளவு சினம் அவன் குரலில் இல்லை. கோபத்தை விடவும் ஒரு பரிதவிப்பு..



ஒரு பச்சாதாபம் இந்த மாதிரிச் சதிகாரியிடம் மாட்டிக் கொண்டு விட்டேனே என்று தன்னிரக்கமா? அல்லது இப்படி ஒரு குணக்கேடனிடம் தானாக வந்து மாட்டிக் கொண்டிருக்கிறாளே என்று அவளிடம் பரிதாபமா?

அவள் யோசனையோடு நோக்கவும், "சொல் உதயரேகா. சொன்னால் தானே எனக்கும் தெரியும்? அல்லது கடைசிவரை எனக்கு மறைக்கப்படவேண்டிய விஷயமா?" என்று புருவங்களை உயர்த்திக் கேட்டான் அவன்.

"மறைப்பதா? கிடையவே கிடையாது. இன்று அந்தப் பையன் இப்படிப் போட்டு உடைத்திராவிட்டாலும், விரைவில் ஒரு நாள் நானே சொல்லித்தான் இருப்பேன். ஏனெனில் இது சொல்லியாக வேண்டிய விஷயமும்கூட." என்று தொடங்கித் தன் காரணங்களை உதயா சொன்னாள்.

அவள் சொல்லிமுடிக்கும் வரை குறுக்கிடாமல் கேட்டிருந்துவிட்டு, "இதெல்லாம் தெரியாத முட்டாள் நான் என்று உனக்கு யார் சொன்னார்கள்?" என்று கிருஷ்ணசந்திரன் நிதானமாகக் கேட்கவும் உதயா திகைத்தாள்.

"தெரிந்துமா நீங்கள்... உங்களை உயிராய் நேசிக்கும் குடும்பத்தாரின் வேதனை உங்களைக் கொஞ்சம்கூடவா உறுத்தவில்லை? இந்தப் பாட்டிலில் கிடைக்கும் போதையும், தரம் கெட்ட பெண்களின் சகவாச சுகமும் அதைவிடவா பெரிது? மேலும் உங்கள் ஆரோக்கியம்? உங்கள் நல்ல பெயர் முதலில் எப்படியோ? இனியேனும் உங்கள் நன்மையைக் கருதியேனும் இந்தத் தீமைகளை விட்டுவிடலாமில்லையா?

"நான் என்னென்ன செய்கிறேன், எப்படி எப்படிச் செய்கிறேன், எதற்காகச் செய்கிறேன் என்பது எனக்கே தெரியும். அது பற்றி யாரும் எனக்கு எதுவும் சொல்லத் தேவையில்லை என்றான் அவன் மொட்டையாக..



"என்ன தெரியும்? குடிக்கிறீர்களே, நல்லது கெட்டது தெரிந்தா செய்கிறீர்கள்?" என்று விடாமல் கேட்டாள் உதயா.

அவன் தோளைக் குலுக்கவும், அந்தக் கெட்ட பழக்கங்கள் மட்டுமா? உங்கள் பெற்றோர், தங்கையிடம் பேசிப் பழகும் முறை? அத்தையை நீங்கள் 'அம்மா' என்று அழைத்து நான் இதுவரை கேட்கவே இல்லை. அவர்கள் உங்கள் அன்புக்காக எப்படி ஏங்குகிறார்கள் தெரியுமா?"

"என் செயல்களைப் போலவே, யார் யாருடன் நான் எப்படிப் பழகுகிறேன் என்பதும் நான் அறிந்தே செய்வது தான்" என்றான் கிருஷ்ணசந்திரன் கறார்க்குரலில்.

"புரியவில்லை! அறிந்து செய்வது தெரிந்து செய்வது என்றால் ஒன்றைப் பற்றி நன்கு ஆலோசித்து, அதன் நன்மை தீமைகளைத் தெளிவுபடுத்திக் கொண்டு செயல்படுவது. குடிப்பதும், குடித்துவிட்டுப் பொது இடங்களில் விழுந்து கிடப்பதும், பெற்ற தாயைப் புறக்கணித்து எவளோ ஒரு.... வந்து கண்டபடி கீழ்த்தரமாக நடந்து கொள்வதும் அறிந்து தெரிந்தும் செய்வது என்றால் எனக்குச் சுத்தமாக ஒன்றுமே புரியவில்லை" என்று படபடத்தாள் உதயரேகா.

"புரியவில்லை என்றால் அத்தோடு அதைவிடு. ஆனால் ஆலோசித்து, நன்மைதீமை உணர்ந்து அது இது என்றாயே; நீ எதை ஆலோசித்து, எதை உணர்ந்து செயல்பட்டிருக்கிறாய்! உன் பெயரைக் கெடுத்துக் கொள்ளும் அளவு துணிந்தது என்னைத் திருத்துவதற்காக என்றாயே; நான் திருந்தாவிட்டால் உன் வாழ்வு என்ன ஆகும் என்று ஒரு தரமேனும் எண்ணிப் பார்த்தாயா?"

"அதெப்படி...?" என்ற அவளது குறுக்கீட்டை அலட்சியம் செய்து கிருஷ்ணசந்திரன் மேலே பேசினான். "ஒரு



வேளை என்னுடைய தாய், தந்தை, தங்கைக்காகப் பெரிய தியாகம் செய்தாய் என்று உன்னை மெச்சுவேன்; மெச்சி உன் விருப்பம் போல நடப்பேன் என்று மனக்கோட்டை கட்டினாயா? என்ன மடத்தனம், படு மூடத்தனமாய் எவ்வளவு பெரிய சிக்கலை ஏற்படுத்திவிட்டாய்!"

ஆத்திரமும் பரிதவிப்பும் கலந்த அவனது பழைய குரல் எரிச்சலூட்ட, "ஓர் ஆண்டுக்கு முன்பு வரை நீங்கள் ஒரு நல்ல பிள்ளையாக - மாடல் மகனாக இருந்தவர் தானே? இடையில் வந்த மாற்றத்தை விடுத்து, மீண்டும் பழைய மாதிரி மாறியே தீருவீர்கள் பாருங்கள்" என்றாள் உதயா பிடிவாதக் குரலில்.

அலுப்புடன் தோளைக் குலுக்கினான் கிருஷ்ணசந்திரன். "ஒன்றை - அது வெறும் கற்பனை என்றாலும் - பத்துத் தடவை சொல்லிக் கொண்டே இருந்தால் மெய்யாக நடந்துவிடும் என்று நம்புகிற வர்க்கம் என்று தெரிகிறது. ஆனால் நீ பத்தாயிரம் தரம் உருப்போட்டாலும் நான் மாறுவது நடக்கிற விஷயம் அல்ல. அதையும் மனதில் வை" என்று சலிப்புடன் மொழிந்தவன், ஒரு பெரிய மூச்சுவிட்டு, "இப்போது, இந்தச் சிக்கலில் இருந்து நீ சேதமின்றித் தப்புவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதை உனக்குக் காட்டிப் பார்க்கிறேன். இனியேனும் புத்தியோடு அதன்படி நடந்து நல்லபடியாகப் பிழைத்துக் கொள்" என்று உறுதியான குரலில் இயம்பி, இரக்கமற்ற விரைப்புடன் அங்கிருந்து வெளியேறினான்.

மேலே பேச்சுக்கு இடம் கொடாமல் விலகிச் சென்ற கணவனின் முதுகை, உதயரேகா வெறித்து நோக்கினாள்.

நல்லபடியாக வாழ மாட்டேன் என்று, இப்படி ஒரு பிடிவாதமா? விடமுடியாத அளவுக்கு அப்படி ஒன்றும்

மொடாக்குடியனாகவும் தெரியவில்லை! ஊரிலிருந்து கொண்டுவந்த சாமான்களில் அந்தமாதிரி பாட்டில் வகைகள் எதும் இல்லை என்பதை ஏற்கனவே அவள் பார்த்திருந்தாளே!

ஒருவேளை, இங்கே வாங்குவானா? இந்த மாதிரிக் கிராமங்களில் கூட இவன் குடிக்கிற மாதிரி கேஸ்கள் கிடைக்கக் கூடுமா? ஏன் கிடைக்காது?'' அதுதான் பட்டி, தொட்டி எல்லாம் கூட வேறு என்ன இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒயின் கடைகளை மட்டும் வரிசையாகத் திறந்து வைத்திருக்கிறார்களே! இங்கேயும் இல்லாமல் இராது. கவனிக்க வேண்டும் எவனாவது வாங்கிவந்தால் அவனைப்பிடித்து விரட்டவேண்டும்.

அதென்ன, 'நீ சேதமின்றி தப்பிப் பிழைத்துக் கொள்'? அவள் மட்டும் பிழைப்பதற்கு இந்தப் பாடுபட்டு இவனை மணப்பானேன்? அத்தை, மாமா, வசுவோடு, முக்கியமாக இவனும் அல்லவா நல்ல படியாக வாழ்ந்தாக வேண்டும். அதுவரையில் அவள் இந்த முயற்சியைக் கைவிடுவதாக இல்லை.

மறுநாள் காலையில் கணவனும், மனைவியும் குளித்து விட்டுக் கோயிலுக்குச் சென்றார்கள். அங்கே எல்லாம் தயாராக எடுத்து வைத்திருக்க, பொங்கல் செய்து, தெய்வ சன்னிதானத்தில் படையல் இட்டு வணங்கினார்கள்.

கண்மூடி நின்ற கணவன் முகத்தில் இறுக்கத்தைக் காணவும், இவ்வளவு தீவிரமாக என்ன வேண்டுகிறான் என்று உதயரேகா யோசித்தாள்.

ஒருவேளை, தன் கெட்ட வழிகளில் இருந்து விடுதலையைத் தான் வேண்டுகிறானோ? அவசரமாக அம்மனை நோக்கித் தானும் அப்படியே வேண்டிக் கொண்டாள்.



சுற்றிவரும் போது, மேற்குப் பிரகாரத்தில் இருந்த ஒரு மரம் உதயரேகாவின் கவனத்தைக் கவர்ந்தது.

மரத்தடியில் அபயம், வரதத்துடன் மடியில் பிள்ளையோடு ஓர் அம்மன் சிலையிருக்க, மரம் முழுவதும் தவழும் சின்னக் கண்ணனோடு கூடிய சிறு தொட்டில்கள் தொங்கின.

''இது கற்பகத்தரு அம்மா. அடியில் மரத்திற்கு உரிய தாயார். அம்மனை வேண்டிக் கொண்டால் ஓர் ஆண்டுக்குள்ளாக மடியிலோ, வயிற்றிலோ பிள்ளை நிச்சயமாக இருக்கும். பாருங்கள் இதெல்லாம் அப்படிப் பெற்றவர்கள் கட்டிய தொட்டில்கள்தான். கொஞ்சம் இருங்கள், கற்பூரம் எடுத்து வருகிறேன்'' என்று சென்றார் அர்ச்சகர்.

அவளுக்குக் குழந்தையா? உள்ளூரக் குறுகுறுப்பும், கிளுகிளுப்புமாக அம்மனின் அருள் முகத்தை நோக்கினாள் உதயா.

''கண்டபடி ஏதேனும் வேண்டிக் கொண்டு தெய்வத்தைச் சங்கடத்துக்கு உள்ளாக்காதே உதயரேகா. இது செல்லாத ஊருக்குவழி?'' என்றான் கிருஷ்ணசந்திரன்.

அவனது பாணியில் தோளைக் குலுக்கினாள் அவன் மனைவி.

கணவனின் பார்வை மாறுவதை முகம் மாறாமல் கவனித்துவிட்டு, 'செல்லாத ஊருக்கு வழியா? செல்ல வைப்பாள் இந்தத்தாய்' என்று நம்பிக்கையோடு தாயாரை வேண்டிக் கொண்டாள் உதயரேகா.



## 8

பண்ணை வீட்டு உரையாடலை ஆராய்ந்து பார்த்தில், உதயரேகாவுக்கு நல்லதும் கெட்டதுமாய் இரண்டு விஷயங்கள் தெளிவாயின.

முதல் வகையானதாய், கிருஷ்ணசந்திரனுக்கு மனைவியிடம் அக்கறை இருப்பது நிச்சயமாயிற்று. மற்றபடி, உன் வாழ்வு என்னாகும் என்று யோசித்தாயா என்ற தவிப்பும், சிக்கலில் இருந்து அவள் தப்பிப் பிழைக்க வழி ஒன்று தேடிச் செல்வதும் அவசியமில்லை. ஒருவரிடம் அன்பு இருக்கும் போதுதான், அவர் தானாகத் துன்பத்தை இழுத்துக் கொள்கிறாரே என்ற ஆத்திரமும், அந்தத் துன்பம் தீர்க்கும் வேகமும் தோன்றும். ஆக, அவன் அன்பு நிச்சயமாய் இருக்கிறது என்பதால் நிம்மதியும், அந்த அன்பை வளர்த்துவிடலாம் என்பதில் நம்பிக்கையும் உண்டாயிற்று.

ஆனால், கெடுதலாக அவனது 'திருந்தமாட்டேன்' என்ற பிடிவாதம்தான் அவளைக் குழப்பியடித்தது.

அறியாமல் தவறு செய்கிறவர்களுக்கு எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கலாம், திருத்தலாம். ஆனால், இது தப்பு என்று தெரிந்து கொண்டே, அந்தத்தப்பைச் செய்தே தீருவேன் என்று பிடிவாதம் பிடிக்கிறவனை என்ன செய்வது?

ஒருவேளை கிருஷ்ணசந்திரன் தானாகவே திருந்த முயற்சி செய்து தோற்றிருப்பானோ என்ற சந்தேகம் வந்தது. மதுவுக்குப் பழக்கப்பட்டுவிட்ட உடம்பு அதைத் திடுமென அடியோடு நிறுத்தும்போது படாதபாடு படுமாமே. அந்தத் துன்பம் ஒருதரம் அனுபவித்ததால் தான் மீண்டும் அந்த முயற்சி செய்ய மறுக்கிறானோ? இருக்கலாம்...



ஆனால், எத்தனை விதமாக யோசித்தாலும் ஒன்று உதைத்தது. இந்தக் கெடுதல்களின் அடிப்படை!

ஒருவன் காரணம் இல்லாமல் திடுமெனக் கெட்டுப் போய் விடுவது இல்லை. கிருஷ்ணசந்திரன் ஒன்றும் அறியாப் பருவத்தில் அடுத்தவரோடு சேர்ந்து கெட்டுப் போகவில்லை. இது எப்படித்தான் இருக்கும் என்று தான் பார்ப்போமே என்று தொடங்கி, நன்றாகத்தான் இருக்கிறது. இதை ஏன் விடவேண்டும் என்று அதன் தீமைபுரியாமல் குடியைப் பழகிவிடவில்லை. படித்து முடிக்கும் வரை நன்மைதீமை பகுத்துணர்ந்து ஒழுங்காகவே நடந்து கொண்டிருக்கிறான். தந்தையிடம் பயிற்சி பெற்றபின், ஒரு தொழிலை மூன்று ஆண்டுகளாகத் தனியே தலைமை தாங்கி நடத்தி வருகிறவன், அலுவலகத்தில் பத்துப்பேரும், தொழிற் சாலையில் முப்பது ஆட்களுமாக நாற்பதுபேருக்குச் சம்பளம் கொடுத்து வேலை வாங்குகிறவன் அவன். தட்டிக் கொடுத்து நல்லதனமாகவே வேலை செய்ய வைப்பவன் என்று கேள்வி.

சொல்லப்போனால், கிருஷ்ணசந்திரன் தொழில் செய்யும் முறையை அறிந்தபிறகுதானே உதயரேகாவுடைய தந்தை அவர்கள் திருமணத்துக்கு முழுச் சம்மதம் தந்ததே.

இப்படிப்பட்டவன், மதுவின் தீமை தெரியாமல் குடிக்கத் தொடங்குவதோ, அவனே அறியுமுன் குடிப்பழக்கத்துக்கு அடிமையாகி விடுவதோ சாத்தியம் அல்ல.

பின்னே?

ஏதேனும் வேதனையை மறக்கவென்று தொடங்கியிருப்பானோ? தேவதாஸ் தொடங்கி எத்தனை படங்களில் கவலையை மறக்கக் குடிப்பது பற்றி வந்து விட்டது!

ஆனால் கிருஷ்ணசந்திரனுக்கு அப்படி என்ன மனவேதனை இருக்கமுடியும்? அன்பான பெற்றோர், பிரியமான தங்கை, வளமான வாழ்க்கை! குறைப்பட என்ன இருக்கிறது?

ஒருவேளை தேவதாஸ் மாதிரியே...

'சுரீல்' என்று எழுந்த வலியில் உதயாவுக்கு வியர்த்துக் கொட்டிவிட்டது.

கிருஷ்ணசந்திரனின் வயது இருபத்தி ஆறு. குறைந்தது ஆறு ஆண்டுகளாகக் காதல் கடலில் தொபுகடீர் என்று விழுந்து விடக்கூடிய பருவம்தான். அப்படிக் காதலித்து, அந்தக் காதல் நிறைவேறாத சோகத்தில் மது, மாது என்று ஆகிவிட்டானா? காந்திமதியும் செல்வரங்கமும் தான் அவனது காதலைத் தடை செய்துவிட்டார்களோ? அதனால்தான் அவர்களை நோகடிப்பதிலேயே குறியாக இருக்கிறானோ?

இப்படித்தான் நடந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்த உதயரேகா மிகவும் சோர்ந்து போனாள்.

இன்னொருத்தியின் நினைவில் வாழ்கிறவனால் எப்படி அவளிடம் நேசம் கொள்ளமுடியும்? இந்த ஒரு விளக்கத்தைச் சற்றும் சிந்தியாமல் அவசரப்பட்டு விட்டாளே! போயிற்று! எல்லாமே கெட்டுவிட்டது! இனி வாழ்நாளெல்லாம் கணவனின் உதாசீனத்தில்...

மீண்டும் எங்கோ இடித்தது.

கிருஷ்ணசந்திரன் மனைவியை உதாசீனம் செய்யவில்லையே! வெறுமனே, அக்கறையற்று, 'யாருக்கு வந்த விருந்தோ' என்று கூட இருக்கவில்லை.

அன்றையப் பார்வை... அதைக்கூட விட்டுவிடலாம். சில ஆண்கள் பத்துக்குமேல் நாற்பதுக்குள் உள்ள எந்தப்



பெண்ணையும் அப்படித்தான் பார்க்கிறார்கள். ஆனால், இவன் வேறு யாரையும் அப்படி நோக்கவில்லை என்பது ஒருபுறம் இருக்க, அவனது இதம் நாடும் விதமும் இருக்கிறதே! இன்னொருத்தியை நேசித்தவனால் இது எப்படி முடியும்?

சுற்றிச் சுற்றி வட்டம் தொடங்கிய இடத்திலேயே மீண்டும் வந்து நின்றது.

ஏன் குடிக்கத் தொடங்கினான் என்று கிருஷ்ணசந்திரனிடமே கேட்டுவிடலாமா என்றுகூட உதயா ஒருதரம் யோசித்தாள்.

கேட்கலாம் தான். ஆனால் பதில்தான் கிடைக்காது. இன்றைய அளவில், இந்தமாதிரிக் கேள்வி - பதில்களுக்கு அவர்களிடையே இடம் இருப்பதாக அவளுக்குப் படவில்லை.

தனி வீடு. வீட்டா - கணவனும், மனைவியும் இருப்பது மாடியில் உண்பது நீங்கலாக மற்ற எல்லாமே - உறங்குவது, குளிப்பது, டி.வி. பார்ப்பது, படிப்பது என்று எல்லாமே மாடியிலேயே நடந்தது. ஹாலைத் தவிரவும் மூன்று அறைகள் இருக்கவே, இருவரும் தனித்தனி அறைகளில் இருந்து கொள்ள முடிந்தது.

கீழ்த்தளத்தில், முன் பகுதியைக் கார் நிறுத்தப் பயன்படுத்தினார்கள். உள்ளே உணவு அறை, அடுத்து சமையல் அறை, சாமான் அறையோடு, வேலையாட்கள் தங்கும் பகுதி இருந்தது.

சத்தம் செய்வதோ, காபி, பத்திரிகை போன்ற எதையேனும் கொண்டு வருவதோ, எதுவானாலும் அழைத்தால் தான் வேலையாட்கள் மாடிக்கு வருவார்கள்.



உதயரேகாவுக்கு அதிகாலையில் எழுந்து பழக்கம் இல்லை. அதற்காக, விட்டால் பத்து மணிவரை உறங்குகிறவளும் அல்ல. ஆறிலிருந்து ஆறரைக்குள்ளாக அவள் எழுந்து வந்தால், பெரும்பாலும் 'சிட்அவுட்'டில் அமர்ந்து காபி அருந்திய படியே கிருஷ்ணசந்திரன் பத்திரிகை படித்துக் கொண்டு இருப்பான்.

'ஜக்'கிலிருந்து தனக்கு ஒரு காபியை ஊற்றிக் கலந்து கொண்டு உதயா எதிரே அமர்வதைக் கவனித்த மாதிரியே காட்டிக் கொள்ளமாட்டான் அவன்.

அவளாகப் பேச்சுக் கொடுத்தால், கடனே என்று கஷ்டப்பட்டுக் கொண்டு அரை குறையாகப் பதில்வரும் அவ்வளவே.

கூட இரண்டு வார்த்தை அவள் பேசினால், பத்திரிகையைப் போட்டுவிட்டு, குளிக்கப் போவதாக முணுமுணுத்து விட்டுப் போய் விடுவான். அன்று பார்த்து அவனுக்குச் சீக்கிரம் கிளம்பவேண்டியதாகிவிடும்.

ஒருநாள் அவனிடம் பத்திரிகையின் 'ஸ்போர்ட்ஸ்' பகுதியைப் படிப்பதற்காக உதயரேகா கேட்டாள். மறுக்காமல் கொடுத்தான்.

மறுநாளில் இருந்து, டீபாயில் அந்த தினசரிப் பத்திரிகை இரண்டு இருந்தது. வீண் விரயம் என்று உதயா நினைத்தாள். அவன் மற்ற செய்திகளைப் படித்து முடிக்குமுன் அவள் அந்த விளையாட்டுப் பகுதியைப் படித்துமுடித்து விடப்போகிறாள். இதற்குப்போய் இன்னும் ஒரு பத்திரிகையா?

இந்த மாதிரிப் பணத்தை வீணாக்குவதெல்லாம் அவளுடைய சித்திக்குப் பிடிக்கவே பிடிக்காது... என்று எண்ணி



யவளுக்கு வீட்டு ஞாபகம் வந்தது. அவர்களைப் பற்றி அதிகம் நினையாதது ஆச்சரியமாக இருந்தது. அவளது பிரிவை அவர்கள் எப்படி உணர்கிறார்களோ! குறைந்த பட்சம் சித்திக்கு மிகவும் போரடிக்கும் என்று பம்பாயில் ஒரு கான்பரன்சுக்குச் சென்ற அப்பா எல்லோரையும் உடன் அழைத்தும் சென்றிருந்தார். அங்கே தாதர் மார்க்கெட்டைச் சித்தியும், பானுவுமாக புரட்டி எடுத்துக் கொண்டு இருப்பார்கள். சித்தியோடு கடைக்குப்போவது நன்றாக இருக்கும். இனிமேல்...

சித்தியிடமிருந்து உதயாவின் மனம் உடனேயே நடப்புக்குத் திரும்பிவிட்டது. ஞாயிறன்று 'மாக்சின்' பகுதியை ஊன்றிப் படித்தாள். மறுநாளில் இருந்து சில வாராந்திர, மாதாந்திர சஞ்சிகைகளும் சேர்ந்து டீபாய் மேல் வீற்றிருந்தன.

மதிய உணவுக்குக் கிருஷ்ணசந்திரன் வீட்டுக்கு வருவது இல்லை.

காலைச் சிற்றுண்டியும், இரவு உணவும் வீட்டில் இருவருக்கும் சேர்ந்தே நடக்கும். இரவு உணவின் பின் தட்டில் கொஞ்சம் நேந்திரங்காய் வறுவலை வைத்துக் கொண்டு கொறிப்பது உதயரேகாவின் வழக்கம். பிள்ளைகள் மூவருமாய் இப்படிக் கொறித்துக் கொண்டே சேர்ந்து அமர்ந்து டி.வி. பார்ப்பார்கள். பிறந்த வீட்டு நினைவில் 'சிப்ஸ்' கேட்டுவிட்டுக் கணவனிடம் விவரம் கூறினாள் ஒருநாள்.

அப்போதைக்கு 'அப்படியா?' என்று கூடக் கேளாவிட்டாலும் மறுநாளையிலிருந்து உணவு மேஜையில் எப்போதும் நேந்திரங்காய் வறுவல் இருந்தது.

இப்படி வெகுசில சம்பவங்கள் தவிர, மனைவி என்று ஒருத்தி அந்த வீட்டில் இருப்பதாகவே கிருஷ்ணசந்திரன் கண்டு கொள்வதில்லை. வெளியே செல்லும்போது 'சென்று வருகிறேன்' என்று அவளிடம் விடை பெற்றதும் இல்லை; இரவில் வீடு திரும்புகிறவன் அவளை விழியால்கூடத் தேடுவதும் இல்லை. வெகு கவனமாக ஒதுங்கி ஒதுங்கிச் சென்று கொண்டு இருந்தான்.

இவனிடம் போய், 'ஆஹோ, வாரும் பிள்ளாய், ஆருயிர்க் கணவரே, நீவிர் இப்படிக் குடித்தனத்தைப் பாராமல் குடியே மதி என்று இருக்கும் காரணத்தைக் கூறுமையா!' என்று கேட்பது கொஞ்சமும் பிரயோஜனப்படாது. பின்னே?

மீண்டும் ஒருதரம் நன்றாக யோசித்துவிட்டு, உதயரேகா தன் மாமியாரை நாடிச் சென்றாள்.

''வா வா வா'' என்று அமோக வரவேற்பு. ''அவன் வரவில்லையா'' என்ற வாடல், ''சரி நீயாவது வந்தாயே!'' என்ற தேறுதல் எல்லாம் முடிந்து பேசிக் கொண்டு இருக்கும்போது, ''அவர் யாரையாவது காதலித்து, நீங்களும் மாமாவும் அதைத் தடை செய்தீர்களா, அத்தை?'' என்று மிகவும் சாதாரணம் போலக் காட்டிக் கேட்டாள் உதயா.

ஆனால் வெகுவாகப் பதறிப்போனார் காந்திமதி. ''ஏனம்மா? அவன் உன்னிடம் சரியாக நடந்து கொள்ளவில்லையா? உன்னிடமும் தன் கோணல் புத்தியைத் தான் காட்டுகிறானா? ஐயோ! இதற்காகத்தானே நான் அந்தப் பயம் பயந்தேன்! குருத்துப்போல உன்னை...''

''அப்படி ஒன்றும் இல்லை அத்தை'' என்ற மருமகளின் வார்த்தையை அவர் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.



நம்பாத தன்மை அவர் முகத்தில் தெரியவும், ''மெய் அத்தை. உங்களுக்குச் சான்று ஒன்று தரட்டுமா? நம் ஊருக்குப் போனபோது உங்கள் மகன் என்னை ஊர்வலமாக அழைத்துச் சென்றார்'' என்று கண் சிமிட்டியவள், தானே தொடர்ந்து, ''புரியவில்லையா? கல்யாண ஊர்வலம் என்ன வேகத்தில் செல்லும்? அந்த மாதிரி வேகம். ஆமை கூட வென்றுவிடும்; அவ்வளவு மெதுவாகக் காரை ஓட்டினார். ஏன் தெரியுமா? வேகமாகப் போனால் நம் ஊர்ச் சாலையின் மேடுபள்ளங்களில் கார் தூக்கிப் போடுவது எனக்குக் கஷ்டமாக இருக்குமாம்!'' என்று கூறிச் சிரித்தாள்.

''அப்புறம்?'' மகனுக்காகப் பசித்த மனம், மேலும் தீனி கேட்டது.

புரிந்து, ''கோவிலில் என்னமாகக் கண்மூடி வேண்டினார் தெரியுமா? அவருக்கு அவ்வளவு பக்தி இருக்கும் என்று நான் நினைத்ததே இல்லை. அப்புறம் கற்பகத் தருவிடம்கூட வேண்டுதல்!'' என்று விளையாட்டுக் குரலில் பொய்யும் புகலாமல் முழு உண்மையும் உரைக்காமல் சமாளித்தவள், காந்திமதியின் முகம் சற்றுத் தெளிவுறவும், ''ஆமாம், அத்தை எனக்கு ஒரு பெரிய சந்தேகம். நமது கடந்த காலம். அதாவது நாம் முற்பிறவியில் செய்த வினைகள்தான் - நமது நிகழ்காலத்தை நிர்ணயித்தது. நிகழ்காலத்தில் செய்வதுதான் எதிர்காலத்தை அதாவது அடுத்த பிறவியில் அனுபவிக்கப் போவதைத் தீர்மானிப்பதும் என்கிறார்களே. அப்படி இருக்க இந்த வேண்டுதல்களால் எல்லாம் என்ன பயன்?'' என்று பேச்சை மாற்றினாள்.

''முன்வினைப் பயனால் ஒருவனுக்குக் கால் போவதாக விதி இருந்தாலும், இறையன்பு, அந்தக் காலில் முள்தைப்பதோடு அந்த வினைப்பயனைத் தீர்த்து விடும் என்று அன்னை சாரதாமணி சொன்னதாகப் படித்திருக்கிறேன்.''





''ஆனால் கடவுளிடம் லௌகீக விஷயங்கள் - பணம், சுகம் வேண்டும் என்றெல்லாம் கேட்பதுதப்பில்லையா, அத்தை? எனக்கு அவ்வப்போது இது ஓர் உறுத்தல்.''

''பிள்ளைகளுக்கு ஒன்று வேண்டும் என்றால் யாரிடம் கேட்பார்கள்? தாய், தந்தையிடம் தானே? நம்மை இந்த உலகில் படைத்து வளர்த்து, நமக்கு எல்லாமும் ஆகிநிற்கும் கடவுளிடம் கேளாமல் வேறு யாரிடம் கேட்பது, உதி? ராமகிருஷ்ணர் கூட அப்படித்தான் சொன்னாராம். 'ஊரெல்லாம் கேட்டேன்; கிடைக்கவில்லை என்கிறாயே, உன்னைப் படைத்த ஜெகன் மாதா இதோ இருக்கிறாளே, இவளிடம் கேட்டாயா? இவள் தன் கையால் தராவிட்டாலும், தருவதற்கு ஆளைத் தயார் பண்ணுவாளே!' என்று சொல்வாராம். அதுபோல மூச்சு முட்டிப் போகிறபோது வேறு யாரம்மா கதி? காப்பாற்றும் சக்தி கடவுளைத்தவிர யாருக்கு உண்டு?''

''தானாகக் கையால் தராவிட்டாலும், தருவதற்கு ஆளைத் தயார் பண்ணுகிற வகையில் கடவுள் இப்போது என்னைத் தயார் செய்திருக்கிறார் என்று தோன்றுகிறது பாருங்கள், இன்னும் கொஞ்ச நாளில் எல்லாம் சரியாகிவிடும்'' என்று நம்பிக்கையூட்டிய மருமகளைக் கூர்ந்து நோக்கிவிட்டு, ''நிஜத்தைச் சொல் உதி. சந்திரனுக்குப் பழைய காதல் உண்டா என்று ஏன் கேட்டாய்?'' என்று முன்பேச்சை விட்டுவிடாமல் காந்திமதி விசாரித்தார்.

''புதிதாக ஒன்றும் இல்லை, அத்தை இவ்வளவு நல்லவராக இருப்பவர், உங்களிடம் - உங்கள் மூவரிடம் மட்டும் வெறுப்பை உமிழ்வானேன் என்று யோசித்தேன். அதற்காகத்தான் கேட்டேன்'' என்று பதில் அளித்தாள் மருமகள்.



''அப்படி எதுவும் கிடையவே கிடையாதம்மா. சொல்லப் போனால், அவனுக்குத் திருமணம் செய்து பார்க்கும் ஆசையில், அவனுக்கு இருபத்தைந்து தொடங்கியதில் இருந்து உனக்காக யாரையும் பிடித்திருந்தால் சொல்லு; அவளையே திருமணம் செய்து வைக்கிறோம்' என்று பலமுறை கேட்டிருக்கிறோமே. உன் மாமாவிடம், சும்மா தொண தொணக்காதீர்கள், உங்களுக்கு அம்மா கிடைத்தமாதிரி எனக்கும் கிடைத்தால்தான் கல்யாணம் பண்ணுவேன்' என்பான். உன் மாமாகூட, 'அம்மா மாதிரிப் பெண்ணா? இனி அரசமரத்தடி தோறும், பிள்ளையார் பக்கத்தில் இவனுக்கும் இடம் ஒதுக்க வேண்டியதுதான்' என்று சிரிப்பார்... ஆனால் அது ஒரு காலம்!'' என்று பெருமூச்சுவிட்டார் காந்திமதி.

மகன் எப்போது, இப்படி அடியோடு மாறினான் என்று காந்திமதியால் வரையறுக்க முடியவில்லை. சுமார் ஆறு மாதம் முன்பு கொஞ்சம் 'டல்'லாக இருப்பது போலத் தோன்றியதாம். கேட்டால் ஒன்றுமில்லை என்றானாம். முதலில் சாதாரணமாக பிறகு கோபமாக அதன் பின் வலிக்கச் செய்யும் விதமாக...

உருப்படியான தகவல் ஏதும் கிடைக்காவிட்டாலும், கணவனின் மாறுதலின் அடிப்படை வேறு பெண் அல்ல என்ற அளவில் உதயரேகா நிம்மதியுற்றாள்.

மேலும் சற்று நேரம் பேசி மாமியாரையும் உற்சாகப்படுத்தி விட்டு அங்கிருந்து கிளம்பி, கொஞ்சநேரம் கடைகண்ணிகளில் சுற்றிப் பார்த்துவிட்டு, மெல்ல வீட்டை அடைந்தால், அங்கே கிருஷ்ணசந்திரன் கோபாவேசத்துடன் அவளை எதிர் கொண்டான்.

## 9

திரும்பி வீடு வந்து சேர்ந்த போது வீட்டினுள் கிருஷ்ணசந்திரனின் கார் நிற்பதைக் கண்டதும் உதயரேகா வியப்படைந்தாள்.

பொதுவாகக் காலையில் கிளம்பும் கிருஷ்ணசந்திரன், வீடு திரும்ப இரவாகிவிடும். சில நாட்கள் ஒன்பது மணிக்கு மேல்கூட ஆகிவிடுவதுண்டு. அந்த நாட்களில் அவனது நடையில் சிறு தள்ளாட்டம் இருப்பதைக் கண்டு உதயா உள்ளூர வருத்தமும், கோபமும் பட்டிருக்கிறாள். ஆனால் ஏதும் பேச இடம் கொடாமல் உடனே அவனது அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொள்கிறவன் மறுநாள் காலையில்தான் மீண்டும் வெளியில் வருவான்.

உதயாவும், அவசரப்பட்டுக் கணவனிடம் ஏதாவது கேட்கவிரும்பவில்லை. முதலில் அவனது மாறுதலின் அடிப்படைக் காரணத்தை அறியவேண்டும். பிறகு அவனை அணுகும் வழி தேடவேண்டும். அதன் பிறகே இனி இதுபற்றிப் பேச வேண்டும் என்று அந்த முதல்நாள் பேச்சை அடுத்து ஏற்கனவே முடிவு செய்திருந்தாள்.

ஆனால், அப்படித் தாமதமாக வரும் நாட்களில், வீட்டுக்கு டெலிஃபோன் செய்து, ''வரநேரமாகும். எனக்குச் சாப்பாடு வேண்டாம்'' என்று ஏதோ ஒரு தகவல் கொடுத்து விடுவான்.

சாதாரணமாகவும் கூட, எவ்வளவு சீக்கிரமாக அவன் வீடு வந்தாலும் குறைந்தது ஆறுமணியாவது ஆகிவிடும். இன்று ஆனால் ஐந்து மணிக்கே வந்து நிற்கிறானே!

ஆனாலும், பரபரத்து உள்ளே ஓடத் தோன்றவில்லை அவளுக்கு. அப்படி அவசரமாக ஓடி அவனிடம் சென்று



என்ன ஆகப்போகிறது? காபியோ சிற்றுண்டியோ, வேண்டியதை வேலையாட்கள் மூலமாய் நிறைவேற்றிக் கொள்கிறவனுக்கு இவள் வீட்டில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றுதான்.

அனேகமாக காபிக் கடை முடிந்து, அவனது அறைக்குள் புகுந்தும் இருப்பான். அங்கே தனியாக என்னதான் செய்வானோ? அவ்வப்போது அறைக்குள் சென்று உள்ளே தாளிட்டுக் கொண்டு, ஒரு மணிநேரம் ஒன்றரை மணிநேரம் என்று அடைத்துக் கொண்டு உட்கார்ந்து இருப்பதும் அது போரடித்துப்போய், முகம் வெளுத்து சோர்ந்து வெளி வருவதையும் அவள் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாள்.

பின் என்ன? பொழுது போக்குவதற்கு அவன் அறைக்குள் ஒரு டி.வி. கூடக் கிடையாது. போரடிக்காமல் என்ன செய்யும்?

அவளுடன் பேச்சைத் தவிர்ப்பதற்காக - அவள் என்னென்ன கேட்டுவிடுவாளோ என்று பயந்து உள்ளே போய் ஒளிந்து கொள்கிறவன் இந்த போரடிப்பையும் படவேண்டியதுதான்.

இந்த போர் தாங்காமலாவது மனைவியாகிய அவளுடன் நன்றாகப் பேசிப் பழகட்டுமே!

சிறு சோர்வுடன் நடந்து, வீட்டுக்குள் அடியெடுத்து வைத்ததுமே, வேலைக்காரச் சிறுவன் ஓடோடி வந்தான். ''அம்மாம்மா, நீங்கள் வந்ததும் அய்யா உங்களை உடனே மாடிக்கு வரச் சொன்னாங்க'' என்றான்.

தலையாட்டிவிட்டு மாடிப்படி ஏறிச் சென்றாள்.



கண்களை மறைத்த கூந்தல் சுருளை, விரலால் ஒதுக்கியபடி, என்ன என்பது போல ஏறிட்டவளை ஆத்திரமாக முறைத்தான் கிருஷ்ணசந்திரன்.

''இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய்?'' என்று கோபத்துடன் சீறினான்.

முதல்நாள், போகா வகுப்பில் பெற்றவளிடம் அவன் கோபமாகப் பேசியது உதயரேகாவுக்கு நினைவு வந்தது. அன்றளவு இன்று அவன் முகம் கனித்துப் பேசவில்லை. ஆனால் சினம் மட்டும் அன்றைவிட அதிகம் இருப்பதாகவே தோன்றியது.

''உங்கள் அம்மாவீட்டுக்கு... அப்புறம்...'' என்றவளுக்கு உள்ளூர மனம் முரண்டியது. இந்தக் குரலில் அவனிடம் ஒருவர் பேசுவதா? அது கணவனே என்றாலும்?

''போவதை யாரிடமாவது சொல்லித் தொலைத்துவிட்டுப் போவதுதானே?'' என்றான் அவன் சினம் தணியாமலே.

ஏற்கனவே, கணவனது பாணியில் உதயா ஓரளவு, எரிச்சலுற்றிருந்தாள். வெயிலில் சுற்றிய அலுப்பு வேறு. திடுமெனத் தாக்கப்பட்ட அதிர்ச்சியில் முதலில் தடுமாறிப் பதில் சொன்னவளுக்கு அவன் மீண்டும் அதே மாதிரிப் பேசவும் சுள்ளென்று சூடு ஏறிவிட்டது.

''சொல்லிவிட்டுத்தான் போகவேண்டும் என்று சட்டமா?'' என்று மிடுக்காகக் கேட்டாள்.

''இல்லாவிட்டால் நீ எங்கே, எப்படி இருக்கிறாய் என்று எனக்கு எப்படித் தெரியும்?'' என்றான் அவன் பதிலுக்கு.



''அது தெரிந்து என்ன ஆகப்போகிறது? அன்றித் தெரியாமல் இருப்பதால்தான் என்ன கெட்டுவிடப் போகிறது?'' என்றாள் உதயரேகா அலட்சியமாக.

''ஆவதும் கெடுவதும் பற்றிய பேச்சு இப்போது அனாவசியம். ஆனால் எனக்குச் சற்றும் விருப்பம் இல்லாமல் திணிக்கப்பட்ட ஒன்று என்றாலும், உன் நன்மை தீமை பற்றிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. உனக்கு ஓர் ஆபத்து என்றால்...''

''ஓகோ! ஏதேனும் விபத்தில் சிக்கிச் செத்து வைத்தேன் என்றால் உங்களுக்கு அதுபற்றித் தெரிவது எப்படி என்கிறீர்கள் அதுதானே? கவலைப்படாதீர்கள். உங்கள் 'விசிட்டிங் கார்டு' ஒன்று என் கைப்பையில் இருக்கிறது.''

''பேசுவதைப் பார்! உன் கைப்பை எங்கேனும் திருடு போய்விட்டால்?''

''இனிமேல் நெற்றியில் எழுதி ஒட்டிக் கொள்ளட்டுமா?''

''என்ன பேச்சு இது? செல்லும் இடம் பற்றி வீட்டில் சொல்லிவிட்டுப் போ என்றால் இத்தனை விதண்டாவாதமா?''

''நான் மட்டும் சொல்லிவிட்டுப் போகவேண்டும் என்றால் அதுதான் விதண்டாவாதம்!''

''ஓ!'' என்று உடனே கண்டு, ''நான் எப்போதும் அலுவலகம் அல்லது தொழிற்சாலையில் தான் இருப்பேன்'' என்றான் கிருஷ்ணசந்திரன்.

'மாட்டினீர்கள்' என்று உள்ளூர எண்ணியபடி, ''அலுவலகம், தொழிற்சாலை நேரம் முடிந்தபிறகு? அதாவது ஐந்தரை மணிக்கு மேலாக? ஒருவேளை அதெல்லாம்

சொல்லப்படக்கூடாத - சொல்ல நாக் கூசுகிற இடங்களோ?'' என்றாள் அவள் எகத்தாளமாக.

அவளது முதல் கேள்வியில் விறைப்புற்று நிமிர்ந்த கிருஷ்ணசந்திரன் அவளது அடுத்த கேள்வியில் மிகுந்த ஆத்திரமுற்றது நன்றாகவே தெரிந்தது. ஏதோ சொல்ல வாயெடுத்தவன் உடனே நிறுத்தி, சுட்டெரிப்பவன் போல அவளை நோக்கி விட்டுச் சட்டெனத் திரும்பி நடந்து, மடமடவென்று மாடிப்படி இறங்கிச் சென்றான்.

அவன் காரை எடுத்துக் கொண்டு வெளியே செல்வதைக் கண்ட உதயரேகாவுக்கும் கோபத்தில் முகம் சிவந்து போயிற்று.

'வரட்டும்' என்று உள்ளூரக் கறுவியபடி காத்திருந்தவள், சுமார் ஒரு மணிநேரம் கழித்து, கணவன் திரும்பி வந்ததும், நேரே அவன் முன் சென்று நின்றாள்.

''பாருங்கள், இந்த மாதிரிப் பாதிப் பேச்சில் வெளியே போகிற பழக்கம் இன்றோடு நிற்க வேண்டும். பெரும்பான்மைப் பெண்களைப்போல இந்தமாதிரி அவமதிப்புகளை நான் பொறுத்துப் போகமாட்டேன். இன்னொரு தரம் இப்படிச் செய்தால், அடுத்து நானும் நேரம், காலம் பாராமல் இதேபோலக் கிளம்பி விடுவேன். சும்மா அல்ல. பத்து பவுனில் நீங்கள் என் கழுத்தில் மாட்டியிருக்கும் இந்தச் சங்கிலி, கைகளில், காதுகளில் மாட்டியிருப்பதோடு இந்தத் தெருக்களில் ஆள் நடமாட்டம் அதிகம் கிடையாது என்பதும் நினைவிருக்கட்டும்'' என்றாள் மிரட்டலாக.

''சற்றுமுன் தனியாகத்தானே வந்தாய்?''

''வீட்டு வாசலில் ஆட்டோவில் வந்து இறங்குவதற்கும் தனியே இரவு, பகல் என்று இல்லாமல் நடந்து



போவதற்கும் வேறுபாடு இல்லையா? இன்னமும் இங்கே ராமராஜ்யம் வந்து விடவில்லை, தெரியுமா?''

சிறு அமைதியின் பின், ''சாரி'' என்றான் கிருஷ்ணசந்திரன். ''இனி இப்படிச் செய்யமாட்டேன். உன் நகைபற்றின மிரட்டலுக்குப் பயந்து அல்ல. ஆண் பிள்ளை என்பதால் அரைகுறைப் பேச்சில், செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பிவிடுவது, கட்டிப் போட்டு அடிப்பதை விடக் கேவலம் என்பதற்காகத்தான்.''

''போச்சுடா!'' என்று உதயா, கணவன் திகைத்து நோக்கவும், ''நீங்கள் பாட்டில் எளிதாய் வருத்தம் தெரிவித்து விட்டீர்கள்; இனி நானும் என் கோபத்தை விட்டாக வேண்டுமே!' என்று முறுவலிக்க அவனும் தன்னை மீறிப் புன்னகை செய்தான்.

''....அப்புறம்?'' என்றாள் அவள் தொடர்ந்து. கேள்வியாக நோக்கியபடி அவன் அசையாமல் நிற்கவும், ''நான் மாலைநேரங்களில் அனேகமாக மணிவாசகத்தோடு... அவனைக் கேட்டால் நான் இருக்கும் இடம் தெரிந்துவிடும்'' என்று மனமற்றுக் கூறினான் அவன்.

ஆனால், உதயரேகாவுக்கு இந்தச் சேதி அதிர்ச்சியாய் இருந்தது. ''மணிவாசகமா?! அவரா? அவர் நல்லவர் என்று நினைத்தேனே! உங்கள் அம்மாகூட அப்படித்தானே நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்தக் குடிப்பழக்கத்துக்கு அவரா காரணம்? சே! இவ்வளவு மோசமானவரா அவர்? சாதுபோல இருந்து கொண்டு...'' என்று அவள் படபடக்கவும் அவன் குறுக்கிட்டு, ''அவன் நல்லவன் தான். ஆனால் என் நண்பர்கள் விஷயம், என் விஷயம். அதைப் பற்றி நீ பேசக்கூடாது'' என்றான் அவன் கட்டுப்படுத்திய, ஆனால் கண்டிப்பான குரலில்.



''அதெப்படி உங்கள் விஷயம் மட்டுமாக ஆகும்?'' என்று திருப்பிக் கேட்டாள் அவனுடைய மனைவி. ''நான் உங்களைத் திருமணம் செய்து கொண்டவள். என் நன்மை தீமை உங்கள் பொறுப்பு என்பதுபோல, உங்கள் நலனும் என் பொறுப்புதானே? அதிகம் குடித்தால் கல்லீரல் கெட்டுவிடும் என்பதோ, கல்லீரல் கெட்டால் என்ன ஆகும் என்பதோ தெரியாத முட்டாள் நான் அல்ல. நீங்கள் நல்லபடியாக, நெடுங்காலம் உயிரோடு இருக்கவேண்டும் என்கிற அக்கறை இ...ருப்ப...தால்...

வினாடியில் கிருஷ்ணசந்திரனிடம் தோன்றிய மாறுதல் உதயரேகாவின் பேச்சை இடையில் நிறுத்தியது.

செவ செவவென்று கண், நாசி, முகம் எல்லாம் சிவந்து, அவன் அணிந்திருந்த மங்கிய ஆரஞ்சு நிறச் சட்டையில் அவன் உள்ளிருந்தே தகதகவென்று தீ எரிவது போல அவனது தோற்றத்தில் உதயரேகா திகைத்து விழித்தாள்.

தலையை அசைத்து இமை கொட்டிக் கண்களை நன்றாகத் திறந்து பார்த்தால், சற்று முன் பார்த்தது பிரமையோ என்பது போல அவன் சாதாரணமாக - ரொம்பவும் சாதாரணமாக அல்ல; கொஞ்சம் கோபத்துடனேயே நின்று கொண்டிருந்தான்.

''நான் யார் யாருடன், எப்படி எப்படிப் பழகுகிறேன் என்பது என் விருப்பம். இதில் யாரும் தலையிட்டால் - அதுவும் மணியைப் பற்றிக் குறைவாக ஒருவார்த்தை சொன்னால், எனக்குக் கெட்ட கோபம் வரும். ஜாக்கிரதை! என்று எச்சரித்துவிட்டு, வெளியே செல்ல இரண்டு எட்டு எடுத்து வைத்தவன், நின்று, திரும்பி அவளை முறைத்துவிட்டு, அவனது அறைப்பக்கமாகச் செல்லவும் உதயாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.



அவன் சொன்ன சொல் காப்பாற்றுகிறான் என்பதை விட, ஒரு சிறு போரில் தான் வென்று விட்டாற்போல ஓர் உற்சாகம் உண்டாயிற்று.

இப்படியே ஒவ்வொன்றிலும் இவரைப் பிடித்துக் கட்டிவிடுகிறேன் என்று புன்னகையோடு தனக்குள் கூறிக் கொண்டவள், கிருஷ்ணசந்திரன், அவனது அறைக் கதவைத் திறக்கத் தொடங்கவும், ''சாரி'' என்றாள்.

லேசாகத் திரும்பி, ''எதற்கு?'' என்றான் அவன்.

''உங்கள் நண்பரைப் பற்றி அப்படிப் பேசியதற்கு. இனிமேல் அவரைப் பற்றி நியாயமில்லாமல் எதுவும் சொல்லமாட்டேன்'' என்றாள் அவள்.

''நியாயமில்லாமல் அதில் ஒரு பொய்யா? நியாயம், நியாயம் இல்லாதது பற்றி உனக்கு எப்படித் தெரியும்? உன் பார்வையில் அநியாயமாய்ப்படுவது உண்மையில் நியாயமாகவும் இருக்கலாமே!''

மணிவாசகத்தைப் பற்றித் தாழ்வாக ஒரு சொல் இவன் சகிக்கமாட்டான் என்பதை உதயா உணர்ந்தாள். அவள் இதுவரை பார்த்த அளவில் மணிவாசகம் நண்பனைக் கெடுக்கிற வர்க்கம் என்று ஒரேயடியாய் முடிவு பண்ண உதயாவாலும் முடியவில்லை. எனவே, ''நீங்கள் சொல்வது சரிதான்'' என்று கணவனிடம் ஒத்துக் கொண்டாள். ''சந்தேகத்தின் பலனைக் குற்றம் சாட்டப்பட்டவருக்குக் கொடுப்பது போல இப்போதைக்கு மணிவாசகம் நல்லவர் என்றே வைத்துக் கொள்ளுவோம்'' என்றாள்.

''சந்தேகத்தின் பலனாக அல்ல. மெய்யாகவே அவன் மிகவும் நல்லவன்தான்'' என்றான் கிருஷ்ணசந்திரன் உறுதியான குரலில்.

தோல்வியை ஒத்துக் கொள்கிற பாணியில் கைவிரித்தாள் மனைவி. "ஓகே ஓகே உங்கள் வார்த்தையை ஒத்துக் கொள்கிறேன். மெய்யாகவே அவரைப் பற்றி அப்படிப் பேசியதற்காக வருந்துகிறேன். சாரி!" என்றாள் புன்னகையோடு.

லேசாகத் தலையசைத்து, "இப்போது என் முறையா? நீ வருத்தம் தெரிவித்து விட்டதால் நானும் தொடர்ந்து கோபப்பட முடியாது; இல்லையா?" என்று லேசான முறுவலோடு திரும்பி வந்தான் அவன்.

வழக்கம்போலவே அவனது முறுவலை உள்ளூர ரசித்தபடி, "உங்களிடம் ஒன்று கேட்கலாமா?" என்றாள் உதயரேகா.

"கேள் என்றதும் 'ஒன்று' என்று சொல்லி அளக்கமாட்டாய் என்றால் கேட்கலாம். ஒருசிறு நிபந்தனை மட்டும் உண்டு. கேட்பது என்னைப் பற்றியதாக இருக்கக்கூடாது. உனக்கு ஏதாவது வேண்டும் என்றால் தாராளமாகக் கேட்கலாம்."

"தா...ரா...ளமாகக் கேட்கலாமா? எனக்கு ஒரு நல்ல 'ஃபாரின்' பென்ஸ் கார் - தங்க முலாம் பூசியது, வாங்கித்தருகிறீர்களா? விலை எழுபத்தைந்தே லட்சம் ரூபாய் தானாம்" என்று சாதுபோல விழிகளை விரித்தாள் உதயரேகா.

தன்னை மீறிச் சிரித்துவிட்டு, "உன்னை என்ன தான் செய்வது, சொல்லு" என்று உரைத்து, மீண்டும் நகைத்தான் கிருஷ்ணசந்திரன்.

புது மணம் புரிந்த ஒருவன், தன் புத்தம் புது மனைவியை என்னென்னவோ செய்யலாம்.



இடையோடு அணைக்கலாம்; கன்னத்தைக் கிள்ளலாம்; இதழில் முத்தமிடலாம்.

இதில் எதுவானாலும் எனக்குச் சம்மதமே; ஆனால் நீ என்ன செய்யப் போகிறாய்? என்பது போலக் கண்களில் செல்லக் கேள்வியும் இதழோரம் புன்னகையுமாக லேசாகத் தலையைச் சரித்துக் கணவனைக் கடைக்கண்ணால் ஏறிட்டாள் உதயரேகா.

தன்னிச்சையாய்க் கரங்கள் எழும்ப, மனைவியை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தான் கிருஷ்ணசந்திரன்.

## 10

மனைவியின் கடைக்கண் விடுத்த கேள்விக்கு உரிய பதில் சொல்லிவிடத் துடிப்பவன் போல, உதயரேகாவை நோக்கி விரைந்த கிருஷ்ணசந்திரன், கனவு கலைந்தாற் போல அடுத்த எட்டிலேயே நின்றுவிட்டான்.

பார்வையை அவளிடமிருந்து அவசரமாக விலக்கி, "எனக்கு நிறைய வேலை இருக்கிறது" என்று முணுமுணுத்தபடியே திரும்பி வேகமாக அவன் அறைக்குள் சென்று கதவையும் சாத்திக் கொண்டான்.

கன்னங்களில் செம்மையுறக் காத்திருந்தவளுக்கு ஏமாற்றம் தான். ஆனால், அதைவிட, ஏன் இப்படி என்ற கேள்வி மனதை மிகவும் குடைந்தது.

சாதாரண மனிதர்களுக்கு உரிய ஆசாபாசங்கள் அத்தனையும் உடையவனாகத்தானே தோன்றுகிறான்? கூடவே, அவளிடமும் ஆசை இருப்பதாகவும்தான் காண்கிறது.

பிறகு அவனை எது தடுத்தது? ஏன் இப்படி ஓடவேண்டும்? ஆனால், அந்த விநாடியில் அவனுக்கு நினைவு வந்த



தடை எதுவாக இருந்த போதும், கணவனை நெருங்கி விடமுடியும் என்ற நம்பிக்கையும் முன் எப்போதையும் விட உதயாரேகாவுக்கு அதிகம் ஆயிற்று.

மிகவும் சாதாரணமான கேலிப் பேச்சினாலேயே கணவனைக் கவரமுடிவதை உணர்ந்து, அடிக்கடி அவனைப் பேச்சுக்கு இழுத்தாள் உதயா.

ஆனால், அன்றையச் சறுக்கலின் பின் கிருஷ்ணசந்திரன் மிகவும் விழிப்புடன் இருக்கவே, அவளது முயற்சிகள் அனைத்தும், சாண் ஏறி முழம் சறுக்குவதைப் போல ஆயின.

அன்றையப் பேச்சு தந்த சகஜ பாவத்தைத் தொடர்வது போல, "உங்களை என்ன சொல்லி அழைப்பது?" என்று கணவனைக் கேட்டாள் உதயரேகா. "எனக்கு இந்த 'என்னாங்க', 'இந்தாங்க' என்பதெல்லாம் பிடிக்கவில்லை. உங்களுக்கு என்ன தோன்றுகிறது?"

காலை உணவு முடிந்து, காபி அருந்திக் கொண்டிருந்த கிருஷ்ணசந்திரன் அக்கறையற்றவனாகத் தோளைக் குலுக்கினான்.

கவனியாதவள் போலத் தனக்கும் ஒரு கப் காபியை ஊற்றியபடி, "மற்றவர்கள் உங்களை எப்படி அழைக்கிறார்கள்?" என்று விடாமல் விசாரித்தாள் மனைவி.

உணர்ச்சியற்ற குரலில், "புதியவர்கள் மிஸ்டர் கிருஷ்ணசந்திரன் என்பார்கள். கொஞ்சம் தெரிந்தவர்கள் கிருஷ்ணன் என்பார்கள். அம்மாவுக்கு நான் கண்ணப்பன். சிவசமயம் சந்திரன். வக அண்ணா என்பாள்" என்று இயந்திரம் போல ஒப்பித்தான் கணவன்.



"ஊம்..." என்று எழிலாக உதட்டைப் பிதுக்கினாள் உதயரேகா. "இதெல்லாம் சொல்லி நான் அழைக்க முடியாது!"

அவன் பேசாமல் காபியில் கவனமாயிருக்கவும், "அன்று உங்கள் நண்பர் உங்களைக் 'கேசி' என்றார்... ஆனால் அப்படிக் கூப்பிடுவதும் சரியாகத் தோன்றவில்லை..." என்றாள் அவள் யோசனையோடு.

"கரெக்ட்!" என்றான் கிருஷ்ணசந்திரன். "ஏனெனில் நீ என் சிநேகிதி அல்ல" என்றபோது அவன் குரல் அவளை மட்டம் தட்ட முயன்றது.

அவனை வெறித்து நோக்கிவிட்டு, "ஆமாம். மனைவி வெறும் சிநேகிதியாக இருக்க முடியாதுதான். ரொம்பவும் சரியாகவே சொன்னீர்கள் மிஸ்டர் அனாமதேயன்!" என்றாள் உதயரேகா துடுக்காக.

கணவன் சற்றுத் திடுக்குற்று நிமிரவும், "இது தேவலாமா? அல்லது நல்ல தமிழில் பெயரில்லாப் பூச்சி பரவாயில்லையா?" என்றவள் அவன் பேசாமல் அலுவலகம் செல்வதற்குத் தயாராகக் கைப் பெட்டியை எடுக்கவும் கூடவே நடந்தபடி, "இதுபோல இன்னும் கூட ஒன்றிரண்டு பொருத்தமான பெயர்கள் - உம்மணாமூஞ்சி, பேசாமடந்தை என்று இருக்கின்றன. எது மேல் என்று யோசித்து, சாயங்காலம் வரும்போது சொல்கிறீர்களா? இப்போது போய் வாருங்கள்" என்று உதடுகளைக் காதுவரை இழுத்துப் புன்னகை செய்தாள்.

சற்றுநின்று, "என் பெற்றோர் என்னைக் கேட்டு எனக்குப் பெயர் சூட்ட வில்லை. நீயும், உன் விருப்பம்போல எந்தப் பெயரிட்டு என்னை அழைப்பதானாலும் எனக்குச்

சம்மதமே'' என்று கூறிவிட்டு மடமடவென்று படியிறங்கிச் சென்று காரில் ஏறினான் கிருஷ்ணசந்திரன்.

'கல்லுளிமங்கன் தான் ரொம்பவும் பொருத்தம்' என்று ஆத்திரத்துடன் முணுமுணுத்தாள் உதயரேகா.

மாலையில் வந்தவனிடம் அதையே சொல்லிப் பார்த்தாள்.

அப்போதும், தோளைக் குலுக்கிவிட்டுப் பேச்சின்றி விலகிப் போனானே தவிர, அவன் கோபமாக ஒரு பார்வை கூட அவளைப் பார்த்தானில்லை. வாய்ப்பேச்சில் அவளை மடக்க முயற்சியும் செய்தானில்லை.

அவனது தந்திரத்தை ஊகித்து, அவன் விலகிப் போவதை உதயாவும் புரிந்து கொண்டாள். ஆயினும் அத்தோடு விட்டுவிட மனமின்றி, இதுபோல மேலும் ஓரிரண்டு முயற்சிகள் செய்து தோற்றபின், கிருஷ்ணசந்திரனைச் சீண்டிவிட்டு அவனது கவனத்தைத் தன்னிடம் ஈர்ப்பது இயலாத காரியம் என்ற முடிவுக்கு, வேறு வழியின்றி, உதயா வர நேர்ந்தது.

ஆனால், அதற்காக உடனே மனம் ஒடிந்துபோய் விடாமல், அடுத்த முயற்சி பற்றி யோசித்தாள்.

'ஓர் ஆணின் இதயத்தை அவனது வயிற்றின் மூலம் தான் எட்டிப் பிடிக்க வேண்டும்' என்று எதிலோ படித்த ஞாபகம் வந்தது.

உடனே கிருஷ்ணசந்திரனிடம் சென்று, சாப்பாட்டில் அவனுக்கு என்னென்ன அயிட்டங்கள் பிடிக்கும் என்று விசாரித்தாள்.

ஒரே பார்வையில் அவள் மனதைப் படித்து, ''எனக்காக யாரும் மெனக்கெட வேண்டாம். நம் சமையல்காரன்



செய்வதே எனக்குத் திருப்திதான்'' என்று முடித்தான் அவன்.

இவனிடம் வந்து கேட்டேனே என்று தன்னையே கடிந்து கொண்டு, கணவன் அலுவலகம் சென்றபின், காந்திமதிக்கு டெலிஃபோன் செய்து விவரம் கேட்டாள்.

''ஏன்? ஓகோ, உன் புருஷனுக்கு நீயே சமையல் பண்ணிப் போடப்போகிறாயாக்கும்?'' என்று சிரித்து விட்டு, ''கவனமாய்ச் செய்யம்மா. கையைச்சுட்டுக் கொண்டுவிடாதே'' என்ற கவனப்படுத்தலோடு, மகனுக்குப் பிடித்த உணவு வகைகளை விவரித்தார் மாமியார்.

உதயரேகா சமையலில் ஆனா, ஆவன்னா கூடத் தெரியாத கைநாட்டு அல்ல. சித்தி யசோதாவின் நளபாகத்தில் மயங்கித் தானும் சில வகைகள் கற்றிருந்தாள். யசோதாவும் எதையும் மறைக்காமல் நன்றாகவே கற்றுக் கொடுத்திருந்தாள்.

எனவே, காந்திமதி சொன்ன பதார்த்தங்களைச் செய்வது உதயாவுக்கு எளிதாகவேபட்டது.

ஆயினும் கண்ணும் கருத்துமாக வெகு கவனத்துடன் காந்திமதி சொன்னவாறு சோம்புத்தூள் கலந்து எண்ணைக் கத்தரிக்காயைத் தயார் செய்து மதிய உணவுடன் கிருஷ்ண சந்திரனுக்கு அனுப்பிவைத்தாள்.

திரும்பி வந்த 'ஹாட் பாக்' கிட்டத்தட்ட காலியாக இருக்கவும் உதயரேகாவுக்கு ஒரே உற்சாகம். தினம் ஒன்றாகத் தன்கைத் திறமையைக் காட்டலானாள். ஒருநாள் பச்சை மிளகாயும் வெங்காயமும் வதக்கி, தேங்காய்ப்பால் ஊற்றி இறக்கிய தக்காளிக்குழம்பு, ஒருநாள் நவரத்தினக் குருமா, ஒருநாள் புதினா சாதம் என்று தினம் ஒருபுதிய பதார்த்தம் அலுவலகம் சென்றது.





''எப்போதையும் விட அய்யா கொஞ்சம் அதிகம் சாப்பிடுகிறார் அம்மா'' வழக்கமாக அனுப்புவதில் பாதி மீதிவரும். இப்போது முக்கால் பாகம் காலியாகி விடுகிறதே!'' என்று சமையல்காரன் பாராட்டவும், உதயாவுக்குத் தரையில் கால் பாவவில்லை.

அன்றுமாலை வந்த கணவனிடம், ''இன்றையச் சாப்பாடு எப்படி இருந்தது?'' என்று ஆவலுடன் விசாரித்தாள்.

வழக்கம் போலத் தோளைக் குலுக்கி, ''யாருக்குத் தெரியும்?'' என்றான் கணவன்.

திகைத்துப் போய், ''கொ. கொஞ்ச நாட்களாக நீங்கள் நன்றாகச் சாப்பிடுவதாக சமையல்கார நாகராஜ் சொன்னான்... அதனால்தான்... வந்து... சமையல் பிடித்ததா... என்று...'' என்று தடுமாறினாள் மனைவி.

''கொஞ்ச நாட்களாக நான் வீட்டுச் சாப்பாடு சாப்பிடவே இல்லையே. வெளி மாநிலத்திலிருந்து சில கஸ்டமர்ஸ் சென்னைக்கு வந்திருக்கிறார்கள். நான் அவர்களோடு அவர்களோடல்லவா சுற்றிக் கொண்டு இருக்கிறேன்!''

''பி...பின்னே உங்கள் சாப்பாடு?''

''அந்த வங்காளிகளோடு ஓட்டலில்...''

''ச்சு. அதைக் கேட்கவில்லை. வீட்டிலிருந்து தினம் அனுப்புகிற சாப்பாட்டை என்ன செய்கிறீர்கள் என்று கேட்டேன்'' என்று உள்ளூர ஆத்திரத்துடன் கேட்டாள் உதயரேகா.

ரொம்பவும் அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான் அவன். ''யார் கண்டது? ஆபீஸ் பையன் சாப்பிடுகிறான் என்று நினைக்கிறேன்... அல்லது அலுவலகத்தில் யாராவது உணவு கொண்டு வரவில்லை என்றால், அந்தச் சமயம்



நான்வெளியே சென்று விடநேர்ந்தால், என் சாப்பாட்டை அவர்களுக்குக் கொடுத்து விடும்படி ஏற்கனவே சொல்லி வைத்திருக்கிறேன். அப்படியாராவது உண்டிருக்கலாம்'' என்றான் அசட்டையாக.

உதயரேகாவுக்கு குமுறிக் கொண்டு வந்தது. அதென்ன, வெறும் மசாலாவும், காய்கறி; பருப்புமா? அவள்,அவளுடைய கணவனுக்காகப் பார்த்துப் பார்த்து, ஆசையும் பாசமும் கூடக் கலந்து செய்தவையாயிற்றே. அதை எல்லாம் யார்யாரோ சப்புக் கொட்டிச் சாப்பிடுவதா?

''அப்படி மதிய உணவுக்கு வெளியே செல்வது என்றால் வீட்டிற்குத் தகவல் சொல்லிவிட்டுப் போயிருக்கலாமே!'' என்றாள் அவள் எரிச்சலோடு.

அவன் கேள்வியாய் நோக்கவும், ''உங்களுக்கென்று சமைத்து எடுத்து வைத்து அனுப்பி வீணாக்குவானேன்?'' என்றாள்.

''வீணாவானேன்? அதை என்ன, குப்பையிலா கொட்டிவிட்டார்கள்? ஏதோ ஒரு பசித்த வயிற்றுக்குத்தானே போகிறது? என்றான் அவன் சற்றுக் கடுமையான குரலில், கண்டிப்பது போல.

தலையைச் சிலுப்பி, ''உங்களுக்காகவே என்று சமைத்ததை நீங்கள் சாப்பிடவில்லை என்றால் அது வீண்தான்'' என்றாள் அவளும் குரலில் அழுத்தத்துடன்.

''எனக்காகவே என்று சமைத்ததா? பின்னே வீட்டில் மற்றவர்கள் எல்லோரும் என்ன சாப்பிடுகிறீர்கள்? உங்களுக்காக நாகராஜ் எதையும் சமைப்பது இல்லையா? அதென்ன அப்படி ஒரு திமிர்? கூப்பிடு அவனை... டையா...''

அதட்டியவாறு கிருஷ்ணசந்திரன் எழவும் அவன் மனைவி அவசரமாகக் குறுக்கிட்டாள். ''ப்ளீஸ், நான் சொல்வதை முதலில் கேட்டு விடுங்கள். நாகராஜ் எல்லோருக்கும் சேர்த்துதான் சமையல் செய்கிறான். அவன் மேல் ஒரு தப்பும் இல்லை.''

''பின்னே?''

''என்ன பின்னே? உங்களுக்கு என்று தனியே செய்தது நான்தான். உங்களுக்குப் பிடித்தது என்னென்ன என்று அத்தையிடம் கேட்டுத் தயாரித்து அனுப்பினேன். அவ்வளவுதான் விஷயம்'' என்று எரிச்சலோடு போட்டு உடைத்தாள்.

அவள் கற்பனை செய்து வைத்திருந்த காட்சியே வேறு.

'கொஞ்ச நாட்களாகச் சாப்பாடு வெகு ருசியாக இருக்கிறது' என்று கிருஷ்ணசந்திரன், சமையல்காரனைப் பாராட்டுவான்; அசடுவழிய, 'அம்மாதாங்க செய்தாங்க', என்று நாகராஜன் உண்மை கூறுவான்; உடனே கிருஷ்ண சந்திரன்; நமக்காக நம்மனைவி இவ்வளவு செய்கிறாளே என்று ஆசையும் அன்புமாக - ஆசையாக இல்லாவிட்டாலும், பெருமையாகவேனும் நோக்குவான் என்று நினைத்திருந்தாள். ஆனால் அவள் முயன்று செய்ததெல்லாம் கணவன் ஒரு சொட்டு சுவைகூடப் பார்க்க வில்லையே! எல்லாம் வீண்!

ஆனால் இன்னும்கூட முயன்று பார்க்கலாமோ?

ஓரக் கண்ணால் கணவனைப் பார்த்தாள் அவள்.

அவன் தன் வழக்கமான, உணர்ச்சி துடைத்த முகத்துடன் அமர்ந்திருந்தான்.



''வந்து... நாளைக்கு மதியம் வீட்டுச்சாப்பாடு சாப்பிடுகிறீர்களா? அல்லது இரவுக்கு...'' என்று அவள் தொடங்கவும் ''வேண்டாம், உதயரேகா. விட்டுவிடு'' என்றான் அவன் மெதுவாக.

''இதயத்தைக் கைப்பற்ற இப்படி ஒரு வழி இருப்பதாக என் அம்மாவோ, உன் சித்தியோ உனக்குக் கூறியிருப்பார்கள் என்றுநினைக்கிறேன். ஆனால் என் விஷயத்தில் இது சற்றும் பயனற்றது உதயரேகா. எனவே அனாவசியமாய், இந்த எண்ணைக்கத்தரிக்காய், தக்காளிக் குழம்பு, நவரத்தினக் குருமா, புதினா சாதம் என்று ஏதாவது செய்து அனுப்புவதை இத்தோடு நிறுத்திவிடு'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே உதயாவின் கண்கள் அகன்றன.

வியப்பும் மகிழ்ச்சியும் விழிகளில் பரவ, ''அதை எல்லாம் நீங்கள்... நீங்கள்தான் சாப்பிட்டிருக்கிறீர்கள்! அப்படித்தானே?'' என்று உற்சாகத்துடன் வினவியவள், உடனேயே, ''நன்றாக இருந்ததா? உங்களுக்குப் பிடித்ததா?'' என்று ஆவலாகக் கேட்டாள்.

சிறு அமைதியின்பின், ''எல்லாமே சுவையாகத் தான் இருந்தன உதயரேகா. ஆனால் நான் சொல்லுவதைச் சற்றுக் கவனி. என்னைப் பொறுத்த வரையில் என் இதயத்துக்கும் வயிற்றுக்கும் பாலம் எதுவும் கிடையாது. இந்த மாதிரி... ஏன், எந்த வழியிலுமே நீ என்னை அணுக முடியாது. எனவே இதுபோன்ற வீண் முயற்சிகளில் இறங்கி அனாவசியமாக உடம்பை வருத்திக் கொள்ளவேண்டாம்'' என்று நிதானமாக, ஒரு புரியாத குழந்தைக்கு விளக்குவதுபோல, அமர்ந்த குரலில் உரைத்தான் கிருஷ்ணசந்திரன்.



மெய்யாகவே அவளுக்குப் புரியவில்லைதான். ஆனால், இப்போது இதுபற்றிய பேச்சைத் தொடர்ந்து அவனது பிடிவாதத்தை உறுதிப்படுத்த வேண்டாம் என்று தீர்மானித்து, ''இப்போது இரவு உணவு எடுத்து வைக்கச் சொல்லட்டுமா?'' என்று கேட்டாள்.

அவள் கேட்டுக் கொண்டு இருக்கும் போதே, கிருஷ்ணசந்திரன், சட்டென எழுந்தான். ''எனக்கு வேண்டாம்'' என்று தெளிவற்ற குரலில் உரைத்துவிட்டு அவனது அறையை நோக்கி வேகமாகச் சென்று உள்ளே போய்க் கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

இதன் காரணம் தெரியாமல் விழித்தவளுக்கு அவனது நடையின் தடுமாற்றம் மேலும் திகைப்பூட்டியது.

சற்றுமுன் சும்மாதானே பேசிக் கொண்டு இருந்தான்? இப்போது ஏன் குடிகாரன் போலத் தள்ளாடுகிறான்?

என்னவோ அவளை உறுத்தியது.

ஏதோ தெரிந்த விஷயம்; தெரிந்திருக்க வேண்டிய ஒன்று என்கிற அளவில் உணர முடிந்தது.

ஆனால், எவ்வளவுதான் யோசித்தும், அது என்ன என்பது அவளுக்கு அன்று நினைவு வரவே இல்லை.



## 11

கிருஷ்ணசந்திரனின் தடுமாற்றத்துடன் கூடிய நடை, தொடர்ந்து சில தினங்கள் உதயரேகாவின் மனதைக் குழப்பிக் கொண்டே இருந்தது.

மதுவின் போதையினால் தள்ளாட்டம் ஏற்படுவதன் காரணம், அருந்துகிறவரது உறுப்புகளின் மீது மூளைக்குக் கட்டுப்பாடு இல்லாது போவதே என்று அவள் படித்திருக்கிறாள்.

ஆனால், கிருஷ்ணசந்திரன் தடுமாறி நடந்தபோதும், அவனது கால்கள் நிதானம் இழந்து, தன்போக்கில் செல்லவில்லை. அவனது உறுப்புகளின் மேல் அவனுக்குக் கட்டுப்பாடு இருந்தது நன்றாகவே தெரிந்தது. ஆனால்... அவன் நடந்தவிதம்... ஏதோ சுமக்கமுடியாத பாரத்தைத் தலையில் ஏற்றிக் கொண்டு தலைப்பாரம் இங்கும் அங்கும் இழுக்க, சமாளித்து இலக்கை நோக்கிச் செல்கிறவனது நடை.

ஆனால் கிருஷ்ணசந்திரனின் தலையில் எந்தவிதச் சுமையும் இல்லை என்பதால் இது குடியின் தள்ளாட்டமாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள் உதயரேகா.

ஆனால், அதிலும் ஒரு சிக்கல். மதுவை மேலே மேலே அருந்த அருந்தத்தானே போதையும் அதன் விளைவான தள்ளாட்டமும் ஏற்படக்கூடும். இவன் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தவனுக்கு எப்படி இப்படி? அல்லது அவ்வப்போது இப்படியும் இருக்குமா?

கணவன் எந்த நிலையில் முற்றிய, இனி எதுவும் செய்வதற்கில்லை என்கிற நிலையிலா? (அப்படி ஒரு தோல்வியை அவள் ஒருநாளும் ஒப்புக் கொள்ளப் போவ

தில்லை என்பது வேறு விஷயம்) தொடக்க நிலையா? அல்லது இரண்டுக்கும் நடுப்பட்ட நிலையா? இதில் எந்த நிலையில் இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டால் அவனை எப்படி அணுகுவது என்பதைத் திட்டமிட வசதியாக இருக்கும் என்று உதயரேகாவுக்குத் தோன்றியது.

எப்போதோ அறிந்து கொண்டிருக்க வேண்டிய விவரம் போகட்டும்; 'பெட்டர் லேட் தன் நெவர்' என்று எண்ணியபடி மேற்கொண்டு என்ன செய்வது என்று யோசித்தாள்.

குடியைக் குணப்படுத்துகிற மறுவாழ்வு மையம் ஒன்றிற்கு டெலிஃபோன் செய்து கேட்டாள். நீங்கள் பாதிக்கப் பட்டவரை அழைத்து வாருங்கள் பார்க்கலாம் என்றார்கள்.

இந்தக் 'கொம்பேறி மூக்க'னையா?

அது இப்போது நடக்கிற காரியம் அல்லவே என்று யோசித்தவளுக்கு இன்னோர் எண்ணம் உண்டாயிற்று.

அவளுடைய தந்தை வீட்டில் பாத்திரம் துலக்கி வீடு பெருக்கி துடைக்கிறவளுடைய கணவன் ஒரு குடிகாரன் என்பது நினைவு வந்தது. அவ்வப்போது குடிவெறியில் அவன் அடித்தது பற்றிப் புலம்பிக் கொண்டிருப்பாள் கற்பகம்!

இடியா தோன்றியதுமே உதயா கிளம்பிவிட்டாள். வேலையாளை அனுப்பிப் பட்டன்பால் வாங்கிவரச் செய்து, தம்பிக்கும், தங்கைக்கும் பிடித்தமான 'ரசமலாய்' செய்து எடுத்துக் கொண்டு பிறந்த வீட்டுக்கு சென்றாள்.

செல்வதில் சிரமமும் இல்லை.

அன்றைய ஒருநாள் சச்சரவின்பின் அலுவலகம் சென்றதும், டிரைவரோடு காரைக் கிருஷ்ணசந்திரன் வீட்டுக்கு



அனுப்பி விடுவான். அவளும் எங்கே செல்வதானாலும் ஒரு துண்டு சீட்டு எழுதி மாடியில் டி.வி. மேல் பூக்கிண்ணத்துக்கு அடியில் வைத்து விட்டே செல்வாள்.

அதன்படி இன்றும் எழுதிவைத்துவிட்டு சென்றவளுக்கு பிறந்த வீட்டில் பெரும் வரவேற்பு.

கையோடு வாங்கிச் சென்றிருந்த சாக்லேட் பாரைத் தம்பி தங்கை கையில் கொடுத்துவிட்டு, 'ரசமலாயை' ஃபிரிஜ்ஜில் வைத்தாள், ''கொஞ்சநேரம் கழித்துச் சாப்பிடலாமடா'' என்று.

மாதர் மன்றத்து நிகழ்ச்சிகள் பற்றிச் சித்தி பாடமும், ஸ்கூல் விஷயம் பற்றி உடன் பிறந்தோரிடமும் அரட்டை அடித்தாள்.

''அப்பா வருகிற நேரம் காரத்துக்கு ஏதாவது செய்கிறேன். இனிப்புக்குத்தான் நீ ரசமலாய் கொண்டு வந்திருக்கிறாய்'' என்று யசோதா சொல்ல, சிநேகிதன் வீட்டில் படிக்கப் போவதாகச் சொல்லிவிட்டுக் கிரிக்கெட் மட்டையோடு சகோதரிகளிடம் கண்சிமிட்டிவிட்டு சூர்யா கிளம்பினான்.

காபிக் கப்பைக் கழுவப் போட்டுவிட்டு வருகிறேன் என்று தங்கையிடம் சொல்லிவிட்டு உதயரேகா நைசாக நழுவி பின்பக்கம் சென்றாள்.

பின்புறத் தளத்தில் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டு இருந்தாள் கற்பகம். உதயாவைப் பார்த்ததும், வாயெல்லாம் பல்லாக 'வாதாயி!' என்று வரவேற்றாள். ''நல்லா கீறியாம்மா?''

''இம்'' என்று முறுவலித்துவிட்டுக் கற்பகத்திடம் தன் பங்குக்குக் குசலம் விசாரித்தாள் உதயரேகா. அப்புறம் அவளுடைய கணவனைப் பற்றிக் கேட்டாள்.



''அது கெடக்கு விடும்மா. பொழுதுவிடிஞ்சா போது போனா குடியும் அடியுமா அத்தவிடு. நீ எப்பிடிக்கிறே? ஏதாச்சும் விசேசம் உண்டா?'' என்று ஆர்வமாய்க் கேட்டாள் வேலைக்காரி.

வேசாகச் சிவந்து, ''ஏய், என்ன நீ? எங்களுக்குத் திருமணம் ஆகி இன்றும் முழுதாக ஒருமாதம் ஆகவில்லை; அதற்குள் இதென்ன கேள்வி? அதிருக்கட்டும் கற்பகம், உன் கணவன் குடித்தால் அடிப்பான் என்பாயே. சும்மா இருக்கும்போது எப்படி இருப்பான்?'' என்று மேலும் துருவினாள்.

''எம் புருஷன் சொம்மாவே இருக்காதும்மா. முட்ட குடிச்சிட்டு வந்து பொணம் மாதிரியாத் தூங்கும். காலைல பாத்தா 'பே'ன்று உக்காந்திருக்கும். மண்டையிடிக்குது காலு கை. கொடையுது; நாறு மில்லி போட்டாத்தான் சரியாவுமின்னு நேராச் சாராயக்கடைதான். இது பூட்டகேசன்னு நான் வுட்டுட்டேம்மா'' என்று அடுத்த பானையை எடுத்துத் துலக்கத் தொடங்கினாள் கற்பகம்.

சிறு இறுக்கத்துடன், ''அப்படிப் போகும் போது நடையில் தடுமாற்றம் இருக்குமா, கற்பகம்?'' என்று வினவினாள் உதயரேகா.

கேள்வியின் உள்நோக்கம் புரியாமல், தன் போக்கில் புலம்பினாள் வேலைக்காரி. ''அப்பதான்னு என்னம்மா? சதா தள்ளாடம்தான். அன்னைக்குக் குடிச்சிட்டு முள்ளுச் செடிமேல வுளுந்து கெடந்திருக்கு. மேலெல்லாம் முள்ளுகிளிச்சு... தள்ளு தெண்டத்த... உங்கூட்டிலே அல்லாரும் உன்னை நல்லா வச்சுக்கிறாங்களா?''

தலையாட்டிவிட்டு, ''பிள்ளைக்கு ஏதாலும் வாங்கிக் கொடு'' என்று ஒரு பத்து ரூபாயை அவள் கையில் கொடுத்துவிட்டுக் கிளம்பினாள் உதயா.



எப்போதும் தள்ளாட்டமா? கிருஷ்ணசந்திரன் அப்படி இல்லையே? அப்படியானால் அவனுக்குத் தொடக்க நிலையாகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணமிட்ட படியே வந்தவள் உள்ளே அவளைப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்த யசோதாவைக் காணவும் சற்று திகைத்து நின்றாள்.

உடனே சமாளித்து, ''இந்தக் கற்பகம் அதற்குள் என்ன கேள்வி கேட்கிறாள் பாருங்கள் சித்தி...'' என்று சிறு சிணுங்கலோடு உரைத்தாள்.

''கல்யாணமான பெண்ணைப் பார்த்தால் எல்லோரும் அப்படித்தான் கேட்பார்கள். உன் பேச்சைப் பார்த்தால் அப்படி ஏதும் இல்லை என்று தெரிகிறது... உள்ளே வா'' என்று அழைத்துச் சென்று வேலைக்காரியின் காது எட்டாத தூரம் சென்றதும், ''என்ன விஷயம் கற்பகத்திடம் அப்படி என்ன பேச்சு? 'கம்பேரிங் நோட்ஸா?' ஏன் உன் சகல கலா வல்லவனைச் சமாளிக்க முடியவில்லையா?'' என்று கொஞ்சம் குத்தலாகவே கேட்டாள்.

இவளிடம் என்ன சொல்லலாம் என்று உதயரேகா யோசிக்கையிலேயே, ''ஏண்டி, ஏண்டீ உனக்கு இந்தத் தலைவிதி?'' என்றார் ஆற்றாமையுடன்.

''என்ன தலைவிதி?'' என்றாள் உதயரேகா தாராளமாகத் தலையை நிமிர்த்தி. ''அவர் இப்போது குடிப்பதை வெகுவாகக் குறைத்து விட்டார் தெரியுமா? எப்போதாவது ஒருநாள்தான். அதுகூட விரைவிலே நின்று எல்லாம் நன்றாகிவிடும்'' என்றாள் நம்பிக்கையோடு.

''அதுதான் வேலைக்காரியிடம் இவ்வளவு விலாவாரியாக விளக்கம் கேட்டாயாக்கும்! நன்றாயிருக்கிறது எவ்வளவு என்பது தான் உன் கண்ணிலேயே தெரிகிறதே. முன்பிருந்த பிரகாசம் கூடக்காணோம்!''

''ஆமாமாம். முன்பெல்லாம் என் கண்களில் நூறு வாட் பல்பு போட்டிருந்தது. பளிச் சென்று பிரகாசம் கண்கூச வைத்தது. இப்போது நாங்கள் சிக்கனமாய் 'சீரோ' வாட் பல்ப் போட்டு அழுது வடிகிறோமாக்கும் போங்கள் சித்தி. இல்லாததையும் பொல்லாததையும் கற்பனை செய்து கொண்டு.''

''இந்தப் பேச்சுக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை. நிஜத்தைச் சொல்லு. எப்படி இருக்கிறீர்கள்?'' என்று மகளை நேராக நோக்கிக் கேட்டாள் யசோதை.

உதயரேகாவின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கை சற்றும் குறையாத நிலையிலேயே இருந்ததால், ''நன்..றாய்! பிரமாதமாய்!'' என்று உற்சாகத்துடனேயே உரைத்தாள் பெண்.

ஆறுதலும் சந்தேகமும் கலந்த பாவனையுடன், ஒரு சிறு பெருமூச்சு விட்டு, ''சரிவா. உனக்கு பம்பாயில் வாங்கிய சேலையும் சுடிதாரும் எடுத்துத் தருகிறேன்'' என்று மகளை உள்ளே அழைத்துச் சென்றாள் யசோதை.

தந்தை வரும்போதே, ''உடனே கிளம்ப வேண்டும் மந்திரியோடு டின்னர் இருக்கிறது'' என்று அவசரத்திலேயே வந்தார்.

''சித்தியை விட்டுவிட்டுத் தனியாகவா அப்பா, போகிறீர்கள் 'தாஜ்', 'அடையார் பார்க்'கா? விடாதீர்கள் சித்தி. உங்களை விட்டுவிட்டு அப்பா மட்டும் ஃபைவ் ஸ்டார் ஓட்டலில் போய் மொக்குவதா?'' என்று சிரித்தபடியே சிறிய தாயை உசுப்பிவிட்டாள் உதயரேகா.

''மொக்குவதா? அதற்கெல்லாம் கொடுத்து வைத்த புண்ணியவான் மந்திரிதான். அவர் சாப்பிட்டுக் கொண்டே



பேசப்பேச, நான் பாதி மறைந்து நின்று குறிப்புகள் கொடுத்துக் கொண்டே இருக்கவேண்டுமாக்கும்'' என்றார் உலகநாதன்.

''பாதியா? அந்த மந்திரி 'சைசு'க்கு உன் அப்பா காணாமலே போய்விடுவார்'' என்று யசோதா கூற மூவரும் நகைத்தனர்.

''இந்தாருங்கள் உதயா கொணர்ந்தது'' என்று மனைவி எடுத்து வைத்த ரசமலாயைச் சுவைத்தபடி, ''எனக்கு டில்லிக்கு மாற்றல் வரும் போல இருக்கிறது உதி'' என்றார் உலகநாதன்.

''டெல்லிக்கா? மாட்டிக் கொள்ளாதீர்கள் அப்பா. அப்புறம் சித்தியை மறந்தே போவீர்கள்'' என்றாள் மகள்.

''நன்றாய்ச் சொல்லு. நல்ல காலமாய்ப் பிள்ளைகள், வளர்ந்துவிட்டார்கள் அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் வந்து போகிற அங்கிள் யாரம்மா?'' என்று கேட்கிற கதையாகிவிடும்'' என்றாள் யசோதா.

''எதற்கும் அம்மாவும் பெண்ணும் சேர்ந்து கொள்வீர்களே! மந்திரியிடம் முடியாது என்றால் கண்ட இடத்துக்கு பந்தாடிவிடுவார்கள் நினைவிருக்கட்டும்'' என்றார் உலகநாதன்.

இன்னோரன்ன பேச்சுகளில் நேரம் கழிந்துவிட, கூடக் கொஞ்சம் உற்சாகமான மனநிலையிலேயே உதயரேகா வீடு திரும்பினாள்.

கற்பகத்துடைய கணவன் போலக் கிருஷ்ணசந்திரன் ரொம்பவும் கெட்டுவிட வில்லை என்பது பெரும் ஆறுதலாக இருந்தது.



பிறந்த வீடு டெல்லிக்குக் குடி பெயர்வது கூட, ஓரளவு நிம்மதியையே தந்தது. இன்றுபோல, நினைத்தால் போய்ப் பார்க்க முடியாது என்றாலும், அதுவும் இன்றைய நிலையில் நல்லதென்றே தோன்றியது.

அனாவசியமான நடிப்பு, சமாளிப்புகள் தேவையிராது! அப்படியே ரொம்பவும் பார்க்க வேண்டும் போலத் தோன்றினால் காலையில் விமானம் ஏறினால், மிஞ்சிமிஞ்சி இரண்டரை மணிநேரம்தானே?

மனதில் புதிய உற்சாகத்துடன் உதயரேகா தன் பிரச்சினையில் முழுமையாக மனதைச் செலுத்தினாள். கணவனின் கவனத்தை ஈர்க்க பல்வேறு வழிகளை ஆராய்ந்து செயல்படுத்தினாள்.

என்னதான் வயிற்றுக்கும் மனதுக்கும் பாலம் என்று கூறியபோதும், கிருஷ்ணசந்திரன் ரசித்து உண்கிறான் என்று அறிந்ததால் மேலும், மேலும் சமையலில் தன் கை வண்ணத்தைத் தொடர்ந்து காட்டினாள்.

இரண்டு மூன்று தரம் 'அனாவசியமாக அலட்டிக் கொள்ள வேண்டாம்' என்று சாதாரணமாகச் சொன்னவனுக்கு ஒருநாள் அவள் கையை வெட்டிக் கொள்ளவும் மிகவும் கோபம் வந்துவிட்டது. ''உதயரேகா, நீ சமைத்ததைத் தொட்டுப் பாராமல் நான் திருப்பி அனுப்பினால் நாலு முன்னிலையில் உனக்கு அவமானம். அந்த அவமானம் உனக்கு நேராமல் இருக்க வேண்டுமானால் இந்த முயற்சியை இத்தோடு நிறுத்திவிடு'' என்றான் உறுதியான குரலில். ''நீ உலகமகா தியாக சிகரம் என்பதைத் தான் ஏற்கனவே நிரூபித்தாயிற்றே'' என்றான் போகிற போக்கில். கையைச் சுட்டுக் கொண்டாளே என்ற கரிசனம் தான் இந்தக் கோபத்தின் காரணம் என்று பிடிவாதமாக நினைத்துத் தன்னைக் குளிர்வித்துக் கொண்டாள் மனைவி.



நிமிர்ந்தே நோக்காதவன் கண்களில் நிச்சயமாக படும் விதமாக, மாடிப்படி வளைவுகளில் தன் பெரிய வண்ணப்படங்களை மாட்டி வைத்தாள்.

பளிச்சென்ற ஆடையணிகள், பல்வேறு அழகிய வண்ணங்களில் விதங்களில் அணிந்தாள்.

பார்த்தவர்கள் எல்லோரும் பாராட்டிய போதும், முக்கியமான ஒருவன்மட்டும் எதையும் கண்டு கொள்வதாகவே இல்லை.

ஆனால் அவளும் விடுவதாக இல்லை

பிடிவாதமாகக் கணவனிடம் சென்று, ''இந்த உடை எனக்கு நன்றாக இருக்கிறதா'' என்று விசாரித்தாள்.

''நீயும் கண்ணாடியில் பார்த்திருப்பாய்தானே. அனாவசியமாய் என்னைக் கேட்பானேன்?'' என்றான் ஆருயிர்க் கணவன்

'விசுக்'கென்று போய் விடலாம் என்று தோன்றியதை அடக்கிக் கொண்டு, ''பார்த்தேன். ஆனால், அதில் நாம் பார்க்கும் போது நல்லது மட்டும்தானே தெரிகிறது. அதனால்தான் உங்களுக்கு என்ன தோன்றுகிறது என்று கேட்க வந்தேன்'' என்றாள் மனைவி.

''கண்ணாடி பொய் சொல்வது இல்லை'' என்று அடிபோடு உணர்ச்சி துடைத்த குரலில் கூறிவிட்டு, கையிலிருந்த காகிதத்தில் முழுக் கவனத்தையும் செலுத்தினான் கிருஷ்ணசந்திரன்.

அல்லது அப்படிச் செலுத்துவது போலப் பாவனை செய்தான்.

சரியான கல்லுளிமங்கன்! இவனைக் காணாமானா என்று கிராம வாடை அடிக்க அழைப்பதா அல்லது கே.எம். என்று கூப்பிடலாமா? என்று எரிச்சலுடன் எண்ணினாள் உதயரேகா.

மேலும் சில தரம் இவ்வாறு முயன்று தோற்று அலுத்துப் போனாள் உதயரேகா.

இவனை என்ன செய்வது? மேலேயும் கீழேயும், கால் மீட்டர் துண்டுத் துணிகளை அணிந்து கொண்டு 'செக்சி'யாக சினிமாவில் வருகிறமாதிரி முக்கலும் முனகலுமாக நெளிந்து வளைந்து ஓர் ஆட்டம் ஆடி விடலாமா என்றுகூடத் தோன்றியது அவளுக்கு.

ஆனால், அதில் மயங்குவதற்குப் பதிலாக அவளுக்குப் பைத்தியமோ என்று பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடி விட்டால்?

கணவன் அப்படி மிரண்டு ஓடுவதுபோல ஒரு காட்சியை கற்பனை செய்து பார்த்தவளுக்குச் சிரிப்பு வந்தது.

"தனியே இருந்து சிரிப்பவர்களுக்கு ஒரு பெயர் உண்டு" என்றான். அப்போதுதான் உள்ளே வந்து கொண்டிருந்த கிருஷ்ணசந்திரன். அவளைப் பார்த்ததும், சற்றுமுன் அவள் நினைத்ததையே அவன் சொன்னதுமாக உதயரேகாவுக்கு மேலும் சிரிப்பு பொங்கியது.

சில கணங்கள் பார்த்துவிட்டு, "என்னவென்று சொல்லி விட்டுச் சிரிப்பது?" என்றான் கணவன்.

சிரிப்பை அடக்கிக் கொண்டு, "நீங்கள் கேட்டதால் சொல்கிறேன்..." என்று பார்வையில் குறும்புடன் விவரித்தாள் அவள்.



கிருஷ்ணசந்திரனின் கண்களில் சிறு சலனம் தோன்றி உடனே மறைந்தது. லேசாகத் தலையசைத்து, ரொம்பவும் செக்ஸியான உடைதான் 'செக்ஸ்' உணர்வையே சாகடிப்பது. ஆனால் உன் எண்ணப் போக்கின் அடிப்படையே மிகவும் தவறு. உதயரேகா நீ செய்வது எதுவும் என்னைப் பாதிக்காது என்கையில் இந்த யோசனைகளே அனாவசியம் அல்லவா?" என்றான் அவன்.

"ஏன் அப்படி?"

"சொல்வதற்கில்லை என்று முன்பே கூறியிருக்கிறேன்" என்று உறுதியான குரலில் கூறிவிட்டு மாடிப்படி ஏறத் தொடங்கினான் அவன்.

பின்னோடு சென்று, "உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்" என்றாள் உதயா.

"பேசுவதற்கு என்ன இருக்கிறது?"

"ஏதோ இருப்பதால் தானே பேசவேண்டும் என்கிறேன்" என்றாள் அவள் பிடிவாதமாக.

அவன் திரும்பி நின்று அவளை நேராக நோக்கவும், "பாருங்கள், எந்தவித மோசமான நிலைமையையும் சீர்படுத்தி வாழ்வது தானே சிறப்பு? நாமும் நல்லபடியாக வாழமுயற்சிக்கலாமே?" என்று இதமான குரலில் வினவினாள்.

"முடியாது விட்டுவிடு" என்றான் அவன் சுருக்கமாக.

"அப்படி விடக்கூடிய பந்தம் இல்லையே இது மாற்ற முடியாத உறவு ஆயிற்றே!"

"எந்த யுகத்தில் இருக்கிறாய்?" என்றான் அவன் ஏளனமாக. "இந்த யுகத்தில் மாற்ற முடியாதவர்கள் பெற்





றோர் மட்டும்தான். மஞ்சள் கயிற்று மகிமை, தாலிவேலி என்பதெல்லாம் ஐம்பதாண்டு அதிகப் பழசாகிப் போன சமாச்சாரம். எப்போது வேண்டுமானாலும் சொல்லு, விவாகரத்து தருகிறேன். இந்தப் பந்தத்தை அறுப்பதோ, மாற்றி அமைப்பதோ உன் விருப்பம். எனக்கு அணுவளவும் அதில் ஆட்சேபனை இல்லை" என்று கூறினான் கிருஷ்ணசந்திரன் சற்றும் பிசிரற்ற குரலில் தெளிவாக.

## 12

கிருஷ்ணசந்திரன் சொன்ன 'விவாகரத்து' என்ற வார்த்தை உதயரேகாவை மெய்யாகவே அதிரச் செய்துவிட்டது.

அன்று வரையிலும், ஏதோ கோபம், ஏதோ அசட்டுப் பிடிவாதம், எப்படியோ பழகிவிட்ட தீமைகளை விடமனம் இல்லாமை; இதை மாற்ற முயற்சிப்பதால் அவளிடம் ஒதுக்கம். ஆனால், ஒருநாள் இதெல்லாம் மாறி, இன்ப வாழ்வு நிச்சயம் என்ற நம்பிக்கை அவளுக்கு எப்போதுமே இருந்தது. இதற்கெல்லாம் அடித்தளமாக, அவனிடம் அவளுக்கு அன்பு இருக்கிறது என்பதிலும் அவளுக்கு உறுதி இருந்தது.

அதனாலேயே, ஒன்று மாற்றி ஒன்று என்று பல வழிகளிலும் முயற்சிக்கும் உற்சாகமும் இருந்தது.

ஆனால் அவன் அவளை அடியோடு பிரியத் தயார் என்றால் அந்த அடித்தளமான அன்பு அவனுக்கு இல்லை என்றல்லவா அர்த்தமாகிறது. அஸ்திவாரமே இல்லை என்றால் அதன் மேல் என்ன கட்டிடம் எப்படிக் கட்டுவது?



ஒன்றுமே புரியாமல் தலை சுற்றிவிட, "எ...என்ன... நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று தடுமாறினாள் அவள்.

அவளுக்குச் சமாளிக்க அவகாசம் கொடுப்பவன் போலச் சிலவினாடிகள் பேசாதிருந்துவிட்டு, "இது ஒன்றும் உலகத்தில் இதுவரை நடவாதது இல்லை, உதயரேகா. இனி நடக்கக் கூடாததும் இல்லை. ஒரு திருமணம் தவறு என்று உறுதியாகத் தெரிந்த பிறகும் அதை விடாமல் கட்டிக் கொண்டு அழுவது முட்டாள்த்தனம். இருவருக்குமே அது நரகமாகிவிடும். அதைவிட, இருவரும் மனம் ஒத்துப் பேசிப் பிரிந்து விடுவது மேல்" என்றான் அவன். ஏதோ மனப்பாடம் செய்து வைத்ததை ஒப்புவிப்பவன் போலத் தங்குதடையற்று.

அவளுக்கோ என்ன பேசுகிறான் என்ன இப்படிப் பேசுகிறான் என்று தவிப்பும் ஆத்திரமும். "ஏன்? பிரிவதற்காக மட்டும்தான் மனம் ஒத்துப் பேசவேண்டுமா? ஒன்றாய் வாழ்வதற்காக மனம் ஒத்துப் பேசக்கூடாதா?" என்று அவன் வார்த்தைகளையே திருப்பிப் படித்து அவனை மடக்க முயன்றாள்.

"அது சாத்தியம் அல்ல என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்" என்றான் அவன் அசையாமல். "அதனால் நாம் பிரிந்து விடுவது தான் மேல்."

ஒரு பெருமூச்சு எடுத்துவிட்டு, "அக்கினி சாட்சியாக நீங்கள் என் கழுத்தில் கட்டியது இந்த மாங்கல்யம். இதை நான், உயிர் உள்ளவரை பிரிவதாக இல்லை" என்று அறிவித்தாள் உதயரேகா.

"யார் உயிர் உள்ள வரையில்?" என்றான் அவன் ஒரு மாதிரியான குரலில்.

''என் உயிர்...'' என்று தொடங்கியவள், அவனது குரலின் வேறுபாடு மனதில் உறைக்க, ''என்ன பேச்சு இது?'' என்று கோபம் காட்டினாள்.

''உண்மை!'' என்றான் கிருஷ்ணசந்திரன். ஆத்திரத்துடன் முறைத்தவளுக்குப் பதிலாக, ''நம் நாட்டு மக்களின் வாழ்நாள் கணக்கு என்ன தெரியுமா? சராசரி ஐம்பத்தேழு வயது. ஆணுக்கும் அப்படித்தான். பெண்ணுக்கும் அப்படித்தான். எப்படியும் மனைவி சில ஆண்டுகளேனும் சிறியவளாகவே இருப்பதால் முன்பு பெரியார் உரைத்ததுபோல எப்படியும் அறுபடப் போகிற தாலிதானே. இதற்குப் போய் இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பானேன்?'' என்றான் விட்டேற்றியாக.

''உங்கள் சராசரிப்படி எல்லோருமே ஐம்பத்தேழு வயதில் இறந்துதான் ஆகவேண்டும் என்று கட்டாயம் இல்லை, தெரியுமா? எங்கள் சித்தியுடைய அத்தை ஒருவர் - அவரும் சித்தி மாதிரி இரண்டாம் மனைவிதான். அவர்களைவிட இருபது வயது மூத்தவரை மணந்து, எழுபது வயதில் சுமங்கலியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் வெள்ளிவிழா தாண்டி பொன்விழாவும் கொண்டாடினார்கள். என்னை விட நீங்கள் நாலு வயதுதானே மூப்பு? வைர விழாவே கொண்டாட நம்மால் முடியும்...'' சொல்லிக் கொண்டே வந்தவள், கணவனின் முகமும் தோற்றமும் மாறிய விதத்தில் திகைத்தாள்.

கண்ணும் சிவந்து தகதகவென்று.... இதேபோல முன்பும் ஒருதரம் அவன் தோற்றமளித்தது உதயாவுக்கு உடனே நினைவு வந்தது.

அப்போதும் இப்படித்தான். ஏதோ நெடுங்காலம் அவனோடு வாழ்வது பற்றிய பேச்சின் போது தான் இப்படிச் சிவந்தான்.



ஏன்? நீண்டநாள் அவளோடு வாழ்வது என்றால் வெறுப்பாக இருக்கிறதா? மாட்டிக் கொண்டோமே என்று கோபம் வருகிறதா? அதனால்தான் மணவிலக்கு தர முன் வந்தானா?

யோசிக்க யோசிக்க, உதயரேகாவின் மனம் மிகவும் சோர்ந்து போயிற்று. அவள் நினைத்தது எல்லாம் தப்பு. அவனுக்கு அவளிடம் நேசம் இருப்பதாக நினைத்தது முழுத்தவறு. அவனைத் திருத்தி அவனோடு உன்னதமாய் வாழ எண்ணியது இமாலயப் பிழை.

''நீ சொல்வது மிக அபூர்வமாய் அமைந்த விதிவிலக்கு. பொது நியதி அது அல்ல. ''அதனால்...''

''அதனால் என்ன? இதைக் கழற்றி உங்கள் கையில் கொடுத்துவிட்டு, இங்கிருந்து வெளியேறச் சொல்லுகிறீர்களா? என் உயிருள்ளவரை, அது நடக்காத காரியம். நான் உங்களுக்கு விவாகரத்து தரப்போவதும் இல்லை; நானாக மணவிலக்கு கோரப்போவதும் இல்லை. உங்கள் மனம் மாறினால் சரி; இல்லாவிட்டால் 'என் வாழ்நாள் முழுவதும் இப்படியே இருக்கத்தயார்' என்றவள், சட்டெனத் திரும்பி நடந்து வெளியே மொட்டை மாடிக்குச் சென்று நின்றாள்.

முதல் தடவையாக, கணவனோடு பேசும்போது அவளாக இடையில் விலகிச் சென்றிருக்கிறாள், அசட்டுத்தனமாக வாழ்க்கையை அழித்துக் கொண்டு விட்டேனோ என்கிற சந்தேகமும் முதல் தடவையாக அப்போதுதான் அவளுக்குத் தோன்றியிருக்கிறது!

சந்தேகம் என்று ஒன்று தோன்றியதுமே அது சரிதான் என்பதற்கான காரணங்களும் மளமளவென்று தோன்றத் தொடங்கிவிடுகின்றன.



முதலாவதாக அவன் பெரும் நம்பிக்கை வைத்தது, பண்ணை வீட்டில் இரவில் அவனது பார்வையிலும் சிலிர்ப்பிலும்தான். ஒருவேளை அன்று அந்த இரவு நேரத்தில் அவன் பாலுணர்வைத் தூண்டக்கூடிய புத்தகம் எதையேனும் படித்துக் கொண்டு இருந்திருக்கலாம். அந்த வேகத்தில் உணர்ச்சிகளைப் பிரதிபலித்திருக்கலாம். ஏனெனில், அவனே உடனேயே அவளை விலக்கி நிறுத்தவில்லையா? யார் யாரோ பெண்களுடன் அவனுக்குப் பழக்கம் என்றார்களே. அப்படிப்பட்டவன், அன்று அவளை ஒதுக்கியதிலிருந்தே, அவளிடம் அவனுக்குக் காதல், காமம் என்று எந்த மண்ணாங்கட்டியும் இல்லை என்பதைப் பறை சாற்றவில்லையா?

எத்தனை தரம் திருமணத்தை நிறுத்தச் சொல்லிக் கோரினான்? அப்போதெல்லாம் அவளுக்கு ஏன் புரியவில்லை?

மனைவியிடம் கொண்ட அன்பினால் கிருஷ்ணசந்திரன் செய்ததாக உதயரேகா முன்பு எண்ணியன எல்லாம் அசட்டுத்தனமாக வாழ்வைப் பாழடித்துக் கொண்ட ஒரு முட்டாள் பெண்ணின் மேல் கொண்ட பரிதாபத்தினால் இட்ட பிச்சைகளாகவே இப்போது நிச்சயம் ஆயின.

இப்படி வெறுப்பவனின் கவனத்தைக் கவருவதற்காகச் செய்த வேலைகளையும் அலங்காரங்களையும் எண்ணிப் பார்க்கையில் உதயரேகாவுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

எப்படி அருவருத்திருப்பான்! வேண்டாம் வேண்டாம் என்றதன் காரணமெல்லாம் இப்போதல்லவா புரிகிறது. ஆனால், கண்கெட்டபிறகு செய்கிற சூரிய நமஸ்காரமாய், இப்போது புரிபட்டு என்னலாபம்? அடுத்தவர்களுக்காக



- அவர்கள் மிகவும் பிரியத்துக்கு உகந்தவர்களே என்றபோதும், அவர்களுக்கு நன்மை செய்வதாக எண்ணி உதயரேகா தன் வாழ்வை நாசமாக்கிக் கொண்டது மட்டுமே மிச்சம்!

இனி இந்தச் சிக்கலை விடுவிக்க என்ன செய்யக்கூடும்! உதயாவின் இந்த இருபத்திரண்டு வயது வாழ்வில், இனி என்ன செய்வது என்று அவள் மருண்டதே கிடையாது.

ஏமாற்றங்கள், வருத்தங்கள், இழப்புகள் இதற்கு முன்னும் அவள் வாழ்வில் நேர்ந்தது உண்டுதான். ஆனால், அடுத்து என்ன என்று யோசித்து, எதையாவது செய்யத் தொடங்கிவிடுவாள். ஆனால் இன்றோ யோசிக்க யோசிக்க, ஒன்றுமே புரியாத மலைப்புதான் பூதாகாரமாய் வளர்ந்தது.

இப்படி நினைக்கவில்லையே! நினையாமல் போனேனே என்று அதே நினைவாய், வேதனை ஒருபுழுவாய் உள்ளே குடைந்தது. வெளியே சாதாரணமாக இருப்பதுபோலக் காட்டிக் கொண்டாலும், உதயாவின் பேச்சும் சிரிப்பும் தானாகக் குறைந்து போயிற்று.

பொதுவாக வீட்டில் கிருஷ்ணசந்திரன் தானாகப் பேச்சைத் தொடங்கி வார்த்தையாடுவது கிடையாது. கலகலவென்று இருப்பது உதயாதான். அவள் நத்தையாய் ஒடுங்கவே, வீட்டில் பெரும்பாலும் நிசப்தமே நிலவியது.

மனைவியின் மாற்றத்தைக் கிருஷ்ணசந்திரன் கவனிக்கவே இல்லையோ, அன்றிக் கவனித்தும் வழக்கம் போலத் தோளைக் குலுக்கிவிட்டு அக்கறையற்று சென்றானோ உதயா அறியாள். இரண்டாவதாகத் தான் இருக்கவேண்டும் என்பது அவளது வருத்தமான ஊகம்!

பொதுவாக, அடுத்தவர் முன்னிலையில் முகபாவனையில் உதயரேகா கவனமாகவே இருந்தாள். அவளது கவனத்தையும் மீறி, அவளது இடைவிடாத மறுகலை அவள் முகத்தில் உணர்ந்து, யசோதா மகளிடம் கேட்டு விட்டாள், ''என்னடி, முகம் வாடித் தெரிகிறதே!'' என்று.

உதயரேகா பதில் கூறுமுன், ''ஏன் உங்களுக்குள் என்ன? என்ன தகராறு? என்னம்மா?'' என்று பரபரத்தாள்.

இவளிடம் சொல்லி, மடியில் முகம் புதைத்து, சற்று நேரம் அழுது தீர்த்தால் கொஞ்சமேனும் ஆறுதல் கிட்டக்கூடுமோ என்று ஒருகணம் உதயாவுக்குத் தோன்றியது.

ஆனால் பெறாவிட்டாலும் யசோதாவுக்குத் தாய்மனம். மகளின் வேதனை தெரிந்தால் அவளும் வருந்துவாளே! ஏற்கனவே அறியாத்தனத்தால் மடத்தனமாக அவளை நோகடித்தது போதாதா?

மனதை மறைத்து, முத்துப் பற்களைக் காட்டிப் பளீரென ஒரு புன்னகை செய்தாள். ''இல்லாததையும் பொல்லாததையும் கற்பனை செய்வதில் உங்களுக்கு நிகர் நீங்கள் தான் சித்தி!'' என்றவள் யசோதா ஐயமாய் நோக்கவும், ''வீட்டின் அலங்காரம் உன் விருப்பம்போல மாற்றிக் கொள் என்று உங்கள் மாப்பிள்ளை எனக்கு அனுமதி கொடுத்திருக்கிறார். அவர் மெச்சும் வண்ணம் எப்படிச் செய்வது என்று அதே யோசனையாய் இருக்கிறேனா? உங்களுக்கு என் கண்ணில் 'லைட்' எரியாதது போலத் தெரிகிறது!'' என்று மீண்டும் நகைத்து, சிற்றன்னையைச் சமாளித்து அனுப்பி வைத்தாள். யசோதா சென்றபிறகு சற்றுநேரம் தீவிரமாகச் சிந்தனை செய்தாள்.

அடுத்து காந்திமதியா? சித்தியைப் போலவே மாமியாரும் உற்று நோக்குகிறவர்தான். தாய்மாருக்கே உரிய நோக்கு.



இப்படி ஒவ்வொருவராக துக்கம் விசாரிக்க, அவளது முகம் அழுது வடிவதல்லவா காரணம்? அப்படி அழுது வடிய இப்போது என்ன பெரிய இழப்பு நேர்ந்து விட்டது!

கணவனிடம் காதலை எதிர்பார்க்க முடியாது. அவ்வளவுதானே? இந்தக் காதல் இல்லாமல் உலகத்தில் எவ்வளவோ பேர் சந்தோஷமாக இருக்கவில்லையா?

டி.வி. முன் உட்கார்ந்தால் இருபத்து நாலு மணிநேரத்துக்கும் பொழுபோக்கு இருக்கிறது.

அது வேண்டாம் என்றால் உருப்படியாகச் சமூக சேவை செய்யலாம். நலிந்தோருக்கு உழைப்பதற்காகத் திருமணம் செய்து கொள்ளாமல் எத்தனை பேர் வாழ்வையே அர்ப்பணித்திருக்கிறார்கள்!

மக்கள் சேவை என்ன, கலைச் சேவைக்காகக் கூடத் தான் எத்தனையோ பேர் என்னென்னவோ தியாகம் செய்திருக்கிறார்கள்.

ஆய கலைகள் அறுபத்து நான்கில் அவளும் தான் எத்தனையோ கற்றிருக்கிறாளே! முக்கியமான கலை - மன்மதக்கலையை மட்டும் கொஞ்சமும் பயிலவில்லை. பயிலத் தோன்றவில்லை. சொல்லித் தெரிவது இல்லை மன்மதக்கலை என்று கேள்விப்பட்டிருந்தது ஒருகாரணம். அந்தக் கலையைக் கணவனிடம் கற்பதே முறை என்று தோன்றியது அடுத்தது. ஆனால்...

மீண்டும், ஏக்கத்துடன் கணவனிடம் ஓடிய மனதைக் கட்டுப்படுத்தி நடப்புக்குக் கொணர்ந்தாள்.

சற்று யோசித்துவிட்டு, பிறந்த வீடு சென்று வீணை எடுத்து வந்து வாசித்தாள். பாடினாள், டேப்பைப் போட்டுக் கொண்டு ஆடினாள்.



எதிலும் மனம் முழுமையாக லயிக்காதபடியால் திருப்தியற்று, அன்றையப் பத்திரிகையைப் சிரத்தையற்றுப் புரட்டியபோது ஒரு விளம்பரம் அவளது கவனத்தைக் கவர்ந்தது.

அது ஓர் ஓவியப் போட்டிக்கான விளம்பரம்! இன்னும் இருவாரங்களில் போட்டிக்குரிய படத்தை முடித்துக் கொடுக்க வேண்டும். மனித உணர்வுகளைப் பிரதிபலிக்க வேண்டுமாம்.

அன்றே சென்று, கான்வாஸ், வண்ணங்கள், பிரேம், ஸ்டாண்டு, தூரிகை என்று தேவையானவற்றை வாங்கி வந்து அவளது அறையை நிரப்பினாள்.

சற்றுநேரம் யோசித்து, அவ்வப்போது தோன்றிய சில கருத்துக்களுக்கு வரிவடிவம் கொடுத்து, பென்சிலால் வெறும் கறுப்புக், கோடுகளாகச் சிறிய அளவில் வரைந்தாள்.

வரைந்தவை அனைத்தையும் தரையில் பரப்பி வைத்துப் பார்த்துவிட்டு அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதைக் 'கான்வாசி'ல் வரையத்தொடங்கினாள்.

ஒருவாரம் - பெயருக்கு உண்பது உறங்குவது தவிர முழு நேரத்தையும் சித்திரத்துக்காகவே செலவிட்டு ஒருவழியாய் ஓவியத்தை முடித்துவிட்டு பார்த்துப் பார்த்து வரைகையில் மனப்பாடமாகி விட்டப் படத்தைப் போட்டிக்கு அனுப்புமுன் கடைசியாக ஒருதரம் சரி பார்த்தபோது உதயரேகாவின் விழிகளில் நீர்மல்கியது.

அன்றிலிருந்து பதினைந்தாம் நாள் மதியம் தாண்டி கிருஷ்ணசந்திரனின் அலுவலக மேஜையில் இருந்த அவனது நேரடி ஃபோன் ஒலித்தது.



ரிசீவரை எடுத்துக் காதில் வைத்தால் அவனுடைய தங்கையின் குரல் பயந்து நயந்து, ''அ...அண்ணா...'' என்று அழைத்தது.

யார் என்று அறிந்ததுமே ரிசீவரை வைத்து விடப்போனவனைத் தங்கையின் குரல் தடுக்க, ''என்ன விஷயம்?'' என்று அதட்டினான்.

## 13

கிருஷ்ணசந்திரன் உடனே ரிசீவரை வைத்து விடவில்லை என்பதே வசுமதிக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது. வழக்கமான கடுமையும் சற்றுக் குறைவாகத் தோன்றவும், வாய்ப்பை விட்டுவிடாமல், ''ஒரே ஒரு சின்ன உதவி செய்யவேண்டும், அண்ணா...'' என்று மிகவும் பவ்வியமான குரலில் தொடங்கினாள்.

''என்னது? அங்கே இங்கே காரை எடுத்துக் கொண்டு உனக்காக அலைவது என்றால் என்னால்முடியாது'' என்றது அண்ணனின் கறார்க்குரல்.

''அய்யய்யோ அதெல்லாம் இப்போது உங்களிடம் கேட்கக்கூடாது என்று எனக்குத் தெரியாதா அண்ணா? ஒரு சிறு யோசனை மட்டும். அதுவும் எனக்காக இல்லை. அண்ணிக்காகத்தான்...''

''அண்ணிக்கு என்ன?'' என்று மீண்டும் இடை வெட்டினான் அண்ணன்.

''அண்ணிக்கு என்ன பிடிக்கும் என்று... அண்ணிக்குப் பரிசு வாங்கவேண்டும் இல்லையா? யோசித்துப் பார்த்தால், அண்ணிக்குப்பிடித்தமானதாக அதேசமயம் அண்ணியிடம்

இல்லாததாக என்று எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதனால் புதிதாக ஏதாவது வாங்கவேண்டும் போல இருந்தால் அண்ணி உங்களிடம் சொல்லியிருப்பார்கள் இல்லையா? அப்படி ஏதாவது இருந்தால் வாங்கிக் கொடுக்கலாமே என்று...''

அவனுக்கும் எதுவும்... ஏன், எதுவுமே தெரியவில்லை. அவன் மனைவிக்கு என்ன பரிசு வாங்க வேண்டும் என்பது மட்டுமில்லாமல், அந்தப் பரிசை இப்போது ஏன் வாங்க வேண்டும் என்பது கூடப் புரியவில்லை. உதயரேகாவின் பிறந்தநாள் இப்போதைக்கு இல்லை. திருமண நாளைக்கோ இன்னமும் பலமாதங்கள் இருந்தன. அப்போது... அந்தநாள் வரும்போது...

சட்டெனத் தலையை உலுக்கிவிட்டுக் கொண்டான் கிருஷ்ணசந்திரன். தங்கையிடம் தன் அறியாமையைக் காட்டிக் கொள்ள மனமின்றி, ''உதிக்கு என்ன தேவை என்று கண்டுபிடித்துக் கொடுப்பது கஷ்டம். அதைவிட, எந்தக் காரணத்திற்காகக் கொடுக்கவேண்டும் என்பதை வைத்து யோசிப்பது நல்லது. கொஞ்சம் பொறு'' என்றவன் சில வினாடிகள் ரிசிவரின் வாயை மூடிக் கொண்டு இருந்துவிட்டு, மீண்டும் கையை எடுத்து, ''அதுபோலச் செய்யுங்கள்'' என்று யாரிடமோ உத்திரவிடுவது போலப் பாவனை செய்துவிட்டு, ''நீ என்னவோ... எதற்காகவோ வாங்க வேண்டும் என்றாயே. இங்கே வேலையில் மறந்துவிட்டேன். திரும்பவும் சொல்'' என்றான்.

சற்றும் சந்தேகப்படாமல் அண்ணனின் வலையில் வசுமதி விழுந்தாள். ''அதுதான் அண்ணா, அண்ணிக்குப் பரிசு. 'இந்திர விழா' கலைப்போட்டியில் அண்ணி அனுப்பிய சித்திரத்துக்கு முதல்பரிசு கிடைத்திருக்கிறதல்லவா?



அதைப் பாராட்டி அண்ணிக்கு ஏதாவது கொடுக்கவேண்டும் என்று எனக்கு ஆசை...''

சித்திரமும் வரைவாளா அவனுடைய மனைவி! அதுவும் போட்டியில் முதல் பரிசு வாங்கும் அளவுக்கு!

உடனே முகம் மாறிவிட, ''படம் வரையத் தேவைப்படும் பொருட்களையோ, அலங்கார சாதனங்களையோ வாங்குவது அவ்வளவு சரியில்லை. அதைவிட, சித்திரங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்காக உருளை வடிவில் பலவேறு நீளங்களில் அழகான டப்பாக்கள் கிடைக்கின்றன. அதில் ஏதாவது அழகான வேலைப்பாடு உள்ளதாக வாங்கிக் கொடுக்கலாம். இனி வைத்து விடு. எனக்கு வேலை இருக்கிறது'' என்று முடித்து, பதிலுக்குக் காத்திராமல், ஒரு 'பை' கூடச் சொல்லாமல் ரிசீவரைக் கிடத்தினான் கிருஷ்ணசந்திரன்.

சற்றுநேரம் ஜன்னல் வழியே தெரிந்த வானத்தை வெறித்தான். டெலிஃபோனை எடுத்து சிலபேரோடு பேசினான். தலைமை நிர்வாகியை அழைத்து, அன்று சற்று சீக்கிரமாகவே கிளம்பப் போவதால் மற்றவற்றை அவரே கவனித்துக் கொள்ள வேண்டும் என்றுகூறி, கவனிக்க வேண்டுவன பற்றிய விவரங்களையும் உரைத்துவிட்டுக் கிளம்பினான்.

கிருஷ்ணசந்திரன் வீட்டை அடைந்தபோது அவன் மனைவி மொட்டை மாடியில் படுமும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்தாள். தோட்டவேலை. ஏதோ நர்சரியிலிருந்து நிறையச் செடிகள் வாங்கி வந்திருந்தாள் போலும்.

மண்ணும் உரமும் நிரவி, நிரப்பப்பட்டிருந்த பலதொட்டிகளில் செடிகள் நடப்பட்டிருந்தன. மேலும் அருகில் கிடந்த சில செடிகளைச் சீராக நட்டுக் கொண்டிருந்தாள் அவள்.



சில நாட்களாக உதயரேகா கண்ணிலேயே படாதிருக்கவும், 'விவாகரத்து' அதிர்ச்சி, அறைக்குள்ளேயே கிடக்கிறாள் என்று தான் கிருஷ்ணசந்திரன் எண்ணியிருந்தான்.

ஆனால், அறைக்குள்ளேயும், ஓய்ந்து கிடக்காமல் உருப்படியான வேலைதான் செய்திருக்கிறாள்! ஓவியம் முடிந்ததும் தோட்டம் திட்டமிட்டுச் செய்கிறாள்.

பாதியளவுக்குப் பச்சை வண்ண, ஒளி ஊடுருவும் ஓட்டுக் கூரையும், மீதிவெறும் வெளியாகவும் கிடந்த இடம். இந்தச் சிறு செடிகள் வளர்ந்தால் இந்த வெற்றுமாடி ஒரு சோலை வனமாகும். கீழே வைத்தால் அதுவும் தோட்டக்காரன் கவனிப்பில் அடங்கிவிடும். எனவே அவளே செய்வதற்காக இங்கே செய்கிறாள்! சும்மா, எதையாவது வளவளப்பவள் இவற்றைப் பற்றி ஒருவார்த்தை அவனிடம் மூச்சுவிடவில்லையே! அன்றையப் பேச்சு மிகவும் அதிகமாகத்தான் பாதித்து விட்டதா?

செடிகளை நட்டு முடித்த உதயரேகாவுக்குத் தொட்டிகளின் வரிசையில் திருப்தி ஏற்படவில்லை. சில பெரிய தொட்டிகளை இடம் மாற்றிவைக்க வேண்டும் என்று குனிந்து தூக்க முயன்றவள், ''பொறு, பொறு தூக்காதே'' என்ற கணவனின் குரலில் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அருகில் வந்து, ''இவ்வளவு பெரிய தொட்டியை உன்னால் தூக்கமுடியாது. எங்கே வைக்க வேண்டும் சொல்லு. நான் தூக்கி வைக்கிறேன்'' என்றான் கிருஷ்ணசந்திரன்.

பெரிய உதவிதான்! நெஞ்சில் ஓங்கிச் சம்மட்டியால் அடித்து இமயத்தையே அதன்மேல் தூக்கிவைத்துவிட்டு

21630



இந்தத் தொட்டியைத் தூக்குவதில் உதவி செய்ய வருகிறானாக்கும்!

''பரவாயில்லை... நானே பார்த்துக் கொள்வேன்'' என்றாள் அவள் செடியைப் பார்த்தபடி.

''இதை எல்லாம் வேலையாட்களை வைத்துச் செய்வதற்கென்ன? நீ போய் இதை எல்லாம் தூக்கிக் கொண்டு...'' என்று எரிச்சல் காட்டினான் கிருஷ்ணசந்திரன்.

''இவ்வளவு நேரம் அவர்கள்தான் செய்தார்கள். அடுக்கியதில் இந்த ஒருவரிசை மட்டும் மாற்றவேண்டும் போலத் தோன்றியது. அதனால்தான்... பரவாயில்லை. நாளைக்கு அவர்களையே செய்யச் சொல்லிக் கொள்வேன்'' என்று பேசினில் கைகளைக் கழுவினாள் உதயரேகா.

'பேசின்' அருகே தாங்கியில் கிடந்த டவலில் அவள் கை துடைக்கவும், ''வாழ்த்துக்கள்'' என்றான் கிருஷ்ணசந்திரன் அமைதியாக.

நிமிர்ந்து பார்த்துவிட்டு, முறைப்படி ''நன்றி'' உரைத்துவிட்டு, ''வசு வேலை போல'' என்றாள் அவள் உணர்ச்சியற்ற குரலில்.

''ஆமாம். ஆனால் அவளுக்கு முன் உன்மூலம் எனக்குத் தெரிந்திருக்க வேண்டாமா?'' என்று கேட்டான் கணவன்.

கையை மீண்டும் மீண்டும் அழுந்தத் துடைத்தபடி, ''அக்கறை இல்லாதவர்களிடம் போய் எப்படிச் சொல்வது? எதற்காகச் சொல்வது?'' என்றாள் உதயரேகா பதிலுக்கு.

அருகில் வந்து, அவள் கையிலிருந்த துவாலையை வாங்கி, மீண்டும் தாங்கியில் தொங்கவிட்டுவிட்டு, ''நாளை

மாலை நீ வேறு எங்காவது போகவேண்டியிருக்கிறதா?'' என்று வினவினான் அவன்.

''நாளை மாலைதான் பரிசளிப்பு'' என்றாள் அவள் சுருக்கமாக.

''அது ஏழு மணிக்கு முடிந்து விடுமாமே. அதன் பிறகு?'' வேறு எதுவும் இல்லை என்று அவள் தலையசைக்கவும், ''அப்படியானால் அதன்பின் ஓர் இடத்துக்கு என்னோடு வரமுடியுமா? அங்கேயே சாப்பிட்டு விட்டு வரலாம்.''

இன்றைய விவாகரத்து குண்டை நினைக்கையில் உதயரேகாவுக்கு மறுக்கவேண்டும் போல இருந்தது. ஆனால் முதல் தடவையாக, அவனாக அழைக்கையில் மறுக்கவும் அவளுக்கு மனம் வரவில்லை. எனவே சம்மதமாக ''ஏதேனும் பார்ட்டியா? என்னமாதிரி உடை, நகை அணிய வேண்டியிருக்கும்?'' என்று விசாரித்தாள்.

''விழாவுக்கு அணிவதே பொருத்தமாக இருக்கும்'' என்றான் கிருஷ்ணசந்திரன்.

பிரமாதமாகக் கண்ணைப் பறிக்கும் விதமாக ஆடை அணிமணிகள் புனைந்து அலங்காரம் செய்து கொள்ள வேண்டும் போல உதயரேகாவுக்கு ஆசையாக இருந்தது. 'பார்ட்டி' முழு நேரமும் அருகிலிருந்து கணவன் காண்பான் அல்லவா?

ஆனால், பரிசளிப்பு விழாக்களின் போது பட்டும் பொன்னுமாக மிகையாக அலங்கரித்துக் கொண்டு வருகிறவர்களைப் பார்க்க அவளுக்கே எப்போதுமே பிடிக்காது. அவளே அந்த அசட்டுத்தனத்தை எப்படிச் செய்வது?



சிறு மன அலை பாய்தலின் பின், சற்று அடக்கமாகவே அலங்கரித்துக் கொண்டாள். ''இளநீல வண்ணத்தில் அடர் நீலக்கரையில் ஜரிகைகள் வேய்ந்த ஷிபான் சேலை; பொருத்தமான சட்டை, காதணி, கழுத்தணிகள், முகம் திருத்துவதில் மட்டும் அதிக நேரம் செலவு செய்துவிட்டு, 'பெயின்ட்' அடித்ததுபோல இருக்கிறது என்று அதையும் கழுவி நீக்கி விட்டு மீண்டும் வழக்கமான முறையில் அலங்காரம் செய்து கொண்டாள்.

அரசியல் தொடர்புள்ளவர் யாரும் கலந்து கொள்ளாத தாலோ என்னவோ விழா குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கி, குறிப்பிட்ட நேரத்தில் நிறைவடைந்தது. புகுந்த, பிறந்த வீடுகளில் அனைவருமே வந்திருந்தது உதயரேகாவுக்கு மகிழ்ச்சியளித்தது.

படத்தின் பிரதி ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு அவளது அசலை அழகாகப் 'பாக்' செய்து விழாக்கமிட்டி, உதயாவிடமே கொடுத்து விட, கிருஷ்ணசந்திரன் அவளிடமிருந்து அதை வாங்கி மணிவாசகத்திடம் கொடுத்து அனுப்பினான்.

எல்லோரும் கிளம்பிச் சென்றுவிட உதயரேகாவை அழைத்துக் கொண்டு நிதானமாகக் கிளம்பினான் அவள் கணவன். அவன் அழைத்துச் சென்ற இடமோ ஆனந்தமான ஆச்சரியமாக அவளைப் பிரமிக்க வைத்தது.

ஒரு பெரிய ஓட்டலின் தோட்டத்தில் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒருபுறமாய் ஆள் உயரத்து அகல போர்டில் அடர் நீலநிற வெல்வெட் பின்னணியில் மண நாள் வாழ்த்துக்கள் என்று பொன் எழுத்துக்கள் ஒளிர, இருபக்கத்துக் குடும்பங்களும் முழுமையுமே அங்கே இருந்தன. மணிவாசகமும் இருந்தான்.



உற்சாக ஆரவாரத்துடன் எதிர்கொண்ட உறவினருக்கு உரிய விதமாய்ப் பதில் அளித்தவளை அந்த உற்சாகம் தொற்றிக் கொள்ளவில்லை. மற்றவர் பிரமிக்க இந்த ஏற்பாடு செய்தவன் தருவதாகச் சொன்ன 'மணவிலக்கு' அவள் மனதைவிட்டு அகல மறுத்தது. ஊராரை ஏமாற்றவே இந்த ஏற்பாடு என்று தான் எண்ணத் தோன்றியது. ஆனால், நாளை இந்த உறவினரிடம் அந்த விவாகரத்தை கிருஷ்ணசந்திரன் எப்படி விளக்குவான்?

உள்ளே அடித்த புயலை வெளிக்காட்டாமல் இன்முகத்துடனே வளைய வந்தாள் உதயரேகா.

உணவுத் தட்டுகள் அகற்றப்பட்டு, பழச்சாறும், ஐஸ்கிரீமும் வந்தபோது, மணிவாசகம் எழுந்தான். வாழ்த்து எழுதப்பட்ட போர்டின் முன் ஒரு தாங்கியை அமைத்து, அதில் பரிசு பெற்ற படத்தை அதன் உறையை அகற்றி மாட்டினான்.

பழத்துண்டுகளும், ஐஸ் கிரீமுமாக அவரவர் விரும்பிய வண்ணம் கலந்து எடுத்துக் கொண்டு, அதைச் சுவைத்தபடியே, எல்லோரும் படத்தின் முன் குழுமினர்.

காலைச் சிவப்புமாறி, கீழ்வானம் பொன்நிறம் கொண்டுவிட்ட நேரம். தன்னை மூடி மறைக்கும் கருமேகத்திரளை மீறிக் கொண்டு ஆதவன் வானில் எழும்ப முயற்சிக்கிறான். இங்கே பூமியில் ஒரு பாத்திநிறைய சூரியகாந்தி மலர்கள், சூரியனின் வரவுக்காக ஏக்கத்துடன் எட்டிப்பார்க்கின்றன. பூக்களின் இதழ்கள், காம்பு முதலியவற்றை உதயரேகா வரைந்திருந்த விதம், என்னவோ அந்தச் சூரிய தரிசனத்திற்காகவே பிறந்து வளர்ந்து, மலர்ந்து அதைக் காணாமல் அந்த மலர்கள் ஏங்கிக் கொண்டிருப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. கூடவே தூரத்தில் வரிவடிவமாக



ஒரு பெண்ணும், ஐயோ இன்னமும் காணாமே'' என்பது போலக் கழுத்தை நீட்டி எட்டிப் பார்க்கிறாள் என்றது படம்.

இலையின் வரிகள், பூவின் நடுவே மகரந்தப் பைகள், மொட்டுகள், தரை என்று சின்னச் சின்ன விஷயங்கள் கூடக் கவனித்து வரையப்பட்டிருப்பதைச் சிலாகித்தார் செல்வரங்கம்.

''எங்கள் அண்ணி எப்போதும் அப்படித்தான். கல்லூரியில் எங்கள் 'டீம்' விளையாடப் போகும்போது, தண்ணீர், குளுகோஸ் எல்லாம் கவனமாய் எடுத்து வைப்பார்கள். எல்லோரும் அண்ணி காப்டன் என்பதாலேயே எங்கள் 'டீம்' லக்கி என்பார்கள்'' என்று பெருமையடித்தாள் வசுமதி.

''எங்கள் அக்கா சின்ன வயதிலிருந்தே அப்படித்தான் எனக்கு 'ரெக்கார்டு' நோட்டில் படம் எல்லாம் வரைந்து தருவாள் தெரியுமா? இதுமாதிரி அழகாய் வரைவாள்'' என்று பெருமையால் தன் பங்கு உரிமையை நிலைநாட்டினாள் பானுரேகா.

எல்லோரும் ஒவ்வொரு விதமாய்ப் பாராட்ட, படத்தை வெறித்து நோக்கிய கிருஷ்ணசந்திரன் மட்டும் எதுவுமே சொன்னான் இல்லை.

மணிவாசகம் அதைக் கவனித்து விட்டு, நண்பனின் தோளில் எச்சரிப்பதுபோலக் கைவைக்க, ஒரு பெருமூச்சுடன் நடப்புக்குத் திரும்பினான்.

அப்போதும் என்ன காரணமோ, கிருஷ்ணசந்திரன் தன் உறவினர் பக்கம் முகம் திருப்பாமல் வெளிப்புறம் பார்த்தபடியே அருகே அழகாக வளர்க்கப்பட்டிருந்த குத்துச் செடிகளின் பக்கமாகச் சென்றான்.

யாரும் கவனிக்கிறார்களா என்பதுபோல மணிவாசகத்தின் பார்வை சுழலத் தொடங்கவும், கைக்கிண்ணத்தில் இருந்த பழக்கலவையைக் கிளறி, அதில் ஒரு செர்ரிப் பழத்தைக் கண்டு பிடித்து எடுத்து வாயில் போட்டு கொண்டு மீண்டும் மணிவாசகத்தின் பக்கம் கீழ்ப்பார்வையாய் நோக்கினாள் உதயரேகா.

அதற்குள் மணிவாசகமும் நண்பனைத் தொடர்ந்து செல்லக் கண்டு, செடிகொடிகளை ரசிப்பவள் போன்ற பாவனையில அவளும் அவர்களைப் பின் தொடர்ந்தாள்.

யாரும் அறியாமல், ஒருவழியாக உதயரேகா அந்த நண்பர்களைக் கண்டு கொண்டபோது, கிருஷ்ணசந்திரன் தன் நண்பனிடம், "சித்திரத்தைப் பார்த்ததில் இருந்து நெஞ்சில் பாறாங்கல்லை ஏற்றி வைத்ததுபோல இருக்கிறது மணி. படம் பிரதிபலிப்பது அவளது ஏக்கத்தையே அல்லவா! இந்தக் கொடுமை உதிக்கு நான் செய்தேனே; இன்னமும் செய்யப்போகிறேனே என்று மனம் நோகிறது" என்று மிகுந்த வருத்தத்துடன் கூறிக் கொண்டிருந்தான்.

## 14

கிருஷ்ணசந்திரனின் பேச்சைக் கேட்டதும் உதயரேகாவின் கைப்பிடி அளவான நெஞ்சுக்குள் என்னென்னவோ உணர்வுகள் முட்டி மோதிய போதும், அவற்றுள் தலை தூக்கி நின்றது, கணவன் அவளை 'உதி' என்று குறிப்பிட்டதால் ஏற்பட்ட குதூகலமே.

மனைவியை அவன் அன்னியமாகவே கருதுகிறான் என்பதை அவளுக்குத் தெளிவுபடுத்துவதற்காக வெகு பிடிவாதமாக அவளை உதயரேகா என்ற முழுப் பெயர் சொல்லியே அழைப்பவன், அந்தரங்கத்தில் அவளை உதி



யாகத்தான் காண்கிறான் என்பது தெளிவாகி விட்டதல்லவா?

ஆனால் மேலே அவனது பேச்சுதான் அவளுக்குப் புரியாது போயிற்று. கொடுமை செய்தேனே இன்னமும் செய்யப் போகிறேனே என்று வருந்திப் புலம்புகிறவன், அந்தக் கொடுமையைச் செய்துதான் தீர வேண்டும் என்று என்ன கட்டாயம்?

தொடர்ந்து மணிவாசகத்தின் குரல் கேட்கவும், இதன் விடை அவன் பேச்சில் கிடைக்கக் கூடுமா என்று மேலே அவர்கள் பேச்சைக் ஊன்றிக் கவனித்தாள்.

மணிவாசகத்தின் நோக்கம் நண்பனைத் தேற்றுவதாக இருந்தது. "கேசி நீயாக உதயரேகா சிஸ்டருக்கு எந்த ஒரு கொடுமையும் செய்யவில்லை. சொல்லு. உதயரேகா சிஸ்டரை நீயா விரட்டிப் பிடித்து மணந்து கொண்டாய்? இல்லையே? சொல்லப் போனால் அதைச் செய்தது அவர்கள் அல்லவா? இதில் நீ குற்ற உணர்வு கொள்வதும் வருந்துவதும் கொஞ்சம் கூட நியாயம் இல்லை. வா சற்று நேரம் உலாவி விட்டுத் திரும்பலாம். இந்த வேதனையிலும் குழப்பத்திலுமாக தலைவலி ஏதும் வந்து தொலைக்கப் போகிறது" என்று சிநேகிதனைக் கைப்பிடியாகக் கூடவே அழைத்துச் சென்றான்.

கிருஷ்ணசந்திரனாக மனம் உறுத்தி இளகி வந்தால் கூட இந்தப் பாவி மணிவாசகம் விட மாட்டான் போல இருக்கிறதே? வேண்டியவர்கள் வருந்தாமல் பார்த்துக் கொள்வது அவசியம்தான். ஆனால் தப்பு செய்தவர்கள் அந்தப் பிழையை எண்ணி நொந்து மனம் உருகுவது தானே நல்லது? அப்போதுதானே தொடர்ந்து அந்தப் பிசகைச் செய்யாதிருப்பார்கள்?



யோசித்தபடியே அவள் திரும்பி வரவும், "என்ன அடுத்த சித்திரத்துக்குக் கரு யோசிக்கத் தொடங்கி விட்டாயா?" என்ற புன்னகையோடு யசோதா மகளை எதிர் கொண்டாள். "இந்தப் படம் பற்றிய ஆலோசனையில் இருந்ததாக அன்றே சொல்வதற்கென்ன உதி. பிள்ளை முகம் சரியாக இல்லையே என்று பல நாள் மனம் உறுத்திக் கொண்டே இருந்தது" என்றாள் அங்கலாய்ப்பாக.

"உங்களுக்கு ஓர் ஆனந்தமான அதிர்ச்சி கொடுக்க எண்ணினேன் சித்தி" சமாதானம் கூறி முறுவலித்தாள் பெண்.

படத்தின் பக்கம் பார்வை சென்று மீள, "அதிர்ச்சி ஆனந்தமாகத்தான் இருக்கிறது. இப்போது உன் அப்பா இன்னோர் ஆனந்த அதிர்ச்சி தரப்போகிறார். வா, வந்து கேள்" என்று மகளைக் கையோடு அழைத்துச் சென்றாள்.

சலுகையோடு சிற்றன்னையின் தோளில் சாய்ந்தபடியே வந்த மகளைப் பார்த்துப் பெருமையான புன்னகையோடு, "என்ன அம்மா, மகள் கொஞ்சம் அதிகமாய் இருக்கிறது" என்றார் கேலியாக.

"அதுதான் எப்போதும் இருக்கிறதே. நீங்கள் நம் சிங்கப்பூர் பயணம் பற்றி உதிக்குச் சொல்லுங்கள்" என்றாள் யசோதா!

"நம், சித்தியும் கூட வருகிறார்களா அப்பா? வெரி குட்!" என்று குதித்தாள் உதயரேகா. "ஆனால் சிங்கப்பூரில் என்ன அப்பா? ஏதேனும் வேலையா? அல்லது சும்மா சுற்றிப் பார்த்து வருவதற்காக அழைத்துப் போகிறீர்களா?" என்று ஆவலாய்க் கேட்டாள்.

"யார்? உன் அப்பாவா?" என்று யசோதா முடிந்த அளவு புருவங்களை உயர்த்தவும் உலகநாதன் சிரித்தார்.



"உத்தியோக பூர்வமான கூட்டம்தான். அங்கே சிங்கப்பூர் அதிகாரிகளோடு ஒரு பேச்சு நடத்துவது என்பதுதான் வெளியே சொல்வது. ஆனால் சிங்கப்பூர் ஒரு ஷாப்பிங் பாரடைசாமே! மந்திரி உள்பட இலாகாவில் பலருக்கு அரசாங்கச் செலவில் அங்கே போய் வர ஆசை. சாமான் பார்த்து வாங்குவதற்காக மனைவியையும் உடன் அழைத்து வர அனுமதி"

"நாங்கள் கஷ்டப்பட்டு கட்டுகிற வரிப் பணம் அப்பா?"

"உன் வீட்டார் மட்டும்தானா வரி கட்டுகிறார்கள். என் சம்பளத்தில் எவ்வளவு வரிக்குப் பிடிக்கிறார்கள் தெரியுமா? ச்சு என்ன செய்வது? போ!" என்று அலுத்துக் கொண்டார் உலகநாதன்.

"ஏதோ 'நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழிந்தோடிப் புல்லுக்கும் அங்கே பொசியுமாம்' என்பது போல உன் சித்திக்கு வெளிநாடு சுற்றிவர ஒரு வாய்ப்பு" என்றார் தொடர்ந்து.

"ஆனால் ஒன்று அப்பா, உங்கள் கூட்டத்தில் நெல் மணியாய் மதிக்கப்பட வேண்டிய ஆள் சித்திதான். சித்தி மாதிரி ஒரு நெல் பயிர், இந்த மாதிரி நீர் எல்லாம் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் உங்கள் 'புல்' அதிகாரிகளுக்கு இப்படி ஓர் ஐடியா தோன்றி இருக்கிறதாக்கும்" என்று அழுத்தம் திருத்தமாக உரைத்தாள் உதயரேகா.

பெருமிதமாய் முறுவலித்த போதும், "போதும், போதும் உன் சித்தி புகழைக் கொஞ்சம் மெல்லத்தான் பாடு. வேண்டாத காதுகளில் விழுந்து வைத்தால் என் தலைக்கு ஆபத்தாகி விடும்" என்று சிரிப்புக்கிடையே எச்சரித்தார் உலகநாதன்.

''பானுவும், சூர்யாவும் ஆள் உயரத்துக்கு லிஸ்ட் போட்டு வைத்திருக்கிறார்கள். உனக்கும் எது வேண்டுமானாலும் எழுதி வை, உதி. சிங்கப்பூரில் இருந்து தகவல் வந்து விட்டால் என்றைக்கு வேண்டுமானாலும் புறப்பட வேண்டியிருக்குமாம்'' என்றாள் யசோதா.

''கிளம்புகிற போது இந்தப் படத்தைப் பார்க்கும் போது ஏனோ, மனதைப் பிசைகிறது. உதிம்மா. இதற்கு எதிர் மறையாக மகிழ்ச்சியை சித்தரிக்கும் விதமாக ஒன்று என் திருப்திக்காக வரையேன்'' என்றார் காந்திமதி.

கிருஷ்ணசந்திரனின் 'உதி' நினைவு வர, ''கட்டாயம் அத்தை'' என்று உறுதி அளித்தாள் மருமகள்.

வீடு சென்றதும் கிருஷ்ணசந்திரன் மீண்டும் நத்தையாய் ஓட்டுக்குள் சுருக்கிக் கொண்டு விட, உதயரேகா மீண்டும் மனம் குழம்பலானாள்.

ஆனால் இது கொஞ்சம் நம்பிக்கை கலந்த குழப்பம்.

''உதி'' என்ற ஒரே ஒரு குறிப்பிடலால் மட்டும் அவளிடம் அவனுக்கு நேசம் இருப்பதாகக் கூறி விட முடியாதுதான். ஆனால் தொடர்ந்து அவளுக்காக அவன் வேதனைப்பட்டதை ஒன்றுமில்லை என்று ஒதுக்கி விடவும் முடியாது.

படுக்கையில் கிடந்து யோசித்துக் கொண்டிருந்தவள் திடுமென அதிர்ந்து 'விலுக்'கென்று எழுந்தாள்.

கிருஷ்ணசந்திரன் ஒருக்கால் ஆண்மை அற்றவனோ? தாயின் கட்டாயத்துக்காக மணந்து விட்டு இப்போது தவிக்கிறானா?

ஆனால் வினாடியிலேயே இந்த சந்தேகம் விலகி விட்டது. அவனுக்கு இருந்த கெட்ட பெயர் ஒன்றோடு, அன்று புத்தக அறையில் அவளது சிலிர்ப்பும் நினைவு வர அப்படி இருக்கவே முடியாது என்று நிச்சயப்பட்டு நிம்மதியுற்றாள்.



சற்று ஆறுதல் அடைந்தவளாய் மீண்டும் படுத்தாள். எப்போது அவனுக்கு அவளிடம் கரிசனம் இருக்கிறது என்பது உறுதியாகி விட்டதோ, இனி இதன் காரணத்தைக் கண்டு பிடித்து சிக்கலைத் தீர்த்து விட விடாமல் முயற்சி செய்ய வேண்டும் என்று எண்ணியபடியே உதய ரேகா உறங்கிப் போனாள்.

வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளா விடினும் எப் போதும் அவளது வேலைகளில் - படம் வரைவது, தோட்டத்தைப் பராமரிப்பது, பாடுவது என்று அவளது சொந்தப் பொழுது போக்குகளிலேயே ஈடுபட்டு இருப்பது போலத் தோன்றினாலும் உதயரேகா தன் கூரிய கவனத்தைக் கணவன் மேலேயே வைத்திருந்தாள்.

இரண்டு தினங்கள் வெகு சாதாரணமாகக் கழிந்து விட, மூன்றாவது நாள், டீவியின் முன்பாக அமர்ந்திருந்த போது அவளுக்கு முதல் துப்பு கிடைத்தது.

பொதுவாக இன்றைய அரசியலை வெகுவாகக் கிண்டல் செய்யும் ஒரு நிகழ்ச்சியை கிருஷ்ணசந்திரன் மிகவும் ரசித்துப் பார்ப்பான். வாரம் ஒரு நாள் இரவில் ஏழரை மணிக்குத் தொடங்கும் இந்த நிகழ்ச்சியைப் பாராமல் கிருஷ்ணசந்திரன், தவறுவதே இல்லை.

உதயரேகாவுக்கும் அந்த நிகழ்ச்சி இஷ்டமே. எனவே அவளும் டி.வி. முன்னிருந்து அந்த நேரத்தில் அகலுவதில்லை.

அன்றும் அந்த நிகழ்ச்சியைக் கணவன் - மனைவி இருவரும் அவ்வப்போது சிரித்தபடியே ரசித்துக் கொண்டிருந்தனர். இருவர் ரசனையும் ஒரே மாதிரி இருக்கிறது. ஆனால்... என்று உள்ளூர ஒரு வருத்தத்துடன் உதயரேகா எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்.



சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி நிகழ்ச்சி அமைப்பாளர், தனக்கே உரிய கிண்டலான பாணியில் விமர்சிக்க கணவன், மனைவி இருவரும் அடக்க மாட்டாமல் நகைத்துக் கொண்டு இருந்தனர். சேர்ந்து கலந்து அல்ல. அவரவர் தத்தம் போக்கில்தான்.

என்றாலும் இருவரின் சிரிப்பொலியும் கேட்டது.

பாதியில் கிருஷ்ணசந்திரனின் குரல் தேய்ந்து நின்று விட உதயரேகாவின் நகைப்பு மட்டுமே ஒலிக்கக் கேட்டு சிறு வியப்புடன் திரும்பிக் கணவனை நோக்கியவளுக்கு அது பெரு வியப்பாயிற்று.

ஏனெனில் நடையில் சிறு தடுமாற்றத்துடன் கிருஷ்ண சந்திரன் அவனது அறையை நோக்கி இயன்ற அளவு விரைந்து சென்று கொண்டிருந்தான்.

என்னவென்று ஓடிப் போய்க் கேட்கும் அளவு சகஜம் இப்போது இல்லை என்றாலும் எழுந்தபடி, 'ஏதாவது வேண்டுமா?' என்று கேட்டாள் அவள்.

'இல்லை' என்ற கனத்த குரலின் பதிலோடு அவன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டான். தாளிட்ட கதவை வெறித்தவளுக்கு டி.வி. மறந்து போயிற்று.

இதே போல இந்தத் தடுமாறும் நடையோடு கதவைச் சாத்தி உள்ளே பதுங்குவதை அவன் முன்பும் செய்து இருக்கிறான்.

ஒரு மணி நேரம், ஒன்றரை மணி நேரம் என்று மூடிய அறைக்குள்ளேயே இருப்பதும், வேசாக முகம் மாறி வெளியே வருவதும் அவ்வப்போது நடப்பதுதான்.



மனைவியோடு பேச்சைத் தவிர்ப்பதற்காக என்று எண்ணினாளே. அது தவறு. இதன் காரணம் வேறாக இருக்கக் கூடுமோ?

கணவனின் விசித்திரமான நடத்தைக்கான விடையை அணுகி விட்டது போலத் தோன்றவும் உதயரேகாவின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

அன்றும் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பூட்டிய அறைக்குள்ளேயே கிடந்தவன் வெளி வரும் போது அவன் அறியாமல் கவனித்தாள். கண் சிவந்து, முகம் வெளுத்திருந்தான். வழக்கம் போலவே.

தொடர்ந்து கிருஷ்ணசந்திரனைக் கண்காணித்த உதய ரேகா கண்டு பிடித்த விடை அவளைப் பதறச் செய்து விட்டது.

போதை மருந்து! அவளுடைய கணவன் ஒரு டிரக் அடிக்ட்!

போதை மருந்துகளைப் பற்றி வெறும் பொழுது போக்காகப் படித்தவை அரை குறையாக நினைவு வந்து அவளைக் கலங்க அடித்தன.

போதை மருந்துகளில் எத்தனையோ உண்டாமே! இவன் உட்கொள்வது அதில் எதுவாக இருக்கும்? எல்.எஸ்.டி. மாத்திரை என்பார்களே சாராஸ்... புகைப்பார்களாமே! மரியுவானா? தனக்குத்தானே குத்திக் கொள்ளும் ஊசி? பிரவுன் சுகர் தான் விலை உயர்ந்தது. அது பழகி விட்டால் விட முடியாது என்கிறார்களே?

இதில் எதற்கு அவன் அடிமையாகி இருக்கிறான்?

கலக்கமும், பரபரப்புமாக மாஸ்டர் கீ கொத்தை எடுத்து, அவன் அறையைத் திறந்து கொண்டு உள்ளே போய்த் தேடினாள். தேடும் பொருள் எப்படி இருக்கும்

என்பது கூடத் தெரியாமல் தேடி அலுத்து விட்டு மீண்டும் வெளியே வந்தாள்.

எப்போதோ வாங்கி மிச்சமான சில மருந்து, மாத்திரைகள் தவிர வேறு எதையும் காணவில்லை. சற்று நேரம் செய்வது அறியாமல் திகைத்து விட்டு டெலிஃபோன் டைரக்டரியை எடுத்து, ஒரு புனர் வாழ்வு மையத்தோடு தொடர்பு கொண்டு பேசினாள்.

அவர்கள் சொன்ன சில விவரங்கள் அவளை மேலும் கலங்க அடித்தன.

போதைப் பழக்கம் உள்ளவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குப் பிறவிக் குறைகள் ஏற்படும் வாய்ப்பு ரொம்பவும் அதிகமாகும். அது தெரிந்துதான் மனைவியிடம் ஆசை இருந்தும் இல்லற உறவே வேண்டாம் என்று விலகி இருக்கிறானா?

பாவம்! என்று அவளது பூமனம் கணவனிடம் பாகாக உருகிப் போயிற்று.

ஆனால் இவ்வளவு யோசிக்கிறவன், இதை விட முடியாது என்று பிடிவாதம் பிடிப்பது பகுத்தறிவுக்கு ஒத்துப் போகவில்லையே?

ஆனால் இந்த போதை மருந்துகளின் வலிமை அப்படிப்பட்டது என்று புனர்வாழ்வு மையத்தினர் சொன்னது இன்னமும் அவளைக் கலங்க அடித்தது.

இல்லை. இனிச் சும்மா இருப்பது கூடாது. இப்போதே எந்த அளவுக்கு கிருஷ்ணசந்திரனின் உள்ளுறுப்புகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றனவோ?

மீண்டும் உதயரேகா புனர்வாழ்வு மையத்தோடு தொடர்பு கொண்டாள்.



வீடு திரும்பிய கணவன் முகம் கழுவி உடை மாற்றி சிறு அவகாசம் அளித்து விட்டு ஒரு போராட்டத்துக்குத் தன்னை திடப்படுத்திக் கொண்டு அவனை நாடிச் சென்றாள்.

அதற்குள்ளாக அறையை விட்டு வெளியே வந்த கிருஷ்ணசந்திரன், ''என் அறைக்குள்ளே போனாயா? என்ன தேவைப்பட்டது? ஏன்?'' என்று விசாரித்தான்.

லேசாக அண்ணாந்து தன் அகன்ற விழிகளால் அவனை நேராகப் பார்த்தாள் உதயரேகா. ''எனக்கு இப்போது புரிந்து விட்டது. ஆனால் கோபம் இல்லை. வருத்தம் தான். எவ்வளவோ தெரிந்திருந்தும் நீங்கள் கூட இப்படி இருக்கலாமா? என்று... அதுதான் வேதனையாக இருக்கிறது... வந்து... டி.டி.கே. புனர் வாழ்வு மையத்தில் போதைப் பழக்கத்தை அடியோடு நீக்கி விடுகிறார்களாமே விசாரித்தேன். ஒரே மாதம் தங்கி இருந்தால் போதுமாம். உடன் சேர்கிறீர்களா?'' என்று இதழும் ஏக்கமுமாக வேண்டினாள்.

முதலில் புரியாமல் புருவம் சுருக்கி யோசனையுடனேயே அவள் பேச்சைக் கவனித்தவனின் விழிகள் உடனே பளிச்சிட்டன. முறுவலை அடக்கியவாறே, ''முட்டாள்!'' என்றான். ஏளனமும், பரிவுமாக, ''அங்கே சேர்வதாக ஏதாவது ஏற்பாடு செய்திருந்தால் அதை உடனே ரத்து செய்து விடு. ஏனெனில் அதற்குச் சற்றும் அவசியமில்லை.'' என்றான் அவன் தீர்மானமாக.



## 15

ரத்து செய்வதா?

சற்றுத் திகைத்து விட்டு, ''ஏன்?'' என்று வினவினாள் உதயரேகா.

''அது தான் சொன்னேனே அவசியம் இல்லை என்று''

''அவசியம் இல்லையா? விருப்பம் இல்லையா?''

''அவசியம் இல்லாத போது, விருப்பு வெறுப்பு நோக்கும் அவசியமும் இல்லைதானே? ஆனால் ஒன்று, நான் இல்லாத போது மறுசாவியிட்டு திறந்து, என் அறையில் மற்றவர்கள் உளவு பார்ப்பது நிச்சயமாக எனக்கு விருப்பமற்ற காரியம். தயவு செய்து இந்த மாதிரி அத்துமீறல்களை இனி நீ செய்யாதே'' என்று குரல் உயர்த்தாமலே கண்டிப்பான குரலில் கூறி விட்டு திரும்பினான் கிருஷ்ணசந்திரன். மீண்டும் அவனது அறைக்குச் செல்லத் திரும்பினான்.

''ஒரு விஷயம், அந்த மாத்திரைகளைத் தூர எறிந்து விடலாமே''

சட்டெனத் திரும்பி, ''என்ன சொல்கிறாய்?'' என்றான் அவன் ஆத்திரத்துடன்.

''அவனது சினத்தின் காரணம் புரியாமல், ''எப்போதோ வாங்கி பயன்படுத்தியது போக மிச்சமான மாத்திரைகளை கொஞ்சம் பார்த்தேனே அவற்றைத்தான் சொன்னேன். நோய் வந்தால் புதிதாக வாங்கிக் கொள்ளலாம் இல்லையா? இப்படி, மிஞ்சிப் போன பழைய மாத்திரைகளைச் சாப்பிடுவது நல்லதில்லை என்று கேள்விப்பட்டு இருக்கிறேன்'' என்று விளக்கினாள் அவன் மனைவி.



ஒரு பொறுமையிழந்த தலையசைப்புடன், ''உதயரேகா எனக்கு எது நல்லது, எது கெட்டது என்பது பற்றி எனக்கே தெரியும் என்று முன்பே சொல்லி இருக்கிறேன். இந்த மாதிரி இலவச ஆலோசனைகளை அள்ளி வழங்குவதை இனியாவது தயவு செய்து நிறுத்திக் கொள்'' என்று அழுத்தமான குரலில் கூறி முடித்தான் கிருஷ்ணசந்திரன்.

''அதெப்... என்று தொடங்கி விட்டு உடனேயே உதயரேகா வாயை மூடிக் கொண்டாள்.

இன்னுமொரு தரம் விவாகரத்து என்றானானால் அவளால் தாங்க முடியாது. என்னதான் பாராட்டி விருந்து கொடுத்தாலும் அவளுக்காக உருகினாலும் (அது அடுத்தவரிடம் என்றாலும்) உருகியது உண்மைதானா? அவளை நெருங்கவோ, நெருங்க விடவோ இல்லையே? எனவே அவன் என்ன சொல்வான், செய்வான் என்று எதையுமே உறுதியாய்ச் சொல்ல முடியாதுதானே?

ஆயினும் சட்டப்பூர்வமாக பிரிந்து விடுவது மேல் என்று சந்திரன் கூறிய புதிதில் இருந்தது போன்ற நிராசையும் தவிப்பும் இப்போது உதய ரேகாவுக்கு இல்லை.

அவளிடம் அவனுக்கு அன்பு இருக்கிறது. அது ஏதோ ஒரு விசித்திரமான திறுசு என்றாலும் அன்பு என்ற ஒன்று இருப்பதே அவளுக்குக் கொஞ்சம் நிம்மதியாகத்தான் இருந்தது.

அவளைப் பொறுத்த வரையில் கணவனைப் பாராமல் ஒரு நாள் கூட அவளால் இருக்க முடியாது என்ற முடிவுக்கு அவள் ஏற்கனவே வந்திருந்தாள்.

இந்த வீட்டில் எங்கிருந்தோ கிருஷ்ணசந்திரனின் குரலைக் கேட்டாலே அவளுக்குத் திருப்திதான். காலையில் எழுந்து ஜன்னலைத் திறந்து பார்க்கும் போது தோட்டத்தில்

அவன் ஜாக் செய்வதைக் கண்ணால் பார்த்து விட்டால் அன்று முழுவதும் அவளுக்குக் குதூகலமான நாளே.

இந்த அளவுக்கு உதயரேகா ஒருவனிடம் பைத்திய மாகி விடக் கூடும் என்று சில மாதங்களுக்கு முன் அவளிடம் யாரேனும் சொல்லியிருந்தால் அவர்களை அவள் எள்ளி நகையாடி இருப்பாள்.

திருமணமானதில் இருந்து ஒரு வேளை அவள் இதே நிலையிலேயே தொடர்ந்து வாழ்ந்து கொண்டு இருந்திருந் தால் மனதில் அதிருப்தியும், அவை பாய்தலும் தோன்றியி ருக்கலாம். அது அதிகரித்தும் இருக்கலாம். ஆனால் கண வன் அன்று வெடித்த விவாகரத்து குண்டுக்குப் பிறகு இதுவே நிலைக்காதோ என்ற பயமும் இதுவேனும் நிலைக்க வேண்டுமே என்ற ஏக்கமும் சேர்ந்து கொள்ள இருப்பது நிலைப்பதே பெரிதாகத் தோன்றத் தொடங்கி விட்டது.

அதுதான் சம்திங் இஸ் பெட்டர் தென் நத்திங். ஒன்றுமில்லாததற்கு அரை ரொட்டி மேல், முழுப்பட்டினி கிடப்பதற்குக் கால் வயிற்றுக் கஞ்சி கிடைத்தால் போதாதா? என்று சொல்லி எந்தக் கசப்பையும் இனிப்பாக்கிக் கொள்ள நம்மிடையே எத்தனையோ பழமொழிகள் இருக்கின்ற னவே. இன்னமும் தாழ்ந்தாலும் கூடப் போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. நம்மிலும் கேடு நாட்டிலே கோடி என்று சொல்லி திருப்தி அடைந்து விட வேண்டியது தான்.

ஏதோ ஒரு வகையில் கணவன், மனைவி இருவருக் குமே அன்றைய நடப்பே திருப்தியாக இருந்தது போலும். யாரும் எதையும் மாற்றுவதற்கு முயற்சிஎடுக்காமல் அப்ப டியே வாழ்க்கை தொடர்ந்தது.



ஊடே உதயரேகாவுடைய குடும்பம் புதுடெல்லிக்குக் குடி பெயர்வது உறுதியாயிற்று. தலைநகருக்குச் செல்வது குறித்து இளைய பிள்ளைகள் இருவருக்கும் உற்சாகமே. அக்காவை மட்டும் விட்டுப் போகிறோமே என்று அவ்வப் போது வருந்தினாலும் அடிக்கடி டெல்லிக்கு வரவேண்டும் என்று தமக்கையிடம் உறுதிமொழி பெற்றுக் கொண்ட பின் டெல்லி வாழ்வை ஆர்வமாகவே திட்டமிட்டார்கள்.

பிள்ளைகள் இருவரையும் தெற்கே நாகர்கோவிலின் அருகே இருந்த ஒரு கிராமத்தில் யசோதாவுடைய பெற்றோ ரிடம் விட்டு விட்டு உலக நாதனும் யசோதாவும் சிங்கப்பூர் செல்வதாகவும், அங்கிருந்து திரும்பி வந்ததுமே எல்லோரு மாய் டெல்லிக்குப் பயணப்படுவதாகவும் ஏற்பாடாயிற்று.

எடுத்துச் செல்ல வேண்டிய சாமான்கள், கழிக்க வேண்டிய பொருட்கள் என பிரித்தார்கள். தேவையானவற் றைக் கொண்டு செல்ல வாகாக மூட்டை கட்டினார்கள். கூடவே வெளிநாட்டுப் பயணத்திற்கான வேலைகளையும் பார்த்தார்கள்.

உதயரேகாவும் தன் வழக்கமான முழு ஈடுபாட்டுடன் யசோதாவுக்கு உதவினாள். ஒரு வகையில் இது அவ ளுக்கே உதவியாக அவளது சொந்தப் பிரச்சினைகளில் உழல நேரமில்லாது போயிற்று.

இடையிடையே சில சிறு சாயங்களும் ஏற்படாமல் இல்லை. சிங்கப்பூரில் வாங்க வேண்டிய பொருட்கள் பற்றிப் பேசகையில், "உதிக்கு ஒரு 'ஹான்புகாம்' வாங்க வேண்டும்" என்றாள் யசோதா. 'நாளைக்கு அவளுக்குப் பிள்ளை பிறந்ததும் பிள்ளையின் ஒவ்வோர் அசைவுகளை யும் வீடியோவில் அவ்வப்போது அவளே பதிவு செய்து வைக்க வசதியாக இருக்கும்..." என்று அவள் இயல்பாய் கூறி விட, உதயரேகாவுக்கு வெகு நேரம் உள்ளே வலித்துக் கொண்டே இருந்தது.





தந்தையும் தாயும் இயல்பாக ஒருவரை ஒருவர் கேலி செய்து கொள்வதையும் ஒட்டுதலாகப் பழகுவதையும் பார்க் கும் போது கூட உதயாவுக்கு ஏக்கம் தலைநீட்டத்தான் செய்தது. அவளது அன்றாட வாழ்வில் இதற்கெல்லாம் இடமே இல்லையே!

அன்று நள்ளிரவில், தந்தையையும் சிற்றன்னையை யும் கையாட்டி வழியனுப்பி விட்டுத் திரும்பி வீடு வந்து சேர்ந்து உதயரேகா படுக்கையில் விழுந்த போது கிட்டத் தட்ட இரவு இரண்டு மணியாகி விட்டது.

அப்போதும் உறக்கம் பிடிக்காமல் வெகுநேரம் படுக் கையில் புரண்டு கொண்டுஇருந்து விட்டு எங்கோ மெல்லிய தாக தொடர்ந்து ஒலித்த டெலிஃபோன் மணியைக் கேட்டு விட்டு ஒருவாறு அவள் கண்ணயர்ந்தபோது அவளது அறைக் கதவு தட்டப்பட்டது.

"உதி..." என்று கிருஷ்ணசந்திரன் அழைப்பது கேட்க வும், இது கனவுதான் என்று அவள் திரும்பி படுத்துத் தூக்கத்தைத் தொடரலானாள். அவனாவது உதி என்று அவளை நேரடியாக அழைப்பதாவது?

ஆனால் மீண்டும் கதவைத் தட்டியதோடு "நான்தான்... உதிம்மா" என்றதோடு கதவுக் குமிழைத் திருப்பிக் கத வைத் திறக்கும் ஒலியும் நிஜம் போலத் தெளிவாகக் கேட்கவும், சிரமத்துடன் இமைகளை நன்றாகப் பிரித்துப் பார்த்தால், மெய்யாகவே கிருஷ்ணசந்திரன்தான். கதவைத் திறந்து கொண்டு அறையினுள் வந்து கொண்டிருந்தது அவன்தான் என்பது அறைக்கு வெளியே இருந்து வந்த வெளிச்சத்தில் நன்றாகவே தெரிந்தது.

புரியாத திகைப்புடன் அவள் எழுகையிலேயே அவன் விளக்கு ஸ்விட்சைத் தட்டி விட்டு அவள் அருகே வந்தான்.



தன் அருமைக் கணவன் இந்த அதிகாலை நேரத்தில் காதல் மீறித் தன்னைக் கலந்தணைய வரக் கூடும் என்று அவளுக்குச் சற்றும் நம்பத் தோன்றவில்லை. உள்ளூரக் கலக்கத்துடன் அவன் முகத்தை உற்று நோக்கியவள், அங்கிருந்த எல்லையற்ற பச்சாதாபத்தைக் காணவும் மேலும் கலவரமடைந்தாள்.

"எ...என்னது? யாருக்கு என்ன?..." என்று தடுமாறி யவள், தானாகவே ஊகித்து, "அப்பா... சித்தி... விமானம் அய்யோ என்ன ஆயிற்று?" என்று பதறியபடி எழுந்தாள்.

அதற்குள் அருகில் வந்து விட்ட கிருஷ்ணசந்திரன், மனைவியின் கைகளைப் பற்றி லேசாக அழுத்தி, "முழுக் கெடுதலான செய்தி எதுவும் வந்து விடவில்லை உதி. நீ இப்போது தைரியத்தோடு இருக்க வேண்டும்" என்றான்.

"தைரியமா? எதற்குத் தைரியம்? ஏன்?" நடுங்கத் தொடங்கி விட்ட கீழுதட்டைப் பற்களால் அழுத்தி சமா ளிக்க முயன்றவள் முடியாமல், "எ... என்ன ஆயிற்று? சீக்கிரம் சொல்லுங்களேன்..." என்று குரல் நடுங்கக் கேட் டாள்.

மனைவியின் தோளை ஒரு கையால் லேசாக அணைத்து, "சென்னையில் இருந்து கிளம்பி ஒரு மணி நேரத்திற்குப் பிறகு விமானத்துடன் தொடர்பு அறுந்து போய் விட்டதாம். தொடர்பு கெடு முன்..." என்று கிருஷ்ண சந்திரன் சற்றுத் தயங்கினான்.

அவனது பைஜாமா டாப்பின் காலரை இரு கைகளா லும் இறுகப் பற்றி, "தொடர்பு கெடு முன்? கெடு முன் என்ன நடந்தது? ஐயோ! அப்புறம் என்ன நடந்தது? சொல்லுங்களேன்" என்று பதட்டப்பட்டாள் உதயரேகா.

''ஒரு... ஒரு சிறு வெடிச்சத்தமும், மேடே அழைப்பும் கேட்டதாம்...'' என்று அவன் கூறி முடிக்கும் முன், ''சித்தீ...!'' என்று உதயரேகா வீறிட்டாள்.

''சித்தி, அப்பா, சித்தி அய்யோ'' என்று கதறியவளை இறுக அணைத்தபடி கிருஷ்ணசந்திரன் சற்று நேரம் அசையாமல் நின்றான்.

அவளது கதறல் சற்றே மட்டுப்படும் வரை மனைவியின் தலையையும் முதுகையும் வருடியபடி பேசாமலேயே நின்று விட்டு அவளது காதை ஒட்டி, ''ஷ் உதி... என்ன இது? இப்படி அழலாமா? ஒன்றும் ஆகி இருக்காது. முழுக் கெடுதலாகவும் செய்தி எதுவும் வரவில்லை என்றேனில்லையா? மறந்து விட்டதா? மேடே என்ற உடனேயே இங்கிருந்து தேடுவதற்கு ஹெலிகாப்டர்கள் அனுப்பி விட்டார்கள். சீக்கிரம் விமானத்தைக் கண்டு பிடித்து விடுவார்கள்'' என்றான் அவன் மெதுவாக. ஆனால் தெளிவாக.

''ஆனால்... ஆனால்... நடுக்கடலில்...'' என்று கேவினாள் அவள். ''வெடி... வெடிச்சத்தம் வேறு...''

''அதுதான் நம்பிக்கையை...'' என்றான் அவன் அழுத்தத்தோடு. ''மேடே செய்தி வந்ததுமே, அந்தப் பக்கம் கடலில் செல்லும் கப்பல்கள், பெரிய மீன் பிடி ட்ராலர்கள் எல்லாவற்றுடனும் தொடர்பு கொண்டு விசாரித்து இருக்கிறார்கள். விமானம் வெடித்துச் சிதறுவது என்றால் வானத்தில் பெரிய வெளிச்சம் பல கிலோ மீட்டர் தூரத்துக்குத் தெரிந்திருக்கும். வெடிச் சத்தமும் பேரோசையாக வெகு தூரம் கேட்டிருக்கும். அதெல்லாம் இல்லை என்கிற போது நம்பிக்கைக்கும் இடம் இருக்கிறதல்லவா?''

இவை எல்லாம் சின்னச் சின்ன சமாதானங்கள். கடைசி வரை நம்பிக்கையை இழக்க விரும்பாத மனதின் கண்டு பிடிப்புகள். பேரோசையோடு வெடித்துச் சிதறித்



தான் ஆக வேண்டும் என்பது இல்லை. இஞ்சின் பகுதி பழுதடைந்து போனால் ஒளியின்றி ஓசையின்றி விமானம் கடலில் மூழ்கும் வாய்ப்பும் உண்டுதான்.

இது இருவருமே அறிந்ததுதான்.

''ஆனால் தொடர்பே இல்லையே? எந்த வகைத் தகவலும் இல்லை என்கிறீர்களே?'' என்று இமை தட்டாமல் அவன் முகத்தை அண்ணாந்து நோக்கி தீனமான குரலில் கேட்டாள் உதயரேகா.

முழுவதாகப் பொய்யுரைக்க முடியாமல், ''ஏதாவது ஷார்ட் சர்க்யூட் ஆகி, ரேடியோ தொடர்பு பழுதாகி இருக்கும் என்பதுதான் என் அனுமானம். விமானத்தில் இருக்கும் ரேடியோ இஞ்சினியரே அநேகமாக அதை சரிச் செய்து விரைவிலேயே தகவல் தருவார்கள் என்று நினைக்கிறேன்'' என்றான் கிருஷ்ணசந்திரன்.

சற்று யோசித்து விட்டு, ''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று உதயரேகா வினவினாள்.

விநாடி நேரம் தயங்கி விட்டு, ''விமான நிலையத்தில் இருந்து சொன்னார்கள்'' என்றான் அவன் சுருக்கமாக.

அவன் எதிர்பார்த்தது போலவே உதயவின் உடல் விறைப்புற்றது. நம்பிக்கை இழந்த நிலையில்தான் இது போன்ற தகவல்களைத் உற்றாருக்குத் தெரிவிப்பது உண்டு. தூங்கும் போது எங்கோ அடிப்பதாக அவள் நினைத்த டெலிஃபோன் மணி அவர்கள் வீட்டினதுதான். அப்போது தான் சொல்லி இருக்கிறார்கள்.

''உதி, விமான நிலையத்தில் எனக்கு வேண்டியவர் ஒருவர் இருக்கிறார். விமானத்தைத் தேடுகிற விவரத்தை எல்லாம் அவரிடம் தான் கேட்டு வந்தேன். வா. இப்போதும் அவரிடமே மேற்கொண்டு என்ன ஆயிற்று என்று விசாரிக்கலாம்''



மனைவியை தன் கூடவே நடத்திச் சென்று அருகிலேயே அமர வைத்துக் கொண்டுகிருஷ்ண சந்திரன் கேட்ட கேள்விகளுக்கு, அந்த நண்பரால் புதிய பதில் எதுவும் தர முடியவில்லை.

சற்று நேரம் தைரியமாய் இருப்பது போலக் காட்டிக் கொண்ட உதயரேகா அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடியாமல் மீண்டும் பதறிக் கதறத் தொடங்கி விட்டாள்.

முதலில் தம்பி, தங்கைகளை நினைத்து என்னமும் ஆகி விட்டால் எப்படித் தாங்குவார்கள் என்று கலங்கினாள். ''பானுவுக்குத் தினமும் நடப்பதை எல்லாம் சித்தியிடம் கொட்டியாக வேண்டும். இப்படியா அப்படியா என்று தலைவாறுவதில் இருந்து எல்லாவற்றுக்கும் சித்திதான் முடிவு சொல்லியாக வேண்டும். அவள் இனி என்ன செய்வாள்? சூரியாவுக்கு அவ்வப்போது வெறுகாய் தொட்டுக் கொள்வது மாதிரி சித்தி முதுகில் உரசி விட்டு போவான். அப்பா கூட எருமை மாடு மரத்தில் உரசுகிற மாதிரி என்று கேலி செய்வார். இனி மேல்... ஐயோ என்னால் சித்தியை பார்க்காமல் இருக்கவே முடியாது. ஐயோம்மா என்னால் முடியவே முடியாது'' என்று புலம்பிக் கண்ணீர் வடித்த மனைவியை மார்பில் சாத்திக் கொண்டு தன்னால் இயன்ற வரை ஆறுதல் அளிக்க முயன்றான் கிருஷ்ணசந்திரன்.

அன்று வரை அவளை எட்ட நிறுத்தி, அவளை நெருங்க அவள் செய்த முயற்சிகளைச் சற்றும் இரக்கமின்றிப் பார்த்திருந்ததெல்லாம் மறந்து விட, அவளது வேதனையை அடியோடு தீர்க்க முடியா விட்டாலும் சிறிதேனும் குறைக்கும் மார்க்கமாக அவளை அணைத்துக் கொண்டு அப்படியே அமர்ந்திருந்தான்.



## 16

கணவனின் அரவணைப்புக்காக உதயரேகா பெரிதும் ஏங்கிக் கிடந்தவள்தான். ஆனால் அன்று கிருஷ்ணசந்திரனின் பார்வையிலேயே புதையுண்டு போவாள் போல ஒட்டிக் கொண்டு கிடந்த போது கணவன் தன்னை அணைத்திருக்கிறான் என்பதை அவள் உணரக் கூட இல்லை.

ஏதோ பூதாகாரமாக வந்து விட்டு பேராபத்தில் இருந்து அவளைக் கொஞ்சமேனும் காக்கக் கூடிய புகலிடத்தில் தஞ்சம் அடைந்திருப்பதாக ஓர் உணர்வு அவ்வளவே.

துன்பத்துக்கு பயந்து அவள் ஒன்டிக் கொள்ள, அவளது வேதனையை விரட்டுபவன் போல அவனும் அவளை அணைத்துக் கொள்ள, இருவரும் வெகு நேரம் அப்படியே அமர்ந்திருந்தார்கள்.

எந்தவிதமான சேதி கிடைத்தாலும், உடனே தொடர்பு கொள்வதாக உறுதியளித்த நண்பரிடமிருந்து தகவலே இல்லை.

சற்று நேரம் ஓய்ந்து போய் பேசாமல் கிடப்பதும் ஏதாவது பயங்கரக் கற்பனையில் திடுமென உடல் நடுங்குவதும் அதற்கு மாறாக சித்தி, அப்பா என்று எதையாவது பேசுவதுமாக உதயரேகா பொழுதை விரட்டினாள்.

நிலைமைக்கேற்றபடி மனைவியின் நெற்றியில் விழுந்த கூந்தலை ஒதுக்குவதும் தலையை மென்மையாக வருடுவதும், முதுகைத் தடவுவதுமாக கூடவே ஏதாவது பேசுவதுமாக மனைவியோடு கிருஷ்ணசந்திரனும் ஒத்துழைத்தான்.

திடீரென்று ஒன்று தோன்றவும் அவசரமாக எழுந்து சென்று ரிமோட்டை எடுத்து டி.வி.யை ஆன் செய்து

பி.பி.சி.யை வைத்து விட்டு மீண்டும் விரைந்தோடிச் சென்று கணவனிடம் ஒட்டிக் கொண்டாள் உதயரேகா.

ஆனால் பி.பி.சி.யில் இந்த விமானத்தைப் பற்றிக் குறிப்பிடத் தொடங்கியதுமே இதை ஏன் வைத்தேனோ என்று படபடக்கும் நெஞ்சை அழுத்தியது.

இந்த விமானத்தை தொடர்ந்து தேடிக் கொண்டிருப்பதைப் பற்றி கூறிய செய்தி அறிக்கை விமானத்தில் பயணம் செய்த மந்திரியின் பெயரைக் கூறி பயங்கரவாதிகள் அவரைக் குறி வைத்ததாகவும் அவர்களது சதி வேலையால் விமானம் வெடித்துக் கடலில் விழுந்து மூழ்கி இருக்கக் கூடும் என்று நம்பப்படுவதாகவும் சொல்லவும் உதயரேகாவுக்கு உடம்புத் தூக்கிப் போட்டது.

''இது வெறும் ஊகம்தான் உதி. ஐயம் திரிபற அறியப் பட்ட செய்தியல்ல. இப்படி நடந்திருக்கக் கூடும் என்று சும்மா ஜோஸியம் தான் சொல்கிறார்கள் பார்.''

கொஞ்சம் தெம்படைந்தவளின் கவலை வேறுபுறம் பாய்ந்தது. ''தம்பியும் தங்கையும் இப்போது இந்தச் செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்தால்...? அவர்களுக்கு ஆறுதல் சொல்ல அங்கே யாருமே இல்லையே? பாட்டி சும்மாவே லபோதிபோ! யாராவது கொஞ்சம் சத்தமாகப் பேசினாலே கைகால் நடுங்கத் தொடங்கி விடும். சித்தியிடம் அவர்களுக்கு உயிர். அவர்கள் வேறு பாவம்...''

''உதயா, யோசிம்மா. கொஞ்சம் யோசித்துப் பார்த்து விட்டு அப்புறம் தேவைப்பட்டால் கவலைப்படலாம். பார், இந்த அதிகாலை நேரத்தில் யார் உட்கார்ந்து டி.வி.யை அதுவும் இந்த வெறும் செய்திச் சானலைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்?''



கணவன் பேச்சின் உண்மை உணர்ந்து சற்றே ஆறுதலாய் பெருமூச்சு விட்டாள் உதயரேகா. ஆனால் முழு நிம்மதி கிடைக்கவில்லை. அந்த நேரத்தில் யாரும் டி.வி. முன் உட்காருவது வழக்கம் இல்லைதான். ஆனால் அப்படி உட்காரவே கூடாது என்று சட்டம் ஒன்றும் இல்லையே.

இப்படி வெகு நேரம் அல்லல், அவதிப் பட்டுக் கொண்டிருந்தவள், ''என்னால் தாங்க முடியவில்லையே...'' என்று உதயரேகா முனகிய போது டெலிஃபோன் மணி அடித்து, நல்ல சேதி கிடைத்தது.

கண்டேன் சீதையை என்று தேவையானதை முதலில் சொன்ன அனுமனைப் போல, ''எல்லோரும் நலம்'' என்று தொடங்கினார் கிருஷ்ணசந்திரனுடைய நண்பர்.

பெரும்பாலும் கிருஷ்ணசந்திரனின் ஊகம் சரியானதாகவே இருந்தது. ஆனால் விஷயம் ஒரேயடியாய் ஒன்றுமே இல்லாததும் அல்ல.

விமானத்தைக் கடத்திச் செல்ல முயற்சி நடத்திருக்கிறது. மந்திரியின் பாதுகாவலர்கள் அவர்களை முறியடிக்க முயன்றிருக்கிறார்கள். காக்பிட்டில் வைத்துத் தகராறு நடக்க, கைகலப்பில் வெடித்த குண்டு ரேடியோவைச் சேதப்படுத்தி விட்டது. சீர் செய்ய முடியாத சேதம். விமானத்தை ஓட்டிய பைலட் கெட்டிக்காரர். இந்த நிலையில் முழுக்க முழுக்கக் கடல் மீது பறப்பது சரியல்ல என்று முடிவு செய்து இந்தியாவுக்கே திரும்பி விட்டார். தகவல் கொடுக்கவோ உத்திரவு பெறவோ முடியாத நிலைமையில் எந்த விமான நிலையத்தை அணுகுவது? விமான போக்குவரத்து அதிகம் இல்லாத வழி பார்த்துச் செலுத்தி விமானத்தை பரந்த வெறும் வெளி தேடி இறக்கி விட்டார். இறங்கிய இடம் ஒரிசாவை ஒட்டிய ஆந்திர எல்லை. ஆனால் இன்னுமோர் இன்னவாக சில நாட்களுக்கு முன் வீசிய



புயலால் அங்கும் டெலிபோன் தொடர்புகள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டிருந்தன. அலைந்து திரிந்து ஒருவாறு புவனேஸ்வர் விமான நிலையத்தோடு பேசவே இவ்வளவு நேரமாகி விட்டது. நண்பர் கூறிய விவரத்தைக் கிருஷ்ணசந்திரன் மனைவியிடம் கூறி முடிக்கையிலேயே, மீண்டும் டெலிபோன் அழைக்க, இப்போது உலகநாதனே பேசினார்.

அவர் குரல் கேட்டதுமே உதியிடம் ரிசீவரைக் கொடுத்து விட்டான் கிருஷ்ணசந்திரன்.

''அப்பா... அப்பா!'' என்று விசும்பி விட்டு ''முதலில் எனக்கு சித்தியுடன் பேச வேண்டுமப்பா'' என்று தந்தையிடம் கேட்டு யசோதாவிடம் சற்று நேரம் அழுகையும் சிரிப்புமாய் செல்லம் கொண்டாடினாள் பெண்.

''உங்களை இனி மேல் பார்க்கவே மாட்டேனோ என்று பயந்தே போனேன் சித்தி'' என்று உதயரேகா குரல் தழுதழுக்க அந்தத் தாயும் அதையே எதிரொலித்தாள்.

''கொஞ்சுவதற்கு இப்போது நேரமில்லை, கொடு'' என்று உலகநாதன் மீண்டும் டெலிபோனை வாங்கி, ''உதி எங்களுக்கு ஒன்றுமில்லை என்று தாத்தா வீட்டுக்கு தகவல் கொடுத்து விடம்மா. அவங்களாக இந்த விவரம் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை என்றாலும் சின்ன மாமா வீட்டில் இருந்து மெனக்கெட்டு கிளம்பி போய் காபரா படுத்தி விடுவார்கள். இங்கே எல்லோரும் அவரவர் வீட்டோடு பேசக் காத்திருக்கும் போது நான் இன்னொரு கால் போடுவது சரியல்ல. அத்தோடு அவர்களுக்கு போஸ்ட் ஆபீசில் சொல்லி அழைத்து வரும் வரை காத்திருக்க வேண்டும். அதனால் நீயே கூப்பிட்டுச் சொல்லி விடு. இப்போது மாப்பிள்ளையிடம் கொடு'' என்று கூறித் தன் மருமகனிடம் இரண்டொரு வார்த்தை பேசி விட்டு வைத்தார்.



விழிகளில் ஆனந்தக் கண்ணீரும் இதழ்களில் சிரிப்புமாகத் தாங்க்யூ என்று கணவன் தாடையிலே லேசாக இதழ் ஒற்றினாள் உதயரேகா.

சில வினாடி நேரம் அசைவற்று இருந்து அதை ஏற்றவன், அவளையும் எழுப்பித் தானும் எழுந்தபடி ''அங்கே ஏதாவது பிரச்சனை வரும் முன் அப்பா சொன்னபடி உன் தாத்தாவுக்கு முதலில் தகவல் கொடு. அங்கே உள்ள போஸ்டாபீஸ் நம்பர் என்ன?'' என்று மனைவிக்கு அவளுடைய தந்தையால் இடப்பட்டிருந்த பணியை நினைவூட்டினான்.

''ஆமாம் சீக்கிரமாய் அதைச் செய்ய வேண்டும். ஏனென்றால் அந்தச் சின்னம்மா கொஞ்சம் ஒரு மாதிரி'' என்றுரைத்தபடி அறைக்குள் ஓடிப் போய் அவளது டயரியை எடுத்து வந்தாள் அவள்.

''நீயே சொல்லிக் கொள்வாய் இல்லையா? இரவு தூங்காதது இப்போது தூக்கம் வருகிறது. நீ கூட டெலிபோன் செய்து முடித்த பின் பேசாமல் பகல் முழுவதும் தூங்கி விடு, உதயா...'' என்றபடி அவனது அறைக்குள் சென்று மறைந்தான் கிருஷ்ணசந்திரன்.

அதற்குள் ''உதி'' உதயா வாகி விட்டதா?

ஆயினும் உதயரேகாவுக்குச் சிரிப்புதான் வந்தது.

யசோதாவுடைய தந்தையிடம் விஷயத்தைச் சொல்லி உண்மையாகவே ஒன்றுமில்லை என்று ஒருவாறு நம்பச் செய்து முடித்த போது அவளுக்கும் அயர்வாகவே இருந்தது.

நாகராஜனை அழைத்து அய்யாவுக்கு மட்டும் சாப்பிட எடுத்து வைத்து விட்டு எல்லோருக்கும் சாப்பாடு போடும் படி சொல்லி விட்டுப் படுத்தாள்.

பெற்றோர் நலமாக இருக்கவே கடந்த சில மணி நேரங்களில் அனுபவித்த துன்பம் அடியோடு மறந்து போய் விட கணவனின் தாடையில் முத்தமிட்டதே நினைவு வந்தது. ஷேவ் பண்ணாத சருமத்தின் சொர சொரப்பு மீண்டும் அவளது உதடுகளில் குறுகுறுக்க முறுவலித்தபடியே உதய ரேகா உறங்கிப் போனாள்.

முன்னொரு யுகத்தில் மந்தர மலையைக் கொண்டு கடலைக் கஷ்டப்பட்டுக் கடைந்தபோது அமுதம் கிடைத்ததாம். முன் நாள் இரவின் பல மணி நேர வேதனைகளும் அமுதம் போல ஒரு நல்ல பலனையே தந்திருப்பதாகவே உதயரேகாவுக்குத் தோன்றியது.

அன்று மதிய நேரம் உதயரேகா விழித்த போது கிருஷ்ணசந்திரன் வெளியே சென்று விட்டு இருந்தான்.

வீடு வரத் தாமதமாகும். இரவு உணவு வேண்டாம் என்று அவன் தகவல் கொடுத்த போதும் அவளது உற்சாகம் மட்டுப்படவில்லை.

இரவிலும் அவன் வீடு திரும்பிய போது வெகு நேரம் ஆகி விட்டிருந்தது. அப்போதும் புன்னகையோடு எதிர் கொண்ட மனைவியிடம் "எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது. நீ என்ன சொல்ல வேண்டியிருந்தாலும் அதைக் காலையில் பார்க்கலாம்'' என்று நில்லாமலேயே சொல்லிய படி சென்று அவனது அறைக்குள் புகுந்து கொண்டான்.

இல்லை இல்லை என்று மறுத்தது இல்லை என்றாகி விட்டதே என்று வெட்கமா இவனுக்கென்ன வந்தது? வெண்ணெய் திருடிய கண்ணன் வெட்கப்பட்டான் என்றால் அவன் கையில் இருந்தது திருட்டுப் பொருள். உதயாவுக்கு வேடிக்கையாகத்தான் இருந்தது. வழக்க விரோதமாக உதய ரேகாவுக்கு அன்று அதிகாலையிலேயே விழிப்பு தட்டி விட்டது. பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு மொட்டை மாடியில் வந்து நின்று பார்த்தாள்.



கீழ்த்திசையில் சிவப்பு ரேகைகள் தொடங்கி அவை விரைவிலேயே விரிந்து கீழ்வானம் முழுமைக்கும் பரவித் தொடர்ந்து பொட்டாய் ஒரு பொன்னொளி தோன்றி வளர்ந்து அது வானமெங்கும் பரவிற்று.

ஒன்று தோன்றவும் கீழிறங்கிச் சென்று தோட்டத்தை அடைந்தாள். எண்ணற்ற மலர்கள் மொட்டவிழ்ந்து மடல் விரிந்து, மலர்ந்து கொண்டிருந்தன. இத்தனை பூக்களுமா சூரியனுக்காகக் காத்திருக்கின்றன?

காந்திமதி திட்டமிட்ட தோட்டம் அழகும் மணமுமாகக் கண்களுக்கும், நாசிக்கும் விருந்தளிக்கச் சற்று நேரம் அதைப் பார்த்து விட்டு மீண்டும் படியேறி மாடிக்குப் போனாள்.

கிருஷ்ணசந்திரன் வழக்கமான இடத்தில் பத்திரிகை களோடு அமர்ந்திருந்தான்.

மென்னடையாக வந்தவளுக்குப் பத்திரிகைக்கு வெளியே அவனது தாடை தென்பட்டது. முந்தைய நாளின் அதே ஒரு நாள் தாடி வளர்ச்சியோடு.

அணுகிச் சென்று குனிந்து கணவனின் தாடையில் முத்தமிட்டாள் எந்தவித தயக்கமும் இல்லாமல். 'குட்மார்னிங்' என்றாள் குதூகலத்துடன்.

பத்திரிகையில் இருந்து பார்வையை அகற்றாமலேயே சற்று விலகி, "நேற்றைய உன் நிலைக்கு இரங்கியதைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டாய் என்று தோன்றுகிறது. அந்த நிலையில் யார் இருந்தாலும் நான் அதே போல் ஆறுதல் அளித்துதான் இருந்திருப்பேன்'' என்றான் கிருஷ்ணசந்திரன் நிதானமாக.

'எப்படி எப்படி? அதே போல ஆறுதலா? அப்படி யாரோடு அணைத்தா?'' கலகலவென்று நகைத்து,



"கொஞ்சம் வேறு மாதிரி கதை யோசியுங்களேன். ப்ளீஸ்'' என்றாள் அவள் கொஞ்சலும் கேலியுமாக.

தலையசைத்து, "இல்லாததை இருப்பதாக எண்ணி ஏமாற வேண்டாம், உதயரேகா...'' என்றான் அவன்.

"உதயரேகா... வா! மீட்டர் அளவுக்கு நீ... ளமாய் அழைப்பதுதான் உங்களுக்கு பிடிக்கிறது என்றால் உங்கள் இஷ்டம். ஆனால் நான் உங்களுக்கு ஒரு குட்டிப் பெயர் வைத்து விட்டேனாக்கும். என்ன தெரியுமா? கிருஷ். கிறுகிறு கிருஷ் கொஞ்... சம் கிறுக்கு கிருஷ்...'' என்று முத்துப்பல் வரிசை தெரிய மோகனமாய் முறுவலித்தாள்.

"சொன்னால் புரிந்து கொள்ள மாட்டாயா?'' என்றான் அவன் அலுப்புடன்.

அவனை ஏறிட்டு, "மனைவியிடம் அன்பு கொள்வது இயற்கைதானே, கிருஷ்? அதை ஏன் மறுதலிக்க முயற்சிக்கிறீர்கள்?'' என்று வினவினாள் உதயரேகா.

வேண்டுமென்றே அவள் பேச்சைப் புரிந்து கொள்ள மறுத்து, "எல்லாமே இயற்கை வழியிலா நடக்கிறது? ரத்த சம்பந்தம் உடைய தந்தையை விட நீயே சித்தி சித்தி என்றுதானே உருகுகிறாய்?'' என்றான் அவன்.

"இதில் இயற்கைக்கு மாறாக என்ன இருக்கிறது? தாய்க்கும் பிறகுதானே தந்தை? சித்தி என் தாய். அதிலும் அப்பா வேலை, வேலை என்று போய் விடுவதால் எங்கள் மூவருக்குமே எல்லாமே சித்திதான்'' என்றாள் அவள்.

"எப்படியும் உன்னைப் பொறுத்த வரையில் ரத்தத் தொடர்பு உடையவர் தந்தைதானே?''

"ஆனால்...'' என்று விடையளிக்கத் தொடங்கியவள் அவன் முகத்தில் ஒரு கூர் பார்வை செலுத்தி "பேச்சை மாற்ற முயற்சிக்கிறீர்கள்'' என்றாள்.



"புரிந்து கொண்டால் சரி'' என்று ஒரு மாதிரிக் குரலில் கூறி விட்டு எழுந்தான் அவன்.

இறைவனாகப் பார்த்து கொடுத்தது என்று அவள் முடிவு கட்டியிருந்த இந்த வாய்ப்பை வீணாக விட்டு விட்டுச் சும்மா இருக்க உதயரேகா சற்றும் தயாராக இல்லை.

எனவே மீண்டும் மீண்டும் கணவனை நெருங்கிக் கேட்டாள்.

கவர்ச்சிகரமான போஸ்களும், காதல் சேஷ்டைகளும் செய்யாத போதும் அவனைக் கைப்பற்றி தோள் தொட்டு நிறுத்திப் பேசுவதில் இப்போது அவளுக்குத் தயக்கமோ கூச்சமோ இருக்கவில்லை.

விடாப்பிடியாக அவள் தொடர்ந்ததன் பயனாக கிருஷ்ணசந்திரன் வீட்டில் இருக்கும் நேரம் வெகுவாகக் குறைந்து போயிற்று. அதிகாலையில் கிளம்பிச் சென்றானானால் ஊர் அடங்கும் நேரத்திற்கு முன் திரும்புவது இல்லை.

ஆனால் அந்த நேரத்திலும் அவனைப் பின்பற்றி சென்று அவன் தோளைப் பற்றி தன்புறம் திருப்பி, "நீங்கள் என்ன ஓட்டம் ஓடினாலும் நான் விடப் போவதில்லை. கிருஷ். உங்கள் மனதில் என்மேல் அன்பே இல்லை என்றால் அது வேறு விஷயம். ஆனால் நெஞ்சு நிறைய அன்பை வைத்துக் கொண்டு மறைப்பது ஏன்? சொல்லுங்கள்'' என்று விடாமல் கேட்டாள் உதயரேகா.

பொறுமை இழந்தாற்போல் "என்ன அன்பு? என்ன மறைப்பு? எல்லாம் இதுதான் என்றால் பெற்றுக் கொள்... போ'' என்றுரைத்தவன், சட்டென்று அவளைப் பற்றி அழுந்த முத்தமிட்டான்.

உதயரேகா திகைப்பு மாறி நெகிழத் தொடங்குகையி லேயே அவளைத் தள்ளி விடாத குறையாக விலக்கி

நிறுத்திவிட்டுத் தள்ளாடியவாறு தன் அறையை நோக்கி நடந்தான் அவன்.

தள்ளாட்டம். என்ன அநியாயம் அவளுடைய கணவ னிடமிருந்து கிடைத்த முதல் இதழணைப்பு இப்படியா இருக்க வேண்டும்? ஆனால்...

மீண்டும் முரண்பாடு உதயரேகாவை உறுத்தியது. குடி மயக்கத்தில் தள்ளாடுகிறவன் வாயில் மதுவாடையே இல் லையே?

ஒரு வேளை வாயில் வாடை அடிக்காதா?

குடி போதையை நிர்ணயிக்க வாயால் ஊதச் சொல்லு வது நினைவு வரவே அவள் மீண்டும் குழம்பினாள். ஒரு வேளை குடித்து வெகு நேரம் ஆகி விட்டதா? ஆனால் தள்ளாடுகிறான். ஒரு வேளை முத்தம் வேறு, மூச்சுக் காற்று வேறா?

உதயரேகா இதயம் பட படவென்று அடித்துக் கொண் டது. கணவன் குடிகாரனா? அல்லது....?

இதை எப்படித் தெரிந்து கொள்வது?

ஆனால் ஒரு குடிகாரனின் முத்தத்தில் மதுவாடை அடிக்குமா? இல்லையா? என்று எந்த மறுவாழ்வு மையத் தில் போய் விசாரிக்க முடியும்?

உதயரேகா குழம்பித் தவிக்க, அடுத்து இரு தினங்கள் கிருஷ்ணசந்திரன் வீட்டிற்கே வரவில்லை. வேலையிருப்ப தாகத் தகவல் மட்டுமே வந்தது. அதுவும் வேறு வகையாய் ஒரு குழப்பம்தான்.

மூன்றாம் நாள் இரவில் அவன் வீடு திரும்பிய போது அவனோடு ஒட்டிக் கொண்டு ஓர் இளம் பெண்ணும் வந்தாள்.



தோளில் மாட்டிய பெரிய பையும், அதில் சில பத்திரிகைகளுமாக வந்த அந்தப் பெண்ணைத் தோளோடு தழுவியவாறே அழைத்துச் சென்ற கிருஷ்ணசந்திரன் அவ னது அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டான்.

## 17

இரு தினங்களாக இரண்டு பகல், ஈசிரவுகளாகக் கிருஷ்ணசந்திரன் வீட்டுப் பக்கம் எட்டிக் கூட பார்க்க வில்லை.

அன்று அவளை அலுப்பும் சலிப்புமாக முத்தமிட்டு அறைக்குள் சென்றவன் மறுநாள் காலையில் அலுவலகம் செல்வதற்கான உடையுடன் தான் அறையை விட்டே வெளியே வந்தான்.

கணவன் அவ்வளவு சீக்கிரம் கிளம்பக் கூடும் என்று எதிர்பார்த்திராத உதயரேகா அவசரமாகச் சமையல் அறைப் பக்கம் செல்லவும், ''எனக்கு இப்போது எதுவும் வேண்டாம்'' என்று பொதுப்படையாக உரைத்தபடியே மடமடவென்று வெளியேறிச் சென்று விட்டான்.

அன்றிரவு அவன் வீடு திரும்பவில்லை.

எட்டு மணி அளவில் ''இன்று எனக்காக காத்திராமல் கேட்டைப் பூட்டி விடச் சொல். நான் வருவதற்கில்லை என்று மொட்டையாக ஒரு டெலிபோன் தகவலுடன் முடித்து விட்டான்.

ஏன் வரவில்லை? வெளியூர் போகிறானா? தொழிற்சா லையில் முன்பே ஒப்புக் கொண்ட வேலை எதுவும் முடிக்க வேண்டியதாகி அங்கே இருக்கிறானா என்ன, ஏது? என்று அவளுள் ஆயிரம் கேள்விகள்.

ஆனால் யாரிடம் கேட்பது?





மறுநாள் காலையிலும் கணவன் வராது போகவும் அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு விசாரித்தாள். விசா ரிப்பதில் கூட ஒரு குழப்பம். வந்தாரா? வரவில்லையா? எப்போது வந்தார்? என்று வேவு பார்ப்பது போலத் தோன்றி விடக் கூடாது.

எனவே டெலிபோனை எடுத்த செகரெட்டரியிடம் ''அவரிடம் ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறதே'' என்று ஆழம் பார்த்தாள்.

வந்திருக்கிறானா இல்லை என்றால் தொழிற்சாலை, மீட்டிங் என்று எங்கிருந்தாலும் தெரிந்து விடும் அவனே பேசினால் இரவு ஏன் வரவில்லை என்று ஏதோ பேசிக் கொள்ளலாம்.

''ஆனால் முக்கியமான வேலை. எந்த இடையூறும் கூடாது என்று சொல்லியிருக்கிறாரே மேடம்...'' என்று அந்தப் பெண்மணி மரியாதையுடனேயே மறுத்தாள். ஆனால் ''மேடம், அவருக்கு நீங்கள் அழைத்ததாக குறிப்பு அனுப்பி வைக்கிறேன். அவரே தொடர்பு கொள்வார்'' என்றாள் தொடர்ந்து.

செகரெட்டரி சொன்னதைச் செய்திருப்பாள் என்பதில் உதயரேகாவுக்கு ஐயமில்லை. ஆனால் கிருஷ்ணசந்திரன் அவளை நாடிப் பேசவே இல்லை.

மறு நாளும் இதுவே தொடரவும் உதயரேகா அதிர்ந் தாள். அவளைப் பார்க்க, பேச, எதுவுமே பிடிக்காமல் என்ன இது? அவன் இவ்வளவு வெறுப்படைய அப்படி பெரிதாக என்ன நடந்து விட்டது?

ஒரே ஓர் இதழணைப்பு!

அதையும் அவள் ஒன்றும் கீழ்த்தரமாக நடந்து, பாலுணர்வைத் தூண்டி விட்டுப் பெறவில்லையே?



அல்லது வாழ்க்கையை சீரமைக்க அவர் இடை விடாது முயன்றதை இதற்காகத்தான் பறக்கிறாள் என்று எண்ணி விட்டானா?

கணவன் என்ன நினைக்கிறான்? என்ன செய்கிறான்? என்று எதைத்தான் அவளால் கண்டு கொள்ள முடிந்தது? அவனைப் பற்றிய ஆயிரத்தெட்டு குழப்பங்களில் இதுவும் ஒன்று என்று பெருமூச்சுடன் ஒதுக்க முயன்றாள் உதயரேகா.

எப்படியோ அவன் உள்ளூரில்தான் இருக்கிறான் என்பது தெளிவுபட்டது. பகலில் அவன் இருக்கும் இடமும் தெரிந்து போயிற்று. ஆனால் இரவில்...?

அதிலும் இரண்டாம் நாள் இரவு வருவதற்கில்லை என்று கிருஷ்ணசந்திரன் டெலிபோன் செய்த போது (அதி லெல்லாம் அவன் ரொம்பவும் ஒழுங்குதானே!) அருகில் ஒரு பெண்ணின் சிரிப்பொலியும் கேட்கவும் உதய ரேகா வுக்கு குழப்பத்தோடு கோபமும் கூட உண்டாயிற்று.

அவ்வளவு அருகில் அவனை ஒட்டிக் கொண்டு நிற்கிறாளா? அவள்? ஆனால் அது வேறு யாராவதாகவும் இருக்கலாம்...

தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டு, எங்கே இருக்கிறான், எப்போது வருவான் என்று அவள் விசாரிக்கத் தொடங்கு முன் எதிர் முனையில் அவன் டெலிபோனை வைத்து விட்டிருந்தான்.

அவளுக்கு பேசுவதற்கு வாய்ப்பளிக்கும் நாகரீகம் கூட இல்லாமல் வைத்து விட்டானே?

சுர்ரென்று பொங்கிய சினத்துக்கு வடிகால் கிடைக்கா மல் குறுக்கும் நெடுக்குமாகக் கால் ஓயுமட்டும் நடந்தாள் அவள்.

கிருஷ்ணசந்திரன் எங்கிருக்கிறான்? என்ன செய்கிறான்? தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போலக் குமைந்தபோதும், இதுபற்றி யாரிடமும் அவள் மூச்சுக்கூட விடவில்லை. அவனைப் பெற்ற தாய் - அவளிடமும் ஒரு தாயின் பிரியத்தோடு பழகுகிறவளான காந்திமதியிடம் விசாரிக்கக் கூட அவளது தன்மானம் இடம் தரவில்லை.

மணமாகி மூன்றே மாதங்களுக்குள் உள்ளூரில் அதுவும் இரவில் கணவன் தங்கியிருக்கும் இடம் எது என்று அவனுடைய இளம் மனைவிக்குத் தெரியவில்லை என்றால் அதன் பொருள் என்னவாக இருக்க முடியும்?

கணவனின் இருப்பிடம் பற்றி மற்றவர்களிடம் விசாரிப்பதை விட அவளது திருமண வாழ்வு தோல்வியுற்று விட்டதாக அவள் தமுக்கடித்துச் சொல்லி விடலாம்.

இன்னமும் தோல்வியுற்று விட்டதாக அவளால் ஒத்துக் கொள்ளவும் முடியவில்லை. அவள் தோற்றுவிட்டதாக பிறர் எண்ணுவதைச் சகிக்கவும் அவளால் இயலவில்லை.

புகையும் எரிமலையாய்த் தனக்குள்ளேயே குமுறிக் கொண்டு இருந்தவளிடம் சமையல்காரன் நாகராஜன் வந்து நின்றான். தன் மாதாந்திர விடுமுறையை ஒரு வாரம் முன்னதாக அன்று எடுத்துக் கொள்ளும்படி அய்யா இரண்டு நாள் முந்தியே அனுமதி கொடுத்து விட்டுப் போனதாகச் சொல்லி அன்று கிளம்பட்டுமா என்று அவன் கேட்ட போது அவளுக்குக் கொஞ்சம் ஆறுதலாகவே இருந்தது.

இவன் செய்து வைத்து விட்டானே வேண்டாம் என்றால் வருத்தப்படுவான் என்று கஷ்டப்பட்டு உணவை விழுங்க வேண்டாம்.



சமையல்காரனின் சம்பளப் பணத்தையும் அவனுடைய பெற்றோரிடம் வளரும் தாயற்ற சிறுமியான மகளுக்கென்று அவள் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த பாவாடை சட்டையையும் கொடுத்து உதயரேகா அவனை அனுப்பி வைத்தாள்.

வீடு பெருக்கித் துடைத்து, துணி துவைக்கிறவளும், தோட்டக்காரனும் வேலை முடிந்ததும் அவரவர் வீட்டுக்குப் போய் விடுகிறவர்கள்.

எடுபிடிப் பையன் மட்டும்.

வேளைக்கு வெளியே போய்ச் சாப்பிட்டு விட்டு வருமாறு அவனிடம் பணம் கொடுத்து அனுப்பி விட்டு அமைதியற்று வீட்டினுள் அலைந்து கொண்டிருந்த போது அவளுக்கு ஒன்று உறைத்தது.

இரண்டு நாட்களாக வீடு வராத கணவனின் பாராமுகத்தை விடவும் அவனது பிரிவே உதயாவை மிகவும் அதிகமாக பாதித்து இருக்கிறது. அவனைப் பார்ப்பதும் அவன் குரலைக் கேட்பதும் மூச்சுக் காற்று போல அவளுக்கு இன்றியமையாததாகி விட, கணவனைக் கண்ணால் பார்த்தாலே போதும் போல ஓர் ஏக்கம் பெரும் சுமையாக அவள் மனதை அழுத்தியது.

நாயை அவிழ்த்து விட்டு விட்டு வெளியே போய் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எடு பிடிப் பையனை அனுப்பி விட்டு இலக்கற்று அவள் வீட்டினுள் திரிந்து கொண்டு இருந்த போது தான் கேட் திறந்து அவனது கார் உள்ளே வரும் சத்தம் கேட்டது.

அவன்தான்!

ஆவலோடு மாடியில் இருந்து வேகமாக இறங்கி ஓடி வந்தவளின் கண்ணெதிரே இன்னொரு பெண்ணைப் பாதி



அணைத்தாற் போல வந்து கொண்டிருந்தான் அவளுடைய அருமைக் கணவன்.

தன் கண் கண்ட காட்சியை நம்ப மாட்டாதவளாக மனைவி, திக் பிரமித்து, நிற்பதை லட்சியமே செய்யாமல் அந்த இன்னொருத்திக்குக் கைவாகு கொடுத்து மாடிக்குக் கூட்டிச் சென்றான் கிருஷ்ணசந்திரன்.

இவனது தாங்கல் இல்லா விட்டால் படிகளில் உருண்டு விழுந்து அவள் செத்துவிடுவாளா? என்று உள்ளம் கொதித்தது உதயரேகாவுக்கு.

ஆனால் இதற்கு என்ன செய்வது?

கண்ணை இருட்டிக் கொண்டு கோபம் வந்ததே தவிர, அந்த வினாடியில் செய்ய வேண்டியது என்னவென்று உதயரேகாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

கிட்டத்தட்ட இருபத்து மூன்று வயதை எட்டிக் கொண்டிருந்த உதயரேகா, தனது இத்தனை ஆண்டு வாழ்நாளில் இப்படி ஒரு நிலைமைக்குத் தன்னைச் சித்தப்படுத்திக் கொள்ளவே இல்லையே?

கணவன் உத்தமன் என்று நம்பி அவனுக்கு அவள் கழுத்தை நீட்டவில்லை. உண்மையே.

குடிகாரன், தரமற்ற பெண்களோடு தகாத உறவு கொண்டிருந்தான் என்பதையும் அறிந்தேதானே அவனை மணந்து கொண்டாள்.

அவனைத் திருத்தி நல்ல வாழ்வு வாழ வைக்க வேண்டும்; அவனுடைய பெற்றோரின் வாடி விட்ட முகங்களிலே புன்னகையை மீண்டும் மலரச் செய்ய வேண்டும் என்ற உன்னத நோக்கங்களுக்காக மனதில் உறுதியோடு அவனுக்கு மாலையிட்டாள்.



பிழை திருத்தும் முயற்சியில் சிறு வெற்றி பெற்று விட்டதாகக் கூட எண்ணியிருந்தாள்.

ஏனெனில் அவ்வப்போது அதுவும் கூட எப்போதாவது ஒரு நாள்தான் அவன் தள்ளாடிய போதும், இந்த பிழை வழி அவன் செல்லவே இல்லையே. ஆக இரண்டொரு நாட்கள் கிருஷ்ணசந்திரன் தங்கியிருந்தது இவள் வீட்டில்தானா?

அவன் டெலிபோன் செய்த போது கேட்ட அந்த சிரிப்பொலி! டெலிபோன் செய்ததே இவள் வீட்டில் இருந்துதானோ?

என்ன அநியாயம்?

அவளை இங்கேயே அழைத்து வர இவனுக்கு என்ன துணிச்சல்? அவனோடு கூட வர அவளுக்கும்தான் என்ன தைரியம்?

அந்தக் காலத்தில் ஆண் ஆதிக்கம் மிகுதியாக இருந்த அந்த நாளில் கூட கண்ணகி இருந்த வீட்டுக்குக் கோவலன் மாதவியைக் கூட்டி வரத் துணியவில்லை. வருவதற்கு மாதவிக்கும் தைரியம் இல்லை. இன்றைக்கு இந்த இருவருக்கும் இவ்வளவு திமிரா?

அந்தப் பெண்ணைத் தலைமுடியைப் பிடித்து இழுத்துச் சென்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள வேண்டும் போல உள்ளுணர்வு உந்தியது. வெகுதீவிரத்துடன்.

தள்ளத்தான் வேண்டும்.

ஏனெனில் இது நாசுக்குப் பார்க்கிற நேரம் அல்ல. முதலில் அந்தத் தெரு நாயை வீட்டை விட்டுத் துரத்தியாக வேண்டும். துரத்தியே ஆக வேண்டும். பிறகு அவனைக் கவனிக்க வேண்டும்.

இன்னமும் இப்படியும் செய்வானா என்ற திகைப்பு மறையவில்லை. கூடவே இப்படிச் செய்வதா என்ற ஆத்திரமும் இந்த வீட்டில் ஓர் அசிங்கம் நடக்க விடக் கூடாது என்ற பிடிவாதமுமாகப் படியேறிச் சென்று கணவனின் அறைக் கதவை உதயரேகா ஓங்கித் தட்டினாள்.

இந்த இடையீட்டை எதிர்பார்த்தவனைப் போல அவள் இரண்டாம் தடவை தட்டுவதற்கு முன்பாக சுளித்த புருவங்களும், கோப முகமுமாக, அவனை அவள் கண்ட முதல் நாளை ஞாபகப்படுத்தியபடி, கிருஷ்ணசந்திரன்தான் கதவைத் திறந்தான்.

"இந்..த நேரம் கதவைத் தட்டுகிறாயே, நாகரீகம் இருக்கிறதா?" என்ற கேள்வி வேறு.

கொதித்து, "நாகரீகம் பற்றி நீங்கள் பேசுகிறீர்களா? மனைவி இருக்கிற இடத்திற்கு இப்படி ஒருத்தியை அழைத்து வந்திருக்கிறீர்களே; உங்களுக்கு நாகரீகம் என்றால் என்னவென்று ஏதாவது தெரியுமா? அல்லது உங்களோடு ஒட்டிக் கொண்டு திறந்த வீட்டில் ஏதோ ஒன்று மாதிரி உள்ளே வந்து உட்கார்ந்திருக்கிறாளே, இவளுக்கும் தான் அப்படி ஒரு வார்த்தை இருப்பதேனும் தெரியுமா?" என்று, உள்ளே அவனது நாற்காலியில் உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணை நோக்கி கண்களில் தீயெழ உறுத்தாள்.

அவள் தன் கையில் இருந்த பத்திரிகையைக் ஆழ்ந்த கவனத்துடன் படித்துக் கொண்டிருந்தாள் போலும், கணவன் மனைவி சச்சரவில் அந்தக் கவனம் கலைந்து விட தன்னைக் கைநீட்டிக் காட்டி, உறுத்து நோக்கிய உதயரேகாவைச் சிறு திகைப்புடன் விழியகல நோக்கினாள்.

'ஒன்றும் தெரியாத பாப்பா, உள்ளே போய்ப் போட்டுக் கொள்வாளாம் தாழ்ப்பாள்' என்றால் அது இவளுக்குத் தான் முழுக்கப் பொருந்தும் என்று ஆத்திரத்துடன் நினைக்



கும் போதே, இவளை எங்கோ பார்த்திருக்கிறோம் என்ற எண்ணமும் உதயாவிற்கு உண்டாயிற்று.

இதுபற்றி மேலே யோசிக்கு முன்பே, கிருஷ்ணசந்திரன் புருவம் நெரிய முன்னிலும் சினம் மிகப் பேசினான். "ஆமாம், தெரியாதுதான். நாகரீகம் என்றால் அதை எழுத்துக் கூட்டிப்படிக்கக்கூட எங்கள் இருவருக்கும் தெரியாது தான். அதற்காக உன்னால் என்ன செய்ய முடியும்? உன் மாமியார், மாமனாரிடம் முறையிடுவதானால்... வெல், அவர்களது டெலிபோன் நம்பர் உனக்குத் தெரியும். அன்றி, வீட்டை விட்டு வெளியேறுவதானால் கார் வெளியே நிற்கிறது எடுத்துக் கொண்டு தாராளமாகப் போகலாம். இல்லை... அடியோடு முழுக்குப் போட்டு விட்டு நீ ஒரேயடியாக விலகி விடுவதானாலும் அதற்கும் முன்பே என் சம்மதம் தந்தாயிற்று... விவாகரத்துக்கு இதையே நீ காரணமாகப் பயன்படுத்திக் கொள்வதானால், அதுவும் எனக்கு ஒப்புதலே போதுமா? தயவு செய்து இப்போது என்னைத் தொல்லை செய்து என் நேரத்தை வீணடிக்காதே. நான் கொஞ்சம் சந்தோஷமாக இருக்கப் போகிறேன். இன்னொன்றும் நினைவில் வை. இன்றைய இரவில் நீ எத்தனை தரம் தட்டினாலும் இனி நான் இந்தக் கதவைத் திறக்கப் போவதும் இல்லை. குட்பை" என்று கூறிக் கதவை ஓங்கியறைந்து சாத்தித் தாளிட்டான்.

முகத்திலேயே அறைந்து சாத்தி விட்டாற் போல் அவளுக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு ஹோவென்று வந்தது.

அவளைத் தொட்டுத் தாலிகட்டிய கணவன் - தாலி கட்டிய நாளிலிருந்து அவன் தீண்டாமை விரதம் காத்தான் என்பது வேறு விஷயம் - அவளது கவுரவம் காக்கக் கடமைப்பட்ட அவனே இன்னொரு பெண் முன் அவளை அவமானப்படுத்தி விட்டானே!



அவனுடைய மனைவி - ஒரு குடும்ப விளக்கு பிரகாசிக்கும் இடம் என்ற கூச்சம் இல்லாமல், அவளும் தான் எவ்வளவு ஸ்டைலாக கால் மேல் போட்டு கால் அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள்.

பத்திரிகை!

அந்த விநாடியில் அவள் அனுபவித்த வேதனை தவிப்பு அத்தனையும் மீறிக் கொண்டு அந்த முரண்பாடு உதயரேகாவை உறுத்தியது.

## 18

முகத்திற்கு நேரே மூடப்பட்டு விட்ட கதவின் முன் பிச்சைக்காரி போல நிற்க அருவருப்புற்று அகன்ற உதயரேகாவுக்குக் கையில் பத்திரிகையோடு இருந்த அந்தப் பெண்ணின் தோற்றம் மனதில் திரும்பத் திரும்பத் தோன்றி உறுத்தியது.

இந்த மாதிரி இரவைக் கழிக்க வருகிறவள் இப்படியா பத்திரிகை படித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாள்?

கிருஷ்ணசந்திரன் வேறு அவள் கதவைத் தட்டுவதற்காகவே காத்திருந்தவன் போல, அதுவும் கதவின் அருகிலேயே காத்துக் கொண்டிருந்தவன் போல அடுத்த தட்டு தட்டுமுன் கதவைத் திறந்தான்.

விட்டுப் பிரிய மாட்டாமல் வீடு வரை அழைத்து வந்து விட்டு அந்த இருவரின் நடவடிக்கையுமே அவளுக்கு இயல்புக்கு முரணாகத்தான் தோன்றியது.

ஆனால் கிருஷ்ணசந்திரனிடம் முதலிலிருந்தே அவள் கேட்டது கண்டதெல்லாம் முரண்பாடுகள்தாமே!



படித்து முடித்து, தொழிலில் ஈடுபட்டு சில காலம் வரை மாடல் மகனாக வாழ்ந்தவன் திடுமெனக் குடியும் கூத்தியுமாக ஆனது ஒரு முரண்பாடு.

முதல் சந்திப்பில் அவனது பேச்சு மாறிய விதமும் முரண்பாடுதான்.

நல்லபடியாக இயல்பான வாழ்வு வாழமாட்டேன் என்றதும் இயற்கைக்கு மாறானதுதான்.

அவளுக்காக அக்கறையுடன் பார்த்துப் பார்த்துச் செய்து உருகுகிறவன், அவளை மனைவியாக ஏற்கமறுப்பதோடு, மணவிலக்கு அளிக்க முன் வருவது கொஞ்சம் கூட ஒத்துக் கொள்ள முடியாத முரண்பாடுதான்.

அவைகளோடு ஒத்திட்டுப் பார்க்கும் போது, அந்தப் பெண் அறைக்குள் சஞ்சிகை படித்துக் கொண்டு இருப்பது ரொம்பவும் சாதாரணமானதுதான் ஆனாலும்...

சட்டென அவளது அறைக்குள் சென்று ஜன்னல் வழியே, அடுத்த அறையிலிருந்து வந்து தோட்டத்தில் விழுந்த வெளிச்சத்தையும், நிழல்களையும் ஊன்றிக் கவனித்தாள்.

மேஜை விளக்கைப் போட்டுக் கொண்டு அந்தப்பெண் அப்போதும் அந்தப் பத்திரிகையில்தான் கவனமாக இருந்தாள்.

அப்படித்தான் தோட்டத்தில் விழுந்த நிழல் உரைத்தது.

கிருஷ்ணசந்திரன் இருக்கும் இடமே தெரியவில்லை.

படுத்துவிட்டான் போலும்! ஆனால் இவள்? விழுந்து விழுந்து அப்படி என்ன தேர்வுக்குப் படிக்கிறாள்?

அவளைப் பற்றி வெகு தீவிரமாகச் சிந்தித்துப் பார்த்தாள்.

எங்கேயோ பார்த்த முகம் என்றதற்கு மேலாக அவளை அடையாளம் காண உதயரேகாவால் முடிய வில்லை.

கையிலேயே பத்திரிகை கொணர்ந்தாளோ! அவளது கைப் பையிலிருந்து கூட சில வார, மாத சஞ்சிகைகள்தான் தலை நீட்டின. பையில் அடங்காத பெரியதைக் கையில் ... அது பிலிமாலயா!

வெளியே ஓடிச் சென்று, டீபாயின் கீழ்த்தட்டில் அடுக்கி வைத்திருந்த பத்திரிகைகளில் இருந்து பிலிமால யாவை மட்டும் எடுத்துப் புரட்டினாள்.

அந்தப் பெண்ணைப் பற்றிய கட்டுரை ஒன்று அவளது சில புகைப்படங்களுடன் பத்திரிகையில் பிரசுரமாகி இருந் தது.

ஆக, இதைத்தான் இப்படிக் கிடந்து படிக்கிறாளா?!

அவள் முகம் பழக்கப்பட்டதாகத் தோன்றிய காரண மும் புரிந்தது.

ஆனால் அவளது படத்தின் கீழ் 'வளர்த்துடிக்கும் புதுமுகம்' என்ற வர்ணனையுடன், 'நடிகை நளினி' என்ற பெயரைப் பார்த்ததும் உதயாவின் மனம் மீண்டும் வெகுவா கச் சோர்ந்து போயிற்று.

இவள் வீட்டுப் பார்ட்டிக்கு போக நேரமாகிவிட்டது என்றுதானே கிருஷ்ணசந்திரன் முதலில் அன்னையை கடிந்து கொண்டு 'யோகா' வகுப்பில் விட்டுச் சென்றான்! இவளோடுதான் அவன் பெயர் சேர்த்துப் பேசப்பட்டதும்!

இனி எண்ணுவதற்கு என்ன இருக்கிறது என்று சலித்த மனதைப் பிடிவாதமாகத் தளர விடாமல் இழுத்தும் பிடித்து நிமிர்த்தினாள்.



மீண்டும் ஒருதரம் தோட்டத்து நிழலைப் பார்த்துத் தெளிவுற்றாள்.

படித்து முடித்து விட்டாள் போல, இப்போது பத்திரி கையைத் தூக்கிப் பல கோணத்தில் பிடித்துத் தன் படங்க ளைப் பார்த்து இன்புறுவது போலத் தோன்றியது.

இன்னும் சிலதும் யோசித்து, இனிச்செய்ய வேண்டிய தையும் முடிவு செய்து விட்டு உதயரேகா உறங்கிப் போனாள்.

மறுநாள் காலையில், அவள் எதிர்பார்த்திருந்தது போலவே அந்தப் பெண் நளினி போய்விட்டிருந்தாள்.

வழக்கமான பத்திரிகை படிக்கும் பாவனையுடன், கணவன் தன்னைக் கவனிப்பதைக் கண்டும் காணாதவள் போலத் தன் மொட்டை மாடிச் செடிகளுக்கு நீர் ஊற்றத் தொடங்கினாள் அவள்.

கிருஷ்ணசந்திரன் அலுவலுக்குக் கிளம்பிய பிறகு பொழுதைப் பிடித்துத் தள்ளியபடி அமர்ந்தவள் மணி பத்தரை ஆனதும் டெலிஃபோனை எடுத்தாள்.

அவளுடைய தந்தைக்கு அடுத்த அதிகாரியான திரு தாமஸ் தன் மூத்த அதிகாரியுடைய மகளை ஆர்வத்துட னேயே வரவேற்றார். எனது ஏது என்று குசலம் விசாரித்து விட்டு, அவளது படம் பரிசு பெற்றது குறித்துப் பாராட்டி னார்.

ஆனால், உதயரேகாவின் கோரிக்கையைக் கேட்டதும் முகம் மாற, "அங்கெல்லாம் நீ போவது சரியில்லையம்மா. அப்பாவுக்கு பிடிக்காது" என்று மறுத்தார்.

"அதனால்தானே அவர் இங்கே இல்லாத நேரம் பார்த்து உங்களிடம் வந்திருக்கிறேன். தற்காலப் பெண்க ளைப் பற்றி நான் எழுதப் போகும் புத்தகத்திற்கு இந்த



மாதிரி பெண்களையும் கூட பேட்டி காண வேண்டி இருக்கிறது. ப்ளீஸ், அங்கிள் நீங்கள்தான் எனக்கு இதை எப்படியாவது ஏற்பாடு செய்து தர வேண்டும்" என்றாள் உதயரேகா கெஞ்சலாக.

தாமசின் உலகாயதக் கூர் விழிகள் ஒரு கணம் எதிரில் ஊடுருவின. சன்னமாய்ப் புன்னகைத்து, "அப்படியானால், இந்தப் பெண்ணைத்தான் என்று இல்லையல்லவா? யாருட னாவது பேட்டி ஏற்பாடு செய்கி..." என்று டெலிபோனை எடுக்கவும் உதயரேகா பதறிப் போனாள்.

"அ...அதில்லை அங்கிள். இந்த... இந்தப் பெண் நளினி என்றால் ஏற்கனவே தெதெரிந்தவள் வந்து ... தெரிந்தவள் என்பதால் கொ... கொஞ்சம் இலகுவாக... ஒளிவு மறைவின்றி, பேசுவாள் இல்லையா? அதனால் தான்... ப்ளீஸ்... அங்கிள்... இவளையே... பா... பாருங்கள் அங்கிள்." என்று தடுமாறினாள் அவள்.

"அவளை உனக்கு எப்படித் தெரியும்" என்று கேட்க, தாமசிற்கு ஆசைதான். உலகநாதன் கிருஷ்ணசந்திரனைப் பற்றி விசாரித்தது இவருக்கும்தான் தெரியும். வருமானவரி இலாகா என்பதால், கிருஷ்ணசந்திரனின் பொருளாதார நிலை உள்ளங்கை நெல்லிக் கனியாகிவிட, குடும்பப் பெருமை, படிப்பு, தொழில் நடத்தும் விதம் எல்லா விவரங்களையும் சேகரித்துச் சீர்தூக்கிப் பார்த்து, எல்லாமே சிறப்பாக இருக்கும் போது இந்த ஒரு தவறுக்காக ஒதுக்க முடியாது. அத்தோடு இதை ஊதி இலகுவாகச் சமாளித்து விடுவாள்" என்று நம்பிக்கையோடு பெண்ணைக் கொடுத் தார்.

இப்போது, மூன்று மாதம் கழித்து மகள் விசாரிக்க வந்திருக்கிறாள் என்றால்...?



ஆனாலும், உதயரேகாவின் கெட்டிக்காரத்தனத்தில் தாமசுக்கும் நம்பிக்கை உண்டு. எனவே, அந்த நளினியை சந்தித்துப் பேசும் வாய்ப்பை உதயரேகாவுக்கு ஏற்படுத்திக் கொடுத்தார்.

அவர் வருமான வரி இலாகாவில் பணிபுரிந்தது இதற்கு மிகவும் வசதியாக இருந்தது. வருமான வரி இலாகா என்றால் அது எந்தப் பூட்டுக்கும் திறவு கோல் அல்லவா? அந்தத் துணை நடிகைக்கு தவறாமல் தன் படங்களில் வாய்ப்பளித்துக் கொண்டிருந்த பட முதலாளியையே பிடித்து, அவர் மூலமாய் உதயரேகாவின் விருப்பத்தை நிறைவேற்ற, தாமஸ் ஆவன செய்தார்.

நளினியைச் சந்திக்க கிளம்புமுன் உதயரேகாவுக்குக் கடைசியாக ஒன்று பாக்கி இருந்தது. சற்று யோசித்துத் தாமசிடம் "அங்கிள், என் புத்தகம் வெளிவரும் வரை, இதுபற்றி வேறு யாரிடமும் நீங்கள் மூச்சு விடக் கூடாது! சரிதானா? முக்கியமாக அப்பாவிடம் அங்கெல்லாம் ஏன் போனாய் என்று ஏதாவது சொல்வார்கள். என்ன அங்கிள், ப்ளீஸ்?" என்று நயத்துடன் வேண்ட, மீண்டும் ஒரு புன்னகையுடன் அவர் சம்மதித்தார்.

நளினியுடனான சந்திப்பு பற்றி உதயரேகா ஏற்கனவே யோசித்து வைத்திருந்தாள்.

அதன்படி, கூந்தலை உயரத்தூக்கி கொண்டையிட் டாள். அகலமான கறுப்பு பிரேமிட்ட வெற்றுக் கண்ணாடி யும், வெற்றுக் காதுகளும் முகத்தோற்றத்தை வேறுபடுத்திக் காட்ட, அன்று அணிந்திருந்த சேலைக்கு மாறாகப் பளிச் சென்று கண்ணைப் பறிக்கும் விதமாய் ஒரு சுரிதாரை மாட்டிக் கொண்டு சென்றாள்.

பட முதலாளியின் சிபாரிசு காரணமாகவோ என் னவோ, உதயரேகாவுக்கு நளினி வீட்டில் வரவேற்பு பிரமா தமாக இருந்தது.

பெயரையோ, புகைப்படத்தையோ வெளியிடப் போவது இல்லை என்று முதலிலேயே உதயரேகா கூறி விட்டதால், அம்மா, அப்பா, மாமா என்று யாருடைய குறுக்கீடும் இல்லாமல் அவளால் நளினியோடு பேச முடிந் தது.

பொதுவான வாழ்க்கை முறை, தொழில் முறை, வருமானம் பற்றி கேட்ட பிறகு, உதயரேகா தன் பிரச்சி னைக்கு வந்தாள்.

பிற ஆண்களோடு பழகுவது பற்றிஉதயரேகா குறிப் பிட்ட போது, சுற்றுமுற்றும் பார்த்து விட்டு, "என்னம்மா செய்வது? என்ன சம்பாதித்துக் கொண்டு வந்து கொடுத்தா லும் வேண்டியவர்களுக்குக் கூட ஆசைவெறி அடங்குவ தில்லை. கடைசியாக, இப்படியும்தான் சம்பாதிக்கும்படி ஆகிறது" என்றாள் அவள் கசப்புடன்.

நம்பாத குரலில், "அவ்வளவு தூரம் 'விதியே' என்று தொழில் செய்கிறவர்கள். அதற்கென்றே அலைகின்றவர்க ளோடு நிறுத்திக் கொள்ளலாம். இல்லையா? நல்ல குடும் பத்து பிள்ளைகளையேனும் விட்டு ஒதுங்கி விடலாம் இல்லையா?" என்று கேட்டாள் உதயரேகா.

"நான் குடும்பங்களை குலைப்பவள் அல்ல" என்ற பதிலில் வெகுண்டு, "மிஸ்டர் கிருஷ்ணசந்திரன்? அவ ரோடு, அவரது வீடு வரை செல்லவில்லை? கணவன் இன்னொரு பெண்ணோடு அறைக்குள் சென்று கதவைப் பூட்டிக் கொண்டால், கட்டியவளுக்கு ரொம்பவும் சந்தோஷ மாக இருக்கும் என்றா எண்ணினீர்கள்", என்று குத்தலாக வினவினாள்.

"அது... அவர்... அது வேறு விஷயம் அம்மா. வெளியே சொல்லப்படாது என்று சத்தியம் வாங்கியிருக்கி றாரம்மா அதனாலேயே அந்த ஆள் பேச்சு வேண்டாம்"



என்று உரைத்து அந்தப் பேச்சை முடித்து விட முயன்றாள் நளினி.

சட்டென்று கண்ணாடியைக் கழற்றி வீசிவிட்டு, "இதோ பார், என்னை அடையாளம் தெரிகிறதா? நான் கிருஷ்ணசந்திரனுடைய மனைவி. எங்கள் வாழ்வு இப் போது உன் கையில் இருக்கிறது. எங்களை நல்லபடியாக வாழ விடப் போகிறாயா அல்லது என் குடும்பத்தை அடியோடு அழித்து உன் வாயில் போட்டுக் கொள்ளப் போகிறாயா?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள் உதய ரேகா.

சற்றுத் தயங்கிவிட்டு, ஒரு முடிவுக்கு வந்து, "வெளி யேதாம்மா, அவர் இப்படி அப்படி நடந்து கொள்கிறது எல்லாம், ரூமுக்குள்ளே போய் விட்டால் கூடப்பிறந்த பிறப்புதாம்மா. இவர் ஆண் பிள்ளையே இல்லையோ என்று கூட நான் சந்தேகப்பட்டது உண்டும்மா. ஆனால், அதுமாதிரி பட்டவர்கள் நடந்து கொள்கிற தினுசே வேறே. இதுபோல ஒரு நல்லவர். இந்த மாதிரியெல்லாம், நடந்து காட்டுகிற அளவுக்கு உங்களுக்குள்ளே என்னம்மா, தகரா று?" என்று பரிவுடன் விசாரித்தாள் அந்தப் பெண்.

என்ன வென்று சொல்லுவாள் உதயா?

அத்தோடு, கிருஷ்ணசந்திரன் என்று ஒரு மனிதன் இருக்கிறான் என்பதை உதயரேகா, அறியும் காலத்திற்கு முன்பிருந்தே அவள் கணவன், இப்படி ஒரு நாடகத்தை அரங்கேற்றி வந்திருக்கிறேனே!

அவளுக்கே புரியாத விஷயத்தை அடுத்தவளிடம் எப்படி விளக்க முடியும்?

அத்தோடு அக்கறையுடனே கேட்டால் கூட கேட்பவள் வெளி ஆள். அவளிடம் போய் வீட்டு விஷயத்தை ஏன் சொல்வது?





அது ஒரு சிறுபிள்ளைத்தனமான வீம்பு என்று சமா ளித்து விட்டு, இந்த சந்திப்பு பற்றி யாரிடமும் முக்கியமாக கிருஷ்ணசந்திரனிடம் எதுவும் சொல்ல வேண்டாம் என்று எச்சரித்து விட்டு, அந்த நளினியிடம் விடைபெற்றுக் கிளம் பினாள் உதயரேகா!

ஆக, உதயரேகாவின் ஊகம்தான் சரியாக இருந்திருக்கி றது. கிருஷ்ணசந்திரனின் குடி, கூத்தி, எல்லாமே நடிப்பு தான். ஒருநாள், சீக்கிரமாக வீடு திரும்பி வந்து, வீட்டில் அவளைக் காணாமல் ஆத்திரப்பட்டானே, அதுமட்டும் தான் உண்மையான கோபம். மற்றதெல்லாம் முதல் நாள் யோகா வகுப்பில் காந்திமதியிடம் தொடங்கி முன் தினம் இரவில் மனைவியிடம் வரை, அவன் புருவம் நெரித்துக் காட்டிய கோபம் வெறும் வேஷமே. நாடக மேடை நடிப்பு, குடித்தது போல அவனது தள்ளாட்டங்கள் கூட நடிப்பா கவே இருக்கக்கூடும்... 'இருக்கக்கூடும்' என்ன? அது நடிப்பே தான்.

அன்றுஅவன் முத்தமிட்ட போது 'மதுவாடை' இல் லையே என்று குழம்பினாளே, குடித்திருந்தால் அவ்வா வாடை அடிக்கும்?!

ஒரு புதிர், பெருமளவு உதயரேகா எண்ணியது போலவே விடுபட்டது.

ஆனால் இன்னொன்றோ முற்றிலும் பெரிதாக வளர்ந்து, அடிமுனை தெரியாமல் அவளைக் குழப்பியது.

ஏன் இந்த நாடகம்!

ஒருவேளை, அவன் போதை மருந்துதான் எடுக்கி றானோ என்ற சந்தேகம் மீண்டும் அவளை உலுக்கியது.

இதற்கு மேலும் கணவனை விட்டுப் பிடிப்பது அல்லது சிக்கல் தானாக அவிழும் என்று பொறுமையோடு காத்திருப்



பது என்று காலம் கடத்துவது அவளுக்கு சற்றும் சரியென்று படவில்லை.

'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்பதில் அவளுக்கு உடன்பாடு கிடையாது. அப்படி பொறுமை காப்போர் ஆளக்கூடிய பூமி, இறந்தபின் அவர்களுக்குக் கிடைக்கிற ஆறடி நிலம்தான் என்பது அவளது கருத்து.

அந்த மாதிரி நிலைமை, தனக்கு வந்து விடக்கூடாது என்ற உறுதியோடு, மேலே என்ன செய்வது என்று தீவிரமாக யோசித்தாள்.

அப்படி யோசித்து ஆழ்ந்து சிந்தித்து, துணிந்து அவள் எடுத்த நடவடிக்கைக்கு அவள் சற்றும் எதிர்பாராத, விசித்தி ரமான பலன் ஒன்று கிட்டியது.

## 19

வெறுமனே கணவனிடம் சென்று, உங்கள் ரகசியம் வெளிப்பட்டு விட்டது. என்ன விஷயம் என்று சாதாரணமா கக் கேட்க உதயரேகாவுக்கு மனமில்லை.

திட்டமிட்டு இந்த மாதிரி ஒரு நாடகம் நடத்தியவன், குட்டு உடைபட்டுப் போனால் என்ன செய்வது என்று யோசித்து, அதற்கும் ஏதேனும் ஒரு பதில் வைத்திருக்கக்கூ டும். 'உன் தந்தை வருமான வரி இலாகா அதிகாரி என்பதால் பயந்து நல்ல விதமாய்க் காட்ட ஏதோ கதை விட்டிருக்கிறாள், நளினி' என்று கூட சமாளிக்கக்கூடும். அதனால் கிருஷ்ணசந்திரனைச் சற்று அதிர வைத்தால்தான் உண்மை வெளிவரும் என்று எண்ணினாள்.

அத்தோடு, இத்தனை நாட்கள் தன்மிக நெருங்கிய உறவினரை அவன் எவ்வளவு கலங்க வைத்திருக்கிறான்? பதிலுக்கு அவனும் கொஞ்சமாவது பட வேண்டாமா?

தொடர்ந்து சில நாட்களாக கிருஷ்ணசந்திரன் வீடு திரும்பும் வேளையில் உதயரேகா வீட்டில் இருப்பதில்லை. வர நேரமாகும் என்ற குறிப்பு மட்டும் டீபாய் மேல் இருக்க, மெய்யாகவே வெகுநேரம் கழித்தே வீட்டுக்கு வந்தாள். ஒன்பதரை, பத்து, பத்தரை என்று அவள் திரும்பி வரும் நேரம் மேலும் மேலும் தாமதமாகிக் கொண்டே போயிற்று. அப்படித் திரும்பி வரும் போதும் மாடி ஹாலில் டி.வி. பார்ப்பவன் போல அமர்ந்து காத்து கிடந்தவனைக் கண்டு கொள்ளாமலே, ஹாலைத் தாண்டி, அவளது அறைக்குள் சென்று கதவடைத்தாள்.

தான் நடந்து கொண்ட முறையால் மனைவியிடம் எதையும் கேட்க முடியாமல் கிருஷ்ணசந்திரன் திணறுவதை நன்றாகவே புரிந்து கொண்ட உதயரேகா, மேலும் மேலும் அதிநாகரீக ஆடைகளும் அதிக தாமதமுமாகக் கணவனின் பொறுமையை மேலும் சோதித்தாள்.

நாலு நாட்களுக்கு மேலாக கிருஷ்ணசந்திரனால் தாங்க முடியவில்லை போலும்.

ஐந்தாம்நாள் அவளது அறையை நோக்கிச் சென்று மனைவியை நிறுத்தி, "ரொம்பவும் தாமதமாகிவிட்டிருக்கிறது, உதயரேகா" என்றான் குரலில் லேசான கண்டனத்துடன்.

மணிக்கட்டைத் திருப்பிப்பார்த்து விட்டு, "ஆமாம். கொஞ்சம் நேரமாகிவிட்டது போலத்தான் தோன்றுகிறது" என்று சாதாரணமாக உரைத்தபடி நடையைத் தொடர்ந்தாள் உதயரேகா.

"ஏன் இவ்வளவு நேரம் ஆயிற்று?" என்று முயன்று உணர்ச்சி நீக்கிய குரலில் வினவினான் கணவன்.

அவள் பேசாமலே செல்லவும், "நான் கேட்டுக் கொண்டு இருக்கிறேன்" என்றான் அழுத்தத்துடன்.



நின்று, திரும்பி, அவனை ஏறிட்டுப் பார்த்தாள், உதயரேகா. "செய்ய முனைந்திருக்கும் வேலை மிகவும் முக்கியமானது. நாசுக்கானதும் கூட. அதனால் நேரத்தைப் பெரிதாக நினைக்க முடியவில்லை" என்றாள் நிதானமாக.

முன் போல ஏதேனும் போட்டியில் கலந்து கொண்டிருக்கிறாளோ என்று தோன்றவும் இறுக்கம் தளர, "அப்படி என்ன வேலை." என்று கேட்டபடி அவளருகே வந்தான் கிருஷ்ணசந்திரன்.

"உங்கள் வேலைதான்!"

"என் வேலையா? என்று வியந்தான் அவன் "என்னது"

தோளைக் குலுக்கி, முகத்தில் வருத்தம் காட்டி, உச்சுக் கொட்டினாள் உதயரேகா. "நீங்களானால் விவாகரத்து, விவாகரத்து என்கிறீர்கள். காரணமாக இதை வைத்துக் கொள், அதை வைத்துக் கொள் என்று வேறு விரட்டுகிறீர்கள்... நான் உங்களை ஏன் மணந்து கொண்டேன் நினைவிருக்கிறதா? அத்தையை மகிழ வைப்பதற்காக. இப்போது இப்படி ஒருகாரணத்தைச் சொல்லி மணவிலக்குக் கேட்டால், அவர்களுக்கு எப்படி இருக்கும்? அத்தோடு..."

"அத்தோடு?"

"எவ்வளவோ செலவு செய்து சிறப்பாக எனக்கு என் பெற்றோர் திருமணம் செய்து வைத்தார்கள். நாலு மாதம் முடியுமுன் சுவரில் அடிபட்ட பந்து மாதிரி வேறே கதியில்லை என்று மீண்டும் அவர்களுக்குச் சுமையாக போய் நிற்க எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை..."

"அதற்காக?"

விழிகளை விரித்து அப்பாவியாய் அவனை நோக்கியபடி உதயரேகா மேலே பேசினாள் "யோசித்துப் பாருங்கள்.



இதற்கெல்லாம் ஒரே தீர்வு நான் வேறு திருமணம் செய்து கொள்வதுதான். இல்லையா?" என்று அவளுடைய கணவனிடமே கேட்டாள்.

ஒரு கணம் அவனது பார்வை விலகி மீண்டது. "அதற்கும் நீ தாமதமாக வீடு திரும்புவதற்கும் என்ன சம்பந்தம்?"

"இருக்கிறது" என்றாள் மனைவி. "பாருங்கள் ஒரு தரம் நான் தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை சரியில்லை. அதனால் இனி நீங்களே எனக்கு ஒரு கணவனைத் தேடுங்கள் என்று என் தந்தை முன் தலைகுனிந்து நிற்க என்னால் முடியாது நான் ரோஷக்காரி. தெரியுமில்லையா?"

பேசாமல் அவளைப் பார்த்துக் கொண்டு கிருஷ்ணசந்திரன் நிற்க, உதயரேகா தொடர்ந்தாள். "அதனால் எனக்குப் பொருத்தமாய் எல்லா விதத்திலும் பொருத்தமாய் ஒருவரைத் தேடிக் கொண்டு இருக்கிறேன். முன் போல ஏதேதோ நல்ல விதமாய் எண்ணி ஏமாந்து விடக்கூடாது. இல்லையா? சல்லடை போட்டு சலிக்கிறேனாக்கும்! முதலில் தோற்றப் பொருத்தம் வேண்டும். என்னோடு கூடச் சேர்ந்து பேசத் தெரிய வேண்டும். அப்பாவின் அந்தஸ்து, வசதிக்காக வாயைப் பிளப்பவனாக இருக்கக்கூடாது. சுயமாகவே பணம் உள்ளவனாக இருக்க வேண்டும். ஏனென்றால் என்னாலெல்லாம் குண்டுச் சட்டியில் குதிரை ஓட்ட முடியாதுப்பா!"

அவன் தொடர்ந்து மவுனம் சாதிக்க, அவள் நிறுத்தவே இல்லை. "பஸ் நிறுத்தம், கடற்கரை இது மாதிரி இடங்களில் வரன் தேட எனக்கு விருப்பம் இல்லை. அங்கே பார்த்து, ஆட்களை ரகம் பிரிக்கவும் எனக்குத் தெரியாது. அதனால், கொஞ்சம் பசை உள்ளவர்கள் வந்து போகும் இடமாக பார்த்து நைட் கிளப், நைட் கிளப்பாக, எனக்குச் சரியாக



ஒருவனைத் தேடுகி... அதாவது நேற்று வரை தேடினேன். இன்றுதான்...

ஓசையற்று ஒரு பெரிய மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு மீண்டும் தொடங்கினாள். கைப்பையின் மணி வேலைப்பாட்டை வருடிப் பார்த்தபடி "சில பேர் மாதிரி ... கணவனாகும் தகுதியே இல்லையோ என்று சந்தேகப் படுகிறமாதிரி இல்லாமல், சேர்ந்து ஆடும் போதே வினோத என்னவெல்லாம் செய்கிறார் தெரியுமா... ஆ... ?" என்று முடித்தாள்.

தீப்பட்டாற் போல கன்னம் எரிய உதயரேகா அதிர்ந்து தான் போனாள்.

அவளது கடைசி வாக்கியத்தை அவளே, உள்ளூர அருவருத்துக் கொண்டேதான் சொன்னாள்.

சண்டி மாட்டைக் கிளப்பத் தார்க் கோலால் குத்துவது போல, கிருஷ்ணசந்திரனை உசுப்பி விடவும் ஏதாவது அவனைக் கூட அதிரச் செய்யும் விதமாக ஏதேனும் செய்தே ஆக வேண்டியிருந்தது. நாசுக்கு, நாகரீகம், நாணம் என்ற எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டுப் பேச நேர்ந்தது.

அப்போதும் இந்தக் குத்தலின் வலி தாளாமல் சீற்றம் கொண்டு தன்னை மீறி, என்னையா இந்த வார்த்தை சொன்னாய்? நிலைமை தெரியுமா? என்று தன் காரணத்தை வெளிப்படுத்தி விடுவான் என்று எதிர்பார்த்தாளே தவிர கணவன் கை நீட்டும் அளவு பொங்கி விடக் கூடும் என்று உதயரேகா சற்றும் எண்ணிப் பார்க்கவில்லை.

நினைவு தெரிந்த நாளில் இருந்து அவளை இந்த மாதிரி அடி, உதை என்று யாருமே நடத்தி உதயரேகா அறியாள். தாய் வழித் தாத்தா, பாட்டி, அத்தை, சிற்றன்னை என்று எல்லோருமே அவளை ஓர் அரசியாக நடத்தித்தான் அவளுக்குப் பழக்கம்.

அனுபவித்தறியாத இந்த அவமதிப்பு அவளைத்தான் தன்னை மறக்க செய்து விட்டது.

முகம் சிவக்க, ''என்னையா அடித்தீர்கள்? ஆகா! ஒரு வழியாக என் புருஷன் உரிமையோடு என்னைத் தொட்டு விட்டான் என்று அகமகிழ்ந்து போவேன் என்று நினைத்தீர்களா? இந்த ஒரு தடவை, போனால் போகிறது என்று விடுகிறேன். இன்னொரு தரம் இப்படிக் கையை நீட்டினீர்கள் என்றால் இரண்டு பங்கு திருப்பிக் கொடுத்து விடுவேன் ஜாக்கிரதை!'' என்று சீண்டப்பட்ட புலிக்குட்டியாய்ச் சீறினாள்.

வியந்து நோக்கி, ''நீ ...என்னை...?'' என்றவன், தன்னை மீறி முகத்தில் முறுவல் படரத் தலையசைத்தான். இல்லை ''இனி இதுபோல் நடவாது. இப்போது நடந்தது... ஸாரி விட்டு விடு. ஆனால் இப்போது குடும்ப கவுரவம், மான ஈனம் பற்றிக் கொஞ்சம் பேசலாமா?'' என்று கேட்டான்.

இன்னமும் அவளது சினம் முழுமையாக தணியவில்லை. ''தாராளமாகப் பேசலாம். ஆனால் ஒருவர் பேசும் போது, மற்றவர்களுக்கும் பேச வாய் இருக்கும் போது, வாய்ப் பேச்சோடு மட்டும் நிற்க வேண்டும் என்று மட்டும் தான் சொல்கிறேன். பேசுவதற்கு கையால் ஆகாமல், கையால் பேசக்கூடாது அவ்வளவுதான்'' என்றாள் மிடுக்காக.

''அதற்குத்தான் ஸாரி சொல்லிவிட்டேனே அதை விட்டு மேலே போகலாமா?'' என்றான் அவன் மெதுவாக.

''போகலாம் போகலாம். குடும்ப கவுரவம் பற்றித் தானே பேச வேண்டும் என்கிறீர்கள்? அதுபற்றி இப்போது பெரிதாக என்ன பிரச்சினை வந்து விட்டது?'' என்றாள் அவள் எடுப்பாகவே.



''அது உனக்கே தெரியும்.''

''எது...? ஓ நான் இரவில் வெளியே சுற்றுவதா? அப்படிப் பார்த்தால் உங்களால் அழியாத மானமா என்னால் அழிந்து விடப் போகிறது. ஆண் என்றால் விருப்பம் போல ஆடலாம், பெண் தான் குடும்ப கவுரவத்தை கட்டிக் காக்க வேண்டியவள் என்றெல்லாம் கூற வேண்டாம். கற்பு, மானம் எல்லாவற்றையும் இரு கட்சிக்கும் பொதுவில் வைத்து வெகுகாலம் ஆகிவிட்டது. பெருமை காப்பவள் பெண்தான் என்று என்னை மட்டும் பொறுப்பாளியாக்க முடியாது, கூடாது. நீங்களும் சேர்ந்து கவுரவம் காப்பதானால் நானும் ஒத்துழைப்பேன். மற்றபடி என்னைக் கேட்கும் அதிகாரம் யாருக்கும் கிடையாது நீங்கள் உட்பட'' என்றாள் உதயரேகா கறாராக.

தோல்வியை ஒத்துக் கொள்கிறவன் போலக் கிருஷ்ண சந்திரன் கைகளை உயர்த்தவும், ''நல்லது'' என்றாள் அவள் திருப்தியோடு.

தொடர்ந்து, இனிக் கஷ்டப்பட்டு ஆள்பிடித்து சமையல்காரனுக்கு லீவு கொடுத்து அனுப்பி, வேலையாள் வெளியே போகிற நேரம்பார்த்து உள்ளே கூட்டி வருவது கண்மறைந்ததும் உடன்பிறந்தோன் ஆவது ஒருவரும் அறியாமல் வெளியேற்றி ஒதுக்குப் புறமாய்க் காசைக் கொடுத்து இறக்கி விடுவது எல்லாம் தேவைப்படாது!'' என்றாள் வெகு சாதாரணமாக.

திகைப்புற்று நிமிர்ந்தவன், மீண்டும் தன்னை மீறி முறுவலித்தான். லேசாக தலையசைத்து, ''இவ்வளவு புத்திசாலியாக நீ இல்லாமல் இருந்திருக்கலாம் உதி'' என்றான் சற்று வருத்தமான குரலில்.

பளிச்சென அவள் முகம் பிரகாசமுறவும், அவளை இரக்கத்துடன் நோக்கி, ''இதனால் எல்லாம் சரியாகிவிட்



டது என்றோ நாம் இருவரும் இனி இணைந்து வாழ்வோம் என்றோ நினைக்க வேண்டாம். அது ஒருநாளும் நடக்க முடியாதது. தயவு செய்து அனாவசியமாய் வீண் கற்பனைகளில் இறங்க வேண்டாம் உதயா''... என்றான் அவன் பழைய குரலிலேயே தொடர்ந்து.

கணவனுக்கும் இதில் வருத்தம் இருப்பதை உணர்ந்து வியப்படைந்து, ''ஏன் என்று தெரிந்து கொள்ளலாமா?'' என்று மெதுவாக கேட்டாள் மனைவி.

மறுதலிப்பாய் தலையசைத்து விட்டு, ''ஆனால் இந்த முடிவு தவிர்க்க முடியாததோடு மாற்ற முடியாததும் கூட என்பதை மட்டும் நிச்சயமாகத் தெரிந்து கொள்'' என்றான் கிருஷ்ணசந்திரன் தீர்மானமாக.

வருத்தத்தை விரும்பி ஏற்பது என்றால் இது எதற்காக ஏற்ற தியாகம்? ஒரு வேளை...

சிறு மவுனத்தின் பின், ''மேலே உன் முடிவு என்ன?'' என்று கேட்டான் கிருஷ்ணசந்திரன்.

சற்றே திடுக்கிட்டு, ''எதைப் பற்றி?'' என்று கேட்டாள் அவள்.

''நம் பிரிவு பற்றி'' என்றான் அவன் சுருக்கமாக.

''கணவன் மனைவி என்றால் பாலுறவு மட்டும்தானா வாழ்க்கை? சொல்லுங்கள், நான் இந்த வீட்டில் இருப்பது உங்களுக்கு வெறுப்பாய் இருக்கிறதா?

''என்ன கேள்வி இது?'' என்று அவன் சிறு சினம் காட்டவும் ''பின்னே பிரிவு பிரிவு என்று அதைப் பற்றியே பேசுவானேன்? ஒருவருக்கொருவர் நல்ல நண்பர்களாக, நாம் இருவரும் இதே வீட்டில் வசிக்க முடியாதா?'' என்று அவனை நேராக நோக்கி வினவினாள் அவள்.



கணவன் முகத்தில் இறுக்கம் குறைந்தார் போல ஓர் எண்ணம் அவளுக்கு.

ஆனால், ''ஓ.கே. உன் இஷ்டம்'' என்று அவள் முடிவில் தனக்கு ஒன்றுமில்லாதது போலக் காட்டிக் கொண்டான் அவன். ''ஒரே ஒரு நிபந்தனை என்னுடைய சில விஷயங்களில் நீ தலையிடக்கூடாது. அதற்கு சம்மதம் என்றால் பிரிவு பற்றி பேசத் தேவையே இராது.''

ஒப்புதலாய்த் தலையசைத்து விட்டு அவனையே பார்த்திருந்தவள், சில வினாடிகள் சென்றதும், ''அவ்வளவு தானா?'' என்று கேள்வியாய் புருவங்களை உயர்த்தினாள்.

சற்றே முகம் சிவந்து, ''நீ இங்கேயே இருப்பதில் எனக்கும் சந்தோஷமே, நன்றி'' என்றான் கணவன்.

மகிழ்ச்சியோடு முறுவலித்து விட்டு அறைப்பக்கம் திரும்பியவள் ஒன்று தோன்றவும் சட்டெனத் திரும்பி, ''பாவம் அத்தை மாமா, வசு எல்லோரும். உங்களை நினைத்து ஏகப்பட்ட கவலை அவர்களுக்கு. அந்தக் கெட்ட பழக்கங்கள் ஒன்று கூட உங்களுக்குக் கிடையாது என்று அவர்களிடம் சொல்லி விடலாமா?'' என்று ஆவலோடு வினவினாள்.

அவளை ஒரு மாதிரிப் பார்த்து விட்டு, ''இடத்தைக் கொடுத்தால் முழு மடத்தையும் பிடுங்குவீர்களே? இதற்காகத்தான் கொஞ்சம் கூட இடம் கொடுக்கக்கூடாது என்பது. கவனி, உதயா சில விஷயங்களில் நீ தலையிடக்கூடாது என்றேனே. என் தந்தை, தாய், தங்கை உறவு அதிலே அடக்கம். நன்றாக நினைவில் வை'' என்றான் அவன் கடுமையான குரலில்.

வியந்து நோக்கிய போதும் வாதாடாமல் ஒத்துக் கொண்டாள் உதயரேகா. ''ஓ.கே. பாஸ்!'' என்று கைகளால்

வாய் பொத்தி அவள் கண்ணால் சிரிக்கவும், அவன் முகத்தில் குறுநகை மலர்ந்தது. தவிர்க்கமாட்டாது தோன்றிய சிறுநகை.

அன்றிலிருந்து அவர்கள் வாழ்வில் ஒரு புதிய சகாப்தம் மலர்ந்தது. அப்போதுதான் அவர்களது வாழ்வின் முக்கியமான திருப்பமும் நிகழ்ந்தது. திருப்பத்தின் விளைவு பயங்கரமாகவும் இருந்தது.

## 20

அடுத்து வந்த சில வாரங்கள் உதயரேகாவுக்கு மிகவும் மகிழ்ச்சியூட்டுவனவாக அமைந்தன.

உதயரேகாவோடு உடன்பிறந்தவை உற்சாகமும் துள்ளலும். எதிலுமே ஆர்வத்தோடு ஈடுபடுகிறவள் அவள். திருமண வாழ்வையும் அப்படித்தான் அவள் ஏற்றது.

மண வாழ்வு என்றால் ஆண், பெண் பாலுறவு மட்டுமல்ல. ஓர் ஆணும், ஒரு பெண்ணும் ஒருவரை ஒருவர் புரிந்து, நலம், கேடு உணர்ந்து மதித்து, நட்பு பூண்டு, அன்பு காட்டி, ஆதரித்து, எத்தனையோ இருக்கின்றனவே. இவற்றுள் முதலாவது தவிர, மற்ற எல்லாமே இப்போது கிருஷ்ணசந்திரனிடமிருந்து அவன் மனைவிக்குக் கிடைத்தன. கிடைத்த வரை அவளுக்கும் நிறைவாகவே உணர்ந்தாள்.

காலையில் எழுந்தால், மனைவியுடன் கலந்து உலக விவகாரம் ஆராய்ந்தபடியே, கிருஷ்ணசந்திரன் பத்திரிகை படித்தான். மதியம், உதயரேகாவின் கைப்பாகங்கள் செல்ல, ரசித்து உண்டதாக உடனே டெலிபோனில் பாராட்டி, மேலும் ஐந்து, பத்து நிமிடங்கள் அரட்டை அடித்தான். மாலையிலும், நண்பன் மணிவாசகத்தை அடியோடு மறந்து அலுவல் முடிந்ததும் நேராக வீடு வந்தான். அன்றாட நிகழ்ச்சிகளை இருவருமாகப் பரிமாறிக் கொண்ட



னர். சில வண்டின் ரீங்காரமும், இடையிடையே மைனாக்களின் தீங் குரலோசையும் போல அது இது என்று பேசிக் கொண்டே இருக்கவும் இடையிடையே சிரிக்கவும் அவர்களுக்கு இப்போது ஏராளமான விஷயங்கள் இருந்தன. கேலி, கிண்டல்களுக்கு குறைவில்லை.

இரவு வரை இது தொடர, கடைசியாக உறங்கச் செல்லுமுன் உதயரேகா புன்னகையோடு குட்நைட் சொல்ல, அவளது நெற்றியில் புரளும் கூந்தல் சுருளை பரிவாய் ஒதுக்கி விட்டு பதில் குட்நைட்டுடன் படுக்கச் செல்வான் கிருஷ்ணசந்திரன்.

சின்ன வயது நட்பு, சுற்றம், பார்த்தவை, படித்தவை என்று ஒருவரைப் பற்றி ஒருவர் அறியவும், அறிந்ததை அசை போடவும் இருவருக்கும் ஆர்வம் இருந்ததால் நாட்கள் இறக்கை கட்டிப் பறக்கலாயின.

ஆயினும் இப்போதும் அவ்வப்போது அறைக்குள் சென்று பூட்டிக் கொண்டு வெகு நேரம் கழித்து வெளி வருவதைக் கிருஷ்ணசந்திரன் விடவே இல்லை. காரணமாக ஒன்றே ஒன்றை மட்டுமே கண்ட அவன் மனைவியால் இதைச் சும்மா விட்டு விட்டு இருக்கவும் முடியவில்லை.

ஒரு நாள் இது பற்றி அவள் குறிப்பிடத் தொடங்கும் போதே ஒரு மாதிரிப் பார்வையுடன் அவன் தலை அசைத்து விடவும் மேலே தொடங்க மாட்டாமல் அவள் பேச்சு நின்றது.

ஆனால் இதை அடியோடு பேசாமல் விடவும் அவளுக்கு மனமில்லை. எனவே வேடிக்கை போல "ஓகோ இது தலையிடப் படக் கூடா விஷயமா? ஓ.கே. ஓ.கே." என்று இலகு போல நகைத்து "ஆனால் இந்த ஒன்று மட்டும் சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே? அதை... அதுதான் போதை மருந்து அதைத் தினமும் எடுக்கிறீர்



களா? உடம்பு கெடும்; உள்ளுறுப்பு கெடும் என்கிறார்களே? அதற்காகத்தான்... அந்தக் கவலைதான் எனக்கு" என்றாள் மெதுவாக.

சற்று நேரம் அவளையே பார்த்திருந்தவனின் கண்கள் கனிந்தன. மனைவியின் கையை எடுத்துத் தன் கையில் வைத்து, "என் உடல் நலத்தைக் கெடுக்கும் எதையும் நான் உட்கொள்ள மாட்டேன். இது சத்தியம். போதுமா?" என்று கிருஷ்ணசந்திரன் குரலில் மென்மையுடன் கூறவும் ஒரு வாறு உதயரேகாவின் உள்ளம் அமைதியுற்றது.

முன்பு போதை மருந்து எதையும் பயன்படுத்தவில்லை என்று அவன் சொன்னது மெய்யோ, பொய்யோ ஆனால் இந்தச் சத்தியத்தின் பின்னர் அதைத் தொட மாட்டான் என்ற உறுதி அவளுக்கு இருந்தது. எனவே நிம்மதியும் உண்டாயிற்று.

மறுநாளில் இருந்து தன்னோடு கூட வந்து தொழிலைக் கற்றுக் கொள்ளும்படி கிருஷ்ணசந்திரன் மனைவியை அழைத்தான்.

பெண்களைத் தொழிலில் புகுத்தும் வழக்கம் அந்த வீட்டில் இல்லை என்று கண்டிருந்ததால் உதயரேகாவுக்கு இந்த அழைப்பு ஆச்சரியத்தை அளித்தது.

வியப்பும் கேள்வியுமாக நோக்கியவளிடம், "சும்மா இருப்பவரின் மனம் சைத்தானின் உலைக்களம் என்பார்கள். வீட்டில் போரடித்துக் கிடப்பதால்தான் போதை, குடி என்று துப்பறியத் தோன்றுகிறது? அப்படி உருப்படாத விஷயங்களில் வீணாகுகிற புத்தி, சக்தியை நல்லபடியாக எதிலாவது செலவழிக்கலாம் என்றுதான்" என்று அவன் சின்னதாக ஒரு குட்டு வைத்தான்.

அசடு வழியச் சிரித்து விட்டு வழக்கமான உற்சாகத்துடன் கணவனுடன் சென்றாள் அவள்.



கூடவே இருந்து மனைவிக்கு அன்றாட வேலைகளைக் கிருஷ்ணசந்திரன் கற்றுக் கொடுத்தான். கொஞ்சம் பழகவும், அவனது வேலைகளில் பெரும் பகுதியை அவளையே செய்யச் சொன்னான். கடைசியாகப் பிரச்சனைகளில் முடிவெடுப்பது போன்ற சிக்கலான, நுணுக்கமான விஷயங்களையும் போதித்து, இனி எல்லாவற்றையும் அவள் பொறுப்பில் விடப் போவதாகவும் கூறினான்.

சற்றுத் திகைத்து இதுவும் கேலி என்று ஊகித்து "அப்படியா சார்? ரொம்ப சரி! ஆனால் உங்கள் வேலையை என்னிடம் தந்து விட்டு நீங்கள் என்ன செய்வதாய் உத்தேசமாம்?" என்று கிண்டலாய் வினவினாள் அவள்.

எழுந்து சென்று ஜன்னல் வழியே வெளியை வெறித்தான் கிருஷ்ணசந்திரன். திரும்பாமலே, "ஒரு புதிய துறையில் இறங்கப் போகிறேன், உதி. முன்பின் அறியாத களம்" என்று கூறிய போது அவன் குரலில் இருந்த தீவிரம் அவளை மேலும் பிரமிக்க வைத்தது.

"அப்படி என்ன புதிய முயற்சி?" என்று ஆச்சரியத்துடன் வினவிய மனைவிக்கு அவன் பதிலே சொல்லவில்லை.

"மாமாவுக்குத் தெரியுமா? சொல்லி விட்டீர்களா? இல்லையா?" என்று மேலே அவள் அடுக்கவும் அவன் மெல்லத் திரும்பி, உதட்டின் மேல் விரலை வைத்துக் காட்டி நேராக நோக்கவே உதயரேகா வாயை மூடிக் கொண்டாள்.

"இதுவும் தலையிடக் கூடாததாக்கும்!" இவ்வளவு நல்லவன், பெற்றோர் என்றால் மட்டும் ஆளே மாறி விடுகிறானே!

காரணத்தைத் தேடி அவள் மனம் தீவிரமாக வேலை செய்தது.

இடையே அவளுடைய பிறந்த வீட்டார் புது டில்லிக்குக் குடி பெயர்ந்து சென்றனர். அவ்வப்போது டெலிபோனில் உதயரேகாவுடன் அளவளாவினர்.

ஆனால் பிறந்த வீட்டாரின் பிரிவை அதிகமாக உணரத் தோன்றாத அளவுக்குக் கிருஷ்ணசந்திரன் பற்றிய எண்ணங்கள் அவளது இதயத்தை நிரப்பியிருந்தன. கணவன் மனம் விட்டு பழகத் தொடங்கியதிலேயே திருப்தியுற்று இருந்தவள் மேலும் உற்சாகம் கொள்ளும் விதமாக வீட்டில் சில பல நிகழ்ச்சிகள் நடக்கலாயின.

தங்கைக் கென்று அவள் தைத்துப் பூவேலை செய்து கொடுத்திருந்த சரிதார் ஒன்றைப் பார்த்து வசுமதி ஆசைப்பட்டாள் என்று உதயரேகா நாத்தனாருக்கும் ஒன்றைத் தைத்துக் கொண்டிருந்தாள். வண்ண மணிகளைக் கொண்டு செய்த பூ வேலை அது.

புது மாதிரிப் பலகாரம் ஒன்றை மாலைச் சிற்றுண்டிக்காகச் செய்து வைத்து விட்டுக் கணவனின் வருகைக்காக காத்திருந்த நேரத்தில் வாயிலில் ஒரு கண்ணும் தையலில் ஒரு கண்ணுமாக கீழ் ஹாலில் அமர்ந்து தைத்துக் கொண்டிருந்தவளின் கை எப்படியோ தட்டி விட, மணிக் கிண்ணம் கீழே விழுந்து மணிகள் அங்கும் இங்கும் சிதறின. அங்கங்கே கிடந்தவைகளைப் பொறுக்கி எடுத்து விட்டு நீள சோபாவிற்குப் பின்புறம் உருண்டு ஓடியவற்றை சோபாவின் பின்சென்று மண்டியிட்டு சேகரித்துக் கொண்டிருந்தாள்.

வாயிலில் கார் வந்து நின்று, கிருஷ்ணசந்திரன் வேகமாக இறங்கி வருவது கேட்கவும் அவசரமாக எழப் போனவளுக்கு ஒன்று தோன்ற சோபாவின் பின் மறைந்தாற் போலவே இருந்து விட்டாள்.



கொஞ்ச நேரம் அவளைக் காணாமல் தேடட்டும். அதன் பிறகு வேடிக்கையாக கண்டு பிடிக்கச் செய்ய வேண்டும்.

வந்த வேகத்திலேயே படியேறிச் சென்றவனின் காலடி ஓசை நின்று விடவும் அடடா இப்போதே கண்டு விட்டானா என்று மெல்லத் தலையை மட்டும் நீட்டிப் பார்த்தவளுக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது.

மாடிப்படி வளைவில் மாட்டியிருந்த உதயரேகாவின் படத்தின் முன் நின்று படத்தில் அவளது கன்னத்தை மென்மையாக வருடிக் கொண்டிருந்தான் அவன்.

உயிருக்கு உயிராய் ரசிப்பவனின் வருடல். ஒரு நாளும் பிரிய மனம் விரும்பாதவனின் வருடல் அது.

ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு உற்சாகத்தோடு உல்லாசமும் பொங்கிப் பெருகலாயிற்று.

இவனால் இன்னும் எத்தனை நாட்கள் இப்படிப் பிரிந்து வாழ முடியும்? அவளுக்கு நகைப்பாய்த்தான் இருந்தது.

கடைசியாக ஒரு நெடுமூச்சுடன் அவன் சென்றது கூட அவளுக்கு நகைப்பாய்த்தான் இருந்தது.

இன்னொரு நாள் உதயரேகா தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்த போது - யோசனை கிருஷ்ணசந்திரனைப் பற்றியதுதான். சிங்கப்பூரில் இருந்து மருமகனுக்கென்று உதயராஜன் வாங்கி வந்திருந்த துணிகளை எந்த மாதிரியில் தைக்கக் கொடுப்பது என்பதுதான் அந்தத் தீவிரமான யோசனை. கண்களை மூடி, ஒவ்வொரு துணியையும் பாக்கெட், பட்டன், அமைப்புகளோடு அவன் உடம்பில் மனதால் அவள் பொருத்திப் பார்த்துக் கொண்டிருந்த போது திடுமென அருகில் அவன் அவளை உரக்க அழைக்க



வும், தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு திகைப்புற்ற விழிகளை மலர விழித்து அவனைப் பார்த்தாள்.

கனிவுடன் நோக்கி, ''கூப்பிடக் கூப்பிடப் பதிலே இல்லையே என்று சற்று உரக்க அழைத்து விட்டேன். ஸாரிம்மா. பயந்து விட்டாயா?'' என்று கரிசனத்துடன் வினவினான் கிருஷ்ணசந்திரன்.

''சேச்சே... நானாவது பயப்படுவதாவது? சும்மா இந்தக் கால் பாட்டில் ஒரு மூன்று அடி உயரம் துள்ளிக் குதித்து விட்டது. கூடவே இந்த தலைமுடியும் சிலிர்த்துக் கொண்டு சிங்கத்தின் பிடரி மயிர் மாதிரிக் குச்சி குச்சியாய் நிற்கிறது. அதுவும் அதிகம் இல்லை. வெறுமனே ஒரு மூன்றே மூன்று அங்குலத்துக்குத்தான்'' என்று அவள் பெரிதாக விவரிக்கவும் அவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

அவளது கூந்தலைத் தொட்டுப் பார்த்து, ''இதையா சிங்கத்தின் பிடரி போலக் குச்சி குச்சியாய் என்பது ரொம்பவும் அநியாயம்'' என்று வருடியவன் கையை எடுக்க மாட்டாதவன் போல மனைவியின் தலைமுடியில் விரல்களை விட்டு அளைந்தான். ''என்ன மிருதுவாய், பட்டுப் போல இருக்கிறது தெரியுமா?''

''எலுமிச்சை, மருதாணி, செம்பருத்தி இன்னும் என்னென்ன மூலிகைகளால் செய்த கண்டிஷனர் அடங்கிய ஷாம்பூ... ட்டடடாய்ங்...'' என்று விளம்பரம் போல அறிவித்தபடி உதயரேகா கண் சிமிட்ட அவனுடன் சேர்ந்து நகைத்தபடியே தன் கையைப் பிரித்தெடுத்துக் கொண்டு வந்த காரியம் பற்றிக் கூறி விட்டு அகன்றான் கணவன்.

என்னவோ உறுத்தியது உதயரேகாவுக்கு.

அவன் முகத்தில் அது என்ன பார்வை? எதிலோ தோல்வி நிச்சயப்பட்டு விட்ட மாதிரி... ஓஹோ...! அய்யா



வின் விரதம் உடைபடப் போகிறது என்று அவனுக்கும் புரிந்து விட்டது.

உள்ளூரக் குதூகலம் சிறகடித்துப் பறந்தது அவளுக்கு.

கிருஷ்ணசந்திரனின் பிரம்மச்சரிய விரதம் பற்றி உதயரேகா இப்போது வேறொரு முடிவுக்கு வந்திருந்தாள்.

கிருஷ்ணசந்திரனுக்கு இள வயதுக் காதல் ஒன்று அவனுடைய பெற்றோர் சம்மதிக்காததால் அவள் மனம் உடைந்து தற்கொலை செய்து கொண்டாள். இறக்குமுன் தன்னையன்றி வேறு பெண்ணைத் தொடக் கூடாது என்று சத்தியம் பெற்றுக் கொண்டு சாகிறாள். மறைந்த காதலிக்குக் கொடுத்த சத்தியத்துக்கும் புதிய மனைவியின் நேசத்துக்கும் இடையே கிருஷ்ணசந்திரன் ஊசலாடுகிறான்.

கண் முன்னே நிற்கும் மனைவியின் நேசத்தின் முன், என்றோ மறைந்துவிட்ட காதலியின் நினைவு மங்கி மறைந்து கொண்டு இருந்தது. அது அடியோடு மறையும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

கணவனின் சிறு வயதுக் காதலைப் பற்றி உதயா பெரிதாக ஒன்றும் பொருட்படுத்தவில்லை. தப்பு வழி செல்கிறான் என்று அறிந்த பிறகும் அவனைத் திருத்தி நல்வாழ்வு வாழத்தான் அவள் ஆசைப்பட்டாள்.

ஆனால் இங்கேயும் ஒன்று இடித்தது.

காந்திமதி அவளிடம் பொய்யுரைக்க வாய்ப்பில்லை. பின்னே கிருஷ்ணசந்திரன் அவனுடைய பெற்றோரிடம் கோபம் கொள்ளக் காரணம் என்ன?

ஒரு வேளை அவன் லேசாகச் சொல்லி அவர்கள் அதைச் சீரியஸாக எடுத்துக் கொள்ளுமுன் ஏதோ தப்பாய் எண்ணி அவள் மடிந்து விட இவனுக்குத் தாய், தந்தையிடம் வெறுப்பாகி விட்டதோ?

தன் வாழ்வு முழுமையாகச் சீர் அடைந்ததும் இதைப் பற்றிக் கூட கணவன் தன்னிடம் கூறுவான் என்று நம்பிக்கையோடு உதயரேகா காத்திருந்தாள்.

இந்தச் சமயத்தில் ஒரு நாள் காலையில் வெகு தாமதமாக எழுந்து அறையை விட்டு வெளி வந்தான் கிருஷ்ணசந்திரன். தூக்கமின்றி களைத்திருந்த முகத்தைப் பார்த்ததும்,

''இரவில் ஏதாவது புத்தகம் படித்துக் கொண்டிருந்து விட்டு தாமதமாகத் தூங்கினீர்களா?'' என்று வினவிய மனைவியிடம் ''இல்லை'' என்று தலையசைத்து விட்டு, ''வசுவின் திருமணம் பற்றி ஒரு முடிவு செய்தேன். அவளுக்கு விரைவிலேயே திருமணம் செய்து வைத்து விடப் போகிறேன்'' என்று கூறி அவளை வியக்க வைத்தான் அவன்.

அவளது வியப்புக்கு காரணம் இருந்தது.

வசுமதிக்கு இருபது வயது கூட ஆகவில்லை என்ற போதும் செல்வ ராங்கத்தின் வளமும், பெருமையும் கூடவே பெண்ணின் அழகு, குணமும் காரணமாக ஏற்கனவே பல பெரிய இடங்களில் இருந்து வந்து பெண் கேட்டிருந்தனர். ஆனால் மகளுக்கு இன்னமும் குழந்தைத் தனம் மாறவில்லை. குடும்பப் பொறுப்பைத் தாங்க சிரமப்படுவாள். அதனால் இன்னமும் ரெண்டு ஆண்டுகள் கழித்துக் கல்யாணம் செய்தால் போதும் என்று வீட்டில் பொதுவாக எடுக்கப்பட்டு இருந்த முடிவு. ''ஆமாமாம். இம் என்றால் குடம் குடமாய் வடித்துக் கொண்டு... எல்லாம் பிறகு பார்க்கலாம்'' என்று. அதன் காரணமே பெருமளவுக்கு கிருஷ்ணசந்திரன்தான் என்று காந்திமதி ஏற்கனவே மருமகளிடம் கூறி இருந்தார். அவனே அதை இப்போது மாற்றுவானேன்?



காரணத்தை அவள் கேட்ட போது, தங்கைக்கு ஏற்ற கணவன் அவளைப் பொறுப்பாய்ப் பாதுகாத்து, அரவணைத்துச் செல்கிறவன் கிடைத்திருக்கும் போது அதைத் தவற விடுவது தவறு என்றான் கணவன்.

ஆனால் அப்படிப்பட்ட மகானுபாவன் யார் என்று அறிந்த போது உதயரேகா இன்னமும் ஏகமாய் அதிர்ந்தாள்.

கிருஷ்ணசந்திரனுக்குக் கெட்ட பழக்கங்களே கிடையாது. ஏதோ உப்புப் பெறாத ஒரு சிறு காரணமாய்ப் பெற்றோர், தங்கையிடம் கோபம் கொண்டிருக்கிறான் அவ்வளவே என்று தான் எண்ணியது தவறோ என்ற சந்தேகம் உதயரேகாவுக்கு இப்போது உண்டாயிற்று.

ஒன்று அவன் தன் வீட்டாரிடம் கொண்டிருந்த கடும் கோபத்தில் அவர்களை முடிந்த அளவு பழி வாங்க வேண்டும் என்று இவன் இப்படி முடிவு செய்திருக்க வேண்டும் அல்லது அந்த மணிவாசகத்திடம் ஏதோ ஒரு வகையில் இவன் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும்.

## 21

அப்போதுதான் மொட்டவிழ்ந்து மலர்ந்து கொண்டிருந்த புதுமலர் வசுமதி. ஆய்ந்து, ஓய்ந்து எல்லாம் அனுபவித்து முடித்து விட்டவன் போலத் தன் முப்பத்தியொரு பிராயத்துக்கும் ஐந்து ஆண்டு அதிகம் போன்ற தோற்றம் மணிவாசகத்துக்கு. வெகு சுமாரான தோற்றம். எப்படிப் பொருந்தும்?

தோற்றத்தை ஒதுக்கினாலும் பத்தொன்பதும் முப்பத்தொன்றுமா? என்ன பைத்தியக்காரத்தனம்?



இதில் பைத்தியக்காரத்தனத்துக்கு என்ன இருக்கிறது என்று கேட்டான் கிருஷ்ணசந்திரன். ''என்னமோ உன் சித்தியின் உறவில் ஒரு பெண் இருபது வயது மூத்த ஒருவரை மணந்து தொங்கத் தொங்கத் தாலியோடு எழுபது வயது வரை வாழ்ந்ததாக நீதானே அன்று அளந்தாய்?'' என்று அவள் பேச்சைக் கொண்டே அவளை மடக்கினான்.

''அதுவும் இதுவும் ஒன்றா? அவர்கள் வீட்டில் மிகவும் வறுமை. ஏதோ எப்படியாவது மகள் வசதியோடு வாழட்டுமே என்று கொடுத்தார்கள். அந்தப் பாட்டியின் அதிர்ஷ்டம் நெடுங்கால சௌபாக்கியம். இங்கே அப்படி என்ன அவசியமாம்?''

''அது.... உதயா மறந்து விட்டாயா? என் பெற்றோர் தங்கை விஷயம் நீ தலையிடக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன் அல்லவா? இந்தப் பேச்சை இத்தோடு விட்டு விடு...''

கணவனை எதிட்டுப் பார்த்தாள் உதயரேகா.

''சில நிபந்தனைகளுக்கு உட்பட்டதுதான் அவர்களின் இன்றைய உறவு. ஆனால் அதற்கும் அளவென்று ஒன்று இருக்கிறது அல்லவா? சொல்லப் போனால் யார் யார் மன நிம்மதி பெற வேண்டும் என்று இவளை மணக்க முடிவு செய்தாரோ, அவர்களே எக்கேடும் கெட்டும் என்று விட்டு விட முடியுமா?''

''நீங்கள் சொல்வது மெய்யே. ஆனால் நிபந்தனை நிபந்தனை என்று ஒரு வாழ்க்கையை அழிய விட்டு விட முடியுமா?'' என்று உதயரேகா வாதாடினாள்.

''அழிவானேன்? மணி மிகவும் நல்லவன்''

''நீங்கள் சொல்வது ஒரு வேளை நிஜமாக இருந்தாலும் வாழுகிற காலம் முழுவதும் இருவரும் சேர்ந்து வாழ வேண்டாமா?''



''உண்மை'' என்று சுருக்கமாக இயம்பியவனின் குரலைக் கவனியாமல் உதயரேகா மேலே மேலே பேசிக் கொண்டே போனாள். ''நீங்கள் அன்றைக்கு என்ன சொன்னீர்கள்? நாலு வயது வேறுபாட்டிற்கே அறுகிற அப்படி இப்படி என்று கன்றாவியாகப் பேசினீர்களே இவர்கள் இருவருக்கும் வயது வித்தியாசம் பன்னிரண்டு ஆண்டுகள். அதை யோசித்தீர்களா? அப்படி இரண்டாம் தாரமாகவேனும் வசுவைக் கொடுத்தாக வேண்டும் என்று என்ன கட்டாயம்?''

''இரண்டாம் தாரம் ஒன்றும் இல்லை. மணிக்குத் திருமணம் ஆகவில்லை; உனக்கும் தெரியும்''

''தாலி கட்டினால்தான் திருமணமா? சிறு வயதில் ஏற்பட்ட காதல் தோல்வியால் அவர் பிரம்மச்சரிய விரதம் பூண்டு விட்டதாக நீங்களே சொல்லியிருக்கிறீர்களே? அப்படி இன்னொருத்தியை மனதில் வைத்தவர் என்றால் என்ன அர்த்தம்?''

''உன் சித்தியும் ஓர் இரண்டாம் மனைவிதானே? அதை மறந்து பேசாதே''

''அவர்கள் கதையே வேறு. சித்தி குடும்பம் எல்லாம் கொஞ்சம் சிரம தசையில் இருந்தவர்கள்தான். அப்பா ஏதேதோ வழிகாட்டித்தான் மாமாக்கள், தாத்தா எல்லோரும் இப்போது பரவாயில்லாமல் இருப்பதே. நம் வசுவுக்குத்தான் அந்தக் கஷ்டம் இல்லையே. நான் நீ என்று அவளைக் கைக்காகப் போட்டியல்லவா போடுகிறார்கள்? ஓகோகோ உங்கள் நண்பருக்கும் அதே நப்பாசைதானோ?'' என்று உதயரேகா ஏகத்தாளமாக வினவினாள்.

''சும்மா வாய்க்கு வந்ததை உளறாதே. மணிக்கு இதில் விருப்பமே கிடையாது''

"கரும்பு தின்னக் கசக்கிறதாக்கும்! என்ன நேரமடா அப்பா!" என்று தன் நம்பாமையை வெளிப்படையாகக் காட்டினாள் உதயரேகா.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை"

"எது இல்லை என்கிறீர்கள். உங்கள் தங்கை கரும்பு இல்லை என்கிறீர்களா? அல்லது அவளை அடைவது கசப்பு என்கிறீர்களா?" என்று மீண்டும் அவனை நன்றாக மடக்கினாள் மனைவி.

"இதற்குப் பெயர்தான் விதண்டவாதம் என்பது"

"நீங்கள் செய்வது என்னவாம்? பன்னிரண்டு வயது அதிகம் பார்வைக்கும் வெகு சுமார், வருமானமும் வக்கீல் தொழிலில் ஓரளவு வசதி அவ்வளவே. இப்படிப்பட்ட ஓர் ஆளுக்கு உடன் பிறந்த தங்கையை மணமுடிக்க விரும்புகிறீர்கள் என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும்" என்று அறிவித்தாள் உதயரேகா.

"என்ன காரணம்? தங்கை நல்லபடியாக வாழ வேண்டும் என்பதுதான் வேறென்ன?" என்று புருவம் சுருக்கி சிறு வியப்புடன் மனைவியை நோக்கினான் கிருஷ்ண சந்திரன்.

"சற்றும் பொருந்தாத திருமணத்தில் சந்தோஷம் எங்கிருந்து வரும்?"

எல்லா வகைப் பொருத்தங்களும் கூடி அமைந்திருந்த அவர்களது திருமணத்தில் மட்டும் குதூகலம் கொப்பளித்துக் கொண்டா இருந்தது என்ற எண்ணம் தானாக எழுந்து அவளிடம் பெருமூச்சை வரவழைத்தது.

அவனுக்கும் அதுவே தோன்றியதோ ஏதோ சொல்ல வாயெடுத்தவன் தலையசைத்து அதை மாற்றி "இந்தப் பொருத்தம் பற்றி நம் இருவர் கருத்தும் ஒத்துப் போகப்



போவது இல்லை. ஆனால் மணிவாசகத்தை மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுக்க ஒரே ஒரு காரணம் தான் இருக்க முடியும் என்றாயே, என்ன அது?" என்று வினவினான்.

"முதலிலேயே சொல்லி விடுகிறேன் . உங்கள் உத்தம மணிவாசகத்தைக் குற்றம் கூறுவதாக என் மேல் கோபப்படக் கூடாது என்ன?" என்ற பீடிகையோடு உதயரேகா சொன்னாள். "ஏதோ ஒரு வகையில் உங்கள் நண்பரிடம் நீங்கள் சிக்கிக் கொண்டு இருக்கிறீர்கள். அதை வைத்து அவர் உங்களை பிளாக் மெயில் செய்வதால் வேறு வழியின்றி வசுவை அவருக்கு மண முடிக்க ஒத்துக் கொண்டு வந்து விட்டு எல்லோரும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அது உங்கள் திட்டம் போலக் காட்டுகிறீர்கள் என்பது என் ஊகம்" என்று முடித்தாள்.

"மைகாட்" என்று கையை விரித்தான் கிருஷ்ண சந்திரன். "உனக்கு இவ்வளவு கற்பனை வளம் உண்டு என்று எனக்குத் தெரியவே தெரியாதே?" என்று வியந்தவன் தொடர்ந்து, "ஒன்று சொல் உதயா அப்படி என் குடுமி மணியிடம் மாட்டிக் கொண்டு இருப்பதாகவே வை. அந்த நிலையில் என்னைக் காப்பதற்காக நீயும் என் முடிவைத் தானே ஆதரிக்க வேண்டும்? அதை விட்டு எதிர்க்கிறாயே?" என்று விளக்கம் கேட்டான்.

"நீங்கள் மெய்யாகவே ஆபத்தில் சிக்கியிருந்தால் உங்களைக் காப்பாற்ற என் உயிரைத் தரவும் நான் தயங்க மாட்டேன். ஆனால் வசுவின் வாழ்வு என்பது வேறு விஷயம். இதை எந்தக் காரணத்துக்காகவும் அதை பலியிட நான் ஒத்துக் கொள்ளவே மாட்டேன்" என்று கணவன் பேசிய விதத்தால் பிரச்சினை பெரிதல்ல என்று உணர்ந்த போதும் உறுதியுடனேயே உதயரேகா பதில் உரைத்தாள்.



பார்வை கனிய, "நீ என் வீட்டாருக்காகவே என்னை மணந்தாய் என்பதை இப்போது முழு மனதோடு ஒத்துக் கொள்கிறேன் உதி. அத்தோடு இப்படி ஒரு பாசமிகுந்த அண்ணி இருக்கும் போது வசுமதியின் எதிர்காலம் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்றும் அறிகிறேன். எனவே என் தங்கை, மணிவாசகத்தின் திருமணப் பேச்சை இத்தோடு விட்டு விடுகிறேன். போதுமா?" என்று புன்னகையோடு அவன் கேட்கவும் உதயரேகா முகம் மலர்ந்தாள்.

சில விநாடி கால இதமான அமைதியின் பின் "மணியைப் பற்றி நீ மிகவும் தவறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறாய் உதி. எந்த ஒரு நிலையிலும் சற்றும் தயக்கமின்றி உதவி கோரிச் செய்யக் கூடிய ஒரே ஆள் அவன்தான். இதை எப்போதும் நினைவில் கொள். என்ன, ஏது என்று கேட்கக் கூட இல்லாமல் உதவுகிற உத்தமன் அவன். உத்தமன் என்கிற ஒரு தகுதி பலவற்றை - அழகு, பணம், அந்தஸ்து என்ற எல்லாவற்றையும் ஈடுகட்டி விடக் கூடியது என்று நினைத்தேன்..." என்றான் யோசனையாக இழுத்தான்.

"இன்னுமொன்று, வயதை விட்டு விட்டீர்களே அத்தோடு உத்தமர்களோடு குடித்தனம் செய்வது எவ்வளவு சிரமம் தெரியுமா?. காந்தியோடு குடும்பம் நடத்த கஸ்தூரி பாயே திணறி விடவில்லையா? ராமரோடு சீதை பட்ட கஷ்டத்தை எண்ணிப் பாருங்கள். நல்லவர்களைக் கண்டாலே நாலு காதம் ஓடி விடுவீர்கள்!"

"அத்தோடு மிஸ்டர் மணிவாசகம் மிகவும் உத்தமர் என்று உங்களுக்குத் தோன்றுகிறது. அதே போல அத்தை, மாமா, முக்கியமாக வசுவும் எண்ண வேண்டும் இல்லையா?" என்று மென்குரலிலேயே விவாதித்தாள் உதயரேகா.



"நான்தான் அந்த எண்ணத்தை அடியோடு விட்டு விட்டேன் என்றேனே?" என்று அவனும் அதே குரலிலேயே இயம்ப, அந்த அலை அத்தோடு ஓய்ந்தது.

உதயரேகாவின் பராமரிப்பில் மாடிச் செடிகள் செழிப்பாய் வளர்ந்து விட, அவைகளில் மலர்கள் பல எட்டிப் பார்த்துக் கண்ணைக் கவர்ந்தன.

கணவன், மனைவி இருவருமாய் அந்தச் செடிகள் இடையே நின்றும், நடந்தும், பாதி மொட்டை மாடியை மறைத்து அமைத்த பச்சை வண்ண ஒளி ஊடுருவும் ஓட்டுக் கூரையின் கீழ் அமர்ந்தும் தோட்டத்தைப் பார்த்து ரசித்தபடியே பேசிக் கொண்டு இருப்பது வழக்கம் ஆயிற்று. அதிலும் இளவேனில் முடிந்து கோடை தொடங்கவும் இருவரின் பெரும் பொழுது இந்தத் தோட்டத்திலேயே கழிந்தது.

அன்று காலையில் இருந்தே ஒரே புழுக்கமாய் இருந்து மாலை வேளையில் இடி, மின்னல் காற்றுடன் பெரு மழை பொழியத் தொடங்கி விட்டது.

கூரை ஓடுகளின் மேல் படிந்திருந்த தூசியை மழை நீர் அடித்துச் செல்லும் வரை காத்திருந்த உதயரேகா பிறந்த வீட்டுப் பழக்கத்தில் கொட்டும் மழையில் நின்று ஆனந்தமாய் நனையலானாள்.

அலுவல் முடிந்து திரும்பி வந்த கிருஷ்ணசந்திரன் சிறு பிள்ளை போல் மழையில் நின்று கொண்டிருந்த மனைவியைப் பார்த்துத் திகைத்துப் போனான்.

"இது என்ன மடத்தனம் உதயரேகா? மழையை விட்டு உள்ளே வா. வந்து முதலில் உடம்பை நன்றாகத் துடை..." என்று அதட்டினான்.

காதுத் தொங்கட்டான்கள் ஆட, "ஊகூம்" என்று உதயரேகா தலையாட்டியதோடு சரி.

''சளிப் பிடித்துக் கொள்ளும். இருமல், காய்ச்சல் என்றால் நீதான் கஷ்டப்படுவாய். சொன்னால் கேள் உதயா'' என்று கிருஷ்ணசந்திரன் அதட்டவும், ''எங்கள் சித்தி மாதிரிக் கவலைப்படுகிறீர்களே? ஆனால் நாங்கள் யாரும் சித்தி சொல்வதை இந்த ஒன்றில் மட்டும் கேட்கவே மாட்டோம்...ம்...'' என்று அவள் முடிக்கையில் ஓர் ஊதல் காற்று அடிக்க, அதன் சிலுசிலுப்பில் உடல் நடுங்கிச் சிரித்தாள் உதயரேகா.

பொறுமையிழந்து, ''சொன்னால் கேட்பது உன் அகராதியிலேயே கிடையாதா? உன்னை...'' என்று கையை நீட்டி மனைவியைப் பிடித்து இழுத்தான் கிருஷ்ணசந்திரன்.

அவள் திமிறிக் கொண்டு விடுபட்டு செல்ல முயல ஈரத் தரை வழுக்க இருவருமே தரையில் சரிந்தனர்.

''ஆகா இப்போது நீங்களும் சேர்ந்து நனைந்து விட்டீர்கள், பாருங்கள்'' என்று வெற்றியோடு சிரித்தவளை வெறித்து நோக்கினான் கிருஷ்ணசந்திரன்.

பெரிய மழைத் துளி ஒன்று உதயரேகாவின் செவ்விதழின் மீது பட்டுச் சிதறியது.

தன் வசமிழந்து மனைவியைப் பற்றி அணைத்த கிருஷ்ணசந்திரன், வெற்றிச் சிரிப்பு சிரித்த அவளது வாயில் அழுத்தமாக முத்தமிட்டான். அவளும் கைகளை மாலையாய்க் கோத்து கணவன் கழுத்தில் இட்டு இழுத்து அணைக்கவும் கிருஷ்ணசந்திரன் தன்னை மறந்தான், அவளும்தான்.

அதற்கு மேல் இருவருக்கும் சுய உணர்வு வந்த போது மழை சுத்தமாய் நின்று விட்டு இருந்தது.

சுற்றும் முற்றும் ஒரு திகைப்புடன் சுழன்ற கிருஷ்ண சந்திரனின் பார்வை மையலுடன் நோக்கிய மனைவியிடம் மீண்டும் வந்து நின்றது.



''ராட்சசி'' என்றவன் சட்டெனக் குனிந்து மீண்டும் அவளை முத்தமிட்டான்.

அவளை எழுப்பி, ''உள்ளே வா. முதலில் நல்ல வெந்நீரில் இந்த சில்லிப்பு போகக் குளி'' என்று கைப்பிடியாக அறைக்குள் அழைத்துச் சென்றான்.

ஹீட்டரைப் போட்டு விட்டு ஷவர் அடியில் மனைவியை நிறுத்தியவனுக்கு அங்கேயும் அவளை விட்டு விலக முடியாது போக, அப்போது மட்டுமல்ல இரவெல்லாம் பகலானது போல அன்றிரவு முழுவதும் கிருஷ்ணசந்திரன் விநாடி நேரம் கூட கண் மூடி உறங்கவில்லை. அவளையும் உறங்க விடவும் இல்லை. வாழ் நாள் முழுமைக்குமான இன்பங்கள் அத்தனையையும் அன்றே அனுபவித்துத் தீர்த்து விடுகிறவனைப் போல மீண்டும் மீண்டும் மனைவியை நாடினான்.

இவ்வளவு ஆசையையும் இத்தனை நாள் ஏன் அடக்கி வைத்திருந்தான் என்று அவள் கேட்க முயன்றபோது அவன் அவளைப் பேச விடவும் இல்லை.

கீழ்வானத்தில் உதயம் வரப் போவதற்கு முன் னோடியாக கங்குல் கரைவதைக் கடைசியாகக் கண்ட ஞாபகம் உதயரேகாவுக்கு. அதன் பிறகு அவள் எப் போதோ உறங்கி இருக்க வேண்டும்.

மீண்டும் அவள் விழித்த போது கிட்டத்தட்ட உச்சி வேளையாகி விட்டிருந்தது.

பகல் வெளிச்சம் வராமல் இழுத்து மூடப்பட்டிருந்த ஜன்னல் திரைகள், கணவனின் கரிசனத்தைக் காட்ட பெருமிதமாக முறுவலித்தபடி திரும்பிப் பார்த்தாள் அங்கே கிருஷ்ணசந்திரனைக் காணவில்லை. மேஜை மேல் அவனது சிறு கைப்பெட்டியையும் காணாது போகவே இன்றுமா அலுவல



கம்? களைப்பாய் இராதா? என்று எண்ணியவாறே சோம்பல் முறித்த வண்ணம் எழுந்த போது அவள் கண்ணை அந்தக் கடிதம் உறுத்தியது.

பெரிய வெள்ளைக் காகிதத்தை நாலாக மடித்து கட்டிலுக்கு அருகே குடிக்கத் தண்ணீர் வைக்கும் சிறு முக்காலியில் பேப்பர் வெயிட்டின் கீழ் வைக்கப்பட்டு இருந்தது கடிதம்.

எடுத்துப் படித்துப் பார்த்தவளுக்குத் திகைப்பும் அதிர்ச்சியுமாக ஒன்றுமே புரியவில்லை.

ஏனெனில், ''இப்போது உன்னைப் பிரிந்து போகிறேன். ஒரு வேளை விதி நல்லதாக இருந்தால் நாம் மீண்டும் சந்திக்கலாம். ஆனால் எந்தக் காரணம் கொண்டும் என்னை நீ தேட வேண்டாம் - தேடக் கூடாது'' என்று கிருஷ்ண சந்திரன் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தான்.

## 22

கிருஷ்ணசந்திரனை அறிய நேர்ந்ததில் இருந்து இவ்வளவு காலத்தில், உதயரேகா பலமுறை மனம் குழம்பிப் போயிருக்கிறாள், கலங்கி இருக்கிறாள்; திகைத்து இருக்கிறாள்; அதிர்ந்தும் இருக்கிறாள். ஆனால் அன்றைய அதிர்ச்சி முன் நேர்ந்தவை அனைத்தையும் ஒன்றுமே இல்லை என்றாக்கி விட்டது எனலாம்.

முன்பு நடந்தவைகளுக்கெல்லாம் பெருமளவு குறைந்த பட்சம் ஓரளவுக்கேனும் சமாதானமாய் அவளது விருப்பமற்ற திருமணம் என்ற காரணம் இருந்தது. அவன் என்னதான் சொன்னாலும், செய்தாலும் அவன்தான் அன்றே மறுத்தானே என்று பெருமூச்சுடன் அதைச் சகிக்கவும், என்ன காரணம் என்ற சற்று நிதானத்துடன் தேடவும் வேறு வழிகளில் மனதைச் செலுத்தவும் முடிந்தது.



ஆனால் இப்போது அது ஒன்றும் முடியவில்லை. கடிதத்தைப் படித்ததும் அப்படியே அவளுக்கு வயிறு கலங்கி விட்டது.

முன்தினம் மாலையில் இருந்து கிருஷ்ணசந்திரன் அவளைக் கொஞ்சியதென்ன? குலவியதென்ன? பொட்டுக் கண் மூடாமல் கட்டி அணைத்தது என்ன?...

விட்டால் கே.பி. சுந்தராம்பாளின் வேலைப் பிடித்ததென்ன? பாட்டு மாதிரி எத்தனையோ 'என்ன'களை அடுக்கிக் கொண்டே போகலாமே?

அப்படி ஒட்டி உறவாடி விட்டு எல்லாம்... எல்லாமே நன்றாகி விட்டதாக அவள் உள்ளம் குளிர்ந்து உவகை எய்திய உடனேயே, இடி, மின்னல், மழை எல்லாவற்றையும் மொத்தமாகக் கொண்டு வந்து அவள் தலையிலேயே போடுவது போல இது என்ன?

கை நழுவி விழுந்த கடிதத்திலேயே விடையையும் காண்பாள் போல அதை எடுத்து மீண்டும் படித்துப் பார்த்தாள்.

விளக்கம் எதுவும் கிட்டாத போதும், பின்குறிப்பு என்று அடியில் ஏதோ இருப்பது கண்ணோடு கருத்திலும் பட அவசரமாக அதன் மீது விழிகளை ஓட்டினாள்.

அதிலும் அவளுக்கு உதவும்படியாக ஒன்றும் இருக்கவில்லை.

கிருஷ்ணசந்திரன் அவளுடைய நங்கைக்கும், இரண்டு நாட்கள் கழித்துக் கிடைக்கும்படியாக ஒரு கடிதம் எழுதி இருப்பதாகவும், அதன் நகல் அவனது அலுவல் மேஜையின் முதல் இழுப்பறையில் மேலாக இருப்பதாகவும், அதில் உள்ளது உதயரேகாவுக்கும் பொருந்தும் என்பதால் எடுத்துப் படித்து விட்டு அதன்படியே நடந்து கொள்ளுமாறும் அந்தப் பின் குறிப்பு தெரிவித்தது.

கூடவே இன்னுமொரு கொசுறாக, இனிச் சந்திப்பே நேராது போனால் முன்தினத் தவறுக்காக அவளை மன்னிக்குமாறும் வேண்டியிருந்தான்.

சந்திப்பே நேராது போவதா? என்ன பைத்தியக்காரத்தனம்? அவளைக் கலங்க அடித்தே கொன்று விடுவதாக எண்ணமா?

தொண்டை உலர ஓடோடிச் சென்று கணவனின் இன்னொரு கடிதத்தை எடுத்துப் பார்த்தாள்.

தந்தைக்குப் பிடிக்காத ஒருவகை நண்பர்களுடன் காலவரையறை அற்ற சுற்றுலா செல்லுவதாகவும், மகனைக் காணவில்லை, அது, இது என்று கலாட்டா செய்தால் திரும்பி வராமலேயே போய் விடப் போவதாகவும் அதனால் அவனைத் தேடி விரல் அசைப்பது கூடக் கூடாது என்று தந்தையை கிருஷ்ணசந்திரன் அந்தக் கடிதத்தின் மூலமாய் மிரட்டியிருந்தான். பெற்றவரை மட்டுமல்ல; அவளையும்தான்.

அங்கேயும் ஒரு பின்குறிப்பாய், அவன் பார்த்து வந்த தொழிலை அவனை விடவும் பிரமாதமாய் அவனுடைய மனைவி நடத்திச் செல்வாள் என்றும், ஆகையால் அதில் அவர் தலையிடத் தேவையிராது என்றும் கூடத் தகவல் தந்திருந்தான்.

இதுவும் அவளுக்கான சேதியே. தொழிலை அவளே நடத்த வேண்டும் என்று மறைமுகமாய் ஒரு கட்டளை. அப்படியானால் இதையெல்லாம் முன்னரே திட்டமிட்டுத் தான் அவளுக்குத் தொழிலைப் பயிற்றுவித்தானா?

அப்படியானால் முன்தினம் எதில் சேர்த்தி? அதுவும் முன்பே கணித்ததா? அல்லது அவளையும் மீறித் தன் வசமிழந்ததால் நேர்ந்ததா?



தவறு என்கிறானே ஏன்? கணவனும் மனைவியும் உறவு கொள்வது தவறாகுமா? ஆனால், எதற்காகவும் அவன் ஏன் அவளைப் பிரிந்து போகவேண்டும்? பிரிந்து எங்கே போனான்? தந்தைக்கு அவன் எழுதிய சுற்றுலாவில் அவளுக்கு நம்பிக்கை இல்லை. பின் அவன் எங்கே சென்றிருக்கக் கூடும்?

இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லக் கூடியவன் இருக்கும் இடம் தெரியாததோடு, அங்கே இங்கே என்று விசாரித்து அறியவும் வழியின்றி தேடக் கூடாது என்ற உத்தரவு வேறு. பெரிய உத்தரவு!

பல்லைக் கடித்து பயத்தோடு கூடப் பொங்கி வந்த சினத்தை மட்டுப்படுத்த முயன்று கொண்டிருந்தவளுக்கு இன்னொன்று உறுத்தியது.

தந்தையின் கைக்கு இரண்டு நாட்கள் பின்னதாக அவனது கடிதம் சென்றடையுமாறு கிருஷ்ணசந்திரன் ஏற்பாடு செய்திருந்தான். ஏன்? இந்த இரண்டு நாட்கள் அவகாசம் எதற்காக?

அவர் விழுந்தடித்துக் கொண்டு இங்கு வந்து மாமனும் மருமகளுமாக கலந்து பேசி, ஏதாவது ஒரு வகையில் அவனைக் கண்டு பிடித்து விடக் கூடும் என்று அஞ்சிவிட்டானா?

ஏன் இப்போது மட்டுமென்ன? இதோ இருக்கிறது டெலிபோன். அவர்கள் வீட்டுக்கு டயல் செய்து எல்லா விஷயங்களையும் மாமனாரிடம் கொட்டி விடுவது உதயரேகாவுக்கு ஒன்றும் முடியாத காரியம் அல்லவே? சொல்ல வேண்டும் என்று அவள் நினைத்துவிட்டால் அவளை யாரால் தடுக்க முடியும்? கணவன் கட்டளையிட்டு விட்டான் என்பதற்காக பழங்கால உத்தம மனைவி போல மூலையில் முடங்கிக் கொண்டு இந்த உதயரேகாவும் கிடப்பாள் என்று கிருஷ்ணசந்திரன் எண்ணினானா?



கணவன் அவ்வப்போது அவள் மனதை வருத்தியதை எல்லாம் மிகவும் உற்ற உறவினர்களுக்குக் கூடச் சொல்லாமல் இருவருடைய பெற்றோரிடம் கூட பகிர்ந்து கொள்ளாமல் மூடி மறைத்து உள்ளேயே குமைந்தது தவறோ என்று இப்போது உதயரேகாவுக்குத் தோன்றியது. அந்த வழக்கம் தானே இப்போதும் மனைவி வாயை மூடிக் கொண்டு இருப்பாள் என்கிற திமிரைக் கிருஷ்ணசந்திரனுக்கு அளித்திருக்கிறது?

இப்போதும் அப்படி வாளாவிருந்தால் விபரீதம் ஆகி விடும் என்று எண்ணி டெலிபோன் அருகே சென்ற உதயரேகாவுக்கு அதற்கு மேல் ரிசீவரை எடுத்து மாமனாரை அழைக்கும் தைரியம் வரவில்லை.

மீண்டும் சந்திப்பு நேராது போனால்... என்று ஒரு வரி எழுதி இருந்தானே இவளிடம் சற்று இதமாய் எழுதியவன் மாமனாரிடம் வேறு விதமாய்த் தொனியை மாற்றி வராமலே போய் விடுவேன் என்று மிரட்டலாகவும் அதையே கூறி இருக்கிறானே?

அப்படிச் சந்திப்பு நேராது போகுமோ என்று எண்ணம் ஓடும் போதே சில்லென்று உள்ளே குளிரெடுத்தது அவளுக்கு.

அவனைப் பார்க்காமல் அவளால் எப்படி இருக்க முடியும்? அதுவும் இனி?

உடனே அப்படி எதுவும் நேர்ந்து விடாமல் காப்பாற்று என்று வேண்டிய போது அவளது உடம்பு மெய்யாகவே நடுங்கியது. அவளுக்கு மட்டும் தான் பிரிவு வேதனையா? அவளைப் பிரிந்து அவனாலும் தான் எப்படி இருக்க முடியும் என்று யோசித்து சற்றே திடம் பெற்று நிமிர்ந்தவள் மறுபடியும் உடனேயே உடல் தொய்ந்தாள்.

முடியும் என்றுதானே வெளியேறிச் சென்று இருக்கிறான்.



சோர்ந்து சுருண்டவள் மீண்டும் எழுந்தாள். இதெல்லாம் வெறும் விளையாட்டோ? சும்மா அவளைக் கிண்டல் அடித்திருக்கிறானோ ஆனால் இவ்வளவு குரூரமாக விளையாடுவானா? ஏன் மாட்டான்? என்னவெல்லாம் செய்து இருக்கிறான்?

ஆனால் அதில் எதையும் வெறும் வேடிக்கை என்று அவன் முடித்தது இல்லையே? இப்போது... இப்போது ஒருவேளை...

சட்டென எழுந்து நின்றாள் உதயரேகா. இப்படிக் கிடந்து அலை பாய்வது மடத்தனம். முதலில் கணவன் மெய்யாகவே பிரிந்து சென்றிருக்கிறானா என்று தெளிவுபடுத்திக் கொண்டு இந்தக் கவலையும் வேதனையும் படலாம். மேலே என்ன செய்வது என்றும் யோசிக்கலாம். ஆனால் கண்டமாய் யோசனை தான் மேலே செல்ல மறுத்து அப்படியே நின்றது.

மீண்டும் கிருஷ்ணசந்திரனின் அறைக்குள் சென்றாள். ஆனால் அங்கே எதைக் கொண்டு என்ன அறிவது என்று தெரியாமல் சற்று நேரம் மலங்க நின்றாள்.

முன்னே பின்னே அங்கே வந்து போய், அவனது பொருட்களைக் கையாண்டு பழக்கம் இருந்தால் அல்லவா அவன் எதெதை எடுத்துச் சென்றிருக்கிறான் என்பது தெரியும்? முன்னாள் இரவில் எதை எதைப் பார்த்தோம் என்று யோசிக்க முயன்று விட்டு அந்த முயற்சியை கைவிட்டாள். நேற்று அவள் எதையும் பார்க்கும் நிலையில் இல்லையே?

கிருஷ்ணசந்திரனின் துணி அலமாரிகளை திறந்து பார்த்து விட்டு ஒன்றும் புரியாமல் மீண்டும் மூடினாள்.

யோசிக்கவே தெரியாதது போல மூளை வேலை நிறுத்தம் செய்தது.

நெற்றிப் பொட்டைத் தேய்த்து விட்டபடி நின்றவள் ஒன்று தோன்ற ஓடிச் சென்று குளியல் அறையிலும் அவனது டிரஸ்ஸிங் டேபிளிலும் தேடினாள்.

அவனது கடிதம் நிஜம் என்பதன் முதல் அறிகுறியாக எங்கும் அவனது ஷேவிங் செட்டைக் காணவில்லை. பேஸ்ட்... பிரஷ்... அடுத்து சீப்பு... லோஷன்..

நெஞ்சு கனக்க ஒவ்வொன்றாகத் தேடி முடித்தவள் மீண்டும் ஓடிப் போய் அலுவலகத்தில் அவனது தனி நம்பரைத் தட்டினாள்.

அவன் இருந்தால் ஓர் அழைப்பு மணிக்குள்ளாக எடுத்து விடுவான். வெகு நேரம் மணி அடித்தபோதே அவன் அங்கே இல்லை என்று அறிந்து அவளுக்கு ஓய்ந்துவிட்டது. ஆனால் கடைசியாக அவனுடைய செகரட்டரி அந்த சுலோசனா எடுத்துப் பேசும் வரை நப்பாசையும் விடவில்லை.

மறுமுனையில் இருப்பது யார் என்று அறிந்ததும் குரலே மாறி விட, "நீங்களா மேடம்? நீங்கள் நாளையில் இருந்துதான் வருவீர்கள்; இன்றைக்கு மட்டும் மானேஜர் தான் எல்லாம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சார் சொல்லி விட்டுப் போனாரே! இன்றே வருகிறீர்களா? மேடம்?" என்று குழைந்தாள் அவள்.

ஆமோதிப்போ, மறுப்போ இல்லாமல் வெறும் ஒரு 'ம்'முடன் ரிசீவரை வைத்துவிட்டுக் கனவில் நடப்பவள் போல மெல்லக் கீழிறங்கிச் சென்றாள்.

அவளைக் கண்டதும் அவசரமாக வந்து நின்று, "அம்மாவை எழுப்பித் தொந்திரவு பண்ண வேண்டாமின்னு அய்யா சொன்னாங்கம்மா. அதான் காபி அனுப்பலை. இப்ப நேரமாயிட்டுதேம்மா. காபியா? நேரே சாப்பிட்டு விடுறீங்களா?" என்று அக்கறையுடன் விசாரித்தான் சமையல் நாகராஜன்.



எழுப்ப வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போனானாமா? ரொம்பவும்தான் கரிசனம்?

சிரமத்துடன் குரலைச் சாதாரணமாக்கி, "அய்யா ஏதாச்சும் சாப்பிட்டார்களா?" என்று உதயரேகா வினவினாள்.

"எங்கம்மா? காபி கூட வேண்டாமின்னுட்டாங்க. காலையில ஏழு மணி. பலகாரம் ரெடியாகலை. உடனே தோசை சுட்டுத் தாரேன்னு சொன்னேம்மா. பசியே இல்லை என்றாங்க. பெட்டியோட போனாங்களே வெளியூருக்காம்மா? கார் உங்களுக்கு வேணும் என்பதாலே டாக்சி வரவழைச்சுப் போனாங்கம்மா..."

காலை ஏழு மணிக்கே அவன் உறங்குமுன் இருள் அகலத் தொடங்கியதைப் பார்த்தானே அதன் பின் கிளம்பி சடுதியில் எழுதிச் செல்வது என்றால்... அவன் தூங்கவில்லை.

கூடவே அவன் சென்று விட்டது உண்மையே. எப்படி முடியும்... எப்படி முடியும்... என்று நெஞ்சு தவியாய்த் தவித்தது.

உள்ளுறுப்புகள் அனைத்தும் பனிக்கட்டியாக மாறி விட்டது போன்ற உணர்வு.

சூடாகக் காபி அருந்தினால் இந்தக் குளிர் மாறுமோ என்று காபி கொண்டு வரச் சொன்னாள்.

காபியை அருந்தத் தொடங்கும்போதுதான் இன்னமும் பல் துலக்கவில்லை என்பது நினைவு வந்தது.

"எனக்கும்... இரவு அது இது என்று சாப்பிட்டதில் எனக்கும் பசியில்லை. நீங்கள் எல்லோரும் சாப்பிடுங்கள்" என்று நாகராஜிடம் கூறி விட்டு காபிக் கோப்பையுடன் மீண்டும் மாடிக்குச் சென்றாள்.



பல் துலக்கி விட்டு வந்தால் காபியின் நினைவே மறந்து போயிற்று.

இப்போது என்ன செய்வது?

ஓர் இரண்டு நாள் ஒரு கணவன் வெளியூர் செல்வது பெரிய விஷயம் அல்ல. ஆனால் அந்த இரண்டு நாட்களின் பின் அவன் திரும்பி விடுவான் என்கிற நிச்சயமும் இருந்தால் அந்தப் பிரிவு தவிர எந்த விதக் கவலையும் அற்ற நிம்மதியும் இருக்கும்.

ஆனால் விதி நல்லதாக இருந்தால் மீண்டும் சந்திக்கலாம்! சந்திப்பு நேராமல் போனால் மன்னித்து விடு என்றெல்லாம் ஒரு மனிதன் எழுதி வைத்து விட்டுப் போனால் அவன் மனைவி எப்படித் தாங்குவாள்?

வென்று விட்டோம் என்ற இறுமாப்பு அடியோடு பஸ்பமாகி விட கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற் போல திக்கு திசை புரியாமல் செல்லும் வழி தெரியாமல் எதைச் செய்யவும் தைரியமற்று உதயரேகா கதி கலங்கிப் போனாள்.

'ஓ'வென்று பெருங் குரலெடுத்து அழ வேண்டும் போல வந்ததைப் பெருமுயற்சி செய்துஅடக்கி மேலே யோசித்தாள்.

என்ன என்னவென்று நாள் முழுவதுமாய் மூளையைக் கசக்கியதில் கிருஷ்ணசந்திரன் இப்படி ஒரு பிரிவை எதிர்பார்த்து, அதற்காகவே பல்வேறு காரியங்களை செய்து வந்திருப்பதாகத் தோன்றியது.

தொழிலில் அவளைப் பழக்கியது, தங்கையை மணிவாசகத்துக்குத் திருமணம் முடிக்க முயன்றது.... மணிவாசகம்!



எந்த ஒரு நிலையிலும் சற்றும் தயக்கமின்றி உதவி கோரிச் செல்லக் கூடிய ஒரே ஆள் அவன். நினைவில் வை என்றானே!

இந்த மணிவாசகத்துக்கு ஏதேனும் தெரியுமா என்று கேட்டுப் பார்க்கலாமா?

ஓடிப் போய் டைரியை எடுத்துப் பார்த்து உடனேயே மணிவாசகத்துக்கு டெலிபோன் செய்தாள். அவன்தான் எதைத் தின்றால் பித்தம் தெளியும்? என்ற நிலையில் இருந்தானே?

அழைத்தவள் உதயரேகா என்பதை அறிந்ததும் 'ஓ' என்று வியந்தவன் அழைத்த காரணம் தெரிந்ததும் "இது பற்றி உங்களுக்கு உதவ நான் ஒன்றும் செய்வதற்கு இல்லையே?" என்று சற்று வருத்தம் காட்டிப் பிசிரற்ற குரலில் கூறி விடவும் உதயரேகா மீண்டும் சோர்வடைந்து போனாள்.

"ஏதாவது தெரிந்தால் சொல்லுங்கள்" என்று கூறி ரிசீவரைத் தாங்கியில் வைத்து விட்டு மீண்டும் சோபாவிலேயே சுருண்டாள். சமையல்காரனின் தொல்லைக்காக எடுத்து வந்த உணவு அப்படியே வீணாயிற்று. இருள் பரவத் தொடங்கியதும் முந்தைய நாளை எண்ணி அடக்க மாட்டாமல் அழுது தீர்த்தாள்.

டி.வியில் பத்திரிகையில் காணவில்லை என்று விளம்பரம் செய்யலாமா என்று அவ்வப்போது யோசிக்கும் போதே தற்கொலை செய்தால்.. என்ற அவனது அச்சுறுத்தல் நினைவு அந்த யோசனையை காய வைத்தது.

என்ன ஏது என்று லேசாகத் தெரிந்தால் கூடக் கொஞ்சம் ஆறுதலாய் விடும் போலத் தோன்றியது.

ஆனால் மணிவாசகத்துக்கே ஒன்றும் தெரியவில்லை என்றால் வேறு யாரிடம் போய் என்னவென்று கேட்பது?

எப்பேர்ப்பட்ட நண்பன் மணிவாசகம்? கிருஷ்ணசந்திரனுக்கு மட்டுமில்லாமல் அவனுடைய குடும்பத்துக்கே உதவி செய்கிறவன்.

நளினாவின் வீட்டில் பார்ட்டியில் கிருஷ்ணசந்திரன் தாயை அலட்சியம் செய்து யோகா வகுப்பில் விட்டு வந்ததை அறிந்து சாந்திமதியை அழைத்து வர ஓடோடி வந்தான்! குடித்து விட்டுப் பார்க்கில் கிடந்தவனிடம் விவரம் அறிந்து வசுமதியின் பிறந்த நாளைக்கு என்று பரிசு வாங்கி வந்தான்.

இன்னும்... என்று செய்வது அறியாமல் எண்ணத்தைத் தன் போக்கில் ஓட விட்டுக் கொண்டிருந்த உதயரேகா விலுக்கென்று நிமிர்ந்தாள்.

வெடித்துவிடும் போல வேகமாகத் துடித்த இதயத்தை அழுத்திக் கொண்டு வேகமாக யோசித்தாள்.

இந்தப் பிழைகள் எல்லாம் மெய்யில்லையே? குடி, கெட்ட பெண்கள் சகவாசம் எல்லாம் கிருஷ்ணசந்திரன் நடித்த நாடகங்கள்தானே!

இல்லாத ஒன்றைக் கதை பரப்பக் கிருஷ்ணசந்திரன் முயன்றான் என்றால் அது ஏன் என்பது இன்னமும் புதிரே! அந்தப் பொய்க் கதைகளைப் பரப்பிய கருவி மணிவாசகம் அல்லவா?

தான் பரப்பிய கதைகள் பொய் என்பது நிச்சயமாக அவனும் அறிந்த விஷயம்தான்.

அப்படியானால் இந்த ஏமாற்று வேலை இருவரும் கூட்டாகச் செய்ததா? அல்லது கிருஷ்ணசந்திரன் ஏவியதை, இவன் செய்தானா?

வசு திருமணப் பேச்சை உதயரேகாவின் வார்த்தைக்கிணங்கி கிருஷ்ணசந்திரன் விட்டு விட்டதால் ஆட்டுவிப்பவன் கிருஷ்ணசந்திரனே என்பதும் தெளிவாயிற்று.



ஆட்டுபவர் ஆட்டு வித்தால் ஆரொருவர் ஆடாதாரே என்ற சொற்றொடர் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் நினைவு வந்தது.

ஆடுவார்கள்; ஆடுவார்கள்! விடியட்டும். இந்த ஆட்டம் எதுவரை என்று பார்க்கலாம். அவன் ஆட்டு வித்தால் இவள் அதே போல இம்மி பிசகாது ஆடித்தான் ஆக வேண்டும் என்று என்ன கட்டாயம்?

பாதிப்பகல், முழு இரவு தூண்டில் புழுவைப் போல அவள் துடியாய்த் துடித்து இருக்கிறாள். அதிலும் இரவு முழுவதும் முன்னாள் நினைப்பும், அன்றைய நடப்புமாகப் பைத்தியம் பிடித்து விடுமோ என்று கூட சந்தேகம் வந்தது. வினாடி இடைவெளி விட முடியாமல் எண்ணமாய்த் தவித்தாள்.

நேற்று மணிவாசகம் மட்டும் உண்மை சொல்லியிருந்தால்... என்று எண்ணும் போதே தன்னை மீறி விசும்பி அழுதாள்.

அவளது வாழ்வே அந்தரத்தில் வெறும் நூலிழையில் தொங்குகிற உணர்வு. கேட்டால் ஒன்றும் செய்வதற்கு இல்லையாமா? முதலில் விடியட்டும்.

ஐந்து மணிக்கே குளித்து முடித்து விட்டு வெளியே செல்வதற்கான உடையுடன் உதயரேகா தயாராக உட்கார்ந்திருந்தாள்.

ஆறு மணியானதும் இறங்கி வந்து காரை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். பெட்ரோல் பங்கிலும் பெட்டிக் கடையிலுமாகத் தனக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டாள். நேராக மணிவாசகத்தின் வீட்டை அடைந்து கதவைத் தட்டினாள்.

உதயரேகாவைக் கண்டதும் ஒரு கணம் திகைத்த போதும் உடனேயே மணி வாசகத்தின் முகம் மாறி விட்டது. "உள்ளே வாருங்கள்" என்று வழி விட்டு நின்றான்.



அதற்கு மேல் உணர்ச்சியற்று நோக்கியவனிடம், "ஒருவன் நல்ல நண்பனாக இருப்பது என்றால் அந்த நண்பர் சொல்வதை எல்லாம் அப்படியே செய்வது அல்ல. தோழனுக்கு எது நல்லது, எது கெட்டது என்று யோசித்து அதற்குத் தக்க செயல்படுவதுதான். சொல்லுங்கள் மிஸ்டர் மணிவாசகம், என் கணவர் எங்கே?" என்று அதிகாரமான குரலில் விசாரித்தாள் உதயரேகா.

அவன் மறுப்பாகத் தலையசைக்கவும், அருகில் வைத்திருந்த டின்னைக் குனிந்து எடுத்தாள். "பாருங்கள், இது பெட்ரோல். இது தீப்பெட்டி. நீங்கள் எனக்குச் சரியான பதில் சொல்லா விட்டால் இங்கேயே கொளுத்திக் கொள்வேன். உங்கள் வீட்டு ஹாலில் ஒருத்தி தற்கொலை செய்தாள் என்றால், அப்புறம் உங்களை உண்டு இல்லை என்று ஆக்கி விட மாட்டார்களா? யோசித்து பதில் சொல்லுங்கள். ஆனால் ஒன்று. அப்படி ஒன்றும் நான் செத்து விடமாட்டேன் என்று மட்டும் நினையாதீர்கள். உங்கள் நண்பரைப் பிரிந்து வாழ்வதை விடச் சாவு எனக்கு சுகமே..." என்றவள் அவனை நேராக நோக்கியபடி பெட்ரோல், டின்னுடன் தயார் நிலையில் நிமிர்வோடு நின்றாள்.

மணிவாசகத்தின் சீரியசான முகத்தில் ஒரு சிறு புன்னகை லேசாகத் தோன்றியது. ஒரு பெருமூச்சுடன், "எனக்கு பிரச்சினையாகி விடும் என்ற பயத்தால் அல்ல சகோதரி. வெகு நாட்களாகவே அதுவும் நேற்று முன்தினத்துக்கு பிறகு உங்களிடம் எதையும் மறைப்பது எனக்கும் சரியாகப் படவில்லை. அவனிடம் சொன்னேன். ஆனால்... உட்காருங்கள். உங்களுக்கென்று கேசி என்னிடம் ஒரு கடிதம் தந்திருக்கிறான். சற்றுப் பொறுத்து தரச் சொன்னான்." என்றவன் ஒரு பெருமூச்சு விட்டு, "அதைப் படித்துப் பாருங்கள். எல்லாம் தெரிந்து விடும்" என்று உள்ளே சென்று ஒரு கவரை எடுத்து வந்து உதயரேகாவிடம் கொடுத்தான்.



கனமான உறை. பல பக்கங்கள். இத்தனை பக்கங்களில் கிருஷ்ணசந்திரன் என்ன எழுதி இருக்கிறான்?

அவசரமாகப் பிரித்து இரண்டு வரி படிக்குமுன் அவளுக்கு மூச்சடைத்துப் போயிற்று.

தண்ணீரில் இருந்து தரையில் எடுத்துப் போட்ட மீன் போல வாயை வாயைப் பிளந்த போதும் ஏங்கி ஏங்கி மார்பு விம்மித் தவித்த போதும் உயிர்க்காற்றை இம்மியளவு கூட அவளால் உள்ளே இழுக்க முடியவில்லை.

ஏனெனில், என் கண்மணி என்று அழகாக அழைத்து விட்டு, "இந்தக் கடிதத்தை நீ படிக்கும் போது என் உயிர் இந்த உடல் கூட்டை விட்டுப் பிரிந்து வெகு நேரம் ஆகி இருக்கும்..." என்று கடிதத்தைத் தொடங்கி இருந்தான் அவளுடைய ஆருயிர் நாயகன்.

## 23

கணவனின் கடிதம் தந்த அதிர்ச்சியை, மூச்சுக் காற்றுக்கு உதயரேகாவின் உடல் தவித்த போது அவளது உயிரும் அப்போது போய் விடப் போவதாகவே அவளுக்குத் தோன்றியது. அப்போதே இறந்து, ஆவி உலகில் கணவனை எட்டிப் பிடித்து விடப் போவதாகக் கூட ஓர் எண்ணம் தோன்றி விட்டது.

ஆனால் அவளது நிலையை உணர்ந்த மணிவாசகம், சட்டென அவளது தோளைப் பற்றிக் குலுக்கினான். குலுக்கியபடியே, "உதயரேகா, இந்த வினாடிவரை கேசியின் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை. இந்தக் கடிதத்தைச் சற்றுப் பொறுத்துதான் தரச் சொன்னான் என்றேனே மறந்து [illegible]? உதயரேகா சிஸ்டர்" என்று தெளிவான உச்சரிப்புடன் உரக்க உரைத்து அவளை மேலும் உலுக்கினான்.

அவனது பேச்சைக் கருத்தில் ஏற்றார் போல் உதயரேகா ஒரு பெரும் நெட்டுயிர்ப்புடன் மூச்சு விடத் தொடங்கவும் அவளை நடத்திச் சென்று ஒரு பிரம்பு நாற்காலியில் அமரச் செய்தான். உள்ளே சென்று ஒரு தம்ளரில் குளிர்ந்த நீர் கொண்டு வந்து கொடுத்துக் குடிக்கச் சொன்னான்.

ஒரு மிடறு நீர் அருந்தும்போதே ஒரு திடுக்கிடலுடன் நிமிர்ந்து, ''நீங்... நீங்கள் சொன்னது நிஜம்தானா? சும்மா வேணும் சொல்லவில்லையே? அவர்... உங்கள் நண்பர் இருக்கிறார்தானே?'' என்று திகிலுடன் வினவினாள். அந்த வினாடியில் அவளைக் காப்பதற்காக மணிவாசகம் பொய் சொன்னானா என்ற சந்தேகம் அவளுக்கு வந்து விட்டது.

ஆனால் ''சர்வ நிச்சயமாக உண்மை சிஸ்டர். வேண்டுமானால் கேசி மீதே சத்தியம் செய்யட்டுமா?'' என்று மணிவாசகம் உறுதியாகக் கூறவும் ஆறுதலுற்றவளாய், ''வேண்டாம்'' என்று தலையசைத்து விட்டு மீதி நீரை அருந்தினாள்.

தம்ளரை கீழே வைத்து விட்டு மணிவாசகத்தை நேராக நோக்கினாள். ''இந்த வினாடி வரை என்றீர்கள்...?''

அவன் தலையாட்டி விட்டு பேசாமலேயே நிற்கவும், ''இப்போது கூட மறைப்பீர்களா?'' என்று அழுது விட்டாள் அவள்.

''மறைப்பதில் எனக்கு எப்போதுமே உடன்பாடு இல்லை என்றேனே. கடிதத்தில் எல்லாமே எழுதி இருப்பதாகக் கேசி சொன்னான். அதனால்தான்...'' என்று நிறுத்தினான் அவன்.

அவளது இறுகிய பிடியில் கசங்கியிருந்த கடிதத்தை வெறித்துப் பார்த்தாள் உதயரேகா.

இது வெடித்த முதல் குண்டிலேயே குலை நடுங்கிப் போயிற்று இன்னும் என்ன சொல்லப் போகிறது இது?



''ஆனால் அவருக்கு ஆபத்து என்பது உண்மை?''

''ஆமாம்...''

''பெரும் ஆபத்தா...?''

''ஆமாம்''

''என்ன மாதிரி ஆபத்து?''

பொறுமையிழந்து, ''அதுதான்...'' என்று தொடங்கிய மணிவாசகம் சட்டெனப் பேச்சை நிறுத்திக் கொண்டான்.

இவள் பயப்படுகிறாள். எந்த நம்பிக்கைக்கும் வழி இல்லை என்று முடிவாகி விடுமோ என்ற அச்சத்தில் கையில் இருக்கும் கடிதத்தைப் பிரித்துப் படிக்கவே தயங்குகிறாள்.

மனைவியின் துணிச்சலையும், தைரியத்தையும் கெட்டிக்காரத்தனத்தையும் பற்றி நண்பனின் வாய் மூலம் வெகுவாகக் கேள்விப்பட்டிருந்த மணிவாசகத்துக்கு இப்போது அவளது பயத்தைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

இல்லை என்று முடிந்து போன சொந்த வாழ்வு நினைவு வர மனம் கசிந்தது.

ஆனால் இப்போது இரக்கப்பட்டு மறைப்பதினால் எதுவும் மாறிவிடப் போவதில்லையே?

கனிவுடன், ''பாருங்கள் சிஸ்டர், அநேகமாக நீங்களே இதற்குள் ஊகித்து இருப்பீர்கள். முன்பு ஒரு சமயம் கேசியின் தலையில் அடிபட்டு... அப்போது கல்லூரியில் கடைசி ஆண்டு சுற்றுலா போன போது படகுச் சவாரி போயிருக்கிறார்கள். வயதுப் பையன்கள் அல்லவா? நாங்களே துடுப்பு வலிக்கிறோம் என்று படகு கவிழ்ந்து இரண்டு பேர் இறந்து கூடப் போனார்கள். கேசிக்கு நீச்சல் தெரியும். அவனே முடிந்த அளவு ஏழெட்டுப் பேரைக் காப்பாற்றி இருக்கிறான். கடைசியில் படகோ, துடுப்போ ஏதோ கட்



டையோ, பிடரியில் மோதி அடிபட்டு மயக்கமாகி இருக்கிறான். அதிக நேரம் தண்ணீருக்குள் மூழ்கியிருந்ததால் மயக்கம் வந்திருக்கும் என்று எண்ணி அதற்கான சிகிச்சை மட்டும் செய்திருக்கிறார்கள். இவனுக்கும் எதனால் மயக்கம் வந்ததுஎன்று எதுவுமே தெரியாது. விரைவில் தெளிந்து விடவும் யாரும் அது பற்றி மேலே யோசிக்கவே இல்லை. பிறகு அவ்வப்போது தலை வலிக்கத் தொடங்கியிருக்கிறது. வலி தீர தேவைப்பட்ட போது மாத்திரை போட்டுக் கொண்டது தவிர, அப்போதும் அந்த விபத்தோடு இந்தத் தலைவலியைச் சம்பந்தப்படுத்தி கேசி யோசிக்கவே இல்லை. உங்கள் திருமணத்துக்கு ஆறு மாதங்களுக்கு முன்பாகத்தான் தலைவலி தாங்க மாட்டாமல் போகவே, முழு வைத்தியப் பரிசோதனை செய்து பார்த்திருக்கிறான். அப்போதும் பெற்றோருக்குத் தெரிந்தால் அனாவசியமாய்க் கவலைப்படுவார்கள் என்று தானாகவேதான். அப்போதுதான்...'' என்று நிறுத்தி அவளைப் பார்த்தான்.

''மூளையில் புற்று... புற்று... இல்லையில்லை அடிபட்டு என்றால் உள்ளே ரத்தக் கட்டியா...?''

''ஆமாம்''

''அதுதான் இப்போதெல்லாம் மருத்துவ விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேறி விட்டதே? அதை அகற்றி விட வேண்டியதுதானே?'' என்று படபடவென்று யோசனை கூறியவள் தயங்கி, ''அதிலேயும் சிக்கலா?'' என்று கலக்கத்துடன் வினவினாள்.

''ஆமாம் அம்மா...'' என்றான் மணிவாசகம். ''கட்டி அமைந்திருக்கும் இடத்தில் அறுவை சிகிச்சை மிகவும் கடினம். அதைச் செய்தாலும் வெற்றி வாய்ப்பு மிகவும் குறைவு. அப்படியே உயிர் தப்பினாலும் பெரும்பாலும் ஒரு தாவரம் போல எந்தவித உணர்வும் இல்லாமல் வாழ வேண்டியிருக்கும். கோமா நிலை என்கிறார்கள் டாக்டர்கள்'' என்றான் பணிவான குரலில்.



''சிகிச்சை செய்யாமல் விட்டு விட்டால்? இப்போது போலவே தேவைப்பட்டபோது வலிக்குரிய மாத்திரை போட்டுக் கொண்டு இப்படியே இருந்துவிடலாமே'' என்று மீண்டும் அவசரப் படபடப்புடன் பேசினாள் உதயரேகா.

''கேசி தலைவலியினால் வேதனைப்படும் போது நீங்கள் பார்த்ததுண்டா, உதயரேகா? நேராக நடக்கக் கூட அவனால் முடியாது. உடனேயே மாத்திரை போட்டால் கூட வெகு நேரம் வலி தாங்க முடியாது. யார் கண்ணிலும் படாமல் அறைக்குள் சென்று உள்ளே பூட்டிக் கொள்வான்''

''பார்த்திருக்கிறேன்'' என்று உரைத்தவளுக்கு உள்ளே வலித்தது.

இதைப் போய் என்னவெல்லாம் எண்ணி விட்டாள்.

''ஆரோக்கியத்தைக் கெடுக்கும் எதையும் உட்கொள்ள மாட்டேன்'' என்று அவ்வளவு உறுதியோடு சொன்னாரே! அப்போது கூட இப்படி இருக்கக் கூடுமோ என்று யோசிக்கத் தெரியாமல் போயிற்றே. ஆனால் இது எப்போதோ வரும் வலி. தினமுமே வந்தால் கூட சில மணி நேரம் பல்லைக் கடித்து சகித்துக் கொண்டு இருந்து விடலாமே. உயிர் எவ்வளவோ பெரிதாயிற்றே. ஏன் இந்த சிகிச்சை செய்ய வேண்டும்?

ஏன் என்பதை மணிவாசகம் சொன்னான். ''மிக நுண்ணிய அளவில் என்றாலும் அந்தக் கட்டி வளர்ந்து வருகிறது. அடுத்து அது உயிர் நடத்தும் உறுப்புகளுக்கான கட்டளைகளைப் பிறப்பிக்கும் நரம்பு மண்டலத்தை அழுத்தப் போகிறது. அப்போது மரணம் நிச்சயம். இதற்கு மேல் நீங்கள் கேசியின் கடிதத்தைப் படிப்பது மேல் உதயரேகா. இந்த அடிப்படை உண்மைகளைத் தவிர உங்களிடம் அவன் இன்னும் கூட ஏதேனும் சொல்ல விரும்பியிருக்கலாம்'' என்று முடித்து விட்டு எழுந்து சென்றான்.

கலங்கியவாறே, மீண்டும் கடிதத்தைப் பார்த்தாள் உதயரேகா.

"நூற்றில் ஒரு வாய்ப்பாக மட்டும் இந்தக் கடிதம் நீ படிக்கத் தேவை இராமல் போகலாம் உதிம்மா. ஏனெனில் நான் உயிர் பிழைத்து வந்து, இதை எல்லாம் உன்னிடம் நேரில் சொல்வதற்கு மருத்துவர்கள் தரும் நம்பிக்கை ஒரே ஒரு சதவீதம் மட்டுமே. மற்ற தொண்ணூற்றொன்பது சதவீத உண்மை நான் பிழைக்க மாட்டேன் என்பதே" என்று தன் நிலைமையைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியிருந்தான் கிருஷ்ணசந்திரன்.

கண்களை இறுக மூடிக் கொண்டு உதயரேகா சற்று நேரம் அப்படியே அமர்ந்திருந்தாள். இதற்கு மேல் படிப்பதற்கு என்ன இருக்கிறது? ஆனால் அவன் எழுதியிருக்கிறான்.

கண்ணைத் துடைத்துக் கொண்டு மேலே படித்தாள்.

"நீ உதயத்தின் ரேகை. நானோ அஸ்தமன சந்திரன். என் முடிவில்தான் உன் தொடக்கமே! உன்னை நான் மணந்தது எவ்வளவு பெரிய இமாலயத் தவறு! அப்போதே நான் பிடிவாதமாய் மறுத்திருக்க வேண்டும். ஆனால் உன்னை அருகில் இருந்து பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று ஓர் அடக்க முடியாத ஆசை! அம்மா வேறு பெரிதாக மிரட்டவும் அதுதான் சாக்கென்று இருந்து விட்டேன்"

"கடப்பாறையை விழுங்கிவிட்டு சுக்குக் கஷாயம் சாப்பிடுவது போல அப்போதும் கண்மணி, சும்மா உன்னை மணந்து உன் வாழ்வை வீணாக்கி விடக் கூடாது என்று ரொம்பவும் யோசித்து ஒரு வழி கண்டு பிடித்து வைத்திருந்தேன். தனிமையில் உன்னை விட்டு விலகியே இருந்தால் பின்னர் என் மறைவின் பின் உனக்கு இன்னொரு வாழ்வு அமைவது எளிதாக இருக்கும் என்று எண்ணினேன். ஏனெனில் ஒரு சாதாரண வைத்தியப் பரிசோதனை உன்னைக் கன்னியென்று நிரூபித்து விடுமே என்று ரொம்பப்



பெரிதாகத்தான் திட்டமிட்டேன். ஆனால் மிகவும் பரிதாபமாக அதிலும் தோற்றேன்"

"உன்னை மணந்தது ஒரு மடத்தனம் என்றால் உன்னைத் தொட்டது என் சுய நலத்தின் உச்சம். நான் மிகவும் பலவீனமானவன். உதிம்மா, வெகுவாய் போராடி, இத்தனை நாள் என்னால் ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த காதல் உணர்வு அல்லது காமப் பேயிடம் அடியோடு தோற்றுப் போனேன். என் செல்வமே, அன்று உன்னை விட்டு விநாடி நேரம் விலகக் கூட என்னால் முடியவே இல்லை. என் கண்மணி, அதற்காக நீ என்னை மன்னிக்க வேண்டும் கண்ணே!"

நெஞ்சை அழுத்திக் கொண்டு, சில கணங்கள் உதயரேகா அப்படியே அமர்ந்திருந்தாள்.

மன்னிப்பதா? யார் யாரை?

வாழ்நாள் முழுமைக்குமான இன்பம் அத்தனையும் அன்றே அனுபவித்துத் தீர்த்து விடுவான் போல என்று எண்ணினாளே மெய்யாகவே அப்படித்தானே நடந்து கொண்டிருக்கிறான். அவளுக்குத் தான் அறிந்து கொள்ளத் தெரியவில்லை. அது மட்டுமா புரியவில்லை. அன்று படத்தைத் தடவிக் கொடுத்தானே கூந்தலை வருடினானே அப்போதெல்லாம் மனைவியிடம் தோற்பதற்கு வருகிறான் என்று எண்ணினாளே! அவன் மரணத்திடம் தோற்பது அறிந்தல்லவா நொந்திருக்கிறான். எல்லாமே இப்போதல்லவா புரிகிறது.

நெடுமூச்சுடன் மீண்டும் கடிதத்தைப் பார்த்தாள்.

"என் பெயர் கிருஷ்ணசந்திரன். அர்த்தம் தெரிகிறதா கண்மணி? கறுப்பு சந்திரன் - அமாவாசை சந்திரன். அந்தோ இல்லாத சந்திரன். தங்களை அறியாமலே என் பெற்றோர் எனக்கு எவ்வளவு பொருத்தமாய் பெயர் சூட்டியிருக்கிறார்கள் பார்!"



"என் பெற்றோர் மிகவும் பரிதாபத்திற்கு உரியவர்கள் உதிம்மா. அவர்களுக்குத் திருமணமாகி ரொம்ப நாள் கழித்து - பத்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் நான் பிறந்தேனாம். என் மேல் மிகுந்த பாசம் அவர்களுக்கு. கண்ணிழந்தான் பெற்றிழந்தான் போல என்று கம்பராமாயணத்தில் ஓர் இடம் வரும். படித்திருக்கிறாயடா? என்னை அவர்கள் பெறாமலே இருந்திருந்தால் இல்லை என்ற அந்த ஒரு துன்பத்தோடு போயிருக்கும். இப்போது பெற்றிழக்கும் இந்தத் துயரம் எப்படித் தாங்குவார்கள்?

அதனால் பெறாமலே இருந்திருக்கலாமே என்ற எண்ணம் உருவானால் இறப்பின் துயரம் குறையக் கூடும் என்று எண்ணித்தான் அவர்களிடம் கெட்டவனாக, தீய பழக்கங்கள் உடையவனாக இரக்கமற்ற ஓர் அரக்கனாக நடித்தேன் கண்மணி...

"இப்போதும் இனியும் கூட இந்த உண்மை அவர்களுக்குத் தெரியலாகாது, கண்ணம்மா. அவர்களைப் பொறுத்தவரையில் கெட்டலைந்து திரிந்த மகன், இப்போது கண் காணாத இடத்துக்குச் சொல்லாமல் கொள்ளாமல் போய் விட்டதாகவே இருக்கட்டும். செல்லுமிடம் யமனுலகம் என்பதும் தெரிந்தால் இன்னமும் அவர்கள் தாள மாட்டார்கள்.

"பெற்றோரிடம் மறைத்து, உனக்கு எழுதுகிறேன் என்றால் உன்னிடம் எனக்குள்ள அன்பு மட்டமானது என்று அர்த்தமல்லடா என் கண்மணி, நீ என்னைத் தவறாக எண்ணுவதை என்னால் தாங்க முடியவில்லை. அதைத் தாங்கும் தியாகம் செய்யவும் திடம் எனக்குக் கிடையாதும்மா...

"என் வாழ்வில் இது மாலை மயங்குகின்ற அந்தி நேரம். ஒளி மெல்ல மெல்லக் குறைந்து உயிர் ஒடுங்கிக் கொண்டு இருக்கிறது. இந்த அஸ்தமன வேளையில் போய் என் வாழ்வில் வந்தாயே, என் செல்வமே! முன்பே நாம்



சந்தித்திருந்தால் சில ஆண்டுகளாவது நாம் இருவரும் இன்பமாய் வாழ்ந்திருக்கலாம் என்று ஏக்கமாக இருக்கிறது. ஆனால் என்ன என் சுய நலம் பார்த்தாயா? ஆண்டுக் கணக்கில் சேர்ந்து வாழ்ந்தால் பிரிவது உனக்கு எவ்வளவு கடினமாயிருக்கும். இப்போதே சிறிது காலத்தில் இதை மறந்து இன்னொரு வாழ்வில் ஈடுபட உனக்குக் கொஞ்சம் வாய்ப்பு இருக்கிறது.

"மறப்பதா? இவனையா? இந்தப் பிறவியில் நடக்கிற காரியமா?"

"கை நழுவுகிற சொர்க்கத்தை எண்ணிப் பார்க்கும் போது எனக்கு பெண் பிள்ளை போல அழுகை வருகிறது. அதென்ன பெண் பிள்ளை போல? அப்படியானால் பெண்கள் அழுமூஞ்சிகளா? என்று நீ தலையைச் சிலுப்புவதை மனதில் கண்டு ரசிக்கிறேன். தலையைச் சிலுப்புகிற வேகத்தில் கலைந்து நெற்றியில் புரளும் கூந்தல் சுருளை ஒதுக்கி விடத் துடிக்கிறேன். ஆனால்... என் கண்மணி, அதற்கு எனக்குக் கொடுப்பினை இல்லையே?"

"இதை எல்லாம் எழுதுவதே உன்னை அதிகமாகத் துன்புறுத்துமோ என்று உள்ளம் கலங்குகிறது. ஆனால் என்னைப் பற்றி உனக்கு எத்தனையோ குழப்பங்கள். இறுதி வரையில் அவற்றைத் தெளிவுபடுத்தாமல் போக எனக்கு மனம் வர மாட்டேன் என்கிறதே?"

"இப்போது சில சுமைகளை நான் உன் மீது சுமத்தப் போகிறேன் உதிம்மா. பணம் காசை நீ பெரிதாக நினைப்பவள் அல்ல என்பது எனக்குத் தெரியும். ஆயினும் நம் தொழிலில் என் பங்குகள் அனைத்தையும் உன் பெயருக்கு மாற்றி விட்டேன். தொழிலைக் கவனிப்பது உன் பொறுப்பு"

"அடுத்து என் தங்கை. அவளுக்கு ஒரு நல்ல வாழ்வை அமைத்துத் தரும் பொறுப்பை உன்னிடம்தான் ஒப்படைக்கப் போகிறேன். அப்பா பார்ப்பார்தான். ஆனால் பெண்ணின் மனதறிந்து செய்யக் கூடியவள் நீதான் என்பதோடு

என் பெற்றோரும் உன் வார்த்தைக்கு மதிப்புக் கொடுப்பார்கள்.''

''கடைசியாக துர்பாக்கிய சாலியான என் பெற்றோர். ஆனால் ஒன்று உதி. உனக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமைய இவற்றுள் எந்தப் பொறுப்பேனும் தடையாக இருக்குமானால் அதை நீ உதறித் தள்ளி விட வேண்டும். அம்மா, இதுவே என் தலையாய விருப்பம்...

''ஒருவேளை அடுத்த பெரும்பான்மை வாய்ப்பாக நான் உயிர் பிழைத்தாலும் கோமா நிலையில் நான் வாழக் கூடும் உதயா. நான் சாவதற்குக் கூட அஞ்சவில்லை. பெருமளவு அதற்கு நான் என்னைத் தயார்படுத்திக் கொண்டே இருக்கிறேன். ஆனால் உணர்வே இல்லாமல் உயிரை மட்டும் வைத்துக் கொண்டு பிறருக்கு பாரமாக கடவுளே... என்னால் முடியவே முடியாதம்மா. அப்படி ஒன்றுமே இல்லாத நிலையில் நான் உயிரோடு இருக்க நேருமேயானால் மெர்ஸி கில்லிங் முறையில், என்னைக் கொன்று விட வேண்டும் என்று என் டாக்டர் நண்பனிடம் சத்தியம் பெற்றிருக்கிறேன். புருஷோத்தமனும் மணியைப் போலவே எனக்காக எதையும் செய்வான். இந்த சத்தியத்தையும் காப்பான்.''

''எனவே இந்த என் கடிதத்தை நீ படிக்க நேர்ந்தால் அதற்கு மேல் நாம் சந்திக்க வாய்ப்பில்லை என்பதால் உன்னிடம் இப்போதே விடை பெறுகிறேன். உன் அன்பன் கிருஷ். கொஞ்சம் கிறுகிறு கிருஷ்...'' என்று கடைசியாகக் கணவன் கடிதத்தை முடித்திருந்தது வரை படிக்கும் முன்பே ''ஐயோ அம்மா...'' என்று கதறிப் பதறியபடியே உதயா எழுந்தாள்.



## 24

கிருஷ்ணசந்திரனின் கடிதத்தை அவன் மனைவி தனிமையில் இருந்து படிக்கட்டும் என்று கருதி மணிவாசகம் வெளி வராண்டாவில் சென்று நின்றிருந்தான்.

இனி என்ன செய்வது என்று யோசிக்கவும் அவனுக்குத் தனிமை தேவைப்பட்டது.

ஆனால் அடிபட்ட மானாய் உதயரேகா கதறவும் விழுந்தடித்துக் கொண்டு உள்ளே ஓடி வந்தான். ''என் அம்மா...? என்ன என்ன...?'' என்று பதட்டத்துடன் வினவினான்.

பேச மாட்டாமல், கிருஷ்ணசந்திரனுடைய டாக்டர் நண்பனின் சத்தியம், அதையொட்டிய பகுதிகளை மணிவாசகத்திடம் காட்டினாள் அவள்.

''இல்லையே... நாளைதானே...'' என்று யோசித்தவன், உடனே தெளிந்து ''முதலிலேயே நான் உங்களிடம் என்ன சொன்னேன் சிஸ்டர்? கேசி உங்களிடம் இந்தக் கடிதத்தைக் கொடுக்க சொன்ன நாளைக்கு வெகு முன்னதாகவே தருகிறேன் என்றேனில்லையா?'' என்று அவளுக்கு நினைவூட்டினான்.

ஒரு நீண்ட நெடுமூச்சுடன், உதயரேகாவும் சற்றே அமைதியுற்றாள்.

''உடனேயே நாளைதான் என்றால் நாளைக்கேவா?'' என்று விழிகளில் பீதியுடன் வினவி விட்டு, ''மணி சார் எனக்கு ஓர் உதவி செய்யுங்களேன்! ப்ளீஸ், இந்த அறுவை சிகிச்சையைக் கொஞ்சம் தள்ளி வைக்கச் சொல்ல முடியுமா? அதிகமில்லை. ஓர் இரண்டு அல்லது மூன்று நாள் தான்!'' என்று கெஞ்சிக் கேட்டாள்.



உதயரேகாவின் காரணத்தை ஒருவாறு ஊகித்து, ''எதற்காக அம்மா...?'' என்று மணி தயங்கினான்.

பீறித் துடித்த உதடுகளைக் கட்டுப்படுத்தி, ''நான் அவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். அவரைப் பற்றித் தப்பாக - போதை மருந்து எடுக்கிறார் என்று நினைத்தேன். அவரிடம் சொன்னேன். இன்னும்... இன்னும்... அவரிடம் எத்தனை பிறவி எடுத்தாலும் அவர்தான் என் கணவர். வேறு வாழ்வு எல்லாம் ஒன்று கிடையாதுஎன்று சொல்ல வேண்டும்...'' என்று யோசித்துக் காரணம் சொன்னாள்.

மணிவாசகம் பேசாமலே நிற்கவும், ''இந்த இரண்டு நாட்கள் அவரோடு எனக்கு வேண்டும் மணிசார்... வேண்டுமானால் இந்தக் கடிதம் முழுவதும் படித்துப் பாருங்கள். அவர் அருகில் இருந்து நான் அவருக்கு ஆறுதல் அளிக்க வேண்டும்...'' என்றவள் சட்டென உடைந்து, ''அய்யோ! அம்மா... என்னால் தாங்க முடியவில்லையே...'' என்று அழத் தொடங்கி விட்டாள்.

''சிஸ்டர், ப்ளீஸ், வேண்டாம், கேசி ரொம்பவும் பிடிவாதமாகச் சொன்னாலே என்று யோசித்தேன். வாருங்கள். முதலில் அவனோடு டெலிபோனில் பேசுவோம். பிறகு மற்றது யோசிக்கலாம்...'' என்று கூறவும், உதயரேகாவும் அதற்குச் சம்மதித்தாள்.

ஆனால் பல முறை முயன்றும் கிருஷ்ணசந்திரன் தங்கியிருந்த மருத்துவமனையோடு தொடர்பு கொள்ளவே இயலாது போயிற்று. ஏதோ டெக்னிகல் ஃபால்ட் என்று காரணம் சொன்னார்கள்.

வெறுப்புடன் ரிசீவரை வைத்துவிட்டு, ''சாரிம்மா...'' என்றான் மணிவாசகம், ''இவ்வளவு நேரம் விருதாவாகக் கழியும்படிச் செய்து விட்டேன்'' என்றான் கழிவிரக்கத்துடன்.

''இதில் உங்கள் மேல் ஒரு தப்புமில்லையே...'' என்று ஆறுதலிக்க முயன்றாள் அவள். ''இனி அவர் முகவரி



தருகிறீர்களா? நான் கிளம்புகிறேன். இனித் தாமதம் செய்யாதீர்கள். ப்ளீஸ்...'' என்று அவசரப்படுத்தினாள்.

''இந்த மாதிரிச் சூழ்நிலையில் உங்களை தனியே அனுப்ப நான் அரக்கன் அல்ல. உதயரேகா வாருங்கள். நானே அழைத்துப் போகிறேன்'' என்று இரண்டு எட்டு எடுத்து வைத்தவன் மீண்டும் யோசனையோடு தயங்கினான்.

''என்ன...? உங்களுக்கு வேறு வேலை ஏதேனும் இருந்தால் நானே போய்க் கொள்கிறேனே?'' என்றாள் அவள் துன்பம் தோய்ந்த குரலில்.

''கேசி அப்பா...? ஒரு தகவலும் இல்லாமல் நீங்கள் இரண்டு பேரையும் காணவில்லை என்றால் ஊரையே தலைகீழாகப் புரட்டி விட மாட்டாரா?''

''அவருக்கும் ஏதோ கடிதம் எழுதி இருக்கிறாரா [illegible]...?''

''ஆமாம். நாளை தான் அவர் கைக்குக் கிடைக்க வேண்டுமாம். நாளைக்கு உள்ளூர் தபாலில் போட நினைத்தேன்...''

நெற்றிப் பொட்டை அழுத்தி உதயரேகா ஒரு கணம் யோசித்தாள். ''அதைக் கையோடு எடுத்து வாருங்கள். வழியில் எங்காவது தபால் பெட்டியில் போட்டு விடலாம். நானும் வெளியூர் போவதாக வீட்டுக்கு போன்... இல்லை. வீடு வரை போய் நேரிடையாக சொல்லி விடலாம். கொஞ்சம் துணி மணி... பணம் எடுக்க வேண்டும். வாருங்கள் சீக்கிரம் போகலாம்... உங்கள் காரில் போகலாமா? அது இன்னும் கொஞ்சம் வேகமாகப் போகும்...'' என்றாள் முன்னால் நடந்தபடி.

வாய் பேசிய போதிலும் மனம் எங்கோ இருப்பதை அவனது கண்கள் காட்டின.

வேறு எங்கே? கணவனிடம்தான் என்பதை ஊகித்த மணிவாசகம் பெருமிதமும் கனிவுமாய் நோக்கி, "கேசி சும்மா பெருமை பேசவில்லை, சகோதரி, வாருங்கள். போகலாம்..." என்று கூறியபடி டி.வி. ஸ்டாண்டில் கீழ்த்தட்டில் இருந்த ஒரு சிறு பெட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

மணிவாசகம் வெளியூர்ப் பயணத்துக்கு ஆயத்தமாகவே இருந்திருக்கிறான். எங்கே என்று அறியப் பிரமாதமான மூளை தேவையில்லை. ஆனால் எப்போது, எந்தச் செய்தியின் பின் கிளம்புவதாக இருந்தான் என்று எண்ணிப் பார்க்கும் போதே உதயரேகாவின் வயிறு நெஞ்சு எல்லாவற்றையும் ஏதோ இறுக்கிப் பிடித்தாற் போல நடை தடுமாறினாள்.

காரைத் தானே ஓட்டுவதாக மணிவாசகம் கூறவும், சாவியை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டாள்.

வெகு விரைவிலேயே பங்களூர் மார்க்கத்தில் கார் விரைய நெற்றியை பிடித்தபடி கதவோரமாய்ச் சோர்ந்து கிடந்தாள் உதயரேகா.

என்னென்னவோ பயங்கரக் கற்பனைகளில் அவளுக்கு அவ்வப்போது உடல் சிலிர்த்து, தூக்கி வாரிப் போட்டது.

இவளே இப்படிக் கலங்கிக் கொண்டு அவனுக்கு தைரியமூட்டுவது எப்படி?

ஒரு தரம் அவள் அப்படிக் குலுங்கியபோது "என்னம்மா...?" என்று பரிவுடன் மணிவாசகம் வினவினான்.



"ஒன்றுமில்லை... சும்மாவே தவித்தவரை நான் வேறு என்ன மாதிரி நரக வேதனை அனுபவிக்க வைத்து விட்டேன்..." என்று விழிகளில் ததும்பிய நீரை உள்ளுக்குள் இழுக்க முயன்றவாறே வருத்தத்துடன் உரைத்தாள் உதயரேகா.

"இல்லையே, சிஸ்டர், உங்கள் சாமர்த்தியம், நகைச்சுவை உணர்வு பற்றி எல்லாம் கேசி மிகவும் பெருமையாகத் தானே பேசுவான்..." என்று மறுத்தான் மணிவாசகம்.

அவனை வம்புக்கிழுத்து மடக்கிப் பேசியது எல்லாம் நினைவு வர அவள் விசித்தாள்.

மணிவாசகம் திரும்பிப் பார்க்கவும், "அதில்லை மணி சார், உங்கள் நண்பருக்கு என்னிடம் சும்மாவே மிகுந்த அன்பு. என்னோடு பேசிச் சிரிக்க, பழக எல்லாம் அவருக்கு இயல்பாகவே அதிக ஆசைதான். ஏற்கனவே அதை எல்லாம் வெளிக்காட்டாமல் மறைக்கவே, அவர் படாதபாடு பட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டும். அப்போது போய், நான் அவரை விரட்டிப் பிடிக்க முயன்ற போது தன்னை அடக்கிக் கொள்வது அவருக்கு எவ்வளவு கடினமாக இருந்திருக்கும்! விதி ஒருபுறம் சோதித்தது என்றால் இன்னொரு பக்கம் நானல்லவா அவரைப் பெரிதும் வதைத்து விட்டேன்!" என்று மறுகினாள் அவள்.

"அப்படி அல்ல சிஸ்டர், பெற்றோரையும், தங்கையையும் எண்ணி உள்ளூர நொந்து கொண்டிருந்தவனிடம், வாழ்வில் நீங்கள் ஒரு தென்றலாக வந்து, கொஞ்சம் சுகம் கொடுத்தீர்கள். உங்கள் பேச்சும், சிரிப்பும்... ஏதோ எழுபத் தைந்து லட்சமே தான் விலை என்று பென்ஸ் கார் கேட்டீர்களாமே, அதைச் சொல்லிச் சொல்லி எப்படிச் சிரித்தான் தெரியுமா?..."



சற்றே ஆறுதலாக உணர்ந்தவள், கணவனுடைய நண்பரின் புறமாய்த் திரும்பி, நனைந்த விழிகளால் நோக்கி நன்றி தெரிவித்தாள்.

அதை ஒன்றுமில்லை என்று ஒதுக்கி, "நான் கூட உங்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் சிஸ்டர். வசுமதி விஷயத்தில் ஒரே பிடிவாதமாக நின்று தடுத்தீர்களாமே, நல்லவேளை, இல்லை என்றால் அந்தக் குழந்தையை மனைவியாக எண்ண நான் மிகவும் கஷ்டப்பட நேர்ந்திருக்கும். கேசிக்கு என்னிடம் மிகுந்த நம்பிக்கை. தங்கையைப் பாசம் காட்டி பாதுகாப்பேன் என்ற எண்ணம். ஆனால் மண வாழ்வுக்கு வெறும் பாசமும் பாதுகாப்பும் மட்டும் போதாதே?" என்றான் அவன்.

"அவரது நம்பிக்கையின் காரணம் இப்போது புரிகிறது மணி சார்" என்றாள் அவள் மணிவாசகத்தின் பேச்சில் ஈடுபட்டு. "நான் கூட முதலில் உங்களைத் தவறாக நினைத்திருந்தேன்..."

"கேசி சொல்லியிருக்கிறான். அந்த நினைப்பில் ஏதேனும் மரியாதைக் குறைவாகப் பேசினால் கூட பொருட்படுத்த வேண்டாம் என்றான்" என்று முறுவலித்தான் மணிவாசகம்.

"அவர் திரும்பத் திரும்ப உங்களைப் பற்றி உயர்வாகக் கூறிய போதும் அப்போது எனக்குப் புரிந்து கொள்ளத் தெரியவில்லை... ஸாரி தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்..." என்றாள் உதயரேகா பணிவுடன்.

"இந்த மாதிரி வார்த்தைகளுக்கு அவசியமே இல்லை சிஸ்டர். அதெல்லாம் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளாத அன்னியர்களிடையே மட்டுமே தேவைப்படுபவை. கேசி



யின் மனைவி என் சகோதரி அல்லவா?" என்று முடித்து விட்டு பேச்சை மாற்றினான் அவன்.

"தனியா விஷயம் வெளியானதுமே நீங்கள் என் பங்கைக் கண்டு கொள்வீர்கள் என்று நான் கேசியிடம் சொல்லிக் கொண்டே இருந்தேன். ஆனால் மனதுக்கு அவன் நிறைய வேலை கொடுத்ததால் நீங்கள் இதைப் பற்றி எண்ணிப் பார்க்கவே இல்லை போலத் தெரிகிறது!" என்றான் சற்று வருவான குரலில்.

லேசாக முறுவலித்து விட்டு, "இப்போதுதான்..." என்று தொடங்கியவளின் முகம் உடனே வாடியது. எந்த மாதிரி நேரத்தில் நினைவு வந்தது!

அப்போதும் தப்பாகத்தானே நினைத்தாள். வசுமதியின் பிறந்த நாளின் போது இந்த உண்மை விளம்பி, உண்மையை விளம்பாமலே விட்டு இருக்கலாம் என்று நினைத்தாளே. ஒரு பொய்யை உண்மையாய் விளம்பி விட்டு வரும்படியான உத்திரவைத்தான் நிறைவேற்றி இருக்கிறான்.

இருவருக்குமே ஆறுதல் கிட்டினாற் போல இருக்கவே பேச்சு கிருஷ்ணசந்திரனையே சுற்றியது.

"கேசிக்கு உங்கள் மேல் எவ்வளவு ஆசை தெரியுமா சிஸ்டர்? திருமணப் பேச்சிற்கு முன்பு கூட, நீங்கள் அவர்கள் வீட்டில் இருக்கும் நேரம் பார்த்து, அப்பாவைப் பார்க்க அது இது என்று ஏதாவது சாக்கு வைத்துக் கொண்டு வருவான். உங்களைப் பற்றி பேசுவதிலும் ஆசை. இப்படி ஒரு நட்பு வசுமதிக்குக் கிடைத்தது ஏதோ பூர்வ ஜன்மத்துப் புண்ணியம் என்பான். உங்களைப் பற்றி பேசும் போது அவன் முகம் பிரகாசமாகி விடும். முதல் நாள் நீங்கள் அலுவலகம் போய் அவனை அதட்டியதைப் பற்றி அவன்

துல நிபுணர் ஒரு கான்பரன்சுக்காக பெங்களூருக்கு அன்று வந்திருக்கிறார். டாக்டர் புருசோத்தமன் அவரிடம் பயின்றவரும் கூட. கேஸ் பற்றி அந்த சீனியரிடம் புருசோத்தமன் விவரிக்கவும் அந்த அறுவை சிகிச்சையைத் தாமே செய்வதாக அவரும் ஒத்துக்கொண்டு விட்டார்.

முன்தினம் இரவு கான்ஃபரன்ஸ் முடிந்து, கிட்டத்தட்ட நள்ளிரவில்தான் அவர் இதற்கு ஒத்துக் கொண்டதே. எனவே அவருக்கு வசதியாக, அன்று விடியற்காலையிலேயே ஆபரேஷனைச் செய்து முடித்து விட்டார்கள்.

இந்தியாவின் தலைசிறந்த 'நியூரோ சர்ஜன்' அவர். அவர் இந்த அறுவை சிகிச்சையைச் செய்யக் கிடைத்ததே நமக்குப் பெரும் நல்ல காலம் என்பது டாக்டர் புருஷோத்தமனின் கருத்து என்றான் மணிவாசகம்.

''அப்படியானால் உங்கள் நண்பர் பிழைத்து விடுவாராமா? நல்லபடியாக'' என்று ஆவலே வடிவாகக் கேட்டாள் உதயரேகா.

''அது... அது... டாக்டர்தான் சொல்ல வேண்டும்'' என்று மருத்துவரைக் கை காட்டினான் அந்த நல்ல நண்பன்.

''பொதுவாக கேசி பிழைத்து நல்லபடியாக வாழ்வதற்கு உரிய வாய்ப்பு விகிதம் மிகவும் குறைவே. நூற்றுக்கு ஒன்று... இரண்டு என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் கிருஷ்ணசந்திரனுக்கு வாழ வேண்டும் என்கிற பிடிவாதம் இருக்கிறது. உங்களிடம் அளவு கடந்த அன்பு இருக்கிறது. உங்களை விட்டுப் பிரிந்து போய் விடக் கூடாது என்கிற வெறியே இருக்கிறது. இது ஒரு நல்ல அறிகுறி. ஒரு நோயாளிக்கு அளிக்கப்படும் சிகிச்சை வெற்றி பெறுவது மூன்று விஷயங்களைப் பொறுத்தது. ஒன்று வைத்தியரின் முயற்சி. கேசிக்கு இந்த அறுவை சிகிச்சை செய்தவர்



இந்தியாவிலேயே இந்தத் துறையில் தலை சிறந்தவர். ஏன், உலகத்தின் தலை சிறந்த நிபுணர்களில் ஒருவர் அவர். அடுத்து நோயாளியின் மன வலிமை. கேசிக்கு அதிலும் குறைவில்லை. அடுத்தது இறையருள். எல்லாம் இருந்தாலும் அந்தக் கடவுளின் கருணையில்லாமல் எதுவும் நடப்பது இல்லை'' என்றார் டாக்டர் புருஷோத்தமன்.

இவ்வளவு நேரம் பேசியதில் தனக்கு வேண்டியதாய் அவர் ஒன்றுமே சொல்லவில்லையே என்றிருந்தது உதயரேகாவுக்கு. ''இப்போதுதான் ஆபரேஷனைச் செய்து முடித்தாயிற்றே. அது வெற்றியா இல்லை... அது என்னவென்று உங்களுக்குத் தெரிந்திருக்குமே டாக்டர்...'' என்று நேரடியாகக் கேட்டாள்.

கைகளை இறுக மூடித் திறந்தபடி, கண்ணிலேயே உயிரைத் தேக்கி அவள் கேட்பதைப் பார்க்க டாக்டருக்கும் பரிதாபமாகத்தான் இருந்தது. ஆனால் அவள் விரும்பும் பதிலைச் சொல்வது அவர் கையில் இல்லையே?

''ஆபரேஷன் வெற்றி. ஆனால்...'' என்று அநியாயமாய் ஒன்று சொல்வார்கள் கேசி விஷயத்தில் வேடிக்கையாகக் கூட அந்த வார்த்தையைப் பயன்படுத்த நான் விரும்பவில்லை. ஆனால் அறுவை சிகிச்சையைப் பொறுத்தவரையில் அது முழு வெற்றிதான். கட்டியைப் பூரணமாக அகற்றி விட்டோம். ஆனால் மூளை நம் உடலில் மிக மிக முக்கியமான பகுதி. மிக மிக நுண்ணியது. அதன் ஒவ்வொரு செல்லும் முக்கியமானது. அதில் இப்போதைக்கு மூளைக்கு எந்தவித பளுவும் கூடாது என்பது முக்கியம். உடல் உறுப்புகளினால் பாதிப்பு கூடாது என்று ஹார்ட்லங் மிஷினில் போட்டிருக்கிறோம். வெளிப் பாதிப்பு கூடாது

என்று மயக்கத்தில் வைத்திருக்கிறோம். உன் காயங்கள் ஆறும் வரை இப்படியே இருக்கட்டும். பிறகு பார்ப்போம்''

கிருஷ்ணசந்திரன் அஞ்சிய கோமா நிலை பற்றி இவர் எதுவும் கூறுவதாக இல்லை. கட்டியினால் இனி மரணம் இல்லை. ஆனால் அந்த மெர்சி கில்லிங்? அவளுக்கு அவன் இருந்தாலே போதும். பொட்டோடு, பூவோடு என்பதற்காக இல்லை. அவன் இருக்கிறான் என்பது மட்டுமே கூட...

''ஆனால் டாக்டர்...'' என்று தொடங்கியவளை இடைமறித்து, ''மற்றதெல்லாம் பிறகு பார்க்கலாம் என்றேனே. முதலில் நீங்கள் கடவுளிடம் வேண்டிக் கொள்ளுங்கள். இனி எல்லாம் அவர் கையில்தான் இருக்கிறது'' என்று முடித்து விட்டார் டாக்டர்.

அதாவது எது நடந்தாலும் பொறுப்பு அவருடையது இல்லை என்கிறார். கனவில் நடப்பவள் போலக் கணவனின் அறைக்குள் வந்து சேர்ந்தாள் உதயரேகா. கட்டிலின் அருகே சென்று நின்றவளின் பார்வை அங்கம் அங்கமாக கணவனை வருடியது. எத்தனை குழாய்கள்? இவை எல்லாம் என் கணவரை எப்படிக் காப்பாற்றப் போகின்றன?

ஆனால் கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமாம்.

யார் அந்தக் கடவுள்? எங்கே இருக்கிறார்?

எங்கோ பள்ளிவாசலில் துவா ஓதும் சத்தம் கேட்டது. இலக்கற்று வெறித்தவளின் பார்வையில், ஜன்னலுக்கு வெளியே மாதா கோயிலின் ஊசிக் கோபுரம் தென்பட்டது. காற்றில் மிதந்துவந்த கம்பீரமான நாதசுர ஓசை, குலதெய்வமான முருகக் கடவுளை நினைவூட்டியது.



இவர்களுள் எந்தத் தெய்வம் அவள் கணவனைக் காப்பாற்றப் போகிறது?

அல்லாவா? ஏசுவா? முருகனா?

எல்லா ஆறுகளும், ஒரே கடலில் சங்கமம் ஆவது போல, எல்லா மதங்களும் ஒரே கடவுளைச் சென்றடையும் வழிகளே என்று விவேகானந்தரின் சொற்பொழிவில் எப்போதோ படித்தது எப்படியோ நினைவு வந்தது.

கிருஷ்ணசந்திரனின் கட்டிலின் அருகே மண்டியிட்டவளின் மூடிய இமைகளின் பின்னே ஒளி வெள்ளம் தோன்றிப் புருவ மத்தியில் நிலை கொண்டு பேரொளியாய் மாற, அவள் தன்னை மறந்தாள்.

தொடர்ந்து மூன்று தினங்கள், தன்னைச் சுற்றிலும் என்ன நடந்தது என்றே உதயரேகா அறியாள்.

அது அவளது கற்பனையாகக் கூட இருக்கலாம். ஆனால் சுயம்பிரகாசமாய் உருவம் அறியாமல் நின்ற ஏதோ ஒன்றிடம் கணவனைக் காப்பாற்றும்படி முறையிட்டது மட்டுமே அவளுக்குத் தெரியும்.

மற்றபடி, மணிவாசகத்தின் வற்புறுத்தலில் உண்டது, உறங்கியது, டாக்டர்கள் கிருஷ்ணசந்திரனின் சிகிச்சைக்காக வந்த போது வெளியே சென்றது, வந்தது எதுவுமே அவளுக்கு நினைவில்லை.

எல்லாம் ஒழுங்காக ஆறி வருகிறது. இன்று 'ஹார்ட் லங்' மிஷினை அகற்றி விடலாம்; எல்லாமே சரியாக வேலை செய்கின்றன... என்று ஏதேதோ காதில் விழுந்தவை கூட அவளது கருத்தை எட்டாமலே போயின.





எல்லாமே விழித்தெழுந்த பின் நினைவு கூட வராத கனவு போல் நடக்க, அவளின் ஒரு கூறு மட்டும் தன் முறையீட்டை நிறுத்தவே இல்லை!

கடைசியாக ஒரு நர்ஸ்... அவள் கன்னத்தில் மென்மையாகத் தட்டி, ''பாருங்கள் மிஸஸ் கிருஷ்ணசந்திரன், உங்கள் கணவர் பிழைத்து விட்டார். இப்போது கண் விழிக்கப் போகிறார்... பாருங்கள்...!'' என்று இனிய குரலில் கூறி அவளை எழுப்பி நிறுத்திய போதுதான் அவள் முழுமையாக நனவுலகத்திற்கு திரும்பினாள்.

வெள்ளமாய்ப் பொங்கிப் பெருகிய பார்வையை மறைத்த கண்ணீரை அவசரமாக இமைகளைத் தட்டித்தட்டி அகற்றியபடியே கணவன் முகத்தை வைத்த கண் வாங்காமல் அவள் பார்த்துக் கொண்டிருந்த போது, கிருஷ்ணசந்திரனின் இமைகள் லேசாக அசைந்தன.

இருமுறை தட்டி விழித்தவனின் பார்வை மனைவியின் முகத்தில் நிலைக்க, ''உதி...'' என்றான் பலவீனமான குரலில்.

அதன் பின் கிருஷ்ணசந்திரனின் ஆரோக்கியம் சற்றும் பின்னடையவில்லை.

டாக்டர் புருஷோத்தமனே வியக்கும்படியாக வெகு விரைவில் குணமடைந்தான். ''எல்லாம் என் மனைவி என்கிற மந்திரமாக்கும். காற்றில் ஏறி அவ்விண்ணையும் சாடுவர் காதல் பெண்டிர் கடைக்கண் பணியிலே என்றார் பாரதியார். நம் கேசி யமலோக வாசல் வரை சென்று விட்டு பாசக்கயிறு எமகிங்கரர்கள் எல்லோரையும் உதறித் தள்ளி விட்டுத் திரும்ப ஓடி வந்து விட்டான்பா'' என்று கிண்டல் செய்தார் அவர்.



நண்பன் மனைவியைப் பெருமையுடன் நோக்கி, ''அந்தக் கால சாவித்திரி சத்தியவான் கதையை இனி நான் கூட நம்புவேன் கேசி. அப்...பப்பா...! அந்த மூன்று நாட்கள் சிஸ்டர் முகத்தைப் பார்க்க வேண்டுமே! பொதுவாக எனக்கு இந்தக் கடவுள் நம்பிக்கை எல்லாம் அவ்வளவாகக் கிடையாதுதான். ஆனால் என்னவோ சிஸ்டரின் பிரார்த்தனைதான் உன்னைத் திருப்பிக் கொணர்ந்தது என்பதுதான் என் அபிப்பிராயம்'' என்றான் மணிவாசகம்.

கிருஷ்ணசந்திரன் பெருமிதமாய்ப் புன்னகைக்க, ''என்ன அநியாயம்! என் சீனியரைக் காலைப் பிடித்துக் கெஞ்சாத குறையாகக் கூட்டி வந்து ஆபரேட் பண்ண வைத்து, என் பசி, தாகம், தூக்கம் அத்தனையும் தியாகம் செய்து மணிக்கொருதரம் வந்து நானே நேரடியாகக் கவனித்திருக்கிறேன். பாராட்டு மட்டும் ஒட்டுமொத்தமாய் சிஸ்டருக்கா?'' என்று குறைப்பட்டு விட்டுச் சிரித்தார் புருஷோத்தமன்.

''இப்படி அருமையான நண்பர்கள் இருப்பதுதான் அவர் பிழைத்ததன் முக்கிய காரணம்'' என்றாள் உதயரேகா மகிழ்ச்சியோடு முறுவலித்தபடி. நண்பர்கள் இருவரும் குடித்து முடித்த காப்பி கப்களை வாங்கி வைத்தாள்.

''ஓ.கே. மணிவாசகம், இனி கேசியாய் நம்மை வெளியே போ என்று சொல்லும் முன்பாக நாமாகக் கிளம்பி விடலாமா?'' என்று புருஷோத்தமன் எழ, மணிவாசகமும் புன்னகையோடு கிளம்பினான்.

''ஆமாமாம். அதுவும் சரிதான். அத்தோடு இன்று எனக்கு உங்கள் பெங்களூரைச் சுற்றிக் காட்டுவதாகச் சொல்லியிருப்பதையும் மறக்க வேண்டாம்'' என்று டாக்டர் நண்பனிடம் நினைவூட்டியவன், ''சிஸ்டர், உங்களுக்கு

ஏதாவது வாங்கி வர வேண்டுமா?'' என்று அவளிடம் விசாரித்தான்.

அதற்குள், ''புரு'' என்று நண்பனை அருகழைத்து, கிருஷ்ணசந்திரன் ஏதோ கேட்க, அதற்குப் பதில் அளித்து விட்டு 'ஜமாய்!' என்று சிரித்தான் அந்த சிநேகிதன்.

கிருஷ்ணசந்திரன் உடலில் பலம் பெருகப் பெருக முன் மாலையில் நண்பர்கள் இப்படிச் சேர்ந்து பேசுவது வழக்கம் தான். அன்று மணிவாசகமும் புருஷோத்தமனும் சென்றதும் மனைவியை நோக்கி முறுவலோடு கை நீட்டினான் கிருஷ்ணசந்திரன்.

பதிலுக்குப் புன்னகை புரிந்தவாறே அருகில் வந்து அமர்ந்து அவன் கையைப் பற்றிக் கொண்டாள் மனைவி.

சற்று நேரம் அப்படியே இருந்தவன் ஓர் ஆறுதல் பெருமூச்சுடன் ''இப்போது எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது! முன்பெல்லாம் ஒரு பக்கம் உன் அருகாமையை அனுபவிக்கும் போதே இன்னொரு புறம் ஐயோ... ஐயோ என்று பதைப்பாக இருக்கும். எல்லாம் மறைத்து நடிப்பது வேறு. அந்தத் துன்பம் ஒன்றும் இனி இல்லை. என்னால் பாதி, அதை நம்பக் கூட முடியவில்லை!'' என்றுரைத்தான்.

பேச்சின்றி அவன் நெற்றியை வருடி விட்டாள் அவள்.

தலையைத் தொட்டுப் பார்த்து விட்டு ''முடியை ஒட்ட எடுத்து விட்டார்களோ! பார்க்க அசிங்கமாக இருக்கிறதா?'' என்று அவன் வினவினான்.

''ஜகம், மூக்கு, புருவம், கண் எல்லாம் இன்னமும் பளிச்சென்று எடுப்பாய்த் தெரிகிறது'' என்று மென்குரலில் இயம்பியவள், ''சந்திரனுக்கு சிகை உண்டாமா?'' என்று சன்னமாய்ச் சிரித்தாள்.



அஸ்தமனச் சந்திரன் என்று அவன் எழுதியதைக் குறிப்பிடுகிறாள் என்பது புரிபட, அவளோடு கூடச் சேர்ந்து முறுவலித்தவன் முகத்தில் யோசனை பரவியது. ''அம்மா, அப்பா அறிவார்களா உதி?'' என்று கிருஷ்ணசந்திரன் சற்றுக் கவலையோடு வினவினான்.

''அது... அது பிறகு பேசுவோமே!'' என்று உதய ரேகா தயங்கவும் ''எனக்கு இனி ஒன்றுமில்லை, உதிம்மா. டாக்டரிடமே கேட்டு விட்டேன். சொல்லு அவர்களுக்குத் தெரியுமா?'' என்று மீண்டும் கேட்டான்.

''இல்லை, குணமாகி வீடு திரும்பினால் பிறகு சொல்லிக் கொள்ளலாம் என்று சும்மா உங்களோடு செல்வதாக மட்டும் சொல்லச் சொன்னேன்...''

லேசாக இமை இடுக்கி நோக்கி, ''குணமாகிவிரா விட்டால்...?'' என்று கேட்டான் கணவன்.

லேசாக அவள் முகம் வாடிய போதும் அவன் விடாமல் கேட்கவும், ''உங்களோடு நானும் தேசாந்திரம் போகப் போவதாக எழுதி விட்டு இங்கேயே இருந்து விடலாம் என்று காரில் இங்கு வரும் போதே முடிவு செய்திருந்தேன்'' என்றாள் அவள்.

அவன் மீண்டும் கேள்வியாய் நோக்கவும், விழிகளில் நீர் ததும்ப, ''அப்படி உங்களை அழிக்க நான் விட்டு விட்டு சும்மா இருப்பேன் என்று நினைத்தீர்களா? அதைத் தடுக்க சத்தியாகிரகம் செய்திருக்க மாட்டேனா? இந்த டாக்டர் உங்கள் நண்பர். அவருக்கும் இந்த மொரிஷியஸ் தீவில் ஐடியா அப்படி ஒன்றும் உவப்பாய் இருக்க முடியாது. எனவே, அதைத் திறந்துவது கடினமல்ல. கம்பெனியில் எனக்கும் பல தகுதிகள் உண்டு. நம் இருவர் செலவுக்கும் போதுமானதாக



இங்கேயே ஒரு நல்ல வேலையைத் தேடிக் கொண்டு உங்களையும் பார்த்துக் கொண்டு, இங்கேயே இருந்து விடுவது என்று தீர்மானித்திருந்தேன்'' என்றாள் அவள் மெல்லிய ஆனால் உறுதியான குரலில்.

பெருமை பொங்க, மனைவியின் முகத்தை மெல்ல வருடினான் கிருஷ்ணசந்திரன். மனைவி, தன்னிடம் உயிரை வைத்திருக்கிறாள் என்றால் எந்த ஆண்மகனுக்குத்தான் ஆனந்தமாய் இராது?

''முடிந்த அளவு என்மேல் படும்படி நெருங்கி உட்கா ரேன் உதி, உன்னைத் தொடத் தொட என்னமோ பலம் பெருகுவது போலத் தோன்றுகிறது... ஒன்றும் பயமில்லை. நான் புருஷோத்தமனிடம் கேட்டு விட்டேன்'' என்று மனைவியை அருகழைத்தான் கிருஷ்ணசந்திரன். கூடவே ''இன்றைய நிலையில் நானும் அதிகப்படியாய் ஒன்றும் போய் விடப் போவதுமில்லை'' என்று உதட்டைப் பிதுக்கி விட்டு நகைத்தான்.

டாக்டரின் 'ஜமாய்'யும் சிரிப்பும் நினைவு வர உதய ரேகாவின் முகம் சிவந்த போதும், கணவனின் விருப்பத்தை நிறைவேற்ற அவள் சற்றும் தயங்கவில்லை.

கைகள் பின்னிப் பிணைந்திருக்க, தோளோடு தோள் ஒட்டியபடி இருவரும் அமர்ந்து கொண்டனர்.

ஏதோ மலையை வென்ற உணர்வு இருவருக்கும். களைப்பும்தான். ஆனால் அப்பாடி! என்பது போல நிம்மதியான சோர்வு.

சற்று நேரம் அப்படியே இருந்து விட்டு, மனைவியின் மென் விரல்களை வருடியபடி கிருஷ்ண சந்திரன் சொன்னான், ''அம்மா, அப்பா இப்படியே நினைத்துக் கொண்டி



ருக்கட்டும், உதி. என்னை நீ திருத்தி அழைத்து வந்துவிட்ட தாகவே இருக்கட்டும். இதையெல்லாம் அறிந்தால் வேதனைப் படுவார்கள். அனாவசியமாய் அவர்களுக்கு அந்தத் துன்பம் ஏன்?''

''சொல்ல வேண்டாம் என்றுதான் நானும் நினைத்தேன். ஆனால் அதன் காரணம் வேறு. ஒரு தரம் இப்படி நடந்து விட்டதால் அவர்களுக்கு உங்களை உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டே இருக்கத் தோன்றும். சும்மா, ஏதாவது யோசனையில் நீங்கள் வேறு கவனமாய் இருந்தால் கூட மீண்டும் எதை மறைக்கிறீர்களோ என்று கவலைப்படத் தோன்றும். புருவம் சுளித்தால் எங்கே வலியோ என்று மனம் பதறும். அதனால்தான் அநியாயமாய் உங்களை மாமா அத்தை தவறாக நினைப்பார்களோ என்று மனதுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும் கூட பரவாயில்லை இப்படியே இருக்கட்டும் என்று எண்ணினேன்'' என்றாள் அவள்.

''உன் காரணமும் சரிதான்'' என்றான் கணவன்.

''ஆனால் ஒன்று. இனி இந்த மாதிரி ஒளிவுமறைவான எதுவும் என்னிடம் கூடாது. என்ன? இனிமேல் எதையும் ஒளித்து வைத்துத் தனியாக வேதனைப்பட மாட்டீர்களே?''

மனைவியின் முகத்தைத் திருப்பிப் பார்த்து விட்டு ''போச்சடா! அப்பா, அம்மாவைச் சொல்லி நீயே அது போலக் கவலைப்படுவாயா? நிச்சயமாக உன்னிடம் எதையும் மறைக்க மாட்டேன் கண்மணி, சத்தியமாய் மாட்டேன். இனி நிம்மதியாக இருப்பாயா? என்னடா? அதுதான் சத்தியம் செய்துவிட்டேனே, நான் சத்தியத்தை மீறுவேனா?'' என்று ஆதரவாய்ப் பேசி, அவள் கண்களில் திரண்டிருந்த கண்ணீரை அன்போடு துடைத்து விட்டான் கிருஷ்ணசந்திரன்.

கடைசியாக கிருஷ்ணசந்திரன் ஒரு பெருமூச்சு விட, நிமிர்ந்து என்னவென்று வினவினாள் உதயரேகா. தலையசைத்து நான் உன்னை நடத்திய விதத்துக்கு 'போடாபோ' என்று நீ என்னைவிட்டுப் பிரிந்து செல்லாதிருந்தது பெரும் அதிசயம் கண்மணி. அதிலும், உன்னைப் 'போபோ' என்றே நான் எத்தனை முறை விரட்டியிருப்பேன்! அதற்குப் பிறகும்..." ஆச்சரியமாய் விழிமலர மனைவியை நோக்கினான் கிருஷ்ணசந்திரன்.

சிட்டுப் போலத் தலையைச் சரித்துக் கணவனை ஓரக் கண்ணால் நோக்கினாள் உதயரேகா. 'நில்' என்றால் நின்று, 'வா' என்றால் வந்து, 'போ' என்றால் போய்விட... நான் அப்படிப்பட்டவளா கிருஷ்? நான்தான் பிடிவாதக்காரி ஆயிற்றே!"

"உண்மை!" என்று ஒப்புதலாய்த் தலையசைத்தான் கணவன். "ஒன்றையே பற்றி, அதிலேயே உறுதியாய் நின்று... நீ என்னமாய் சாதித்திருக்கிறாய்! இந்த சாதனையைக் கெடுக்க நான் உன்னை என்ன மாதிரியெல்லாம் சோதித்து விட்டேன்! என் வார்த்தையைக் கேளாமல் இருந்ததற்கு உன் பிடிவாதம் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் நம்பிக்கையிழந்து உள்ளூர மனம் நைந்திருப்பாய் தானே? எவ்வளவு நொந்தாயோ!" என்று வேதனைப் பட்டான் கணவன்.

அவன் வருந்துவது தாங்காமல், "ஆனால், எனக்கு முதலில் இருந்தே நம்பிக்கைதான், தெரியுமா? அந்த நம்பிக்கையை நான் விடவே இல்லை. அவ்வளவுதான்!" என்ற உதயரேகா, அப்போதும் கணவன் சந்தேகமாய் நோக்கவும், "நிஜம்தான் கிருஷ். நாம் கணவன் மனைவியாக முதலில் ஊருக்குச் செல்லும்போது, மழைக்காலத்து வானத்தின் வண்ணக் கோலத்தைக் கண்டு ரசிக்கவென்று எனக்கா



கக் காரை நிறுத்தி இறங்கி வந்தீர்களே, என்னவோ, என்மீது உங்களுக்கு அன்பு இருக்கிறது என்று அப்போதிருந்து என்னுள் ஒரு நிச்சயம். எனக்காக இன்னொரு பத்திரிகை வாங்கியது, வாரப்பத்திரிகை, சிப்ஸ்... இவை அனைத்தும் உங்கள் அன்பின் மீது எனக்கு இருந்த உறுதியை வளர்த்துக் கொண்டேதான் வந்தன. அதனாலேயே நீங்கள் என்னென்னவோ சொன்ன போதும், எனக்கு அடியோடு நம்பிக்கை அற்றுப்போகவே இல்லை!" என்றாள் மனைவி.

மீண்டும் தலையசைத்து, "விவாகரத்து பெற்றுக்கொள் என்ற போதுமா?" என்று வருத்தத்துடன் வினவினான் கிருஷ்ணசந்திரன்.

"அன்று மிகவும் அதிர்ந்துதான் போனேன்... ஆனால்... சாதாரணமாக இருந்தவர் திடுமென ஏன் அப்படிச் சொன்னீர்கள்?" என்று தன் சந்தேகத்துக்கு விளக்கம் கேட்டாள் உதயரேகா.

"பின்னே என்ன செய்வது?" என்று பதிலுக்குக் கேட்டான் அவள் கணவன். "ஒருபுறம் உன் அழகும், குறும்பான பேச்சும், எனக்காகச் சமையல் அது இது என்று நீ பாடுபட்டதும் எல்லாமாக உன்மேல் பிரியமும் பரிதாபமும் வளர்ந்து கொண்டே போயின. கூடவே, எத்தனைநாள் என்னால் திடமாக இருக்க முடியுமோ என்கிற பயம்வேறு!

"அன்று 'செக்ஸி' உடை பற்றிப் பேசினாயே! மெய்யாகவே நீ அப்படி எதையேனும் அணிந்து கொண்டுவந்து என் முன்னே நின்றிருந்தால் நான் அடியோடு தோற்றிருப்பேன், தெரியுமா? ஆனால், முதல் இரவில் கூட அப்படி மூடிக் கொண்டு படுத்துறங்கியவள், அந்தத் தரம் குறைய மாட்டாய் என்ற நம்பிக்கைதான். ஆனால்... சும்மாவே, உன்னை என்னென்னவோ செய்ய வேண்டும் என்கிற



ஆசை விஷம் போல உள்ளே ஏறிக் கொண்டே இருந்ததா? நீ சீக்கிரமாகப் பிரிந்துபோய்`விடுவதுதான் உனக்கு நல்லது என்றே... அன்று மணவிலக்கு பற்றிப் பேசினேன். ஆனால் உன் பெற்றோரின் சிங்கப்பூர்ப் பயணம் அதன் பாதிப்பை அடியோடு கெடுத்துவிட்டதில்லையா?"

சிரித்தபடியே அண்ணாந்து பார்த்து, கிருஷ்ணசந்திரனின் தாடையில் லேசாக முத்தமிட்டாள் உதயரேகா... "பா...வம்! இந்தக் கட்டி போக மிச்சமிருந்த மூளையைக் கசக்கிப் பிழிந்து ஒருவழி கண்டுபிடித்தால், அதுவும் அம்பேல்!" என்று கேலி பேசியவள், முத்தமிட்ட இடத்தில் சிறு ஈரம்கண்டு, துப்பட்டா முனையால், ஈரம்பட்ட இடத்தை லேசாகத் துடைத்து விட்டாள்.

அவள் கையைப் பற்றித்தடுத்து, "இந்தத் துடைக்கிற வேலையெல்லாம் இனி வைத்துக் கொண்டால் எனக்குப் பொல்லாத கோபம் வருமாக்கும்!" என்று மிரட்டிவிட்டு மறு கை விரலால் அவளது இதழ்களை வருடி! "இவற்றால் ஒற்றுவதற்கு மட்டுமே இவ்விடம் அனுமதி கிடைக்கும்!" என்று சொல்லி முறுவலித்தான்.

இதமான அமைதியில் மீண்டும் இருவரும் சற்று நேரம் பேசாதிருந்தனர். பிறகு, "அந்த நளினாவோடு வந்தது மிகப்பெரிய அதிர்ச்சிதான், இல்லையா? உன் முகத்தைப் பார்க்க மிகவும் வேதனையாகத்தான் இருந்தது. இதன் பிறகாவது என்னைப் பிரிந்து சென்று வேறு நல்ல வாழ்க்கை ஒன்றை அமைத்துக் கொள்ளமாட்டாயா, என்கிற தவிப்பு எனக்கு. ஆனால், நீ பொல்லாத ராட்சசி! உடனேயே கண்டுபிடித்து விட்டாயே!" என்று பெருமையும் பாராட்டுமாகப் பேசினான் கிருஷ்ணசந்திரன்.



"ஆமாம்! ஒரொருத்தருக்கு அவர்கள் மட்டும்தான் கெட்டிக்காரர்கள் என்ற நினைப்பு!" என்று அவள் கிண்டல் செய்யவும் சிரித்தபடியே அவள் மூக்கைப் பிடித்து இழுத்தான் கேசி.

கூடச்சேர்ந்து சிரித்தபடியே விடுவித்துக் கொண்டவள், மூக்கை லேசாகத் தேய்த்து விட்டபடி, "அந்த விமான விபத்து இரவுக்குப் பிறகு எனக்கு நம்பிக்கை தளரவேயில்லை. நீங்கள் என்ன செய்தாலும் துருவி ஆராயத்தான் தோன்றிற்று" என்றாள் குரலில் நகை இழையோட.

"நம்பிக்கையைத் தூண்டி விடுகிற மாதிரி, அன்று உன் கூந்தலை அளைந்தபோது வேறு சற்று வசமிழந்து போனேன்!" எப்படியும் இவன் தோற்று விடுவான் என்கிற உறுதி அப்போதே உனக்கு வந்திருக்கும்" என்றான் அவன்.

"அதற்கும் முன்பே!" என்று கூறி அவனை வியப்படையச் செய்தாள் உதயரேகா. தொடர்ந்து, அந்த மாடிப்படி வளைவுப் படத்தைக் கணவன் வருடியதை இமை தட்டாமல் பார்த்தது பற்றிக் கூறினாள். "நான் சோஃபாவுக்கு மறுபக்கம், முழந்தாளிட்டு, நாலு காலில் தேடிக் கொண்டு இருக்கிறேன். அடாடாடா! துரை படத்தைத் தடவிய வேகத்தில் உரிந்து வந்துவிடாமல் இருந்ததே!" என்று கலகலவென்று நகைத்தாள் அவள்.

முகத்தில் ஆத்திரத்தைக் கொணர முயன்று தோற்று விட... "ஆகா! ஒளிந்திருந்து என்னை வேவு பார்த்தாயா? உன்னை... இருக்கட்டும்; இருக்கட்டும்! இதற்கெல்லாம் வட்டிபோட்டு சேர்த்துப் பிறகு வாங்கி விடுகிறேன்." என்று மிரட்டிவிட்டு, "ஆனால், உதி இவ்வளவு வசமிழப்பவன் ஏன் விலகுகிறான் என்று யோசிக்கவில்லையா? உன் குணத்துக்கு, இதை நீ அக்குவேறு ஆணிவேறாய்ப் பிரித்து

அவசி, ஆராய்ந்து, ஒரு முடிவுக்கும் வந்திருக்க வேண்டுமே!'' என்றான்.

முகத்தில் அசடு வழிய ''வந்தேனே!'' என்றாள் உதயரேகா. ஒருகணம் தடுமாறிவிட்டு, அவளது பழைய காதல், போதை மருந்து என்ற பயம் என்றெல்லாம் எண்ணியதைக் கணவனிடம் கூறினாள்.

''வா!'' என்று நயந்தவனிடம், ''பின்னே? மனதில் இவ்வளவு ஆசையை வைத்துக் கொண்டு விரட்டியடிப்பவர்களை வேறு என்ன நினைப்பதாம்? போதை மருந்து எடுக்கும் போது குழந்தை உண்டானால், குழந்தைக்கும் பாதிப்பு ஏற்படும் என்று எதிலோ படித்திருந்தேனா, நீங்களும் அது தெரிந்துதான் மனதை அடக்கிக் கொண்டு தவிக்கிறீர்கள் என்று நினைத்து விட்டேன்!'' என்றாள்.

தலையைப் பின்னுக்குத் தள்ளி, அண்ணாந்து சிரித்தான் கிருஷ்ணசந்திரன். ''பைத்தியம்! அசடு! விட்டால் கற்பனையிலேயே குடும்பம் நடத்திக் கொள்ளுப்பேரன் வரை பெற்றுவிடுவாய் போலா!'' என்று கூறி மீண்டும் சிரித்தான்.

ஆறுதலாய் அவளை அணைத்து ஆறுதல்படுத்தி, ''என் ஆரோக்கியத்துக்குக் கெடுதலான எதையும் உண்ண மாட்டேன் என்று உனக்குச் சொல்லியிருந்தேனே! மறந்து விட்டதாடா?'' கனிவுடன் வினவியவாறே, மனைவியின் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டான் கிருஷ்ணசந்திரன். அடுத்து, கொஞ்சம் அழுத்தமாக.

கூடவே, கணவனின் கை, இடையைச் சுற்றி வளைத்து அழுத்தவும், நாசுக்காய் அவன் கரத்தை எடுத்து விலக்கியபடி, ''ரொம்ப நேரம் பேசிவிட்டோம். இனிக் கொஞ்சம் படுத்து ஓய்வு எடுங்கள்'' என்றபடி எழுந்தாள் உதயரேகா.



இடையிலிருந்து தன் கரத்தைப் பிரித்து விட்ட மனைவியின் கையை லேசாகப் பற்றி, அவளது முகத்தை நேரே பார்த்து, லேசாக முறுவலித்தான் கிருஷ்ணசந்திரன்.

அவளது உள் காரணத்தைப் புரிந்து கொண்டவனாகப் புன்னகையுடனேயே, ''இன்னும் கொஞ்சநேரம் உட்கார் வெறு...மனே பேசிக் கொண்டு மட்டும் இருக்கலாம்'' எனவும் லேசாக முகம் சிவந்தபோதும், பேசாமல் சற்று விலகி அமர்ந்து கொண்டாள் அவள்.

கேலியாகத் தோளைக் குலுக்கி சிரித்தபோதும், உடனேயே பழைய பேச்சுக்குத் திரும்பினான் கிருஷ்ணசந்திரன். ''சொல் உதி நான் உன்னிடம் பலவகையிலும் நீ வருத்தப்படும் படியாகவே நடந்து கொண்டதன் காரணத்தை இப்போது நீ நன்றாகப் புரிந்து கொண்டாய் தானே?'' என்று மிகுந்த அக்கறையுடன் வினவினான்.

''உம்... எல்லாமே. ஆனால் கிருஷ், அந்த முதல் தடவைதான் எனக்கு இன்னமும் கொஞ்சம் குழப்பம். அப்போது என்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவேன் என்றீர்களே! அதுதான் இன்னமும் புரியவில்லை. முதல் முதலாய் பார்க்கும் போதே எப்படி, அப்படி...?'' என்று விளக்கம் கேட்டாள் மனைவி.

''முதல் தடவையா? உன்னை நான் அதற்கு முன் பலமுறை பார்த்திருக்கிறேன் தெரியுமா?''

''அப்படியா? எப்போது?''

''உதி அம்மா, வகளிடம் நேரில் பார்க்கும் போதெல்லாம் கடுமையாகப் பேசி, முகம் வாடச் செய்ய வேண்டிய கட்டாயம் எனக்கு. அவர்களின் சிரித்த முகத்தை ஆசை தீரப் பார்ப்பதற்காக அங்கங்கே மறைந்திருந்து கவனிப்



பேன். ஆசை தீரப் பார்ப்பதில் அவர்களோடு உன் முகமும் சேர்ந்து கொண்டது அவ்வளவுதான். அதனால் நீ புதியவன் என்கிற எண்ணமே எனக்குக் கிடையாது.''

''ஓகோ!'' என்று கணவன் பேச்சை ஜீரணித்தவளுக்குத் தனக்கும் அதே போல் அவன் புதியவன் என்கிற எண்ணமே இல்லாதிருந்தது நினைவு வந்தது. என்ன பொருத்தம் என்று வியந்தபடி கணவனிடம் அதைக் கூறினாள்.

கூடச் சேர்ந்து முறுவலித்தான் அவன். ''அன்றைக்கு நீ அலுவலகத்துக்கு வந்து என்னை அதட்டினாயே, சிறு குழந்தை ஒன்று நீதிபதி ஸ்தானத்தில் இருந்து கண்டிப்பது போல எவ்வளவு அழகாக இருந்தது தெரியுமா? உன்னிடம் என் நிலைமையைச் சொல்லலாமா என்று கூட ஒரு கணம் தோன்றி விட்டது. யோசித்தேன். உனக்கு என் வீட்டாரிடம் அவர்களிலும் அம்மாவிடம் மிகுந்த பாசம் இருந்தது நன்றாகத் தெரிந்தது. நான்தான் அன்றைக்கு எல்லோருக்கும் பொல்லாதவன் ஆயிற்றே. உன்னிடம் கடுமை காட்டினால் என்னவர்களிடம் இன்னமும் அதிகமாய் ஒட்டிக் கொள்வாய் என்பது ஒரு காரணம்...''

''மற்றது...?''

''மற்றதா? அடுத்த காரணம்... உனக்கு என் மேல் எந்தவிதப் பற்றும் உண்டாகி விடக் கூடாது என்பதுதான்...''

சட்டென்ச் சிரித்தாள் உதயரேகா. ''என்னை விரட்டுவதற்காகவா? நல்ல திட்டம்தான். பிரமாதம். ஆனால் உரிமைக்காரியாக வந்துநின்றால் இப்படி வெளியேற்ற முடியாதே என்று அன்றிலிருந்துதான் உங்களை மணப்பது



குறித்து நான் தீவிரமாக நினைக்கத் தொடங்கினேன் தெரியுமா?'' என்றுரைத்து சலங்கை ஒலியாய் மீண்டும் நகைத்தாள்.

மனைவியின் சிரிப்பை ஆசையுடன் பார்த்திருந்து விட்டு, ''இதே சிரிப்புத்தான்! இந்தச் சிரிப்புத்தானே என்னைத் தலைகுப்புற விழத் தட்டியது!'' என்றவன், உடனே திருத்தி ''இதுவேதான் என் உயிரைக் காத்ததும். அன்று என் பிடிவாதம் வீழ்ந்திரா விட்டால், பிழைப்பதில் இந்த வேகமும் எனக்கு வந்திராது. உதி, அமுதம் உண்டு அமரர் ஆனார் என்று படித்திருக்கிறாயாடா? நானும் அப்படித்தான்! இந்த இதழ் அமுதம் உண்டு நானும் இறப்பிலிருந்து மீண்டு விட்டேன்! ம்...ம்மா பழைய நினைவு என்னென்னவோ ஆசைகளைத் தூண்டுகிறதே. இப்போதைக்கு ஒரு சின்ன சாம்பிள் கிடைக்குமாடா! அல்லது ஊருக்குப் போய் மொத்தமாகவே பெற்றுக் கொள்ளலாமா?'' என்று அவன் ஒற்றைப் புருவம் உயர்த்திக் கேட்கவும் உதயரேகாவின் முகம் அந்த உதய காலக் கீழ் வானம் போலவே செக்கச் சிவந்து போயிற்று.

* * *